நி.நி.பி. எண்:பி1/2935/2015.
ஆணையர் அவர்களின் 25.02.2016 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.145/2016 **பொருள் எண்.01**

வரவு செலவு திட்டம் 2016–2017 மற்றும் திருத்திய மதிப்பீடு 2015–2016 ற்கு மன்றத்தின் அனுமதி

இந்திய பெருங்கண்டத்தின் பழமை வாய்ந்த சென்னை மாநகராட்சி பழமையும் பெருமையும் கொண்டது. வளர்ந்து வரும் சென்னை மாநகர மக்களின் அடிப்படைத் தேவைகளை முன்னிறுத்தி பல்வேறு திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறது. மக்களின் தேவைகளைத் தொடர்ந்து செயல்படுத்தும்வண்ணம் 2016–2017ஆம் நிதியாண்டின் வரவு செலவுத் திட்ட மதிப்பீடு, செயல் திட்டங்கள் மற்றும் அவைகளுக்கான நிதி ஆதாரங்களுடன் தயாரிக்கப்பட்டுள்ளது.

நிதி நிலை

2016–2017ஆம் நிதியாண்டின் வருவாய் தலைப்பில் வரவு ரூ.2567.72 கோடியாகவும், வருவாய் செலவினம் ரூ.2708.41 கோடியாகவும் இருக்கும். மூலதன வரவு ரூ.2123.57 கோடியாகவும், மூலதனச் செலவு ரூ.2170.25 கோடியாகவும் இருக்கும்.

வருவாய் கணக்கு

2015–2016ஆம் நிதியாண்டிற்கான வரவு செலவு திட்டப்படி ரூ.2392.56 கோடியாக இருந்த வருவாய் கணக்கின் வரவுகள், இந்த ஆண்டின் திருத்திய மதிப்பீட்டின்படி ரூ.2920.77 கோடியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 2016–2017ஆம் நிதியாண்டில் இது ரூ.2567.72 கோடியாக இருக்கும். 2015–2016ஆம் நிதியாண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.2341.05 கோடியாக நிர்ணயிக்கப்பட்ட வருவாய் இனங்களின் செலவு, திருத்திய மதிப்பீட்டில் ரூ.2916.80 கோடியாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. 2016–2017ஆம் நிதியாண்டில் வருவாய் இனங்களின் செலவு ரூ.2708.41 கோடியென மதிப்பிடப்பட்டுள்ளது.

வருவாய் வரவினங்கள்

சொத்து வரி

வருவாய் இனங்களில் பெரும் பங்கு வகிப்பது சொத்து வரியாகும். 2015–2016ஆம் நிதியாண்டு வரவு செலவு திட்டத்தில் ரூ.600.00 கோடி என மதிப்பிடப்பட்டு, 2015–2016ஆம் நிதியாண்டு திருத்திய மதிப்பீட்டிலும் ரூ.600.00 கோடியாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. 2016–2017ஆம் நிதியாண்டில் இந்த வருவாய் ரூ.650.00 கோடியாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

தொழில் வரி

2015–2016ஆம் நிதியாண்டு வரவு செலவு திட்டத்தில் ரூ.250.00 கோடி என மதிப்பிடப்பட்டு, 2015–2016ஆம் நிதியாண்டு திருத்திய மதிப்பீட்டிலும் ரூ.250.00 கோடியாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. 2016–2017ஆம் நிதியாண்டு வரவு செலவு திட்டத்தில் இவ்வரி வருவாய் ரூ.300.00 கோடியாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

அரசு ஒதுக்கீடு செய்யும் வருவாய்

முத்திரைத்தாள் மீதான கூடுதல் வரி

மாநில அரசால் ஒதுக்கீடு செய்யப்படும் முத்திரைத்தாள் மீதான கூடுதல் வரி வருவாய் 2015–2016ஆம் நிதியாண்டு திருத்திய மதிப்பீட்டில் ரூ.200.00 கோடியென நிர்ணயிக்கப்பட்டு, 2016–2017ஆம் நிதியாண்டில் இவ்வினத்தின் வருவாய் ரூ.220.00 கோடியாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

கேளிக்கை வரி

கேளிக்கை வரி மூலம் கிடைக்கும் வருவாய் 2015–2016ஆம் நிதியாண்டு திருத்திய மதிப்பீட்டில் ரூ.20.00 கோடியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 2016–2017ஆம் நிதியாண்டு வரவு செலவு திட்டத்தில் ரூ.25.00 கோடியாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

மாநில நிதிக் குழு மானியம்

2015–2016ஆம் நிதியாண்டின் திருத்திய மதிப்பீட்டின்படி மாநில நிதிக் குழு மானியமாக அரசு வரித் தொகுப்பிலிருந்து ஒதுக்கப்படும் வருவாய் ரூ.600.00 கோடியென நிர்ணயிக்கப்பட்டு, 2016–2017ஆம் நிதியாண்டில் இவ்வினத்தின் வருவாய் ரூ.620.00 கோடியாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

இதர வருவாய்கள்

2015–2016ஆம் நிதியாண்டின் திருத்திய மதிப்பீட்டின்படி தொழில் உரிமக் கட்டணம், கட்டட உரிமக் கட்டணம், வாகன நிறுத்தக் கட்டணம் மற்றும் ஏனைய வருவாய் இனங்களின் மூலமாக ரூ.1250.77 கோடி வருவாய் கிட்டுமென கணக்கிடப்பட்டுள்ளது. இதில் வெள்ள நிவாரண பணிகளுக்காக வரவு ரூ.500.00 கோடி அடங்கும். 2016–2017ஆம் நிதியாண்டில் இவ்வினங்களின் மூலம் ரூ.752.72 கோடி கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

வருவாய் செலவினங்கள்

பணியாளர் சம்பளம்

இத்தலைப்பின் கீழ் 2015–2016ஆம் நிதியாண்டு திருத்திய மதிப்பீட்டின்படி ரூ.888.50 கோடி செலவாகுமென எதிர்பார்க்கப்படுகிறது. 2016–2017ஆம் நிதியாண்டில் இத்தலைப்பின் கீழ் ரூ.**1022.04** கோடி செலவினம் இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

ஓய்வூதியம்

ஓய்வூதியம், குடும்ப ஓய்வூதியப் பயன்கள் மற்றும் பிற ஓய்வூதியப் பயன்களுக்காக 2015–2016ஆம் நிதியாண்டின் திருத்திய மதிப்பீட்டில் ரூ.**271.00** கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2016–2017ஆம் நிதியாண்டில் இச்செலவினம் ரூ.321**.00** கோடியாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

நிர்வாகச் செலவு

இச்செலவினத்திற்கென 2015–2016ஆம் நிதியாண்டின் திருத்திய மதிப்பீட்டில் ரூ.145.42 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 2016–2017ஆம் நிதியாண்டில் இத்தலைப்பின் கீழ் ரூ.131.21 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு பணி செலவினங்கள்

பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு, இயக்கச் செலவுகள் மற்றும் திட்டச் செலவுகள் போன்ற செலவினங்களுக்காக 2015–2016ஆம் நிதியாண்டு திருத்திய மதிப்பீட்டில் ரூ.959.07 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் வெள்ள நிவாரண பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட தொகையும் அடங்கும். 2016–2017ஆம் நிதியாண்டில் ரூ.798.04 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கடனுக்கான வட்டி செலுத்துதல்

மூலதனப் பணிகளை மேற்கொள்வதற்காக பெறப்பட்ட கடன்களுக்கு செலுத்த வேண்டிய வட்டிக்காக 2015–2016ஆம் நிதியாண்டு திருத்திய மதிப்பீட்டில் ரூ.48.67 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 2016–2017ஆம் நிதியாண்டில் இச்செலவினத்திற்கென ரூ.138.15 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மூலதன வரவுகள்

2015–2016ஆம் நிதியாண்டு நிதி நிலை அறிக்கையின்படி ரூ.2055.00 கோடியாக நிர்ணயிக்கப்பட்ட மூலதன வரவு திருத்திய மதிப்பீட்டில் ரூ.2257.54 கோடியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 2016–2017ஆம் நிதியாண்டில் இத்தலைப்பின் கீழ் வரவு ரூ.2123.57 கோடியாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

மூலதனச் செலவு

சென்னை மாநகராட்சி பல்வேறு துறைகள் மூலமாக மூலதனப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. மூலதனப் பணிகளுக்காக 2015–2016ஆம் நிதியாண்டில் ரூ.2130.00 கோடியாக நிர்ணயிக்கப்பட்டு, திருத்திய மதிப்பீட்டில் ரூ.2381.17 கோடியாக மறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. 2016–2017ஆம் நிதியாண்டில் இத்தலைப்பின் கீழ் ரூ.2170.25 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

துறைவாரியாக 2016–2017 –ஆம் நிதியாண்டில் செயல்படுத்தப்படவுள்ள திட்டங்கள்
சாலைகள்

2015–2016

விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்திட தமிழக அரசிடமிருந்து மான்யம் பெறப்பட்டு மேற்கொள்ளப்படும் பணிகள், உட்புற மற்றும் பேருந்து சாலை பராமரிப்பு பணிகள், சிமெண்ட் சாலைகள் அமைத்தல், மழை நீர் வடிகால்வாய்கள் பராமரிப்பு, பூங்காக்களை உருவாக்குதல் மற்றும் இதர மூலதனப் பணிகளுக்காக திருத்திய மதிப்பீட்டில் ரூ.2381.17 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

2016–2017

சென்னை மாநகரின் பேருந்து வழித்தடங்களின் மேம்பாடு, பேருந்து சாலைப் பணிகள், தமிழக அரசால் அளிக்கப்படும் மான்யத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் பல்வேறு விதமான பணிகள், உட்புறத் தார்ச் சாலைகள் மேம்பாட்டிற்காகவும் மற்றும் சிமெண்ட் கான்கிரீட் சாலைகளுக்காகவும், மற்றும் மண்டலங்களில் மேற்கொள்ளப்படவுள்ள இதரப் பணிகளுக்காகவும் ரூ.2170.25 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மழைநீர் வடிகால்வாய்கள்

2015–2016

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டம் மற்றும் உலக வங்கி உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வரும் மழை நீர்வடிகால்வாய்கள் அமைக்கும் பணி மற்றும் பிற பணிகளுக்காக திருத்திய மதிப்பீட்டில் ரூ.275.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2016–2017

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டம் மற்றும் உலக வங்கி உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால்வாய் பணிகளுக்காக ரூ.10.00 கோடியும், உலக வங்கி நிதி உதவியுடன் விரிவாக்கப்பட்ட பகுதிகளில் மழை நீர் வடிகால் அமைக்கும் பணிக்காக ரூ.350.00 கோடியும், இதர பணிகளுக்காக ரூ.55.00 கோடியும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணிக்காக மொத்தம் ரூ.415.00 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

பாலங்கள்

2015–2016

நடைபாதை மேம்பாலங்கள், சிறிய பாலங்களை அகலப்படுத்தும் பணிகள், பல்வேறு பாலங்களை நவீனப்படுத்துதல் போன்றவைகளுக்காக திருத்திய மதிப்பீட்டில் ரூ.11.00 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

2016–2017

புதிய பாலங்கள் கட்டுமான பணிகள் மற்றும் பாலங்கள் விரிவுபடுத்தும் பணிகளுக்காகவும் ரூ.100.00 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

மின்சாரம்

2015–2016

தெருவிளக்குகளுக்குத் தேவையான மின்வட கம்பிகள் மற்றும் இதர மின் தொடர்புடைய உபகரணங்கள் வாங்குதல் மற்றும் மின் சக்தியை சேமிக்கும் வகையில் பல்வேறு பணிகளை மேற்கொள்ள ஏதுவாக திருத்திய மதிப்பீட்டில் ரூ.126.44 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2016–2017

சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து பகுதிகளில் புதிய தெரு மின்விளக்குக் கம்பங்கள் அமைத்தல், மின் சக்தியை சேமிக்கும் பொருட்டு LED விளக்குகள் அமைத்தல், தெரு விளக்கு கண்காணிப்பு முறை மற்றும் இதர பணிகளுக்காக ரூ.151.00 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

திடக்கழிவு மேலாண்மை

2015–2016

திடக்கழிவு மேலாண்மைப் பணிகளுக்கு தேவையான குப்பை மாற்று நிலையங்கள் அமைத்தல், பெருங்குடி மற்றும் கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகங்களின் மேம்பாடு போன்ற பணிகளுக்காக திருத்திய மதிப்பீட்டில் ரூ.28.71 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

2016–2017

சென்னை பெருநகரின் துப்புரவுப் பணிக்கு தேவையான பொருட்களை கொள்முதல் செய்தல் மற்றும் மண்டல இயக்கூர்தி நிலையங்களுக்கு தளவாடங்கள் கொள்முதல் செய்தல் போன்றவற்றிற்காக ரூ.19.00 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இயந்திரப் பொறியியல்

2015–2016

அலுவலக பயன்பாட்டிற்கு தேவையான வாகனங்கள் மற்றும் லாரிகள் வாங்குவதற்காக திருத்திய மதிப்பீட்டில் ரூ.16.63 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2016–2017

ஆய்வு வாகனங்கள் கொள்முதல் செய்தல், திடக்கழிவு மேலாண்மைப் பணிகளுக்கு தேவையான லாரி மற்றும் கனரக டிப்பர் வாகனங்கள் கொள்முதல் செய்தல் போன்ற பணிகளுக்காக ரூ.13.76 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

கட்டடம்

2015–2016

சுகாதார துறைக்கு தேவையான கட்டடங்கள், வணிக வளாகப் பணிகள், பல்வேறு அலுவலக கட்டடங்கள் கட்டும் பணி, மாநகராட்சிப் பள்ளிகளில் தேவைக்கேற்ப கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல் ஆகிய பல்வேறு பணிகளுக்காக திருத்திய மதிப்பீட்டில் ரூ.80.49 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

2016–2017

பெருநகர சென்னை மாநகராட்சியின் விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளில் மண்டல அலுவலகங்கள், பகுதி அலுவலகங்கள், வார்டு மற்றும் மன்ற உறுப்பினர் அலுவலகங்கள், வாகன இயக்குகூர்தி நிலையங்கள் கட்டுதல், பள்ளிகளுக்கு கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல், வணிக வளாகங்கள் கட்டுதல் மற்றும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பணிகளுக்காக ரூ.164.10 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் அம்மா திரையரங்கம் அமைக்கும் பணியும் அடங்கும். அதற்காக ரூ.50.00 கோடி இவ்வாண்டு ஒதுக்கப்பட்டுள்ளது.

கல்வி

2015–2016

பெருநகர சென்னை பள்ளிகளுக்கு தேவையான சாய்வு மேஜைகள், ஆய்வக உபகரணங்கள் வாங்குதல் போன்ற செலவினங்களுக்காக திருத்திய மதிப்பீட்டில் ரூ.6.55 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2016–2017

சென்னை மாநகராட்சி பள்ளிகளுக்கு மின் ஆக்கி வாங்குதல், புதிய ஆசிரியர் அறைகள் அமைத்தல், சாய்வு மேஜைகள், ஆய்வக உபகரணங்கள் வாங்குதல், பள்ளிகளுக்குத் தேவையான கணிப்பொறி மற்றும் அதன் துணை உபகரணங்கள் வாங்குதல் போன்ற பல்வேறு திட்டங்களை செயல்படுத்துவதற்காக ரூ.3.93 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

சுகாதாரம்

2015–2016

புகை பரப்பும் கருவிகள் மற்றும் பல்வேறு வகையான மருத்துவ உபகரணங்கள் வாங்குவதற்கு ஏதுவாக திருத்திய மதிப்பீட்டில் ரூ.3.33 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

2016–2017

பரிசோதனை கூட உபகரணங்கள், புகைபரப்பும் இயந்திரங்கள் மற்றும் பொது மக்களின் சுகாதார மேம்பாடு தொடர்புடைய பிறபணிகளை மேற்கொள்ள ரூ.4.31 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

குடும்ப நலம்

2015–2016

அறுவை சிகிச்சை அரங்க உபகரணங்கள் வாங்குதல், ஆய்வு வாகனங்கள் வாங்குதல், குடும்ப நல வாழ்வு மையங்களுக்கு தேவையான கணிப்பொறி வாங்குதல் போன்றவைகளுக்காக திருத்திய மதிப்பீட்டில் ரூ.1.71 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

2016–2017

அறுவை சிகிச்சை அரங்க உபகரணங்கள் வாங்குதல், மின் ஆக்கிகள் வாங்குதல், ஆய்வு வாகனங்கள் வாங்குதல் விரிவாக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மகப்பேறு மையங்களுக்குத் தேவையான உபகரணங்கள் வாங்குதல் போன்ற பல்வேறு பணிகளை மேற்கொள்ள ரூ.2.04 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

சிறப்பு திட்டங்கள்

2015–2016

மெரினா கடற்கரை ஒட்டிய சாலை பகுதிகளில் மேம்பாட்டு பணிகளை மேற்கொள்ளவும், பல அடுக்கு வாகன நிறுத்துமிடம், உலகத்தரம் வாய்ந்த சாலைகள் அமைத்தல், நடைதொடர் மேம்பாலம் அமைத்தல், நவீன முறையில் நடைபாதைகள் அமைத்தல் போன்ற முக்கியத்துவம் வாய்ந்த சிறப்பு திட்டங்களுக்காக திருத்திய மதிப்பீட்டில் ரூ.67.00 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

2016–2017

மெரினா கடற்கரை ஒட்டிய சாலை பகுதிகளில் மேம்பாட்டு பணிகளை மேற்கொள்ளவும், பல அடுக்கு வாகன நிறுத்துமிடம், உலக தரம் வாய்ந்த சாலைகள் அமைத்தல், நடைதொடர் மேம்பாலம் அமைத்தல், நவீன முறையில் நடைபாதைகள் அமைத்தல் போன்ற முக்கியத்துவம் வாய்ந்த சிறப்பு திட்டங்களுக்காக ரூ.130.00 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

பூங்கா மற்றும் விளையாட்டு திடல்

2015–2016

சென்னை மாநகராட்சியின் திறந்த வெளி நிலங்களில் புதிய பூங்காக்களை உருவாக்குதல், புதிய விளையாட்டு திடல்கள் உருவாக்குதல், ஏற்கனவே உள்ள பூங்காக்கள் மற்றும் விளையாட்டுத் திடல்களில் நவீன வசதிகளுடன் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளுவதற்காக திருத்திய மதிப்பீட்டில் ரூ.40.26 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

2016–2017

சென்னை மாநகராட்சியின் திறந்த வெளி நிலங்களில் புதிய பூங்காக்களை உருவாக்குதல், புதிய விளையாட்டு திடல்கள் உருவாக்குதல், ஏற்கனவே உள்ள பூங்காக்கள் மற்றும் விளையாட்டுத் திடல்களில் நவீன வசதிகளுடன் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளுவதற்காக ரூ.61.05 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

அம்மா குடிநீர் திட்டம்

2016–2017

அம்மா குடிநீர் திட்டம் இவ்வாண்டு செயல்படுத்த ரூ.21.00 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டுத் திட்டம்

2015–2016

மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டுத் திட்டப்பணிகளை மேற்கொள்ள ஏதுவாக மாமன்ற உறுப்பினர்களுக்கான ஒதுக்கீடுகள் திருத்திய மதிப்பீட்டில் ரூ.60.00 கோடியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

2016–2017

இவ்வாண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து நடைபெற ஏதுவாக ரூ.60.00 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

மேயர் சிறப்பு மேம்பாட்டுத் திட்டம்

2015–2016

மாண்புமிகு மேயர் சிறப்பு மேம்பாட்டுத் திட்டப்பணிகளை மேற்கொள்ள ஏதுவாக திருத்திய மதிப்பீட்டில் ரூ.2.00 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

2016–2017

இவ்வாண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து நடைபெற ஏதுவாக ரூ.2.00 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

> ‘‘25.02.2016 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.133/2016, நாள்.25.02.2016ன்படி 2015–16ஆம் ஆண்டின் திருத்திய மதிப்பீட்டிற்கும் 2016–17ஆம் ஆண்டின் வரவு செலவு திட்டத்திற்கும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) ஒப்புதல் அளித்து மன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.’’

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

****

நி.நி.பி.எண்: பி1/2935–அ/2015
ஆணையர் அவர்களின் 25.02.2016 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.146/2016 **பொருள் எண்.02**

தொடக்கக் கல்வி நிதி – வரவு செலவு திட்டம் 2016–2017 மற்றும் திருத்திய மதிப்பீடு 2015–2016 – மன்றத்தின் அனுமதி

தமிழ்நாடு தொடக்கக் கல்வி சட்டம் 38–ன்படி தொடக்கக் கல்வி நிதிக்கான 2016–2017–ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்டம் மற்றும் 2015–2016–ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீட்டிற்கான அனுமதி கோரப்படுகிறது.

அரசாணை எண்: 702, கல்வித் துறை, நாள்: 23.05.1996–ல் சென்னை மாநகராட்சியின் கல்வித் துறையில் பணிபுரியும் ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லாதவர்களை அரசு ஊழியர்களாக மாற்றம் செய்ய ஆணையிட்டது. அரசாணை எண்: 131, கல்வித் துறை, நாள்: 01.02.1991–ல் சென்னை மாநகராட்சி ஆணையர் அல்லது அவரால் நியமிக்கப்பட்டவர்கள் மாநகராட்சிப் பள்ளிகளை நடத்தி மற்றும் பராமரித்திட ஆணையிட்டது. சென்னை மாநகர தொடக்கப் பள்ளி, உயர்நிலை மற்றும் மேனிலைப் பள்ளிகளில் பணிபுரியும் அனைத்து ஊழியர்களுக்கும் அரசே 01.04.1990 முதல் மாத சம்பளத்தை அரசாணை எண்: 347, கல்வித் துறை, நாள்: 09.03.1990–ன்படி வழங்கி வருகிறது. அதேபோல், 01.04.1990–க்கு பின் கல்வித் துறையில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்கள் அனைவருக்கும் 01.10.2002 முதல் மாத ஓய்வூதியத்தினை அரசு வழங்கி வருகிறது.

அரசு இப்பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லாதவர்களுக்கு மாத சம்பளம் மற்றும் சில்லறை செலவினங்களை மட்டுமே வழங்கி வருகிறது. மாநகராட்சி தொடக்கப் பள்ளிகளுக்கு ஆகும் செலவினங்களை பள்ளி கட்டடங்களை பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல், ஓய்வூதியம் வழங்குதல் மற்றும் நிர்வாக செலவுகள் இந்த தொடக்கக் கல்வி நிதியிலிருந்தே மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்தொடக்கக் கல்வி நிதிக்கான முக்கிய ஆதாரம் சொத்து வரியோடு வசூலிக்கப்படும் தொடக்கக் கல்வி வரியேயாகும். மாநகராட்சி பள்ளிகளுக்கு கட்டடங்களை கட்டுதல், தளவாடங்கள் வாங்குதல், கணினிகள் வாங்குதல் போன்ற பல பணிகளை மாநகராட்சியே மேற்கொண்டு அதற்குரிய செலவுகளை இந்த நிதியிலிருந்து மேற்கொண்டு வருகிறது. உயர்நிலை மற்றும் மேனிலைப் பள்ளிகளின் பழுதுபார்க்கும் பணிகளும் முதலில் மாநகராட்சியின் பொது நிதியிலிருந்து செலவழிக்கப்பட்டு பிறகு தொடக்கக் கல்வி வரியில் சரி கட்டப்படுகிறது. மேற்கூறியவற்றை கருத்திற்கொண்டு திருத்திய மதிப்பீடு 2015–2016 மற்றும் வரவு செலவு திட்டம் 2016–2017 தயாரிக்கப்பட்டுள்ளது.

திருத்திய மதிப்பீடு 2015–2016

திருத்திய மதிப்பீட்டின்படி இந்நிதிக்கு வரவு ரூ. 132.89 கோடி ஆகும். செலவு ரூ.131.91 கோடி ஆகும்.

வரவு செலவு திட்டம் 2016–2017

இந்நிதியாண்டில் தொடக்கக் கல்வி நிதியின் வரவு ரூ. 143.97 கோடி ஆகும். செலவு ரூ.142.98 கோடி ஆகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

அரசாணை (நிலை) எண்: 65, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்: 02.03.1999–ல் அரசு தொடக்கக் கல்வி வரி மூலம் வசூலிக்கப்படும் தொகையை தொடக்கப் பள்ளிகள், உயர்நிலை மற்றும் மேனிலைப் பள்ளிகளின் மேம்பாட்டிற்கு செலவழிக்க ஆணையிட்டுள்ளது. அதன்படி பல முக்கிய பணிகளை மாநகராட்சி இப்பள்ளிகளில் நிறைவேற்றி வருகிறது. மாநகராட்சி பள்ளிகளின் கல்வி தரம் உயர்த்தும் நோக்கோடு பல நற்பணிகளையும் தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேனிலைப் பள்ளிகளில் மேற்கொண்டுள்ளது. புதிய வகுப்பறைகளை மாணவர்களின் எண்ணிக்கைக்கு தகுந்தவாறு மாநகராட்சி கட்டியுள்ளது. எனவே 100 விழுக்காடு தொடக்கக் கல்வி வரியினை மாநகராட்சியே தன் வசம் வைத்து கொள்ளவும், ஏனைய மூலதனப் பணிகளுக்கும், கல்வி துறை சம்மந்தப்பட்ட பணிகளுக்கும் செலவழிக்க அரசின் ஆணையை எதிர்நோக்கி இந்த நிதியாண்டிலும் நிதி மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

2016–2017ஆம் ஆண்டின் வரவு செலவு திட்டத்திற்கும், 2015–2016ஆம் ஆண்டின் திருத்திய மதிப்பீட்டிற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

> "25.02.2016 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தின் தீர்மான எண்.04/2016, நாள்.25.02.2016ன்படி 2015–16 ஆம் ஆண்டின் திருத்திய மதிப்பீட்டிற்கும் 2016–17ஆம் ஆண்டின் வரவு செலவு திட்டத்திற்கும் நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது."

> "25.02.2016 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.132/2016, நாள்.25.02.2016ன்படி 2015–16ஆம் ஆண்டின் திருத்திய மதிப்பீட்டிற்கும் 2016–17ஆம் ஆண்டின் வரவு செலவு திட்டத்திற்கும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) ஒப்புதல் அளித்து மன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

மன்றச் செயலாளர் **ஆணையாளர்**

மேயர்

க.து.ந.க.எண்.பி9/4845/2012

ஆணையர் அவர்களின் 12.02.2016 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.147/2016 **பொருள் எண்.01**

கட்டடத்துறை – மண்டலம்–9, வார்டு–117, டாக்டர் கிரியப்பா சாலையில் கட்டப்பட்டுள்ள சமூக நலக்கூடத்திற்கு அம்மா சமூக நலக்கூடம் என பெயர் சூட்ட அரசின் ஒப்புதல் பெற அனுமதி

மண்டலம்–9, வார்டு–117, டாக்டர் கிரியப்பா சாலையில் சமூகநலக்கூடம் கீழ்தளத்தில் வாகன நிறுத்துமிடம் முதல் தளத்தில் சமுதாய நலக்கூட கட்டடம் கட்டும் பணிக்காக மன்றத் தீர்மான எண்.582/2012, நாள்.27.12.2012ல் தீர்மானம் பெறப்பட்டுள்ளது.

மண்டலம்–9, வார்டு–117, டாக்டர் கிரியப்பா சாலையில் சமூக நலக்கூடம் கீழ்தளத்தில் 8700 சதுர அடியில் வாகனநிறுத்துமிடம் முதல் தளத்தில் 8700 சதுர அடியில் சமுதாய நலக்கூட கட்டடம் ரூ.355.00 இலட்சங்கள் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே நடைபெற்ற 9வது மண்டல வார்டு குழுவில் தீர்மான எண்.1102/2015, நாள்.15.10.2015 அன்று அம்மா சமூக நலக்கூடம் என பெயர் சூட்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மன்றத்தீர்மானம் பெற அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே, மண்டலம்–9, வார்டு–117, டாக்டர் கிரியப்பா சாலையில் கட்டப்பட்டுள்ள சமூகநலக் கூடத்திற்கு அம்மா சமூகநலக்கூடம் என பெயர் சூட்ட அரசின் அனுமதி பெற அரசுக்கு கடிதம் அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

2016–2017ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை கூட்டம் நடைபெறுவதால், இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

தொ.நோ.ம.மனை.க.எண்: ம.இ.ப / 100 /2016

ஆணையர் அவர்களின் 02.02.2016 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.148/2016 **பொருள் எண்.02**

தொற்று நோய் மருத்துவமனை – மருத்துவ இணையியல் படிப்பு – செவிலியர் உதவியாளர் பயிற்சி படிப்பு அரசு ஆணையின்படி பல்நோக்கு மருத்துவ பணியாளர்என பெயர் திருத்தம் செய்து நடைமுறைப்படுத்துவதற்கு அனுமதி

சிறப்பு அலுவலர் மன்றம் தீர்மானம் எண் 3558/93 நாள் 05.08.93ல் நலத்துறையின் கீழ் இயங்கும் தொற்று நோய் மருத்துவமனையில் மருத்துவ ஆய்வக பட்டயப் படிப்பு, பல்நோக்கு சுகாதாரப் பணியாளர் பயிற்சி வகுப்பு மற்றும் செவிலியர் உதவியாளர் பயிற்சி வகுப்பு தொடங்கவும் இப்பயிற்சி வகுப்பிற்கு சென்னை மாநகராட்சி ஊழியர்களின் வாரிசுதாரர்களும் அல்லது சென்னை மாநகராட்சி பள்ளியில் பயின்ற மாணவ மாணவியர்களுக்கு மட்டும் இப்பயிற்சியில் சேரவும் இதற்காக பயிற்சி கட்டணம் மாதம் ரூ.50/– பெறவும் இப்பயிற்சி வகுப்பு நடத்துவதால் சென்னை மாநகராட்சிக்கு நிதி இழப்பு ஏதும் இல்லை என்றும் இதற்கான அங்கீகாரம் சம்பந்தப்பட்ட துறையிருந்து பெறுவதற்கு அரசுக்கு முன்மொழிகள் அனுப்ப தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அரசு இப்பயிற்சி திட்டத்தின் அவசியத்தை உணர்ந்து சென்னை மாநகராட்சி தொற்றுநோய் மருத்துவமனையில் செவிலியர் உதவியாளர் பயிற்சி தொடங்கவும் இதற்காக வருடத்திற்கு 50 விண்ணப்பதாரர்களுக்கு (25 ஆண் 25 பெண்) இப்பயிற்சி அளிக்க அரசு ஆணை (நிலை) எண் 666 குடும்ப நலவாழ்வு துறை நாள் 23.08.94ல் அனுமதி வழங்கியது.

தொற்றுநோய் மருத்துவமனையில் நடத்தப்படும் செவிலியர் உதவியாளர் ஒரு வருட பயிற்சியானது தமிழ்நாடு செவிலியர் மன்றத்தாலும் மற்றும் இந்திய செவிலியர் மன்றம் புதுடெல்லியினாலும் ஏற்பு அளிக்காதது என்றும் இது இம்மன்றத்தால் பதிவு செய்ய தகுதியற்ற பயிற்சி என்றும் தெரிவிக்கப்பட்டதால் செவிலியர் உதவியாளர் பயிற்சி வகுப்பு மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டு 2000–ம் ஆண்டு முதல் தற்காலிகமாக தொற்றுநோய் மருத்துவமனையில் நிறுத்தம் செய்யப்பட்டது. (நிலைக்குழு (சுகாதாரம்) தீர்மானம் எண். 582/2000 நாள் 18.09.2000)

மன்றம் தீர்மானம் எண்.184/2004 நாள்.24.06.2004ல் தொற்றுநோய் மருத்துவமனையில் செவிலியர் உதவியாளர் பயிற்சி வகுப்பு 2004–2005ஆம் ஆண்டு முதல் சுயநிதி திட்டத்தின் மூலம் மீண்டும் தொடங்கப்பட்டது. இதனை தொடர்ந்து மன்றம் தீர்மானம் எண்.222/2012 நாள்.19.06.2012 ல் செவிலியர் உதவியாளர் பயிற்சி வகுப்புக்கு சென்னை மாநகராட்சி பள்ளிகளில் பயின்ற மாணவ மாணவியர் மற்றும் சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் வாரிசுகளால் அந்த இடங்கள் நிரப்பப்படாத பட்சத்தில் அரசு மற்றும் அரசு சார்ந்த (விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளையும் சேர்த்து) பள்ளிகளில் பயின்ற ஏழை மாணவ மாணவிகளை வைத்தும் நிரப்புவதற்கு மன்றம் அனுமதி அளித்துள்ளது. இதன்படி இம்மருத்துமனையில் பயிற்சி பெற்று 923 மேற்பட்ட செவிலியர் உதவியாளர்கள் சென்னையில் உள்ள பெரும்பாலான தனியார் மருத்துவமனைகளில் பணிபுரிந்து வருகிறார்கள்.

இந்நிலையில் அரசு துணை செயலாளர் குடும்ப நலவாழ்வு துறை அவர்களின் 03.03.2015 நாளிட்ட கடிதத்தில் செவிலியர் உதவியாளர் பயிற்சியை சுகாதார பணியாளர் மற்றும் துப்புரவு பணியாளர் பணிகளுடன் ஒன்றிணைக்கப்பட்டு ‘‘பல்நோக்கு மருத்துவ பணியாளர்’’ என பெயரிடப்பட்டுள்ளதால் தொற்று நோய் மருத்துவமனையிலும் செவிலியர் உதவியாளர் பயிற்சி வகுப்பை தொடர்ந்து நடத்த மேற்படி பெயரிடுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அரசு கூடுதல் செயலாளர் குடும்ப நலவாழ்வு துறை அவர்களின் 28.09.2015 நாளிட்ட கடிதத்திலும் அரசாணை (நிலை) எண்.325 குடும்ப நலவாழ்வு (எப் 2) நாள்.20.11.2012ன்படி செவிலியர் உதவியாளர் பயிற்சி சுகாதார பணியாளர் மற்றும் துப்புரவு பணியாளர் பணிகளுடன் ஒன்றிணைக்கப்பட்டு ‘‘பல்நோக்கு சுகாதார பணியாளர்’’ என பெயரிடப்பட்டுள்ளது என்றும் மேற்படி அரசாணை அடிப்படையில் 2014–2015ஆம் ஆண்டு மருத்துவ இணையியல் படிப்புக்களுக்கான சேர்க்கை விவரங்களை அரசாணை(D) எண் 927 குடும்ப நலவாழ்வு (PME) துறை நாள்.16.09.2014ல் அனுமதி பெற்று மருத்துவ கல்வி இயக்ககம் வெளியிட்டுள்ளது என்றும் இதனால் செவிலியர் உதவியாளர் பயிற்சி வகுப்பு என்ற பெயரில் தொற்று நோய் மருத்துவமனையில் தொடர்ந்து நடத்த இயலாத நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையே பதிவாளர் தமிழ்நாடு செவிலியர் மற்றும் பேறுகால உதவியாளர்கள் மன்றம் அவர்களின் 27.11.2015 நாளிட்ட கடிதத்திலும் மாநில அரசு தெரிவித்துள்ளவாறு தொற்றுநோய் மருத்துவமனையில் செவிலியர் உதவியாளர் பயிற்சி வகுப்பினை இனி ''பல்நோக்கு மருத்துவ பணியாளர்'' என பெயரிடுமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

எனவே,

1. அரசாணை(நிலை) எண்.325 குடும்ப நலவாழ்வு (எப் 2) துறை, நாள்.20.11.2012ன்படி செவிலியர் உதவியாளர் பயிற்சி பெயரை மாற்றம் செய்யுமாறு அறிவுறுத்தி மேற்படி பெறப்பட்ட கடிதங்களின் அடிப்படையிலும் தொற்று நோய் மருத்துவமனையில் தற்போது நடத்தப்பட்டு வரும் செவிலியர் உதவியளார் பயிற்சி என்ற பெயரை இனி ''பல்நோக்கு மருத்துவ பணியாளர்'' (Multipurpose Hospital Worker)என பெயர் மாற்றம் செய்து வருடந்தோறும் இப்பயிற்சியை தொடர்ந்து நடத்திடவும்,
2. பல்நோக்கு சுகாதார பணியாளர் பயிற்சி என்ற பெயரில் மருத்துவ கல்வி இயக்குநரகத்தில் பதிவு செய்வதற்கும்,

மேற்காணும் 1 மற்றும் 2 வரை உள்ள இனங்களுக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

2016–2017ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை கூட்டம் நடைபெறுவதால், இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

****

சு.து.ந.க.எண்/008/2016

ஆணையர் அவர்களின் 15.02.2016 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.149/2016 **பொருள் எண்.03**

மண்டலம்–6, வார்டு–65ல் உள்ள GKM காலனி மயானத்தில் கல்லறை கட்ட அனுமதி

திருமதி.பிரேமலதா அவர்களின் 06.01.2016 நாளிட்ட கடிதத்தில் தனது கணவர் திரு.ஜெ.செந்தில்குமரன் அவர்கள் இராணுவத்தில் பணியாற்றும்போது 28.03.2015 அன்று இறந்ததாகவும், அவரை மண்டலம்–6, வார்டு–65ல் உள்ள GKM காலனி மயானத்தில் அடக்கம் செய்ததாகவும் தெரிவித்துள்ளார். அம்மயானத்தில் தன் கணவர் திரு.ஜெ.செந்தில்குமரன் அவர்களை அடக்கம் செய்த இடத்தல் கல்லறை கட்ட அனுமதி கோரியுள்ளார்.

மண்டல நல அலுவலர், மண்டலம்–6 அவர்களின் கடிதம் ம.ந.அ.6.ந.க.எண்.09/2016, நாள்.04.01.2016ல் GKM காலனி மயானத்தில் கல்லறை கட்ட அனுமதி இல்லை என்று தெரிவித்துள்ளார்.

திருமதி.பிரேமலதா அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க அவர்களது கணவர் திரு.ஜெ.செந்தில்குமரன் அவர்கள் இராணுவத்தில் 28.03.2015 அன்று பணியில் இருக்கும்போது இறந்ததை கருத்தில் கொண்டு, திருமதி.பிரேமலதா அவர்களின் கணவரை அடக்கம் செய்த GKM காலனி மயானத்தில் கல்லறை கட்ட சிறப்பு அனுமதி வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

2016–2017ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை கூட்டம் நடைபெறுவதால், இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

பொ.து.ந.க.எண்.ஈ1/6269 /2016

ஆணையர் அவர்களின் 19.02.2016 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.150/2016 **பொருள் எண்.04**

வயது முதிர்வு ஒய்வு அனுமதி

16.12.2015 நாளிட்ட சுற்றறிக்கையின்படி, திருமதி.பிரிசில்லாதிலகராணி, கண்காணிப்பு பொறியாளர், சிறப்பு திட்டங்கள் துறையில் அவர்கள் வயது முதிர்வு காரணமாக **30.04.2016** அன்று பிற்பகல் முதல் ஓய்வு பெறவுள்ளார்.

11.02.2016 நாளிட்ட குறிப்பின்படி, திருமதி.பிரிசில்லாதிலகராணி, கண்காணிப்பு பொறியாளர், சிறப்பு திட்டங்கள் அவர்கள் **30.04.2016** அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்வதால் கீழ்கண்டவாறு கோப்பு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

திருமதி.பிரிசில்லா திலகராணி அவர்கள் **13.09.1978** அன்று சென்னை மாநகராட்சியில் வரைவாளராக பணியில் சேர்ந்து தற்போது கண்காணிப்பு பொறியாளராக பதவி உயர்வு பெற்று கீழ்கண்ட துறைகள்/மண்டலங்களிலிருந்து பணிபுரிந்து வந்துள்ளார்.

வ. எண்	வகித்த பதவியின் பெயர்	பணிபுரிந்த மண்டலம் / துறை / வட்டார அலுவலகங்களின் பெயர்	பணிபுரிந்த காலம்	
			முதல்	வரை
1)	வரைவாளர்	மாவட்ட அலுவலர் (வடக்கு)	13.09.1978	10.01.1985
2)	இளநிலைப் பொறியாளர்	மாவட்ட அலுவலர் (தெற்கு)	11.01.1985	15.05.1987
3)	உதவி பொறியாளர்	மாவட்ட அலுவலர் (தெற்கு)	16.05.1987	01.12.1987
4)	வரைவாளர்	மாவட்ட அலுவலர் (தெற்கு)	02.12.1987	31.07.1989
5)	உதவி பொறியாளர்	கட்டடத்துறை	01.08.1989	04.09.1989
6)	உதவி பொறியாளர்	Circle – VI	05.09.1989	28.11.1991
7)	உதவி பொறியாளர்	Private Street	29.11.1991	10.08.1993
8)	உதவி பொறியாளர்	பணிகள் துறை (T.P.)	11.08.1993	28.02.2000
9)	உதவி செயற்பொறியாளர்	கட்டடத்துறை	28.02.2000	15.03.2000
10)	உதவி செயற்பொறியாளர்	பேரூந்து சாலைகள் துறை	16.03.2000	17.01.2012
11)	செயற்பொறியாளர்	பேரூந்து சாலைகள் துறை	18.01.2012	29.05.2014
12)	மண்டல அலுவலர்	மண்டலம் – 3	30.05.2014	07.07.2014
13)	மண்டல அலுவலர் (Doing Duty மேற்பார்வை பொறியாளர்)	பணித்துறை, தரக்கட்டுபாடு மற்றும் சிறப்பு திட்டங்கள் (பொ.)	07.07.2014	03.08.2014
14)	மேற்பார்வை பொறியாளர்	பணித்துறை, தரக்கட்டுபாடு மற்றும் சிறப்பு திட்டங்கள் (பொ.)	04.08.2014	13.10.2014
15)	மேற்பார்வை பொறியாளர்	வட்டார துணை ஆணையர் (வடக்கு)	13.10.2014	01.12.2014
16)	மேற்பார்வை பொறியாளர்	இயந்திரப்பொறியியல் துறை	01.12.2014	09.03.2015
17)	மேற்பார்வை பொறியாளர்	வட்டார துணை ஆணையர் (வடக்கு)	09.03.2015	01.09.2015
18)	மேற்பார்வை பொறியாளர்	சிறப்பு திட்டங்கள் துறை	01.09.2015	இதுநாள் வரை

தனியர் மீது மேலே குறிப்பிட்டுள்ள துறைகள்/ மண்டலங்கள் / வட்டார அலுவலகங்களில் பணிபுரிந்த காலங்களில் ஏதேனும் ஒழுங்கு நடவடிக்கைகள், தணிக்கை தடைகள் மற்றும்

முன்பணங்கள் பெற்று நேர் செய்யாமல் நிலுவைகள் இருந்தால் அதனை தெரிவிக்கும்படி இவ்வலுவலகக்குறிப்பு சி.தி.து.ந.க.எண்.அ1/0014/2016, நாள்.05.01.2016 மூலம் கோரப்பட்டது.

தனியர் மீது மேற்குறிப்பிட்ட துறை மற்றும் மண்டலங்களில், தனியர் பணிபுரிந்த காலங்களில் நேர் செய்யப்படாத முன்பணங்கள், ஒழுங்கு நடவடிக்கைகள் மற்றும் தணிக்கை தடைகள் ஏதும் நிலுவையில் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிதி ஆலோசகர்,பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின் 27.01.2016 நாளிட்ட குறிப்பில் தனியர், துறைகள்/மண்டலங்களில் பணிபுரிந்த காலங்களில் 2012–13 ஆம் ஆண்டு வரை நிதி நிர்வாகப் பிரிவில் உள்ள உள்ளாட்சி நிதித் தணிக்கை அறிக்கைகளின்படி, இணைக்கப்பட்டுள்ள அட்டவணையின்படி மொத்தம் ரூ.25933/– உள்ளடக்கிய 2 தணிக்கை தடை பத்திகள் நிலுவையில் உள்ளதாக தெரிவித்துள்ளார்.மேலும் 2013–14 முதல் 2016–17 ஆம் ஆண்டு வரை உள்ளாட்சி நிதித் தணிக்கை துறையால் தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்படவில்லை எனவும், மேற்காணும் ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்பட்ட பின்னர், தணிக்கை தடை பத்திகள் பணியாளரை சார்ந்தது என்பது தெரியவரும் பட்சத்தில் தனியர் மீது பொறுப்பு நிர்ணயிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது, தணிக்கைப் பத்தி விவரம் பின்வருமாறு:

வ.எண்	மண்டலம் / துறை	ஆண்டு	பத்தி எண்.	தணிக்கைக் குட்படுத்தப் பட்டத் தொகை	தடைக்கு பொறுப்பான பணியாளர்களின் எண்ணிக்கை	திருமதி.பிரிசில்லா திலகராணி அவர்களை பொறுப்பாக்கும் தொகை ரூ.
1	பணித்துறை	1993–94	38	ரூ.25,000.00	1	25,000.00
2	பணித்துறை	1993–94	40(1)	ரூ.933.00	1	933.00
மொத்தம்						**ரூ.25,933.00**

சென்னை மாநகராட்சி விழிப்பு அலுவலர் அவர்களின் கடித எண் வி.து.ந.க.எண். விஜிசி–சி2/03/2015, நாள்.06.01.2016 ன்படி தனியர் மீது இன்றைய தேதியில் சென்னை மாநகராட்சி விழிப்புக் குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று தெரிவித்துள்ளார்.

சென்னை மாநகராட்சி அலுவலர் கூட்டுறவு சங்கத்தின் 10.02.2016 நாளிட்ட கடிதத்தில் தனியர் சங்கத்திற்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ஏதும் இல்லை என அறிக்கை பெறப்பட்டுள்ளது.

தனியர் 16.02.2016 நாளிட்ட உறுதிமொழி கடிதத்தில், தனியர் ஓய்வு பெற்றபின்னர், அன்னாருக்கு வழங்கப்படவுள்ள பணிக்கால பயன்களான ஓய்வூதியம் மற்றும் இதர பணப்பயன்கள் மிகையாக இருப்பது பின்னர்தெரியவந்தால், அத்தொகையினை ஒரே தவணையில் செலுத்திவிடுவேன் அல்லது தனியரது ஓய்வூதிய பணப்பயன்களில் இருந்து பிடித்தம் செய்துகொள்ளலாம் என சம்மதம் தெரிவித்துள்ளார்.

சென்னை மாநகராட்சியில் வகுப்பு–1B ன் கீழ்வரும் கண்காணிப்பு பொறியாளர் பதவியில் உள்ளவர்களை வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்கும் அதிகாரம் அரசின் வசம் உள்ளது.

எனவே, திருமதி. பிரிசில்லா திலகராணி, கண்காணிப்பு பொறியாளர், சிறப்பு திட்டங்கள் துறை அவர்கள் மீது தனிப்பொறுப்பிலுள்ள **ரூ.25933/–(ரூபாய் இருபத்தைந்தாயிரத்து தொள்ளாயிரத்து முப்பத்துமூன்று மட்டும்)** உள்ளடக்கிய 2 தணிக்கை தடை பத்திகள் நிலுவையில் உள்ளதை பிடித்தம் செய்வதற்கு உட்பட்டும் மற்றும் 2013–14 முதல் 2016–17 ஆம் ஆண்டு வரை உள்ளாட்சி நிதித் தணிக்கை துறையால் தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்படாத நிலையில், மேற்காணும் ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்பட்ட பின்னர், தணிக்கை தடை பத்திகள் தனியரை சார்ந்தது ஏதேனும் இருப்பினும் மற்றும் தணிக்கை தடைகள், நேர் செய்யப்படாத முன்பணங்கள் மற்றும் மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு ஏதேனும் நிலுவையில் இருப்பது பின்னர் தெரியவரின் அவற்றிக்கும் தனியரை முழு பொறுப்பாக்கி அன்னாருக்கு வழங்கப்படும் ஓய்வூதிய பயன்கள் மற்றும் அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு தனியரை 30.04.2016 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அரசின் ஆணை வேண்டி அரசுக்கு செயற்குறிப்பு அனுப்ப நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது.”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

****

பொ.து.ந.க.எண்.ஈ2/6330/2016
ஆணையர் அவர்களின் 19.02.2016 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.151/2016 **பொருள் எண்.05**

வயது முதிர்வு ஓய்வு அனுமதி

டாக்டர்.G.ஜெயராணி, மண்டல மருத்துவ அலுவலர், ஆர்.கே. நகர் மண்டலம் அவர்கள் மருத்துவ அலுவலராக 26.05.1986 முதல் பெருநகர சென்னை மாநகராட்சி, மாவட்ட குடும்ப நலத்துறையில் பணியில் சேர்ந்து, பின்னர் 05.01.2012 முதல் மண்டல மருத்துவ அலுவலராக பதவி உயர்வு பெற்று பணிபுரிந்து வருகிறார். இவருடைய பிறந்த தேதி 24.03.1958, வயது முதிர்வு ஓய்வு நாள்: 31.03.2016.

தனியருக்கு மருத்துவ அலுவலர் பதவியில் 26.05.1986 முதல் பணிவரன்முறை படுத்தப்பட்டுள்ளது. மேலும் 26.05.1988 முதல் மருத்துவ அலுவலர் பதவியில் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவித்து ஆணை வழங்கப்பட்டுள்ளது.

டாக்டர்.G.ஜெயராணி, மண்டல மருத்துவ அலுவலர், ஆர்.கே. நகர் மண்டலம் அவர்கள் மீது இன்றைய தேதி வரையில் பெருநகர சென்னை மாநகராட்சி விழிப்பு குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று பெருநகர விழிப்புத்துறையின் 09.02.2016 நாளிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் துறையில் கடந்த 5 ஆண்டுகளில் குற்றவியல் / ஒழுங்கு நடவடிக்கை ஏதுமில்லை எனவும், அன்னாரது சம்பள சான்றின்படி எவ்வித நீண்ட கால முன்பணம் ஏதும் பிடித்தம் செய்ய வேண்டியது இல்லை எனவும், பெருநகர சென்னை மாநகராட்சி, உள்ளிருப்பு குடியிருப்பு ஏதும் ஒதுக்கி தரப்படவில்லை எனவும், தெரிவித்து துணை திட்ட ஒருங்கிணைப்பாளரால் சான்றுகள் அளிக்கப்பட்டுள்ளது. மேலும் கூட்டுறவு சங்கத்தில் கடன் ஏதும் நிலுவை இல்லை என்ற சான்றும் பெறப்பட்டுள்ளது.

தனியர் மீது 31.03.2016 வரை தனிப்பட்ட முறையிலோ கூட்டு பொறுப்பிலோ நிதி இழப்பீடு இருப்பது தெரியவரின், தனியருக்கு வழங்கப்படவுள்ள ஓய்வூதிய பயன் / ஓய்வூதிய அகவிலைப்படியில் பிடித்தம் செய்து கொள்ள துறைதலைவர் முன்னிலையில் ரூ.20/– முத்திரை தாளில் சம்மதித்து ஒப்புதல் அளித்துள்ளார்.

தனியர் பணிபுரிந்த துறை / மண்டலங்களில் இருந்து தனியர் மீது தணிக்கை தடை, ஒழுங்கு நடவடிக்கை மற்றும் நேர்செய்யப்படாத முன்பணங்கள் ஏதும் நிலுவையில் இல்லை என சான்றுகள் பெறப்பட்டுள்ளது.

மேலும், நிதி ஆலோசகர் அவர்களின் 15.02.2016 நாளிட்ட குறிப்பில், தனியர் மருத்துவ அலுவலராக மாவட்ட குடும்ப நலத்துறையில் பணிபுரிந்த காலங்களில் 2013–14ஆம் ஆண்டு முடியவுள்ள தணிக்கை அறிக்கை குறித்த பத்திகள் உள்ள உள்ளாட்சி நிதி தணிக்கை அறிக்கைகளின்படி நிலுவை ஏதுமில்லை எனவும், 2014–15 மற்றும் 2015–16 ஆம் ஆண்டுகளுக்கான உள்ளாட்சி நிதித் தணிக்கை துறையால் தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்படவில்லை எனவும், மேற்காணும் ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்பட்ட பின்னர், தணிக்கை தடை பத்திகள் தனியரை சார்ந்தது என பின்னர் தெரியவரும்பட்சத்தில் அவர் மீது பொறுப்பு நிர்ணயிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் தனியர் வகித்து வரும் பதவி வகுப்பு 2ன் கீழ் வருவதால் தனியரை பணியிலிருந்து விடுவிக்கும் அதிகாரம் பெருநகர சென்னை மாநகராட்சி மன்றத்திற்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

டாக்டர்.G.ஜெயராணி, மண்டல மருத்துவ அலுவலர், ஆர்.கே. நகர் மண்டலம் அவர்களின் பணிப்பதிவேடு நன்கு ஆய்வு செய்யப்பட்டது. மேலும், நிதி ஆலோசகரின் குறிப்பில் தெரிவிக்கப்பட்டவாறு, **2014–2015** மற்றும் **2015–16** ஆம் ஆண்டுகளுக்கான உள்ளாட்சி நிதி தணிக்கை அறிக்கை வெளியிடப்படாத நிலையில், தனியர் மீது நிதி சம்பந்தப்பட்ட தணிக்கை தடைகளால் மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு, நீண்ட கால முன் பணம் பெற்று தீர்வு செய்யப்படாமை ஆகிய காரணங்களால் நிதி இழப்பீடு ஏதேனும் நிலுவையில் இருப்பது பின்னர் தெரியவரின், அவைகளுக்கு தனியரை பொறுப்பாக்கி அத்தொகைகளை அவரது ஓய்வூதிய பயன்கள் மற்றும் அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு, தனியரை **31.03.2016** அன்று பிற்பகல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து
மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

பொ.து.ந.க.எண்.ஈ2/6332/2016

ஆணையர் அவர்களின் 19.02.2016 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.152/2016 **பொருள் எண்.06**

வயது முதிர்வு ஓய்வு அனுமதி

டாக்டர்.V.சியாமளாதேவி, மண்டல மருத்துவ அலுவலர், ராயபுரம் மண்டலம் அவர்கள் மருத்துவ அலுவலராக 03.12.1985 முதல் பணியில் சேர்ந்து, ராஜபாளையம் நகராட்சியில் 03.12.1985 முதல் 20.12.1985 வரையிலும், காஞ்சிபுரம் பெரு நகராட்சியில் 23.12.1985 முதல் 12.08.1988 வரையிலும், பல்லாவரம் நகராட்சியில் 19.08.1988 முதல் 06.07.1995 வரையிலும் மற்றும் அம்பத்தூர் நகராட்சியில் 07.07.1995 முதல் 22.10.2013 வரையிலும், மருத்துவ அலுவலராக பணிபுரிந்து, 23.10.2013 முற்பகல் முதல் மண்டல மருத்துவ அலுவலராக பதவி உயர்வு பெற்று, தற்போது ராயபுரம் மண்டலத்தில் பணிபுரிந்து வருகிறார். இவருடைய பிறந்த தேதி 14.02.1958, வயது முதிர்வு ஓய்வு நாள்: 29.02.2016.

தனியருக்கு மருத்துவ அலுவலர் பதவியில் 31.12.1986 முதல் பணிவரன்முறை படுத்தப்பட்டுள்ளது. மேலும் 31.12.1987 முதல் மருத்துவ அலுவலர் பதவியில் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவித்து ஆணை வழங்கப்பட்டுள்ளது. தனியருக்கு மண்டல மருத்துவ அலுவலர் பதவியில் பணிவரன்முறைப்படுத்தப்பட வேண்டியுள்ளது.

டாக்டர்.V.சியாமளாதேவி, மண்டல மருத்துவ அலுவலர், ராயபுரம் மண்டலம் அவர்கள் மீது இன்றைய தேதி வரையில் சென்னை மாநகராட்சி விழிப்பு குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று விழிப்புத்துறையின் 09.02.2016 நாளிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் துறையில் கடந்த 5 ஆண்டுகளில் குற்றவியல் / ஒழுங்கு நடவடிக்கை ஏதுமில்லை எனவும், அன்னாரது சம்பள சான்றின்படி எவ்வித நீண்ட கால முன்பணம் ஏதும் பிடித்தம் செய்ய வேண்டியது இல்லை எனவும், பெருநகர சென்னை மாநகராட்சி, உள்ளிருப்பு குடியிருப்பு ஏதும் ஒதுக்கி தரப்படவில்லை எனவும், தெரிவித்து துணை திட்ட ஒருங்கிணைப்பாளரால் சான்றுகள் அளிக்கப்பட்டுள்ளது. மேலும் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினர் இல்லை என்ற சான்றும் பெறப்பட்டுள்ளது.

தனியர் மீது 29.02.2016 வரை தனிப்பட்ட முறையிலோ கூட்டு பொறுப்பிலோ நிதி இழப்பீடு இருப்பது தெரியவரின், தனியருக்கு வழங்கப்படவுள்ள ஓய்வூதிய பயன் / ஓய்வூதிய அகவிலைப்படியில் பிடித்தம் செய்து கொள்ள துறைதலைவர் முன்னிலையில் ரூ.20/– முத்திரை தாளில் சம்மதித்து ஒப்புதல் அளித்துள்ளார்.

தனியர் பணிபுரிந்த துறை / மண்டலங்களில் இருந்து தனியர் மீது தணிக்கை தடை, ஒழுங்கு நடவடிக்கை மற்றும் நேர்செய்யப்படாத முன்பணங்கள் ஏதும் நிலுவையில் இல்லை என சான்றுகள் பெறப்பட்டுள்ளது.

மேலும், நிதி ஆலோசகர் அவர்களின் 15.02.2016 நாளிட்ட குறிப்பில், தனியர் மருத்துவ அலுவலராக ராஜபாளையம் நகராட்சியில் 03.12.1985 முதல் 20.12.1985 வரையிலும், காஞ்சிபுரம் பெரு நகராட்சியில் 23.12.1985 முதல் 12.08.1988 வரையிலும், பல்லாவரம் நகராட்சியில் 19.08.1988 முதல் 06.07.1995 வரையிலும் பணிபுரிந்த காலங்களில் அன்னாரை பொறுப்பாக்கும் தணிக்கை தடை, முன்பண நிலுவை ஏதுமில்லை என்ற சான்று அந்தந்த நகராட்சி ஆணையாளர்களிடம் பெறப்பட்டு கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது எனவும், மாவட்ட குடும்ப நலத்துறையில் பணிபுரிந்த காலங்களில் 1995–96ஆம் ஆண்டு முதல் 2013–14ஆம் ஆண்டு முடியவுள்ள தணிக்கை அறிக்கை குறித்த பத்திகள் உள்ள உள்ளாட்சி நிதி தணிக்கை அறிக்கைகளின்படி நிலுவை ஏதுமில்லை எனவும், 2014–15 மற்றும் 2015–16 ஆம் ஆண்டுகளுக்கான உள்ளாட்சி நிதித் தணிக்கை துறையால் தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்படவில்லை எனவும், மேற்காணும் ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்பட்ட பின்னர், தணிக்கை தடை பத்திகள் தனியரை சார்ந்தது என பின்னர் தெரியவரும்பட்சத்தில் அவர் மீது பொறுப்பு நிர்ணயிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் தனியர் வகித்து வரும் பதவி வகுப்பு 2ன் கீழ் வருவதால் தனியரை பணியிலிருந்து விடுவிக்கும் அதிகாரம் பெருநகர சென்னை மாநகராட்சி மன்றத்திற்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

எனவே, டாக்டர்.V.சியாமளாதேவி, மண்டல மருத்துவ அலுவலர், ராயபுரம் மண்டலம் அவர்களின் பணிப்பதிவேடு ஆய்வு செய்யப்பட்டது. மேலும் நிதி ஆலோசகரின் குறிப்பில் தெரிவிக்கப்பட்டவாறு 2014–15 மற்றும் 2015–16 ஆம் ஆண்டிற்கான உள்ளாட்சி நிதி தணிக்கை தடை வெளியிடப்படாதநிலையில், தனியர் மீது நிதி சம்பந்தப்பட்ட தணிக்கை தடைகளால் மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு, நீண்ட கால முன் பணம் பெற்று தீர்வு செய்யப்படாமை ஆகிய காரணங்களால் நிதி இழப்பீடு ஏதேனும் நிலுவையில் இருப்பது பின்னர் தெரியவரின், அவைகளுக்கு தனியரை பொறுப்பாக்கி அத்தொகைகளை அவரது ஓய்வூதிய பயன்கள் மற்றும் அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு, தனியரை 29.02.2016 அன்று பிற்பகல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து
மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

பொ.து.ந.க.எண்.ஈ2/6329/2016
ஆணையர் அவர்களின் 19.02.2016 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.153/2016 **பொருள் எண்.07**

வயது முதிர்வு ஓய்வு அனுமதி

டாக்டர்.D.விஜயா, மருத்துவ அலுவலர், கோடம்பாக்கம் மண்டலம் அவர்கள் 26.05.1986 முதல் பெருநகர சென்னை மாநகராட்சி, மாவட்ட குடும்ப நலத்துறையில் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார். இவருடைய பிறந்த தேதி 27.02.1958, வயது முதிர்வு ஓய்வு நாள்: 29.02.2016.

தனியருக்கு மருத்துவ அலுவலர் பதவியில் 26.05.1986 முதல் பணிவரன்முறை படுத்தப்பட்டுள்ளது. மேலும் 26.05.1988 முதல் மருத்துவ அலுவலர் பதவியில் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவித்து ஆணை வழங்கப்பட்டுள்ளது.

டாக்டர்.D.விஜயா, மருத்துவ அலுவலர், கோடம்பாக்கம் மண்டலம் அவர்கள் மீது இன்றைய தேதி வரையில் சென்னை மாநகராட்சி விழிப்பு குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று விழிப்புத்துறையின் 09.02.2016 நாளிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் துறையில் கடந்த 5 ஆண்டுகளில் குற்றவியல் / ஒழுங்கு நடவடிக்கை ஏதுமில்லை எனவும், அன்னாரது சம்பள சான்றின்படி எவ்வித நீண்ட கால முன்பணம் ஏதும் பிடித்தம் செய்ய வேண்டியது இல்லை எனவும், பெருநகர சென்னை மாநகராட்சி, உள்ளிருப்பு குடியிருப்பு ஏதும் ஒதுக்கி தரப்படவில்லை எனவும், தெரிவித்து துணை திட்ட ஒருங்கிணைப்பாளரால் சான்றுகள் அளிக்கப்பட்டுள்ளது. மேலும் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினர் இல்லை என்ற சான்றும் பெறப்பட்டுள்ளது.

தனியர் மீது 29.02.2016 வரை தனிப்பட்ட முறையிலோ கூட்டு பொறுப்பிலோ நிதி இழப்பீடு இருப்பது தெரியவரின், தனியருக்கு வழங்கப்படவுள்ள ஓய்வூதிய பயன் / ஓய்வூதிய அகவிலைப்படியில் பிடித்தம் செய்து கொள்ள துறைதலைவர் முன்னிலையில் ரூ.20/– முத்திரை தாளில் சம்மதித்து ஒப்புதல் அளித்துள்ளார்.

தனியர் பணிபுரிந்த துறை / மண்டலங்களில் இருந்து தனியர் மீது தணிக்கை தடை, ஒழுங்கு நடவடிக்கை மற்றும் நேர்செய்யப்படாத முன்பணங்கள் ஏதும் நிலுவையில் இல்லை என சான்றுகள் பெறப்பட்டுள்ளது.

மேலும், நிதி ஆலோசகர் அவர்களின் 15.02.2016 நாளிட்ட குறிப்பில், தனியர் மருத்துவ அலுவலராக மாவட்ட குடும்ப நலத்துறையில் பணிபுரிந்த காலங்களில் 2013–14ஆம் ஆண்டு முடியவுள்ள தணிக்கை அறிக்கை குறித்த பத்திகள் உள்ள உள்ளாட்சி நிதி தணிக்கை அறிக்கைகளின்படி நிலுவை ஏதுமில்லை எனவும், 2014–15 மற்றும் 2015–16 ஆம் ஆண்டுகளுக்கான உள்ளாட்சி நிதித் தணிக்கை துறையால் தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்படவில்லை எனவும், மேற்காணும் ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்பட்ட பின்னர், தணிக்கை தடை பத்திகள் தனியரை சார்ந்தது என பின்னர் தெரியவரும்பட்சத்தில் அவர் மீது பொறுப்பு நிர்ணயிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் தனியர் வகித்து வரும் பதவி வகுப்பு 2ன் கீழ் வருவதால் தனியரை பணியிலிருந்து விடுவிக்கும் அதிகாரம் பெருநகர சென்னை மாநகராட்சி மன்றத்திற்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட குடும்ப நலத்துறையின் பரிந்துரையின்படியும் மற்றும் தனியரின் பணிப்பதிவேட்டினை ஆராய்ந்ததின் அடிப்படையிலும், டாக்டர்.D.விஜயா, மருத்துவ அலுவலர், கோடம்பாக்கம் மண்டலம் அவர்கள் மீது 2014–15 மற்றும் 2015–16 ஆம் ஆண்டின் உள்ளாட்சி நிதி தணிக்கையின் அறிக்கை வெளியிடப்படாத நிலையில், நிதி சம்பந்தப்பட்ட தணிக்கை தடைகளால் மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு, நீண்ட கால முன் பணம் பெற்று தீர்வு செய்யப்படாமை ஆகிய காரணங்களால் நிதி இழப்பீடு ஏதேனும் நிலுவையில் இருப்பது பின்னர் தெரியவரின், அவைகளுக்கு தனியரை பொறுப்பாக்கி அத்தொகைகளை அவரது ஓய்வூதிய பயன்கள் மற்றும் அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு, தனியரை 29.02.2016 அன்று பிற்பகல் வயது முதிர்வு ஓய்வளித்து பணியிலிருந்து விடுவிக்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

பொ.து.ந.க.எண்.ஈ1/7186 /2016
ஆணையர் அவர்களின் 19.02.2016 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.154/2016 **பொருள் எண்.08**

வயது முதிர்வு ஓய்வு அனுமதி

16.12.2015 நாளிட்ட சுற்றறிக்கையின்படி, திரு.T.பால்ராஜ், உதவி செயற்பொறியாளர் சிறப்பு திட்டங்கள் துறை அவர்கள் வயது முதிர்வு காரணமாக 30.04.2016 அன்று பிற்பகல் முதல் ஓய்வு பெறவுள்ளார்.

16.02.2016 நாளிட்ட குறிப்பின்படி, திரு. T.பால்ராஜ், உதவி செயற்பொறியாளர், சிறப்பு திட்டங்கள் அவர்கள் 30.04.2016 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்வதால் கீழ்கண்டவாறு கோப்பு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

திரு.T.பால்ராஜ், உதவி செயற்பொறியாளர் அவர்கள் 03.08.1995 முதல் சென்னை மாநகராட்சியில் இளநிலைபொறியாளராக பணியில் சேர்ந்து தற்போது உதவி செயற்பொறியாளராக பதவி உயர்வு பெற்று கீழ்கண்ட துறைகள்/மண்டலங்களிலிருந்து பணிபுரிந்து வந்துள்ளார்.

வ. எண்.	வகித்த பதவி	பணியாற்றிய துறை / வட்டார அலுவலகம் / மண்டலம்	பணியாற்றிய காலம்	
			முதல்	வரை
1	இளநிலைப் பொறியாளர்	பணித்துறை (தொகுப்பூதியம்) (DoingDuty-பேருந்து சாலைகள் துறை)	03.08.1995	02.08.1997
2	இளநிலைப் பொறியாளர்	பணித்துறை (DoingDuty) பேருந்து சாலைகள் துறை)	03.08.1997	15.09.1999
3	இளநிலைப் பொறியாளர்	புதிய மண்டலம் – 9 (பழைய மண்டலம் – 7)	16.09.1999	13.09.2007
4	இளநிலைப் பொறியாளர்	புதிய மண்டலம் – 9 (பழைய மண்டலம் – 6)	13.9.2007	19.12.2011
5	இளநிலைப் பொறியாளர்	புதிய மண்டலம் – 9	19.12.2011	31.10.2013
6	உதவி செயற் பொறியாளர்	கட்டிடத்துறை (Doing duty) -புதிய மண்டலம் – 9)	01.11.2013	30.01.2014
7	உதவி செயற்பொறியாளர்	மத்திய வட்டார அலுவலகம்	30.01.2014	04.03.2014
8	உதவி செயற்பொறியாளர்	புதிய மண்டலம் – 9	04.03.2014	16.07.2014
9	உதவி செயற்பொறியாளர்	சிறப்பு திட்டங்கள் துறை (CAP & CRS)(BRR)	17.07.2014	13.01.2015
10	உதவி செயற்பொறியாளர்	சிறப்பு திட்டங்கள் துறை	14.01.2015	இதுநாள் வரை

தனியர் மீது மேலே குறிப்பிட்டுள்ள துறைகள்/ மண்டலங்கள் / வட்டார அலுவலகங்களில் பணிபுரிந்த காலங்களில் ஏதேனும் ஒழுங்கு நடவடிக்கைகள், தணிக்கை தடைகள் மற்றும் முன்பணங்கள் பெற்று நேர் செய்யாமல் நிலுவைகள் இருந்தால் அதனை தெரிவிக்கும்படி இவ்வலுவலகக்குறிப்பு சி.தி.து.ந.க.எண். அ1/1112/2015, நாள்.29.12.2015 மூலம் கோரப்பட்டது.

தனியர் மீது மேற்குறிப்பிட்ட துறை மற்றும் மண்டலங்களில், தனியர் பணிபுரிந்த காலங்களில் நேர் செய்யப்படாத முன்பணங்கள், ஒழுங்கு நடவடிக்கைகள் மற்றும் தணிக்கை தடைகள் ஏதும் நிலுவையில் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிதி ஆலோசகர்,பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின் 27.01.2016 நாளிட்ட குறிப்பில் தனியர், துறைகள்/மண்டலங்களில் பணிபுரிந்த காலங்களில் 2012–13 ஆம் ஆண்டு வரை நிதி நிர்வாகப் பிரிவில் உள்ள உள்ளாட்சி நிதித் தணிக்கை அறிக்கைகளின்படி, இணைக்கப்பட்டுள்ள அட்டவணையின்படி மொத்தம் ரூ.1,41,446/– உள்ளடக்கிய 2 தணிக்கை தடைகள் கூட்டுப்பொறுப்பு மற்றும் தனிப்பொறுப்பில் நிலுவையில் உள்ளதாகவும், இதில் தனியருக்கு மட்டும் ரூ.47,149/–

உள்ளடக்கிய தணிக்கைத் தடைகள் தனிப்பொறுப்பில் தணிக்கை அறிக்கையில் தெரிவித்துள்ளார். மேலும் 2013–14 முதல் 2016–17 ஆம் ஆண்டு வரை உள்ளாட்சி நிதித் தணிக்கை துறையால் தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்படவில்லை எனவும், மேற்காணும் ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்பட்ட பின்னர், தணிக்கை தடை பத்திகள் பணியாளரை சார்ந்தது என்பது தெரியவரும் பட்சத்தில் தனியர் மீது பொறுப்பு நிர்ணயிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தணிக்கைப் பத்தி விவரம் பின்வருமாறு:

வ. எண்	மண்டலம் / துறை	ஆண்டு	பத்தி எண்.	தணிக்கைக் குட்படுத்தப் பட்டத் தொகை	தடைக்கு பொறுப்பான பணியாளர்களின் எண்ணிக்கை மொத்தம்	திரு. T.பால்ராஜ் அவர்களை பொறுப்பாக்கும் தொகை
1	ப. மண்டலம்–7 பு. மண்டலம்–9	2002–03	39	–	–	–
2	ப. மண்டலம்–7 பு. மண்டலம்–9	2002–03	44	ரூ.1,41,446	3	ரூ.47,149
	மொத்தம்		**2**	**ரூ.1,41,446**	**3**	**ரூ.47,149**

சென்னை மாநகராட்சி விழிப்பு அலுவலர் அவர்களின் கடித எண் வி.து.ந.க.எண்.விஜிசி–சி2/04/2016, நாள்.06.01.2016ன்படி தனியர் மீது இன்றைய தேதியில் சென்னை மாநகராட்சி விழிப்புக் குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று தெரிவித்துள்ளார்.

சென்னை மாநகராட்சி அலுவலர் கூட்டுறவு சங்கத்தின் 10.02.2016 நாளிட்ட கடிதத்தில் தனியர் சங்கத்திற்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ஏதும் இல்லை என அறிக்கை பெறப்பட்டுள்ளது.

தனியர் 16.02.2016 நாளிட்ட உறுதிமொழி கடிதத்தில், தனியர் ஓய்வு பெற்ற பின்னர், அன்னாருக்கு வழங்கப்படவுள்ள பணிக்கால பயன்களான ஓய்வூதியம் மற்றும் இதர பணப்பயன்கள் மிகையாக இருப்பது பின்னர் தெரியவந்தால், அத்தொகையினை ஒரே தவணையில் செலுத்திவிடுவேன் அல்லது தனியரது ஓய்வூதிய பணப்பயன்களில் இருந்து பிடித்தம் செய்துகொள்ளலாம் என சம்மதம் தெரிவித்துள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் வகுப்பு–2ன் கீழ்வரும் உதவி செயற்பொறியாளர் பதவியில் உள்ளவர்களை வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்கும் அதிகாரம் மன்றத்தின் வசம் உள்ளது.

எனவே, திரு. T.பால்ராஜ், உதவி செயற்பொறியாளர் சிறப்பு திட்டங்கள் துறை அவர்கள் மீது தணிக்கை அறிக்கையில் குறிப்பிட்டுள்ள கூட்டுப்பொறுப்பு தொகை ரூ.1,41,446/– உள்ளடக்கிய 2 தணிக்கை தடையில், தனியரின் தனிப்பொறுப்பிலுள்ள **ரூ.47,149/–** (ரூபாய் நாற்பத்தேழாயிரத்து நூற்று நாற்பத்து ஒன்பது மட்டும்) உள்ளடக்கிய 2 தணிக்கை தடை பத்திகள் நிலுவையில் உள்ளதை பிடித்தம் செய்வதற்கு உட்பட்டும் மற்றும் 2013–14 முதல் 2016–17 ஆம் ஆண்டு வரை உள்ளாட்சி நிதித் தணிக்கை துறையால் தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்படாத நிலையில், மேற்காணும் ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்பட்ட பின்னர், தணிக்கை தடை பத்திகள் தனியரை சார்ந்தது ஏதேனும் இருப்பினும் மற்றும் தணிக்கை தடைகள், நேர் செய்யப்படாத முன்பணங்கள் மற்றும் மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு ஏதேனும் நிலுவையில் இருப்பது பின்னர் தெரியவரின் அவற்றிக்கும் தனியரை முழு பொறுப்பாக்கி அன்னாருக்கு வழங்கப்படும் ஓய்வூதிய பயன்கள் மற்றும் அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு தனியரை 30.04.2016 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் வேண்டி சமர்ப்பிக்கபடுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து
மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது."

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

****

பொ.து.ந.க.எண்.ஈ3/6140/2016
ஆணையாளர் அவர்களின் 16.02.2016 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.155/2016 **பொருள் எண்.09**

பணியமைப்பு

அரசாணை (வாலாயம்) எண்.382, பொது (சிறப்பு–அ) துறை, நாள்: 04.02.2016ன்படி, திருமதி.மு.ஆசியா மரியம், இ.ஆ.ப., நகராட்சி நிர்வாக இணை ஆணையர், சென்னை, அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சியில் துணை ஆணையர் (கல்வி) ஆக அயற்பணியில் 10.02.2016 முற்பகல் முதல் பணியேற்ற விவரம் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் தகவலுக்கும் மற்றும் பதிவுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பதிவு செய்து மன்றத்தின்
தகவல் மற்றும் பதிவிற்காகவும் வேண்டி சமர்ப்பிக்கின்றது."

"இதனை மன்றம் பதிவு செய்கின்றது"
****

இ.பொ.து.ந.க.எண். பி1/417/2015
ஆணையர் அவர்களின் 24.02.2016 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.156/2016 **பொருள் எண்.10**

இயந்திர பொறியியல் துறை – அச்சகம் – கல்வித் துறை – 10ம் மற்றும் 12ஆம் வகுப்பு படிக்கும் சென்னை பள்ளி மாணவர்களுக்கு பாட வாரியாக கற்றல் கையேடுகள் அச்சிடுதல் மற்றும் தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல் நிலை பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு அரையாண்டு, இடைநிலை மற்றும் திருப்புதல் தேர்வுகளுக்குத் தேவையான விலையில்லா தேர்வு விடைத்தாள்கள் அச்சிடுதல்–அச்சக பணியாளர்களுக்கு மிகைநேரப்பணி / மிகைநேரப் பணிக்கான இரட்டிப்பு ஊதியம் வழங்க அனுமதி

சென்னை பள்ளிகளில் 10ம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்பு மாணவ மாணவியர்களின் தேர்ச்சி விழுக்காட்டை அதிகரிக்கும் பொருட்டு கடந்த இரண்டு ஆண்டுகளாக கற்றல் கையேடுகள் மாநகராட்சி அச்சகத்தின் மூலம் அச்சடிக்கப்பட்டு மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது என்றும், அதன் அடிப்படையில் 2015–16 ஆம் ஆண்டும் 10 ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு படிக்கும் மாணவர்களுக்கு, அதிக மதிப்பெண்கள் பெரும் பொருட்டு எளிமையாகவும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த வினாவிடைகளை கொண்டு பாடவாரியாக கற்றல் கையாடுகள் கீழ்கண்டவாறு அச்சடித்து வழங்குமாறு கல்வித்துறை குறிப்பு எண்க.து.ந.க.எண்.அ1/009588/2015, நாள் 23.09.2015 குறிப்பில் கல்வி அலுவலர் அவர்கள் கோரியுள்ளார். அதன் விவரம் பின்வருமாறு:

10ம்–வகுப்பு – மொத்தம் 8 பாடங்கள்

பாடம்	பாட நூல்களின் எண்ணிக்கை	
	தமிழ்வழி	ஆங்கில வழி
தமிழ்	7752	
ஆங்கிலம்		7752
கணக்கு	5720	2100
அறிவியல்	5720	2100
சமூக அறிவியல்	5720	2100
மொத்தம்	**24912**	**14052**

12ம் வகுப்பு – மொத்தம் 24 பாடங்கள்

பாடம்	நூல்களின் எண்ணிக்கை	
	தமிழ்வழி	ஆங்கில வழி
தமிழ்	6580	
ஆங்கிலம்		6580
கணக்கு	1482	900
இயற்பியல்	2066	970
வேதியியல்	2066	970
உயிரியல்	1400	480
பொருளியல்	2378	770
கணக்குப் பதிவியல்	2060	720
வணிகவியல்	2120	720
வணிகக் கணிதம்	650	230
கணினி அறிவியல்	2033	1096
வரலாறு	570	100
புவியியல்	460	130
மொத்தம்	**23865**	**13666**

மேலும், கல்வித்துறை குறிப்பு எண் க.து.ந.க.எண். அ1/009588/2015, நாள்.14.07.2015 கல்வி அலுவலர் அவர்களின் குறிப்பில் மாண்புமிகு மேயர் அவர்களின் 2014–2015ம் நிதியாண்டில் நிதிநிலை அறிக்கை அறிவிப்பு எண்.22ன்படி சென்னை மாநகராட்சி கட்டுப்பாட்டில் இயங்கும் தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலை பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு அரையாண்டு, ,இடைநிலை மற்றும் திருப்புதல் தேர்வுகளுக்கு தேவையான விலையில்லா விடைத்தாள்கள் சென்னை மாநகராட்சி அச்சகம் மூலம் அச்சிட்டு வழங்க துணை ஆணையர்(கல்வி) அவர்களின் ஆணை பெறப்பட்டுள்ளதாகவும், சென்னை பள்ளி மாணவ/மாணவியர்களுக்கு 2015–2016ம் ஆண்டிற்கான அரையாண்டு, திருப்புதல் தேர்வு மற்றும் முழு ஆண்டுத் தேர்வுகளில் உள்ள மொழி பாடத் தேர்வுகள் , இரண்டாம் பருவத் தேர்வு மற்றும் மூன்றாம் பருவத் தேர்வுக்குத் தேவையான விலையில்லா விடைத்தாள்கள் அச்சிட்டு வழங்குமாறு கோரியுள்ளார். அதன் அடிப்படையில் கீழ்கண்டவாறு விலையில்லா விடைத்தாள்கள் அச்சிட்டு வழங்கப்பட்டது.

காலாண்டு மற்றும் அரையாண்டுத் தேர்வுக்கு தேவையான விடைத்தாள்கள் அச்சடித்து வழங்க பட்ட விவரம்

வ. எண்	வகுப்பு	விடைத்தாள் எண்ணிக்கை	விடைத்தாள்களின் பக்கங்கள்	அச்சடிக்கப்பட்ட பக்கம்
1.	5	32500	8 (கோடு)	2,60,000
2.	6முதல் 8 வரை	100000	8(கோடு இல்லா)	8,00,000
3.	9	63000	8(கோடு இல்லா)	5,04,000
4.	10	35000	1 6 (கோடு இல்லா)	5,60,000
5.	11 மற்றும் 12	80400	1 6 (கோடு இல்லா)	12,86,400
6.	11மற்றும்12 (Accy)	49000	4 லெஜ்ஜர் தாள்	1,96,000
7.	6 முதல் 12 வரை கூடுதல் தாள்கள்	960000	2 (கோடு இல்லா)	19,20,000
				55,26,400

மேலும், 10,11 மற்றும் 12ம் வகுப்பு மாணவர்களுக்கு அனைத்து தேர்வுகளுக்கும் தமிழ் மற்றும் ஆங்கில மொழி பாடத் தேர்வுகளுக்கு கோடிட்ட விடைத்தாள்கள் (Ruled Sheets) அரசு ஆணையின் அடிப்படையில் பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களின் உத்தரவின்படி மாணவர்களுக்கு வழங்கப்பட வேண்டியுள்ளதால் விலையில்லா விடைத்தாள்கள் அச்சிட்டு வழங்குமாறு பார்வை 3ல் கண்டுள்ள குறிப்பில் கல்வி அலுவலர் அவர்கள் கோரியுள்ளார். அதன் அடிப்படையில் கீழ்க்கண்ட அட்டவணையின்படி அச்சிட்டு வழங்கப்பட்டது.

வ. எண்	வகுப்பு	விடைத்தாள் எண்ணிக்கை	விடைத்தாள்களின் பக்கங்கள்	அச்சடிக்கப்பட்ட பக்கம்
1.	10	7300 X 4 = 29200	10 (கோடு)	2,92,000
2.	11	7200 X4=28800	12(கோடு)	3,45,600
3.	12	6200 X4=24800	1 6(கோடு)	3,96,800
4.	10 முதல் 12 வரை கூடுதல்	7300 X3 X4=87600 7200 X3 X4=86400 6200 X5 X4=124000 மொத்தம் = 298000	2 (கோடு)	5,96,000
				16,30,400

சென்னை மாநகராட்சி அச்சகத்தில் அனைத்து துறை சம்பந்தமான பணிகள் அவ்வப்போது அச்சிட்டு வழங்கப்பட்டுவரும் நிலையில் இப்பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதியும், தேர்வுகள் மிக குறுகிய காலத்தில் நடைபெற உள்ளதால் பணியினை விரைந்து உடனடியாக முடிக்கவேண்டிய நிலையினை கருத்தில் கொண்டும், மிகைநேரப் பணிபுரிந்து பணியினை மேற்கொள்ளவும் மற்றும் அவ்வாறு மிகைநேரப் பணிபுரியும் பணியாளர்களுக்கு மிகை நேர ஊதியம் வழங்கவும் ஆணையர் அவர்களின் 18/01/2016 நாளிட்ட ஆணை பெறப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

மேலும், மன்றத் தீர்மான எண்.56/2015 நாள்.27/02/2015ல் அரசு அச்சகத்தில் பணிபுரியும் பணியாளர்கள் கூடுதல் நேரம் பணிபுரிந்தால் பின்பற்றப்படும் நடைமுறையினை சென்னை மாநராட்சி அச்சகத்தில் பின்பற்ற மன்றத் தீர்மானம் பெறப்பட்டது. ஆனால், மன்றத்தீர்மான எண். 724/2015 நாள். 29.12.2015ல் அரசு அச்சகத்தில் மூன்று ஷிப்ட்களிலும் தனித்தனியே பணியாளர்கள் பணிபுரிகிறார்கள் என்றும் மற்றும் பட்ஜெட் மற்றும் தேர்தல் சமயங்களில் மூன்று ஷிப்ட்களிலும் தனித்தனியே பணியாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள் என்றும் ஆனால் சென்னை மாநகராட்சி அச்சகத்தில் ஒரே ஷிப்ட் பணி மட்டுமே நடைபெற்று வருகிறது. தேர்தல் மற்றும் பட்ஜெட் சமயங்களில் ஒரே ஷிப்ட்டில் பணிபுரியும் பணியாளர்கள் மூன்று ஷிப்ட்களிலும் பணிபுரிந்து பணியை மேற்கொள்ள வேண்டியுள்ளதால் கூடுதல் நேரம் பணிபுரிவதற்கு இரட்டிப்பு தொகை வழங்க மன்றத்தீர்மானம் பெறப்பட்டுள்ளது.

இந்நிலையில், அச்சகத்தில் பணிபுரிந்த தோராயமாக 33 பணியாளர்கள் மேற்கண்ட பணிக்கென 30 நாட்கள் மிகைப்பணி புரிந்தமைக்கான அவரவர் ஊதியத்தின் அடிப்படையில் நாளொன்றுக்கு ரூ.26,000/– வீதம் 30 நாட்களுக்கு ரூ.7,80,000/– மிகைப்பணி ஊதியம் வழங்க ஆணை பெறப்பட்டு பணியாளர்களுக்கு மிகைப்பணி ஊதியம் வழங்கப்பட்டது

எனவே, 10 மற்றும் 12ம் வகுப்பு பயிலும் மாணவ மாணவிகளுக்குத் தேவையான கற்றல் கையேடுகள் மற்றும் சென்னை தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கு காலாண்டு, அரையாண்டு, திருப்புதேர்வு மற்றும் முழு ஆண்டுத் தேர்வில் உள்ள மொழிப்பாடத் தேர்வுகள், இரண்டாம் பருவத் தேர்வு, மற்றும் மூன்றாம் பருவத் தேர்வு ஆகியவற்றிற்குத் தேவையான விலையில்லா விடைத்தாள்கள் ஆகியவற்றை அச்சடிக்க மிகை நேரப்பணி புரிந்தமைக்கும், மிகை நேரப்பணி புரிந்தமைக்கான இரட்டிப்பு ஊதியமாக ரூ.7,38,826/– அச்சக பணியாளர்களுக்கு வழங்கியதற்கும் மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

2016–2017ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை கூட்டம் நடைபெறுவதால், இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது"

****

பா.து.ந.க.எண். பி3/ 0239 /2016

ஆணையர் அவர்களின் 24.02.2016 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.157/2016 **பொருள் எண்.11**

பாலங்கள் துறை – மண்டலம்–6, வார்டு–65 மற்றும் மண்டலம்–8, வார்டு–95 மற்றும் 96 – வில்லிவாக்கம் – கொளத்தூர் சந்திக்கடவு எண்.1–எ க்கு மாற்றாக மேம்பாலம் அமைக்கும் பணி – கலந்தறிதற்குரியவர் நியமிக்கப்பட்டு, வடிவமைப்பு மற்றும் வரைபடங்கள் பெறப்பட்டது – பாலப்பகுதிக்கான மதிபபீடு தயாரிக்கப்பட்டுள்ளது – சேவைத்துறையின் தளவாடங்களை மாற்றியமைப்பதற்கான மதிப்பீடுகள் பெறப்படவேண்டும் – இரயில் பெட்டி தொழிற்சாலை நிறுவனத்திடமிருந்து பாலம் அமைப்பதற்காக தேவைப்படும் நிலத்திற்கான உரிமை உறுதிப்படுத்தப்பட வேண்டும் – பாலப்பகுதி கட்டுமானத்திற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.24.90 கோடிக்கு மன்றத்தின் பரிந்துரையும் சேவைத்துறையினரிடமிருந்து மதிப்பீடுகள் மற்றும் இரயில் பெட்டி தொழிற்சாலையிடமிருந்து பெறப்படும் நிலத்திற்கான தொகை இறுதி செய்யப்பட்ட பின்பு முழுமையான மதிப்பீடுகள் தயாரித்து, அரசின் ஆட்சிமுறை ஒப்பளிப்பு பெற அரசுக்கு கடிதம் எழுத அனுமதி

வில்லிவாக்கம் – கொளத்தூர் சந்திக்கடவு எண்.1–எ ல் மேம்பாலம் அமைப்பதற்காக, விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிக்கு கலந்தறிதற்குரியவர் தமிழ்நாடு நகர்புர கூட்டமைப்பு நிதி சேவை நிறுவனம் மூலம் தெரிவு செய்யப்பட்டு, பெருநகர சென்னை மாநகராட்சியால் 21.10.2013 அன்று நியமிக்கப்பட்டார். கலந்தறிதற்குரியவரிடமிருந்து பெறப்பட்ட திட்ட ஆய்வறிக்கை, போக்குவரத்து ஆய்வறிக்கை, சாத்தியக்கூறு (ம) மண் பரிசோதனை அறிக்கை மற்றும் இடைக்கால அறிக்கைகள் முறையே 25.11.2013, 10.02.2014, 10.06.2014 மற்றும் 07.08.2014 அன்று ஆய்வுக்குழுவிடமிருந்து ஒப்புதல் பெறப்பட்டது.

பொதுமக்களின் கருத்துக்கேட்பு கூட்டம் 10.08.2014 அன்று நடத்தப்பட்டு, பொதுமக்களின் கருத்துக்களை 20.08.2014 வரை பெற்று, கலந்தறிதற்குரியவரிடம் இக்கருத்துக்களை அனுப்பி நன்கு பரிசீலித்து தகுந்த முடிவெடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டது. கலந்தறிதற்குரியவர் பல்வேறு உத்தேச பணியிட வரைபடங்களை 04.09.2014 அன்று சமர்ப்பித்தார்.

மேம்பாலத்தின் தென்பகுதியில், இரயில் பெட்டி தொழிற்சாலைக்கு (ஐ.சி.எப்) சொந்தமான இடம் மேம்பாலம் அமைப்பதற்கு தேவைப்படுவதால், இரயில் பெட்டி தொழிற்சாலை வளாகத்தில், ஐ.சி.எப். அதிகாரிகளுடன் 15.09.2014, 16.09.2014 மற்றும் 17.02.2015 அன்று பெருநகர சென்னை மாநகராட்சி அதிகாரிகளால் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு மேம்பாலத்திற்கு தேவைப்படும் நிலங்களின் அளவுகள் மற்றும் விஸ்தீரணம் ஐ.சி.எப். அதிகாரிகளுக்கு அளந்து நிலத்தில் கோடிட்டு காண்பிக்கப்பட்டது. இரயில்வே துறை, இரயில்வே பகுதிக்கான பணியிட வரைபடத்திற்கு 01.06.2015 அன்று ஒப்புதல் வழங்கியது.

கலந்தறிதற்குரியவர் 20.08.2015 அன்று நடந்த ஆய்வுக் கூட்டத்தில் இப்பணிக்கான வடிவமைப்பு மற்றும் நிலம் கையகப்படுத்தப்படவேண்டிய விவரங்களை சமர்ப்பித்தார். கலந்தறிதற்குரியவர் சமர்ப்பித்த வடிவமைப்பு மற்றும் வரைபடங்களை இந்திய தொழில்நுட்ப கழகம், மெட்ராஸ் (I.I.T. Madras) அவர்களுக்கு 19.10.2015 அன்று அனுப்பப்பட்டு, வடிவமைப்பு சரிபார்க்கும் பணி 27.01.2016 அன்று முடிவுற்று தற்போது மேம்பால கட்டுமான பணிக்கான மதிப்பீடு ரூ.24.90 கோடிக்கு தயாரிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, ஐ.சி.எப். தொழிற்சாலை வளாகத்தில் மேம்பாலத்திற்கு தேவையான 1222ச.மீ. பரப்பளவு நிலம் தவிர ஐ.சி.எப். தொழிற்சாலை வளாகத்திற்கு வெளியேயுள்ள சாலை மற்றும் கால்வாய் ஐ.சி.எப். நிறுவனத்திற்கு சொந்தமானது எனவும், இப்பகுதியில் மேம்பாலம் அமையவிருக்கும் பரப்பளவையும் சேர்த்து கணக்கிட்டு தருமாறு ஐ.சி.எப். நிறுவனம் 21.01.2016 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளது. கலந்தறிதற்குரியவர் மேம்பாலத்திற்கு தேவைப்படும் மொத்த பரப்பளவு 4349 ச.மீ. என கணக்கிட்டு வரைபடம் சமர்ப்பித்துள்ளார். இது குறித்து பெருநகர சென்னை மாநகராட்சி நிலம் மற்றும் உடைமைத்துறை மற்றும் வருவாய் துறையினரால் 03.02.2016 அன்று கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் ஐ.சி.எப். நிறுவனம், பெருநகர சென்னை மாநகராட்சி கோரிய 1222 ச.மீ. பரப்பளவு நிலத்திற்கு ரூ.7.75 கோடி, 35 வருட குத்தகை அடிப்படையில் செலுத்துமாறு கோரியுள்ளது. ஐ.சி.எப். வளாகத்திற்கு வெளியேயுள்ள நிலம், ஐ.சி.எப். நிறுவனத்திற்கு சொந்தமானது என உறுதியாகும்பட்சத்தில் மேம்பாலத்திற்கு தேவைப்படும் 4349 ச.மீ. பரப்பளவில் ஐ.சி.எப். நிறுவனத்திற்கு சுமார் 19.40 கோடிகள் செலுத்த வேண்டி வரும்.

மேலும் சென்னை குடிநீர் வாரியம் தமிழ்நாடு மின்சார வாரியம் தங்களது குடிநீர் / கழிவுநீர் குழாய்கள் மற்றும் கம்பி வடங்களை மாற்றியமைக்க மதிப்பீடுகள் தயாரிக்கும் பணிகளை செய்து வருகிறது.

மேற்படி சேவை நிறுவனங்களிடமிருந்து மதிப்பீடுகள் மற்றும் ஐ.சி.எப். நிறுவனத்திற்கு செலுத்தவேண்டிய தொகை குறித்து முடிவு தெரிந்தவுடன் இத்திட்டத்திற்கான முழுமையான மதிப்பீடு தயாரிக்கப்படவேண்டும்.

எனவே, இம்மேம்பாலம் கட்டுமானத்திற்கான மதிப்பீடு ரூ.24,90,00,000/–க்கு பரிந்துரையும், சேவை நிறுவனங்களிடமிருந்து மதிப்பீடு மற்றும் ஐ.சி.எப். நிறுவனத்திற்கு செலுத்தவேண்டிய தொகை குறித்து முடிவு தெரிந்தவுடன், இத்தொகைகளை கட்டுமான மதிப்பீட்டுத் தொகையுடன் சேர்த்து, இத்திட்டத்திற்கான முழுமையாக மதிப்பீடு தயாரித்து அரசின் ஆட்சிமுறை ஒப்பளிப்பு பெற அரசுக்கு கடிதம் எழுத மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

2016–2017ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை கூட்டம் நடைபெறுவதால், இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

பொ.து.ந.க.எண்.ஈ2/5033/2016

ஆணையர் அவர்களின் 24.02.2016 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.158/2016 **பொருள் எண்.12**

பணியமைப்பு

02.02.2016 நாளிட்ட கடிதத்தில் திரு.பா.ராஜசேகர், மன்றச்செயலாளர், மன்றத்துறை அவர்கள் தற்போது வகுப்பு IBன் கீழ் வரும் மன்றச்செயலாளர் பதவிக்கு வழங்கப்படுகின்ற ரூ.15600–39100+ தர ஊதியம் ரூ.5400/– ஆகும் எனவும், பிறதுறைகளில் இதே வகுப்பு IB பதவியில் பணிபுரியும் துறைத்தலைவர்களுக்கு ரூ.15600–39100+ தர ஊதியம் ரூ.6600/– முதல் ரூ.15600–39100+ தர ஊதியம் ரூ.8700/– வரை நிர்ணயம் செய்யப்பட்டு பயன்பெற்று வருகிறார்கள் எனவும், தற்போது பெருநகர சென்னை மாநகராட்சி 176 சதுர கிலோ மீட்டர் பரப்பளவிலிருந்து 426 சதுர கிலோ மீட்டர் விரிவாக்கம் செய்யப்பட்டு, 200 மாமன்ற உறுப்பினர்களுடன் மன்றம் செயல்பட்டு வருகிறது எனவும், மன்றத்துறையில் மன்றச்செயலாளர் பதவிக்கு, அடுத்தபடியாக கூடுதலாக எவ்வித இணை அலுவலர் பதவிகள் இல்லையெனவும், மன்றச்செயலாளர் பதவியிலிருந்து அடுத்த பதவி உயர்வு ஏதும் இல்லையெனவும், மன்றச்செயலாளர் பதவியில் பணி ஓய்வு பெறும் வரை ஒரே பதவி வகிக்கும் நிலை உள்ளது எனவும், தற்போது பெருநகர சென்னை மாநகராட்சி, சுகாதாரத்துறையில் வகுப்பு 2ன் கீழ் வரும் சுகாதார கல்வி அலுவலர் பதவிக்கு ரூ.15600–39100+ தர ஊதியம் ரூ.5400/–லிருந்து ரூ.15600–39100+ தர ஊதியம் ரூ.6600/– ஆக உயர்த்தி வழங்க மன்றத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும், இதே போன்று மன்றச்செயலாளர் பதவிக்கும் ரூ.15600–39100+ தர ஊதியம் ரூ.5400/–லிருந்து ரூ.15600–39100+ தர ஊதியம் ரூ.6600/– ஆக உயர்த்தி வழங்க மன்றம் மூலம் அரசுக்கு முன்மொழிவு அனுப்ப பரிந்துரை செய்யுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் மன்றச்செயலாளர் பதவியானது 70 ஆண்டுகளுக்கு முன்னர் தோற்றுவிக்கப்பட்ட பதவியாகும். இப்பதவி அரசாணை எண்.701, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை, நாள்: 20.04.1970ன்படி, வகுப்பு IBயின் கீழ் வகைப்படுத்தப்பட்ட பதவியாகும். இவ்வரசாணையில் மன்றச்செயலாளர் பதவிக்கு பின்வருமாறு பணிவிதிகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

Post / Scale of Pay & Class	**Method of Appointment**	**Qualification**
Council Secretary Rs.15600 – 39100 + 5400 Grade Pay Class-IB	a) By direct recruitment; or b) By promotion from the Category of Superintendents and Head Clerks, Council Section in Class III in the Corporation Establishment who posses the required Educational qualifications and parliamentary experience. Preference will be given to those who worked in the Council Section of the Corporation; or	i) A graduate of a recognized University. ii) B.L. degree with knowledge of parliamentary experience and iii) Must not have completed or will not complete 32 years of age, on the first day of July of the year in which the selection for appointment is made in the case of direct recruitment.

	c) By appointment from the category of Superintendent in the Tamil Nadu Legislative Assembly/Council and Law Department who possess the required educational qualifications and sufficient parliamentary experience on deputation basis.	

தற்போது பெருநகர சென்னை மாநகராட்சி 176 சதுர கிலோ மீட்டர் பரப்பளவிலிருந்து 426 சதுர கிலோ மீட்டர் விரிவாக்கம் செய்யப்பட்டு, 200 மாமன்ற உறுப்பினர்களுடன் மன்றம் செயல்பட்டு வருகிறது.

மன்றத்துறையில் மன்றச்செயலாளர் பதவியின் கடமைகள் மற்றும் பொறுப்புகள் விவரம் பின்வருமாறு:

(i) மன்றச்செயலாளர் பதவியின் பணியானது, பிரதிமாதம் 7 நிலைக்குழுக்களை கூட்டுதல், முறையே நியமனக்குழு, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி), நிலைக்குழு (பணிகள்), நிலைக்குழு (கல்வி), நிலைக்குழு (சுகாதாரம்), நிலைக்குழு (கணக்கு), நிலைக்குழு (நகரமைப்பு) ஆகிய நிலைக்குழுக்களை கூட்டி பொருள் நிரல் தயாரித்து அவற்றினை நிலைக்குழுக்களின் உரிய ஒப்புதலுடன், மாதாந்திர மாமன்ற கூட்டத்திற்கு சமர்ப்பித்தல்.

(ii) தற்போது பெருநகர சென்னை மாநகராட்சி விரிவாக்கம் செய்யப்பட்டு 15 மண்டலங்களாக தோற்றுவிக்கப்பட்ட பின்னர் 200 மன்ற உறுப்பினர்கள் மாதாந்திர கூட்டத்தில் பங்கேற்பதற்கு, உறுப்பினர்களுக்கு பொருள் நிரல் அனுப்ப நடவடிக்கை எடுத்தல்.

(iii) மன்ற கூட்ட நடவடிக்கைகளை, புத்தக வடிவில் தயார் செய்து, 200 மன்ற உறுப்பினர்களுக்கும் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்கு உட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு, கூட்ட நடவடிக்கை புத்தகங்கள் (Official Report) ஒவ்வொரு மாதமும் சார்பு செய்யும் பணிகளை முறையாக கண்காணித்து நடவடிக்கை எடுத்தல்.

(iv) மாண்புமிகு மேயர் / மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களின் வெளிநாட்டு பயணங்கள் குறித்து தொடர் நடவடிக்கை எடுத்தல் மற்றும் மாண்புமிகு மேயர் அவர்களை சந்திக்க வரும் வெளிநாட்டு பிரமுகர்களின் நிகழ்ச்சிக்கு, ஒருங்கிணைப்பு ஏற்பாடு செய்தல்.

(v) மாண்புமிகு மேயர் அவர்கள் அலுவலகத்திலிருந்து பெறப்படும் மன்ற உறுப்பினர்கள் கோரிக்கை கடிதங்கள், அனைத்து மண்டலங்கள் மற்றும் துறைகளுக்கு அனுப்பி, உரிய மேல் நடவடிக்கை மேற்கொண்டு மன்ற உறுப்பினர்களுக்கு உரிய பதில்களை தயாரிக்கும் பணிகளை கண்காணித்தல்.

(vi) மன்ற கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றுவதற்காக அனுப்பப்படும் அனைத்து துறைகள் மற்றும் 1 முதல் 15 வரை உள்ள மண்டலங்களிலிருந்து பெறப்படும் கோப்புகள், சம்மந்தப்பட்ட நிலைக்குழுக்களுக்கு சமர்ப்பித்து அதன் ஒப்புதலுடன்,

மன்றத்திற்கு சமர்ப்பித்து தீர்மானம் நிறைவேற்ற பிரதிமாதம் நடவடிக்கை எடுக்கும் பணிகளை கண்காணித்தல்.

பெருநகர சென்னை மாநகராட்சி, மன்றத்துறையில் மன்றச்செயலாளர் பதவிக்கு மேல்நிலைப்பதவியில் இணை அலுவலர் பதவிகள் ஏதும் இல்லாத நிலையில், மன்றச்செயலாளர் பதவிக்கு அடுத்த பதவி உயர்வு ஏதும் இல்லை. மன்றச்செயலாளர் பதவியில் பணிபுரிபவர் பணி ஓய்வு பெறும் வரை ஒரே பதவி வகிக்கும் நிலை உள்ளதாலும், பெருநகர சென்னை மாநகராட்சியில் வகுப்பு IBன் கீழ் வரும் கூடுதல் மாநகர சுகாதார அலுவலர், மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலர், தலைமை பூச்சி தடுப்பு அலுவலர் மற்றும் சட்ட அலுவலர் போன்ற பதவிகளுக்கு ரூ.15600–39100+ தர ஊதியம் ரூ.6600/– என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதாலும், சமீபத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி, சுகாதாரத்துறையில் வகுப்பு 2ன் கீழ் வரும் சுகாதார கல்வி அலுவலர் பதவிக்கு ரூ.15600–39100+ தர ஊதியம் ரூ.5400/–லிருந்து ரூ.15600–39100+ தர ஊதியம் ரூ.6600/–ஆக உயர்த்தி வழங்க மன்றத்தீர்மான எண்.104/2016, நாள்:30.01.2016ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதன் அடிப்படையிலும், தற்போது மன்றச்செயலாளராக பணிபுரியும் திரு.பா.ராஜசேகர், அவர்கள் தான் பெற்றுவரும் ரூ.15600–39100+ தர ஊதியம் ரூ.5400/–லிருந்து ரூ.15600–39100+ தர ஊதியம் ரூ.6600/–ஆக உயர்த்தி வழங்க விடுத்துள்ள கோரிக்கையை பரிசீலனை செய்யலாம்.

இவ்வாறு மன்றச்செயலாளர் பதவிக்கு தர ஊதியம் உயர்த்தி வழங்குவதால், கீழ்கண்டவாறு வருடத்திற்கு கூடுதலாக ரூ.36,336/–மட்டுமே செலவினம் ஏற்படும். இதனால் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு நிதிச்சுமை ஏதும் கிடையாது.

வ. எண்.	பதவி மற்றும் ஊதிய விகிதம்	தற்போது பெற்று வரும் 15600–39100+5400 என்ற ஊதியத்தின்படி ஆகும் செலவினம் ஒரு வருடத்திற்கு ரூ.	ரூ 15600–39100+6600 என்ற ஊதியம் விகிதம் வழங்கப்பட்டால் ஆகும் செலவினம் ஒரு வருடத்திற்கு ரூ.	வித்தியாசம் ரூ.
1	மன்றச்செயலாளர் (15600-39100+ தர ஊதியம் 5400)	5,90,280 (49,190x12)	6,26,616 (52,218x12)	36,336

எனவே,

அ) மன்றத்துறையில் மன்றச்செயலாளர் பதவிக்கான ஊதிய விகிதத்தை 15600–39100+ தர ஊதியம் 5400–லிருந்து, 15600–39100+ தர ஊதியம் 6600 என்ற நிலைக்கு தரம் உயர்த்தவும்,

ஆ) அவ்வாறு உயர்த்தபடுகிற ஊதிய விகிதத்தை தற்பொழுது மன்றச்செயலாளராக பணியாற்றும் பா.ராஜசேகர் அவர்களுக்கு வழங்க நடைமுறைப்படுத்தவும்,

மேற்கண்ட அ மற்றும் ஆ வரையிலான இனங்களுக்கு அரசின் ஆணை வேண்டி அரசுக்கு முன்மொழிவு அனுப்ப, நியமனக்குழு மூலம் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

"இம்மாத நியமனக்குழு கூட்டம் முடிவுற்ற நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு இதனை நியமனக்குழு சுற்றின் மூலம் பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

வ.து.ந.க.எண்.ஜி1/ 9317/2014

ஆணையர் அவர்களின் 23.02.2016 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.159/2016 **பொருள் எண்.13**

சென்னைமாநகராட்சி – வருவாய் துறை – எல்லை விரிவாக்கம் – சொத்துவரி விதிப்பு முறையினை சீரமைத்தலுக்கு அனுமதி

அரசு ஆணை எண்.256, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.26.12.2009 ஆணையில், பெருநகர சென்னை மாநகராட்சியின் எல்லைப் பரப்புடன், 9 நகராட்சிகள், 8 பேரூராட்சிகள் மற்றும் 25 ஊராட்சிகள்ஆகியவற்றின் பகுதிகளை இணைக்க முடிவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து, அரசு ஆணை எண்.97, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.07.2011 ஆணையின் வாயிலாக பெருநகர சென்னை மாநகராட்சியின் எல்லைப்பரப்பானது புதிய மன்றம் அமைக்கப்பட்ட நாளான 25.10.2011லிருந்து 174ச.மீ பரப்பளவிலிருந்து 426 ச.மீ பரப்பளவாக விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியின் எல்லைப் பரப்புடன் இணைக்கப்பட்டுள்ள நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சிகளின் பகுதியில் முறையே தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920 மற்றும் தமிழ்நாடு கிராம பஞ்சாயத்து சட்டம், 1994 ஆகியவற்றின்படி அப்போதைய உள்ளாட்சி அமைப்புகளால் நிர்ணயம் செய்யப்பட்டபடி சொத்துவரி விதிப்பு நடைமுறைகளும், வெவ்வேறு விதமான கட்டணமும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகர முனிசிபல் சட்டம்,1919, பிரிவு எண்.414–Aன்படி, பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைப்பரப்புடன் இணைக்கப்பட்டுள்ள முந்தைய உள்ளாட்சி அமைப்புகளின் பகுதிகளில் ஏற்கனவே நடைமுறையில் இருந்த வரிகள் மற்றும் கட்டண விகிதங்கள், மாற்றம் செய்யப்படும்வரை தொடர்ந்து, இப்பகுதிகளில் ஏற்கனவே பின்பற்றப்பட்ட சொத்துவரி விதிப்பு நடைமுறைகளும், கட்டண விகிதங்களும் தொடர்ந்து பின்பற்றப்பட்டு வருகிறது.

முந்தைய பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் விதிக்கப்படும் வரி விதிப்புகளுக்கும், பெருநகர சென்னை மாநகராட்சி எல்லையுடன் சேர்க்கப்பட்ட பகுதிகளில் விதிக்கப்படும் வரி விதிப்புகளுக்கும் வேறுபாடுகள் காணப்படுவதால், இது குறித்து பொது மக்களால் கோரிக்கைகள் வைக்கப்படுகின்றன. மேலும், வரிவிதிப்புகளிலுள்ள வேறுபாடுகளை சுட்டிக்காட்டி பத்திரிக்கைகளில் செய்திகளும் வெளியாகிறது.

சென்னை மாநகர முனிசிபல் சட்டம்,1919, பிரிவு எண்.99ன்படி, முந்தைய பெருநகர சென்னை மாநகராட்சி பகுதியில் அரையாண்டு சொத்துவரியானது ஆண்டு மதிப்பில் 12.40 விழுக்காடு விதிக்கப்படுகிறது. (சொத்து வரி 9 விழுக்காடு, கல்வி வரி 2.50 விழுக்காடு மற்றும் நூலகத் தீர்வை சொத்துவரியில் 10 விழுக்காடு அதாவது 0.90 விழுக்காடு). அனைவரும் எளிதில் புரிந்துகொள்ளும்வண்ணம் அரையாண்டு வரியானது (Basic rate x area x 135%) என்ற அடிப்படையில் விதிக்கப்படுகிறது.

ஏற்கனவே இருந்த பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் பின்பற்றப்பட்ட சொத்துவரி விதிப்பு நடைமுறைகளுக்கும், பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைப்பரப்புடன் இணைக்கப்பட்டுள்ள முந்தைய உள்ளாட்சி அமைப்புகளின் பகுதிகளில் பின்பற்றப்பட்ட சொத்துவரி விதிப்பு முறைகளுக்கும் வித்தியாசங்கள் காணப்படுகிறது. இதன் விவரம் பின்வருமாறு:–

விவரம்	முந்தைய பெருநகர சென்னை மாநகராட்சி	முந்தைய உள்ளாட்சி அமைப்புகளின் பகுதி
சொத்துவரிக்கான அடிப்படைக் கட்டணம்	தெருக்களின் அடிப்படையில் அடிப்படைக் கட்டணம்	மண்டல வகைப்பாடு- A, B மற்றும் C அடிப்படைக் கட்டணம் குடியிருப்பு பகுதி – ஒரு மடங்கு தொழிற்சாலைபகுதி – இரண்டு மடங்கு. குடியிருப்பு அல்லாத பகுதி – மூன்று மடங்கு.
வகைப்பாடு	குடியிருப்பு பகுதி குடியிருப்பு அல்லாத பகுதி சிறப்பு வகை கட்டிடங்கள்	குடியிருப்பு பகுதி தொழிற்சாலை பகுதி சிறப்பு வகை கட்டடங்கள்என்ற வகைப்பாடு இல்லை.
ஆண்டு மதிப்பில் நிலமதிப்பு கணக்கீடு %	ஆண்டு விழுக்காடு மதிப்பில் 10 விழுக்காடு	ஆறில் ஒரு பங்கு அல்லது மூன்றில் ஒரு பங்கு

ஆண்டு மதிப்பில் சொத்துவரி விதிப்பின் விழுக்காடு	12.40 விழுக்காடு (அரையாண்டு)	7 விழுக்காடு 7.5 விழுக்காடு 10 விழுக்காடு (அரையாண்டு)
சொத்துவரியின் பாகங்கள்	10% (4+1+1+2+2) பொது வரி + தண்ணீர் +கழிவு நீர் + விளக்கு + துப்புரவு வரி	நகராட்சி / பேரூராட்சி பகுதிகளில் சொத்துவரி பாகங்கள் உள்ளது வீட்டுவரி (கிராம பங்சாயத்து பகுதிகளில் பாகங்கள் ஏதுமில்லை).
கல்விவரி	5 விழுக்காடு	நகராட்சி பகுதிகளில் 5 விழுக்காடு பேரூராட்சி / பஞ்சாயத்து பகுதிகளில் கல்வி வரி விதிக்கப்படவில்லை.
உரிமையாளர் உபயோகத்திற்கு தள்ளுபடி	25 %	தள்ளுபடி ஏதுமில்லை.
தற்காலிக கூரைக்கான தள்ளுபடி	20 விழுக்காடு	25 விழுக்காடு
காலி நிலத்திற்கு சொத்துவரி விதிப்பு	மன்றத் தீர்மானத்தின்படி.	தமிழ்நாடு பேரூராட்சி, மூன்றாம் நிலை நகராட்சி, நகராட்சி மற்றும் மாநகராட்சி (சென்னையைத் தவிர்த்து) பகுதிகளில் 2009 ஆம் ஆண்டைய காலி நிலத்திற்கான வரிவிதிப்பு விதிகளின்படி விதிக்கப்படுகிறது. ஊராட்சி பகுதிகளில் காலி நிலத்திற்கான வரி விதிப்பு செய்யப்படுவதில்லை.
தொழிற்சாலைகள்	குடியிருப்பு அல்லாத கட்டங்கள் என்ற வகைப்பாட்டில் சொத்துவரி விதிப்பு.	தொழிற்சாலை பகுதி என வகைப்படுத்தப்பட்ட பகுதியில் கட்டப்படும் கட்டடங்கள் தொழிற்சாலை என்ற வகைப்பாட்டின் கீழ் வரிவிதிப்பு.
மேற்கூரை வரி	நிலத்தின் உரிமைதாரர் அல்லாதவர்கள் அனுபோகத்தில் இருக்கும் கட்டடங்களுக்கு தனி விண்ணப்பங்கள் (Red Form) பெறப்பட்டு, சொத்துவரி விதிப்பு செய்யப்படுகிறது.	சாதாரண வகையில் சொத்துவரி விதிப்பு செய்யப்படுகிறது.
சொத்துவரி சீராய்வு	1998 ஆம் ஆண்டிற்கு பிறகு மேற்கொள்ளப்படவில்லை. அடிப்படைக் கட்டணமும் உயர்த்தப்படவில்லை. 2003,2008 மற்றும் 2013ம் ஆண்டுகளில் சீராய்வு எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.	2008 ஆம் ஆண்டு சொத்துவரி சீராய்வு செய்யப்பட்டு அடிப்படைக் கட்டணங்கள் உயர்த்தி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு வெவ்வேறு வகையில், முந்தைய உள்ளாட்சி அமைப்புகளினால் நிர்ணயம் செய்யப்பட்ட வெவ்வேறு கட்டணத்தின் அடிப்படையில், அந்தந்த பகுதிக்கேற்றாற்போல் புதியதாக கட்டப்படும் கட்டடங்களுக்கு சொத்துவரி விதிப்பு செய்யப்பட்டுவருகிறது.

42 உள்ளாட்சி அமைப்புகளின் பகுதிகள் பெருநகர சென்னை மாநகராட்சியின் எல்லைப்பரப்புடன் இணைக்கப்பட்டதைத் தொடர்ந்து, சொத்துவரி விதிப்பு அடிப்படைக் கட்டணம் ஏதும் உயர்த்தப்படவில்லை. ஏற்கனவே உள்ளாட்சி மன்றங்களினால் நிர்ணயம் செய்யப்பட்ட அடிப்படைக் கட்டணம் மட்டுமே தொடர்ந்து விதிக்கப்படுகிறது.

இதனால் சோழிங்கநல்லூர் மற்றும் பெருங்குடி போன்ற பகுதிகளில் சொத்துவரி விதிப்பு அடிப்படைக் கட்டணம் மிகக் குறைவாகவும், அதேவேளையில் திருவொற்றியூர் மற்றும் ஆலந்தூர் போன்ற பகுதிகளில் அடிப்படைக் கட்டணம் அதிகமாகவும் காணப்படுகிறது.

முந்தைய பெருநகர சென்னை மாநகராட்சிக்கான பகுதியில், 1998 ஆம் ஆண்டிற்கு பிறகு சொத்துவரி சீராய்வு செய்யப்படவில்லை. அடிப்படைக் கட்டணமும் காலத்திற்கேற்றாற்போல் உயர்த்தப்படவில்லை. இதனால், இப்பகுதியில் சொத்துவரி அடிப்படைக் கட்டணம் குறைவாகக் காணப்படுகிறது. இதனைச் சுட்டிக்காட்டி, பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைப்பரப்புடன் இணைக்கப்பட்ட பகுதிகளில் சொத்துவரி அதிகமாக விதிக்கப்படுவதாக பத்திரிக்கைகளில் செய்திகள் வெளியாகும் சூழ்நிலை உள்ளது.

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சியின் அனைத்து பகுதிக்கும் ஒரேமாதிரியான நடைமுறையினைப் பின்பற்றி, ஒரே மாதிரியான காரணியின் அடிப்படையில், அடிப்படைக் கட்டணங்களை நிர்ணயம் செய்து சொத்துவரி விதிக்க வேண்டியது என்பது அவசியமானது.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சியின் அனைத்து பகுதிக்கும் ஒரே மாதிரியான நடைமுறையினைப் பின்பற்றினால்தான், சொத்துவரி சுயமதிப்பீடு (self assessment of property tax) போன்ற பொதுமக்களுக்கான எளிய திட்டத்தினை சிரமமின்றி அறிமுகப்படுத்திட இயலும்.

வெவ்வேறான கணக்கீடுகள் இருக்கும்பட்சத்தில், சொத்துவரி சுயமதிப்பீட்டின்போது, தவறான கணக்கீடுகளை சொத்தின் உரிமையாளர்கள் கணக்கிடும் சூழ்நிலை ஏற்படும்.

வெவ்வேறான நடைமுறைகளைப் பின்பற்றப்படுவதால், சொத்துவரி மதிப்பீடுகளுக்கு எதிராக மேல்முறையீடுகள் தொடுக்கப்படுகிறது. நீதிமன்றங்களிலும் மேல் முறையீடு வழக்குகள் தொடுக்கப்படுகிறது. இத்தகையான சூழ்நிலைகளை தவிர்க்க வேண்டியது அவசியமாகிறது.

எனவே, சென்னை மாநகர முனிசிபல் சட்டம் 1919ன்படி ஏற்கனவே உள்ள வரிவிதிப்புகள், கட்டணங்கள் மற்றும் பொறுப்புகள் போன்றவைகளை திருத்தியமைத்து, சென்னை மாநகர முனிசிபல் சட்டம்1919 பிரிவு எண்.414–Aன்படி அறிவிக்கை வெளியிட வேண்டியது அவசியமாகிறது.

<u>தொழில்வரி மற்றும் வணிகஉரிமம்</u>

சென்னை மாநகர முனிசிபல் சட்டம் 1919ன்படி நிர்ணயிக்கப்பட்ட தொழில்வரி விதிப்புகளுக்கும், பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைப்பரப்புடன் இணைக்கப்பட்டுள்ள பகுதிகளில் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 மற்றும் தமிழ்நாடு கிராம பஞ்சாயத்து சட்டம் 1994ன்படி நிர்ணயிக்கப்பட்ட தொழில் வரி விதிப்புகளுக்கும் வித்தியாசங்கள் உள்ளது. எனினும், பெருநகர சென்னை மாநகராட்சி எல்லையுடன் இணைக்கப்பட்ட பகுதிகளில் ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டுள்ள விகிதத்தின்படியே பெருநகர சென்னை மாநகராட்சியால் தொழில் வரி வசூலிக்கப்பட்டு வருகிறது.

எனவே, தற்போதைய பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்டு பகுதிகளில் தொழில் வரி விதிப்புகளை இறுதி செய்து, சென்னை மாநகர முனிசிபல் சட்டம் 1919 பிரிவு எண். 414 –Aன்படி திருத்திய அறிவிக்கை வெளியிட வேண்டியது அவசியமாகிறது.

சென்னை மாநகர முனிசிபல் சட்டம் 1919ல் தெரிவிக்கப்பட்டுள்ள விதிமுறைகள், பெருநகர சென்னை மாநகராட்சி எல்லையுடன் இணைக்கப்பட்டுள்ள பகுதிகளில் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம்1920 மற்றும் தமிழ்நாடு கிராம பஞ்சாயத்து சட்டம் 1994ல் வித்தியாசமான விகிதத்தில் நிர்ணயிக்கப்பட்ட வித்தியாசமான வரி விவரங்களையும் கண்டறிந்து, பெருநகர சென்னை மாநகராட்சியில் சீரான வரி விதிப்புகளை நிர்ணயிக்க குழு ஒன்று அமைக்கலாம் என கருதப்படுகிறது.

எனவே,

1. முந்தைய பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகள் மற்றும் தற்போது பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ள பகுதிகளில் விதிக்கப்படும் வித்தியாசமான வரி விகிதங்களை கண்டறிந்து, சீரான வரி விகிதங்களை நிர்ணயிக்க கீழ்க்கண்ட அலுவலர்களை கொண்ட குழு அமைப்பதற்கும்,

வ.எண்.	அலுவலர்	பதவி
1.	துணை ஆணையர் (வருவாய் மற்றும் நிதி)	தலைவர்
2.	வருவாய் அலுவலர்	குழு கூட்டுநர் மற்றும் உறுப்பினர்
3.	நகராட்சி நிர்வாக ஆணையர் அலவலகத்தில் கூடுதல் / இணை / துணை இயக்குநர் பதவியில் ஓய்வு பெற்றவர் (அ) பணியில் உள்ளவர். (அ) ஓய்வு பெற்ற நகராட்சி ஆணையர்.	உறுப்பினர்
4.	இயக்குநர், பேரூராட்சி அலுவலகத்தில் கூடுதல் / இணை / துணை இயக்குநர் பதவியில் ஓய்வு பெற்றவர் (அ) பணியில் உள்ளவர்.	உறுப்பினர்
5.	இயக்குநர், கிராமப்புறம் மற்றம் பஞ்சாயத்து அலுவலகத்தில், கூடுதல்/ இணை/துணை இயக்குநர் பதவியில் ஓய்வு பெற்றவர் (அ) பணியில் உள்ளவர்.	உறுப்பினர்

2. பெருநகர சென்னை மாநகராட்சி தலைமையிடத்தில் இயங்கும் இக்குழுவிடம், அரசாணைகள், சட்டப்பிரிவுகள், விதிமுறைகள் மற்றும் அரசால் வழங்கப்பட்ட வழிமுறைகளை ஆராய்ந்து, பெருநகர சென்னை மாநகராட்சியில் சீரான வரி விகிதங்கள் மற்றும் பின்பற்றக்கூடிய வழிமுறைகளை நிர்ணயித்து, மூன்று மாத கால அவகாசத்தில் அறிக்கை பெறுவதற்கும்,
3. குழுவில் உறுப்பினர்களாக இடம் பெறும் ஓய்வு பெற்ற அலுவலர்களுக்கு மாதம் ரூ.25,000/–வீதம் கௌரவ தொகையாக வழங்கவும்,
4. மேற்படி குழு அளிக்கும் அறிக்கையின் அடிப்படையில், மன்றத்தின் ஒப்புதல் பெற்று அரசுக்கு உரிய செயற்குறிப்பு அனுப்புவதற்கும்.
5. இக்குழுவினை தோற்றுவிக்க அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்பவும்,

மேற்காணும் 1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

2016–2017ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை கூட்டம் நடைபெறுவதால், இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

வ.வ.அ.ந.க.எண்.இ8/9848/2015
ஆணையர் அவர்களின் 25.02.2016 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.160/2016 **பொருள் எண்.14**

தானப்பத்திரம்

மண்டலம்–5, வார்டு–61ல் புதிய கதவு எண்.20, 21 & 22, பழைய கதவு எண்.35, 37 & 39, பாந்தியன் சாலை, மறு நில அளவை எண். 869/3, 869/4 & 869/5, பிளாக் எண். 41, எழும்பூர் கிராமம் என்ற இடத்தில் அதன் உரிமையாளர் திரு.எஸ்.சந்திரேசன் அவர்கள், புதியதாக கட்டிடம் கட்டுவதற்கு கட்டிட வரைபட அனுமதி வேண்டி PPA/WDCN05/06415/2015 நாள்:16.10.2015ல் விண்ணப்பித்துள்ளார். அதில் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் மேம்படுத்தும் வரைப்படத்தின்படி (D.D.P) பாந்தியன் சாலையில் 24மீட்டர் அகலத்திற்கு சாலை விரிவுப்படுத்தும் உத்தேசம் உள்ள காரணத்தினால் விண்ணப்பதாரரின் மனையின் நீளம் 25.99/26.39 மீட்டர் மற்றும் அகலம் 2.05 மீட்டர் ஆக மொத்தம் (2.05mX25.99m/26.39m) 59.05சதுர மீட்டர் பரப்பளவு நிலத்தினை சாலை விரிவாக்கத்திற்காக சென்னை மாநகராட்சியில் தனியர் ஒப்படைக்க வேண்டும். இது குறித்து விண்ணப்பதாரருக்கு கடிதம் அனுப்பப்பட்டது. மேற்படி நிலத்தினை சென்னை மாநகராட்சிக்கு தானபத்திரம் மூலம் ஒப்படைப்பு செய்திட விண்ணப்பதாரர் ஒப்புதல் அளித்துள்ளார்.

சாலை விரிவாக்கத்திற்காக மேற்படி நிலத்தினை தானப்பத்திரம் மூலமாக சென்னை மாநகராட்சி பெற்று கொள்ள 5வது மண்டல வார்டு குழுவின் பரிந்துரை பின்னர் பெறப்படும்.

எனவே,

1. மண்டலம்–5, வார்டு– 61க்கு உட்பட்ட புதிய கதவு எண்.20, 21 & 22, பழைய கதவு எண்.35, 37 & 39, பாந்தியன் சாலை, மறு நில அளவை எண். 869/3, 869/4 & 869/5, பிளாக் எண். 41, எழும்பூர் கிராமம் என்ற இடத்தில் சாலையை ஒட்டியுள்ள 25.99/26.39 மீட்டர் மற்றும் அகலம் 2.05மீட்டர் ஆகமொத்தம் (2.05mX25.99m/26.39m)59.05 சதுர மீட்டர் பரப்பளவு நிலத்தினை சாலை விரிவாக்கத்திற்காக தானப்பத்திரம் மூலம் பெற்றுக் கொள்ளவும்,
2. மேற்படி இடத்தின் சாலை விரிவாக்கப் பணிக்காக ஆகும் செலவுத் தொகையான ரூ.1,05,000/–(ரூபாய் ஒரு இலட்சத்து ஐந்தாயிரம் மட்டும்) மனுதாரரிடம் வசூல் செய்திடவும்,
3. மனை உரிமையாளருக்கு தானமாக பெறப்படும் இடத்திற்கு ‘‘வளர்ச்சி உரிமை சான்றிதழ்’’ (Development Rights Certificate) சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் மூலம் வழங்க பரிந்துரை செய்யவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

2016–2017ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை கூட்டம் நடைபெறுவதால், இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

****

ப.து.ந.க.எண். 0196/2015
ஆணையர் அவர்களின் 16.02.2016 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.161/2016 **பொருள் எண்.15**

தானப்பத்திரம்

மண்டலம்–6, கோட்டம்–70ல் திரு. V.பழனிவேல் அவர்கள், பழைய கதவு எண். 50 & 38, புதிய கதவு எண்.111, மாதவரம் நெடுஞ்சாலை, பெரம்பூர், சென்னை 600 011, R.S.No. 401/2 & 401/1, Block No.23, பெரம்பூர் கிராமம் என்ற இடத்தில் கட்டிடம் கட்டுவதற்கு திட்டம் மற்றும் கட்டிட அனுமதி வேண்டி சென்னை மாநகராட்சி, மத்திய வட்டார அலுவலகம், நகரமைப்பு பிரிவில் PPA/WDCN06/03905/2015, நாள்:25.06.2015ல் திட்ட அனுமதி விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளார். திட்ட மற்றும் கட்டிட அனுமதி வேண்டி விண்ணப்பித்த இடத்தை ஒட்டிய சாலை ''சென்னை முழுமை வளர்ச்சித் திட்டம்–II''ன்படி 24.0 மீ சாலையாக விரிவாக்கம் செய்ய வேண்டும். சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் விதிகளின்படி சாலை விரிவாக்கத்திற்கு நிலத்தினை தான பத்திரம் மூலம் உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒப்படைத்த பிறகு தான் திட்ட அனுமதி வழங்க இயலும்.

எனவே, திரு. V.பழனிவேல் அவர்கள் தங்களிடத்திலிருந்து சாலை விரிவாக்கம் செய்ய 18.09 ச.மீ மற்றும் பொது வழி பாதையில் 6.59 ச.மீ –ன் பிரிபடாத ½ பாகம் [(3.35மீ X 5.4மீ) = 18.09 ச.மீ] + [(1.22மீ X 5.4மீ) =6.59 ச. மீ–ன் ½ of the undivided share)] நிலத்தினை சென்னை மாநகராட்சிக்கு தானபத்திரம் மூலம் வழங்க இசைவு தெரிவித்துள்ளார்.

எனவே,

1. மனை உரிமையாளர் திரு. V.பழனிவேல் அவர்களிடம் இருந்து 18.09 ச. மீ மற்றும் பொது வழி பாதையில் 6.59 ச.மீ பிரிபடாத ½ பாகம் நிலத்தினை சென்னை மாநகராட்சி சாலை விரிவாக்கத்திற்கு தானமாக பெற்றுக் கொள்ளவும்,
2. தானமாக வழங்கப்பட்ட பகுதியில் சாலை விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ள செவாகும் செலவீனம் ரூ.41,500/– யை மனை உரிமையாளர்களிடம் ''ஆணையர் சென்னை மாநகராட்சி'' என்ற பெயரில் வரைவு காசோலையாக பெற்று கொள்ளவும்,
3. தானமாக வழங்கிய நிலத்திற்கு தளப்பரப்பு குறியீடு (FSI) உபயோகப்படுத்தாததால் நிலத்தின் உரிமையாளருக்கு தானமாக பெறப்படும் இடத்திற்கு ''வளர்ச்சி உரிமை சான்றிதழ்'' சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் மூலம் (பொது பாதை பரப்பளவு தவிர்த்து) வழங்க வேண்டி பரிந்துரைப்பதற்கும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

2016–2017ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை கூட்டம் நடைபெறுவதால், இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

****

ப.து.ந.க.எண். 0227/2015
ஆணையர் அவர்களின் 25.02.2016 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.162/2016 **பொருள் எண்.16**

தானப்பத்திரம்

மண்டலம்–8, கோட்டம்–108ல் திரு.M.A.கோபிநாத் அவர்கள் பழைய கதவு எண். 191, புதிய கதவு எண்.220, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, கீழ்பாக்கம், சென்னை 600 010, T.S.No. 3098/13, Block No.45, புரசைவாக்கம் கிராமம் என்ற இடத்தில் கட்டிடம் கட்டுவதற்கு, திட்ட மற்றும் கட்டிட அனுமதி வேண்டி சென்னை மாநகராட்சி, மத்திய வட்டார அலுவலகம், நகரமைப்பு பிரிவில் PPA/WDCN08/03505/2015,நாள்:10.06.2015ல் திட்ட அனுமதி விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளார். திட்ட மற்றும் கட்டிட அனுமதி வேண்டி விண்ணப்பித்த இடத்தை ஒட்டி இரண்டு பக்கம் சாலை அமைந்துள்ளது (புரசைவாக்கம் நெடுஞ்சாலை மற்றும் பிரிக்கிளின் சாலை). ''சென்னை முழுமை வளர்ச்சித் திட்டம் II''–ன்படி பிரிக்கிளின் சாலையை 27.0 மீ சாலையாக விரிவாக்கம் செய்ய வேண்டும். சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் விதிகளின்படி சாலை விரிவாக்கத்திற்கு நிலத்தினை தான பத்திரம் மூலம் உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒப்படைத்த பிறகு தான் திட்ட அனுமதி வழங்க இயலும்.

எனவே, திரு. M.A.கோபிநாத் அவர்கள், பிரிக்கிளின் சாலையை விரிவாக்கம் செய்வதற்கு தங்களிடத்திலிருந்து 44.275 ச. மீ [(3.3மீ+1.3மீ/2) X (19.2மீ+19.3மீ)] = 44.275 ச. மீ) நிலத்தினை சென்னை மாநகராட்சிக்கு தானபத்திரம் மூலம் வழங்க இசைவு தெரிவித்துள்ளார்.

எனவே,

1. மனை உரிமையாளர் திரு. M.A.கோபிநாத் அவர்களிடம் இருந்து 44.275 ச.மீ நிலத்தினை சென்னை மாநகராட்சி சாலை விரிவாக்கத்திற்கு தானமாக பெற்றுக் கொள்ளவும்,
2. தானமாக வழங்கப்பட்ட பகுதியில் சாலை விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ள செவாகும் செலவீனம் ரூ.74,000/– யை மனை உரிமையாளர்களிடம் ''ஆணையர் சென்னை மாநகராட்சி'' என்ற பெயரில் வரைவு காசோலையாக பெற்று கொள்ளவும்,
3. தானமாக வழங்கிய நிலத்திற்கு தளப்பரப்பு குறியீடு (FSI) உபயோகப்படுத்தாததால் நிலத்தின் உரிமையாளருக்கு தானமாக பெறப்படும் இடத்திற்கு ''வளர்ச்சி உரிமை சான்றிதழ்'' சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் மூலம் வழங்க வேண்டி பரிந்துரைப்பதற்கும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

2016–2017ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை கூட்டம் நடைபெறுவதால், இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

****

ப.து.ந.க.எண்.0019/2016
ஆணையர் அவர்களின் 22.02.2016 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.163/2016 **பொருள் எண்.17**

தானப்பத்திரம்

மண்டலம்–10, கோட்டம்–134ல் திரு.T.சாந்தகுமார் அவர்கள் பழைய கதவு எண். 320-L, புதிய கதவு எண்.148/1, ஆற்காடு சாலை (என்.எஸ்.கே.சாலை) கோடம்பாக்கம், சென்னை T.S.No.170/2, Block No.7, புலியூர் கிராமம் என்ற இடத்தில், திட்ட மற்றும் கட்டட அனுமதி வேண்டி சென்னை மாநகராட்சி, மத்திய வட்டார அலுவலகத்தில் PPA/WDCN10/7210/2015, நாள். 18.12.2015–ல் விண்ணப்பித்துள்ளார். அவர் திட்ட மற்றும் கட்டட அனுமதி வேண்டி விண்ணப்பித்த இடத்தை ஒட்டிய ஆற்காடு சாலை "சென்னை முழுமை வளர்ச்சித் திட்டம் II"ன்படி 30.50மீ சாலையாக விரிவாக்கம் செய்யப்பட வேண்டும். சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் விதிகளின்படி சாலை விரிவாக்கத்திற்கு நிலத்தினை தானபத்திரம் மூலம் உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒப்படைத்த பிறகு தான் திட்ட அனுமதி வழங்க இயலும். எனவே, திரு.T.சாந்தகுமார், மனை உரிமையாளர் அவர்கள் சாலை விரிவாக்கம் செய்ய (1.98+2.22/2 மீ x 12.80 மீ) = 26.88 ச.மீ. நிலத்தினை சென்னை மாநகராட்சிக்கு தானபத்திரம் மூலம் வழங்க ஒப்புதல் அளித்துள்ளார்.

இது தொடர்பாக சாலை விரிவாக்கத்திற்கு நிலத்தினை தானப்பத்திரம் மூலம் எடுத்துக் கொள்ள உரிய நடவடிக்கை எடுக்க 22.01.2016 நாளிட்ட கடிதத்தின் மூலம் (ம.வ.அ.ந.க.எண்.இ9/7210/2015) மத்திய வட்டார துணை ஆணையாளர் அவர்கள் அனுப்பியுள்ளார்.

சாலை விரிவாக்கத்திற்கு வேண்டி அளிக்கப்படும் நிலத்தினை திரு.T.சாந்தகுமார், அவர்களிடமிருந்து சென்னை மாநகராட்சி தானமாக எடுத்துக் கொள்ளலாம் என்று கருதப்படுகிறது.

எனவே,

(1) மனை உரிமையாளர் திரு.T.சாந்தகுமார், அவர்களிடமிருந்து பழைய கதவு எண். 320-L, புதிய கதவு எண்.148/1, ஆற்காடு சாலை (என்.எஸ்.கே.சாலை) கோடம்பாக்கம், சென்னை T.S.No.170/2, Block No.7, புலியூர் கிராமத்தில் அமைந்துள்ள நிலத்தில் 26.88 ச.மீ பரப்பளவு நிலத்தினை சாலை விரிவாக்கத்திற்கு தானமாக பெற்றுக் கொள்ளவும்,

(2) தானமாக வழங்கப்பட்ட பகுதியில் சாலை விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ள செலவாகும் செலவீனமான ரூ.46,000/–யை "ஆணையர் சென்னை மாநகராட்சி" என்ற பெயரில் வரைவு காசோலையாக விண்ணப்பதாரரிடம் இருந்து பெற்று கொள்ளவும்,

(3) தானமாக வழங்கிய நிலத்திற்கு தளப்பரப்பு குறியீடு (FSI) உபயோகப்படுத்தாததால் நிலத்தின் உரிமையாளருக்கு தானமாக பெறப்படும் இடத்திற்கு "வளர்ச்சி உரிமை சான்றிதழ்" சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் மூலம் வழங்க வேண்டி பரிந்துரைப்பதற்கும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

2016–2017ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை கூட்டம் நடைபெறுவதால், இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

பொ.சு.து.ந.க.எண். சி2/ 1000 /2016

ஆணையர் அவர்களின் 19.02.2016 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.164/2016 **பொருள் எண்.18**

பொது சுகாதாரத்துறை, மண்டலம் – 7, பகுதி 18, 19 மற்றும் 20 – கோட்டங்கள் 79 முதல் 93 முடிய – பொது சுகாதாரப் பணிகள் – (NULM) திட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட 262 கொசு ஒழிப்பு பணியாளர்கள் ஒரு வருடத்திற்கு (01.03.2016 முதல் 28.02.2017 வரையிலான காலத்திற்கு பணியமர்த்த அனுமதி

சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் – 7 அம்பத்தூர், பொது சுகாதாரத்துறை, 41.32 ச.கி.மீ. பரப்பளவுள்ள 15 வார்டுகள் உள்ளடக்கிய பகுதியாகும். இப்பகுதியில் 195 கி.மீ. நீளமுள்ள பக்கவாட்டு கால்வாய்களும், 32.709 கி.மீ. நீளமுள்ள மழைநீர் கால்வாயும், 29.4 கி.மீ. நீளமுள்ள நீர்வழித்தடமும் உள்ளது. மேலும் 5 இலட்சம் மக்கட்தொகை கொண்ட இம்மண்டலத்தில் 133500 குடியிருப்புகளும் உள்ளது. இம்மண்டலத்தில் புகை பரப்பும் பணிக்கென 3 வாகனங்களும், 32 கைப்புகை போக்கிகளும், கொசு மருந்து தெளிக்க 45 கைத்தெளிப்பான்களும் உள்ளது.

இவற்றை பராமரிக்கவும், தினசரி இயக்கவும், கொசு மற்றும் நோய்த்தடுப்பு பணிகளுக்கென துப்புரவு பணியாளர்களிலிருந்து மாற்றுப் பணியாக பொது சுகாதாரப் பிரிவு பணிக்கு 117 நிரந்தரப் பணியாளர்கள் உள்ளனர். கூடுதல் பணியாளர் தேவைக்கென மன்ற தீர்மான எண்.307/2014, நாள்.30.05.2014ன்படி சுவர்ண ஜெயந்தி திட்ட அலுவலரிடமிருந்து பெறப்பட்ட பணியாளர்களை தலைமை பொறியாளர் அவர்களின் சுற்றறிக்கையின்படி நாளொன்றுக்கு ரூ.289/– என்ற ஊதிய விகிதத்தில் 458 கூடுதல் பணியாளர்களைக் கொண்டு பணி மேற்கொள்ளப்பட்டு வந்தது.

மன்றத்தீர்மான எண்.307/2014, நாள்.30.05.2014ன்படி துப்புரவு மற்றும் மலேரியா பணியாளர்களை தனியார் ஏஜென்சி மூலம் ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டுள்ள நடைமுறை ரத்து செய்யப்பட்டு சுவர்ண ஜெயந்தி நகர்ப்புற வேலை வாய்ப்புத்திட்டம் மூலம் திட்ட அலுவலரால் நேரடியாக பட்டியல் பெறப்பட்டு அப்பட்டியலில் இருக்கும் நபர்களுக்கு மட்டுமே துப்புரவு பணி மற்றும் மலேரியா தூர்வாரும் பணி வழங்கப்படும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் திட்ட அலுவலர் அவர்களின் அனுமதி (SJSRY) நாள்.26.06.2014 கடிதத்தின்படி மலேரிய பணிக்கு மண்டலம்–7க்குட்பட்ட பகுதிகளில் 458 குழு உறுப்பினர்களை ஈடுபடுத்திக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டு இவர்களில் 262 பணியாளர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருகிறது.

தற்சமயம் புதிய கணக்கெடுக்கின்படியும், மலேரியா பணியாளர்களின் பணியினை மேம்படுத்தும் பொருட்டும், கீழ்க்கண்டுள்ளவாறு பணியாளர்கள் தேவை கணக்கிடப்பட்டு கீழ்க்கண்டுள்ளவாறு எண்ணிக்கையில் பணியாளர்களை கொண்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வ.எண்	பகுதி எண்.	மொத்த பணியாளர்கள் தேவை	தற்போதுள்ள நிரந்தர பணியாளர்களின் எண்ணிக்கை	கூடுதலாக தேவைப்படும் பணியாளர்களின் எண்ணிக்கை
1	18	119	25	94
2	19	145	60	85
3	20	115	32	83
மொத்தம்		**379**	**117**	**262**

மேலும் மன்றத்தீர்மான எண்.307/2014, நாள்.30.05.2014ன்படி இவர்களின் பணிக்காலம் வரும் 12.07.2015 அன்று முடிவடைகிறது. மேலும் இவர்கள் பணிக்கென பெறப்பட்ட நிர்வாக அனுமதி தொகை ரூ.4,83,12,130/– பெறப்பட்டது.

08.07.2015 தேதியிட்ட மத்திய வட்டார துணை ஆணையாளர் அவர்களின் காலநீட்டிப்பு கடிதத்தில் 13.07.2015 முதல் 12.09.2015 வரையிலான காலத்திற்கு 60 நாட்களுக்கு சேமிப்புத் தொகையிலிருந்து செலவீனம் மேற்கொள்ள பணி நீட்டிப்பு வழங்கப்பட்டது.

13.10.2015 தேதியிட்ட மத்திய வட்டார துணை ஆணையாளர் அவர்களின் காலநீட்டிப்பு கடிதத்தில் சேமிப்புத் தொகை குறைவாக உள்ளதால் 13.09.2015 முதல் 25.10.2015 வரையிலான 45 நாட்களுக்கு மத்திய வட்டார துணை ஆணையாளர் அவர்களின் அனுமதி வழங்கப்பட்டது. 24.11.2015 மற்றும் 29.12.2015 தேதியிட்ட மத்திய வட்டார துணை ஆணையாளர் அவர்களின் காலநீட்டிப்பு கடிதத்தில் 26.10.2015 முதல் 31.12.2015 வரையிலான 66 நாட்களுக்கும், 1.01.2016 முதல் 29.02.2016 வரை கைவிலை புள்ளி பெற்று 262 பணியாளர்களை 1 நாளைக்கு ரூ.289/– வீதம் பணியில் அமர்த்த அனுமதி பெறப்பட்டது.

தற்போது 29.02.2016 அன்று இவர்களின் ஒப்பந்தக்காலம் முடிவடைவதால் 01.03.2016 முதல் 28.02.2017 வரையிலான 365 நாட்களுக்கு கீழ்கண்டுள்ள இனங்களுக்கு ஆணையர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது, மேலும் 1.07.2015 முதல் 29.02.2016 வரையிலான காலத்தில் மத்திய வட்டார துணை ஆணையரின் அனுமதி பெற்று செயல்படுத்தியதை ஆணையரின் பார்வைக்கும் பதிவுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

எனவே,

1. தற்போது 29.02.2016 அன்று இவர்களின் ஒப்பந்த காலம் முடிவடைவதால் (01.03.2016 முதல் 28.02.2017 வரை ஓராண்டு காலத்திற்கு SYSRY திட்ட அலுவலர் அனுமதி பெற்ற 458 பணியாளர்களில் 262 பணியாளர்களை குறைந்த பட்ச அடிப்படை ஊதியமாக நாள் ஒன்றுக்கு ரூ.289/– என்ற அடிப்படையில் பணியில் ஈடுபடுத்துவதற்கு அனுமதியும்,
2. 13.07.2015 முதல் 29.02.2016 வரை மத்திய வட்டார துணை ஆணையாளர் அனுமதி பெற்று ஒப்பந்த காலத்தை நீட்டிப்பு செய்து பணி மேற்கொண்டமைக்கும்,
3. இப்பணிக்கான செலவின தொகை ரூ.**2,76,37,070**/– (262x289x365)ஐ குறியீட்டு எண். 30–32–02 கணக்கு தலைப்பு எண் 210–10–06–02 மேற்கொள்ள அனுமதியும்,
4. இச்செலவின தொகை ரூ.2,76,37,070/– ஐ நிதி ஆலோசகர் மூலம் நிதி ஒதுக்கீடு செய்து செலவினத்தை மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

2016–2017ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை கூட்டம் நடைபெறுவதால், இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

ம.அ.11.ந.க.எண்.இ11/1137/2015
ஆணையர் அவர்களின் 25.02.2016 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.165/2016 **பொருள் எண்.19**

மண்டலம்–11, வார்டு–149,சிந்தாமணி விநாயகர் கோவில் தெருவில் பகுதி மற்றும் வார்டு அலுவலக வளாகத்தில் முந்தைய வளசரவாக்கம் நகராட்சியால் கட்டப்பட்டு பழுதடைந்து இடிந்து விழக்கூடிய நிலையில் உள்ள 6 கடைகளை இடிப்பதற்கு அனுமதி

வ. எண்	வார்டு எண்–149	மண்டலம்–11
1	இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் ?	மண்டலம்–11, வார்டு–149,சிந்தாமணி விநாயகர் கோவில் தெருவில் பகுதி மற்றும் வார்டு அலுவலக வளாகத்தில் முந்தைய வளசரவாக்கம் நகராட்சியால் கட்டப்பட்டு பழுதடைந்துள்ள கடைகள்.
2	அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது ?	27 ஆண்டுகளுக்கு முன்னர் (1988 ஆம் ஆண்டு)
3	அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு ?	தரை தளம் – 107.00 சதுர மீ.
4	அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு ?	107 சதுர மீ
5	கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு ?	ரூ.45,225/–
6	அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா ?	பயன்பாட்டில் இல்லை.
7	அந்த கட்டிடம் இடிப்பதற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது ?	வார்டு மற்றும் பகுதி அலுவலகங்களுக்கு வாகன நிறுத்துமிடமாக பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
8	கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம் ?	பழுதடைந்த நிலையில் உள்ளது.
9	கட்டிடத்தை இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார் ?	மண்டல அலுவலர்–11
10	வார்டு குழு பரிந்துரை தீர்மான எண்/ நாள்	11வது மண்டல வார்டு குழு தீர்மானம் எண்.1005/2015, நாள்.12.08.2015

எனவே, மண்டலம்–11, வார்டு–149ல் சிந்தாமணி விநாயகர் கோவில் தெருவில் பகுதி மற்றும் வார்டு அலுவலக வளாகத்தில் முந்தைய வளசரவாக்கம் நகராட்சியால் கட்டப்பட்டு பழுதடைந்து இடிந்து விழக்கூடிய நிலையில் உள்ள 6 கடைகளை இடிப்பதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

2016–2017ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை கூட்டம் நடைபெறுவதால், இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

ம.அ.11.ந.க.எண்.இ3/0754/2016
ஆணையர் அவர்களின் 24.02.2016 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.166/2016 **பொருள் எண்.20**

மண்டலம்–11, வார்டு–151, போரூர் மருத்துவமனை சாலையில் இயங்கி வரும் முந்தைய மேம்படுத்தப்பட்ட மாநகர ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில் உள்ள பழுதடைந்த நிலையில் உள்ள 14 கட்டிடங்களை இடிப்பதற்கு அனுமதி

மேற்பார்வை பொறியாளர் (கட்டிடங்கள்) அவர்களின் 03.02.2016 நாளிட்ட கடிதத்தில் (க.து.ந.க.எண்.பி1/1664/2015) பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–11, வார்டு–151, போரூர், மருத்துவமனை சாலையில் இயங்கி வரும் மேம்படுத்தப்பட்ட மாநகர ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில் 100 படுக்கைகள் கொண்ட புதிய சமுதாய சுகாதார மையம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளதால் அந்த வளாகத்தில் உள்ள பழுதடைந்துள்ள கட்டிடங்களை இடித்து விட்டு காலி நிலத்தை ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 11, கோட்டம் 151, போரூர் மருத்துவமனை சாலை, போரூர் வருவாய் கிராமம் புல எண். 7/1–ல் பொதுசுகாதாரத் துறை கட்டுப்பாட்டில் செயல்பட்டு வந்த அரசு ஆரம்ப சுகாதார நிலையம், போரூர் பேரூராட்சி சென்னை மாநகராட்சியுடன் 2011ம் ஆண்டு இணைக்கப்பட்ட பின்பு, சுகாதார மற்றும் குடும்ப நல (N2) துறையின் அரசாணை (நிலை) எண்.269, நாள்.20.11.2013ன்படி பெருநகர சென்னை மாநகராட்சிக்கு மாறுதல் செய்து ஆணையிடப்பட்டது. இவ்வரசாணையில் குறிப்பிட்டுள்ளபடி போரூர் மருத்துவமனை சாலை, அரசு ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடங்கள் அனைத்தும் 18.11.2014 அன்று உதவி பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு பிரிவு, மருத்துவ பணிகள்), பொதுப்பணித் துறை, பூவிருந்தவல்லி, அவர்களால் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–11க்கு ஒப்படைக்கப்பட்டு தற்போது மேம்படுத்தப்பட்ட மாநகர ஆரம்ப சுகாதார நிலையமாக செயல்பட்டு வருகிறது. போரூர் மருவத்துவமனை சாலை, மாநகர ஆரம்ப சுகாதார வளாகம் 17,550 சதுர மீட்டர் பரப்பளவு கொண்டதாக உள்ளது. இந்த மாநகர ஆரம்ப சுகாதார வளாகத்தில் தனித்தனியாக 22 கட்டிடங்கள் உள்ளன. இக்கட்டிங்களில் மருத்துவமனை மற்றும் குடியிருப்பு கட்டிடங்கள் சுமார் 40 ஆண்டிற்கு முன்பு கட்டப்பட்டவை. இதர 6 கட்டிடங்களில் 2 கட்டிடங்கள் 2012–13ஆம் ஆண்டில் கட்டப்பட்டவை. மாநகர ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வரும் கட்டிடங்களில் 40 ஆண்டுக்கு முன்பு கட்டப்பட்ட 14 கட்டிடங்கள் மிகவும் பழுதடைந்துள்ளன. மேலும் 2015ம் ஆண்டு நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் பெய்த பெரும் கனமழையினால் இவ்வளாகத்திற்குள் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு சுமார் 4அடி உயரத்திற்கு வெள்ள நீர் தேங்கியிருந்ததால் கட்டிடங்கள் பலவீனமடைந்துள்ளன. எனவே, பழுதடைந்தும், பலவீனமடைந்தும் உள்ள கட்டிடங்களை இடித்துவிட்டு பொது மக்களின் நலன் கருதி புதியதாக 100 படுக்கைகள் கொண்ட புதிய சமுதாய சுகாதார மையம் கட்ட கட்டிடத் துறை மூலம் உத்தேசிக்கப்பட்டுள்ளது. கோட்டம் 151, மருத்துவமனை சாலையில் உள்ள மாநகர ஆரம்ப சுகாதார நிலையம் வளாகத்தில் உள்ள கட்டிடங்களில் பழுதடைந்த நிலையில் உள்ள 14 கட்டிடங்கள் விவரம் பின்வருமாறு.

பழுதடைந்துள்ளதால் இடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள கட்டிடங்களின் விபரம்

வ. எண்.	கட்டிடத்தின் பெயர்	கட்டப்பட்ட வருடம்	பரப்பளவு (ச.மீ)	தற்போதைய புத்தக மதிப்பு ரூ
1.	பிரதான கட்டிடம்	1975	236.31	236500.00
2.	கேரேஜ் (Garage)	1979	61.25	61200.00
3.	M.O. குவாட்டர்ஸ்	1973	62.73	60100.00
4.	BEE குவாட்டர்ஸ்	1973	62.74	59150.00

5.	BHS குவாட்டர்ஸ்	1979	62.74	67500.00
6.	ANM & CRI குவாட்டர்ஸ்	1979	91.26	88500.00
7.	அலுவலக கட்டிடம்	1979	68.16	69100.00
8.	சித்த மருத்துவ கட்டிடம்	1973	92.16	81500.00
9.	பயிற்சி மையம்	1979	379.08	441300.00
10.	லேபர் மற்றும் PN வார்டு	1975	167.66	165500.00
11.	X-ray அறை	1985	61.60	92400.00
12.	அறுவை சிகிச்சை அறை	1985	253.60	365200.00
13.	மோட்டார் அறை	1985	7.20	10800.00
14.	மேல்நிலை நீர்தேக்க தொட்டி			10200.00
			மொத்தம்	**18,08,950.00**

கோட்டம் 151, போரூர், மருத்துவமனை சாலையில் மேம்படுத்தப்பட்ட மாநகர ஆரம்ப சுகாதார வளாகத்தில் உள்ள பழுதடைந்து மற்றும் மழைநீர் தேங்கியதால் பலவீனமடைந்துள்ள மேற்கண்ட 14 கட்டிடங்களின் தற்போதைய மொத்த புத்தக மதிப்பு ரூ.18,08,950/– ஆகும்.

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 11, வார்டு–151, போரூர் மருத்துவமனை சாலையில் உள்ள மேம்படுத்தப்பட்ட மாநகர ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில் 100 படுக்கைகள் படுக்கைகள கொண்ட புதிய சமுதாய சுகாதார மையம் கட்டுவதற்கு ஏதுவாக அட்டவணையில் கண்ட 14 கட்டிடங்களை இடிப்பதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

2016–2017ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை கூட்டம் நடைபெறுவதால், இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

ம.அ.15.ந.க.எண்.பி1/0526/2016
ஆணையர் அவர்களின் 24.02.2016 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.167/2016 **பொருள் எண்.21**

மண்டலம்–15, வார்டு–195, ஒக்கியம் துரைப்பாக்கம் கண்ணகிநகர் 2வது பிரதான சாலையில் பழுதடைந்த நிலையில் உள்ள தொழில் பயிற்சி மையக் கட்டிடத்தை இடிப்பதற்கு அனுமதி

வ. எண்	வார்டு எண்–195	மண்டலம்–15
1	இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் ?	மண்டலம்–15, வார்டு–195, ஒக்கியம் துரைப்பாக்கம் கண்ணகிநகர் 2வது பிரதான சாலையில் பழுதடைந்த நிலையில் உள்ள தொழில் பயிற்சி மையக் கட்டிடம்.
2	அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது ?	ஒக்கியம் துரைப்பாக்கம் ஊராட்சியால் 2000ஆம் ஆண்டு கட்டப்பட்டது.
3	அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு ?	தொழில் பயிற்சி மையம் – 317.00 சதுர மீ.
4	அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு ?	1889 சதுர மீ
5	கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு ?	ரூ.1,30,000/–
6	அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா ?	ஆம்
7	அந்த கட்டிடம் இடிப்பதற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது ?	30 படுக்கைகள் கொண்ட புதிய சுகாதார நிலையம் அமைக்க.
8	கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம் ?	மிகவும் பழுதடைந்த நிலையில் இருப்பதாலும், அவ்விடத்தை இடித்து விட்டு 30 படுக்கைகள் கொண்ட புதிய சுகாதார நிலையம் அமைத்து சென்னை மாநகராட்சி மூலம் பராமரிப்பதற்காக.
9	கட்டிடத்தை இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார் ?	ஆணையர்
10	வார்டு குழு பரிந்துரை தீர்மான எண்/ நாள்	15வது மண்டல வார்டு குழு தீர்மானம் எண்.72/2016, நாள்.22.01.2016

மண்டலம்–15, வார்டு–195, ஒக்கியம் துரைப்பாக்கம் கண்ணகிநகர் 2வது பிரதான சாலையில் பழுதடைந்த நிலையில் உள்ள தொழில் பயிற்சி மையக் கட்டிடத்தை இடிப்பதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

2016–2017ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை கூட்டம் நடைபெறுவதால், இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

ம.அ.15.ந.க.எண்.பி1/0520/2016
ஆணையர் அவர்களின் 24.02.2016 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.168/2016 **பொருள் எண்.22**

மண்டலம்–15, வார்டு–197ல் காரப்பாக்கம் அறிஞர் அண்ணா தெருவில் அமைந்துள்ள பழுதடைந்த உபயோகமற்ற நிலையில் உள்ள சமுதாய நலக்கூடம், சமையல் அறை மற்றும் நியாயவிலைக்கடை கட்டிடங்களை இடிப்பதற்கு அனுமதி

வ. எண்	வார்டு எண்–197	மண்டலம்–15
1	இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் ?	மண்டலம்–15, வார்டு–197ல் காரப்பாக்கம் அறிஞர் அண்ணா தெருவில் அமைந்துள்ள பழுதடைந்த உபயோகமற்ற நிலையில் உள்ள சமுதாய நலக்கூடம், சமையல் அறை மற்றும் நியாயவிலைக்கடை கட்டிடம்.
2	அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது ?	காரப்பாக்கம் ஊராட்சியால் 31.05.1999ல் கட்டப்பட்டது.
3	அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு ?	சமுதாய நலக்கூடம் – 128 சதுர மீட்டர் சமையல் அறை – 18.8 சதுர மீட்டர் நியாய விலைக்கடை – 43.32 சதுர மீட்டர்
4	அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு ?	சமுதாய நலக்கூடம் – 128 சதுர மீட்டர் சமையல் அறை – 18.8 சதுர மீட்டர் நியாய விலைக்கடை – 43.32 சதுர மீட்டர்
5	கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு ?	ரூ.1,05,431/– ரூ.33,482/– ரூ.1,79,443/–
6	அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா ?	இல்லை
7	அந்த கட்டிடம் இடிப்பதற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது ?	சமுதாய நலக்கூடம்
8	கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம் ?	மிகவும் பழுதடைந்த நிலையில் இருப்பதாலும், அவ்விடத்தை இடித்து விட்டு புதிய சமுதாய நலக்கூடம் கட்டப்பட்டுள்ளதை சென்னை மாநகராட்சி மூலம் பராமரிப்பதற்காக.
9	கட்டிடத்தை இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார் ?	மண்டல அலுவலர்–15
10	வார்டு குழு பரிந்துரை தீர்மான எண்/ நாள்	15வது மண்டல வார்டு குழு தீர்மானம் எண்.461/2015, நாள்.15.09.2015

மண்டலம்–15, வார்டு–197ல் காரப்பாக்கம் அறிஞர் அண்ணா தெருவில் அமைந்துள்ள பழுதடைந்த உபயோகமற்ற நிலையில் உள்ள சமுதாய நலக்கூடம், சமையல் அறை மற்றும் நியாயவிலைக்கடை கட்டிடத்தை இடிப்பதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

2016–2017ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை கூட்டம் நடைபெறுவதால், இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

திக.மே.து.ந.க.எண்.அ7/3025/2015
ஆணையர் அவர்களின் 22.02.2016 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.169/2016 **பொருள் எண்.23**

திடக்கழிவு மேலாண்மை துறை – குப்பை பதனிடுதல் மற்றும் குப்பை கொட்டும் வளாகங்களை சீரமைத்தல் திட்டத்தை பெருங்குடி மற்றும் கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகங்களில் செயல்படுத்த மன்றத்தின் பின்னேற்பிற்குட்பட்டு அரசுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது – விதிமுறைகளுக்குட்பட்டு (Terms of Reference) தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்தின் பதிவு செய்யப்பட்ட (Empanelled list of Transaction Advisory Services) - ஆலோசகர் நியமிக்க 12 ஆலோசர்களுக்கும் விலைப்புள்ளி கோருவதற்கு ஒப்பம் கோரப்பட்டு ஒரு ஒப்பந்தம் மட்டும் பெறப்பட்டு திறக்கப்பட்டது – விலைப்புள்ளி தொகை இத்திட்டத்தின் பழைய ஒப்பந்ததாரரின் விலையை விட மிக அதிகமாக உள்ளதால் – ஒப்பத்தினை ரத்து செய்து மறு ஒப்பம் கோருவதற்கும் தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு வாரியத்தின் (TNUIFSL) அவர்களிடம் மேற்கண்ட பணிகளுக்கு ஆலோசகரை நியமிக்க அனுமதி

முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் ஒப்புதல் நாள்.30.10.2015 அரசுக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில், ஏற்கனவே பெறப்பட்ட அரசாணை எண். 133/2012, நாள். 10.12.2012 மற்றும் 106/2015, நாள்.22.07.2015ன்படி, முந்தைய திடக்கழிவு மேலாண்மை திட்டங்களை கைவிட்டு, புதிதாக குப்பை பதனிடுதல் மற்றும் குப்பை கொட்டும் வளாகங்களை சீரமைத்தல் திட்டத்தை பெருங்குடி மற்றும் கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகங்களில் செயல்படுத்த மன்றத்தின் பின்னேற்பிற்குட்பட்டு, அரசின் அனுமதி வேண்டப்பட்டுள்ளது. மன்றத்தீர்மான எண். 698/2015, நாள். 27.11.2015ல் இப்பணிக்கான மன்றத்தின் பின்னேற்பு அனுமதி பெறப்பட்டுள்ளது.

புதிதாக குப்பை மற்றும் கட்டட கழிவுகளை பதனிடுதல் மற்றும் குப்பை கொட்டும் வளாகங்களை சீரமைத்தல் திட்டத்தை பெருங்குடி மற்றும் கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகங்களில் செயல்படுத்த, விதிமுறைகளுக்குட்பட்டு (Terms of Reference) தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்தின் பதிவு செய்யப்பட்ட ஆலோசகர்களை கொண்டு இப்பணிக்கு ஆலோசனை சேவைகளுக்கு (Transaction Advisory Services) ஆலோசகராக நியமிக்கலாம் எனவும், இப்பணிகளுக்கான சேவைகளுக்கு (Transaction Advisory Services) - ஆலோசகரை அமர்த்துவதற்கு தேவையான செலவினத்தை தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியமே வழங்க வேண்டும் எனவும் முடிவெடுக்கப்பட்டது.

அரசு கடித எண். 12952/ MC.I/2015-3, நாள். 24.11.2015 அரசு முதன்மை செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை–9 அவர்களின் கடிதத்தில், கீழ்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

A proposal has been sent to Government for obtaining orders on the following:-

1. Collection of garbage and C&D Waste (Construction and Demolition Waste) in Zone- 1, 2, 3, & 7 & transporting to the processing facility **(Package – I)**
2. Collection of garbage and C&D Waste (Construction and Demolition Waste) in Zone- 11, 12,14, & 15 & transporting to the processing facility **(Package – II)**
3. Integrated MSW Process & scientific land filling, C&D waste and reclamation of landfill sites at Kodungaiyur – North Region (Zone 1 to 8) **(Package – III)**
4. Integrated MSW Process & scientific land filling, C&D waste and reclamation of landfill sites at Kodungaiyur – South Region (Zone 9 to 15) **(Package – IV) and**
5. to constitute a Committee consisting of experts to examine the DPR prepared by the Consultant to be appointed by the TNIDB, offer suggestions in selection of contractor, make suitable recommendations to the tender accepting committee.
6. to appoint a consultant recognized by the TNIDB for preparation of DPR.

2. In this connection, it has been requested to take necessary action as decided in the meeting held on 29.09.2015 and formal orders will be issued by the Government as and when the proposal is received in full shape alongwith the DPR / DFR.

அதன்படியே, குப்பை கழிவுகளை பதனிடுதல் மற்றும் குப்பை கொட்,டும் வளாகங்களை சீரமைத்தல் திட்டத்தை பெருங்குடி மற்றும் கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகங்களில் செயல்படுத்த, கடந்த 24.11.2015 அன்று தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்தின் பதிவு செய்யப்பட்ட 12 ஆலோசகர்களிடம் ஒப்ப ஆவணங்கள் தயாரிப்பது, ஒப்ப பரிவர்த்தனை ஆலோசனை வழங்குதல் (Submission and accceptance of RFP – bid documents & concession agreement, Completion of pre-bid meeting and issue of additional clarifications and response to bidder queries, Bids Submission and approval of bid evaluation report and Finalization of agreement to be entered into by implementing authority with successful bidder) போன்ற பணிகளுக்காக ஒப்பம் கோரப்பட்டதில், 02.12.2015க்குள் ஒப்பங்கள் வரவேற்கப்பட்டு, அன்றைய தினமே ஒப்பங்கள் திறக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது.

ஆனால், பருவமழை மற்றும் வெள்ள நிவாரண பணிகள் காரணமாக கடந்த 08.12.2015 அன்று மின்னஞ்சல் மூலம் ஒப்பம் கோருவதை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது. அதன்பிறகு கடந்த 17.12.2015 அன்று மீண்டும் ஒப்பந்தப்புள்ளிகளை சமர்பிக்குமாறு கடிதங்கள் அனுப்பப்பட்டது. அதில் 22.12.2015க்குள் ஒப்பங்கள் வரவேற்கப்பட்டு, அன்றைய தினமே ஒப்பங்கள் திறக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது.

அதன்படி, 22.12.2015 அன்று ஒப்பங்கள் திறக்கப்பட்டதில் திருவாளர். பிரைஸ் வாட்டர்ஹவுஸ்கூப்பர்ஸ் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனத்திடமிருந்து மட்டும் ஒரு ஒப்பம் பெறப்பட்டது. அதில் ஒப்பப்பணிக்கான ஆலோசகர் திட்டப்பணிக்கு ரூ. 4,50,00,000/– (ரூபாய். நான்கு கோடியே ஐம்பது இலட்சங்கள் மட்டும்) என விலை நிர்ணயித்துள்ளனர். இந்த விலை குறைக்க கோரி, கடந்த 23.12.2015 அன்று திருவாளர். பிரைஸ் வாட்டர்ஹவுஸ் கூப்பர்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தாரை தொடர்பு கொண்டபோது, வரும் 04.01.2016 வரை அந்நிறுவனம் கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு விடுமுறை எனவும், இவ்விலைக்கு குறைந்த விலைக்குறைப்பினை ஏற்க இயலாது எனவும் தெரிவித்தனர். மேலும் கடந்த 2012ம் ஆண்டு, சென்னை மாநகராட்சியால் மேற்கொள்ளவுள்ள குப்பை பதனிடுதலுக்கான மூன்று பெரும் திட்டங்களுக்கு ஆலோசனை சேவைகளுக்கு (Transaction Advisory Services) ஆலோசகராக TNUIFSL மூலமாக திருவாளர். சி.டி.எம். ஸ்மித் பிரைவேட் லிமிடெட் அவர்களை நியமிக்கப்பட்டு, ரூ. 18,67,900/– மற்றும் சேவை வரிகள் உட்பட நான்கு மாதங்களுக்கு நிறைவேற்ற பணி ஆணை வழங்கப்பட்டது. தற்போது சென்னை மாநகராட்சிக்கென கட்டட கழிவுகளை பதனிடுதலுக்கான பணிக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க, சிறப்பு திட்டங்கள் துறை மூலம் ரூ.7,00,000/– மற்றும் சேவை வரி வழங்கப்பட்டு, நான்கு மாதங்களில் விரிவான திட்ட அறிக்கை பெறப்பட்டுள்ளது.

மேற்கண்ட பணிகளுக்கான செலவினத் தொகை குறித்து ஒப்பிட்டதில், தற்போது திருவாளர். பிரைஸ் வாட்டர்ஹவுஸ்கூப்பர்ஸ் பிரைவேட் லிமிடெட் அவர்கள் குப்பை கழிவுகளை பதனிடுதல் மற்றும் குப்பை கொட்டும் வளாகங்களை சீரமைத்தல் திட்டத்தை பெருங்குடி மற்றும் கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகங்களில் செயல்படுத்த, விதிமுறைகளில் (Terms of Reference) ஒப்ப ஆவணங்கள் தயாரிப்பது, ஒப்ப பரிவர்த்தனை ஆலோசனை வழங்குதல் போன்றவைகள் மற்றும் விரிவான திட்ட அறிக்கையினை தவிர்த்து (Excepting DPR / DFR), தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்தின் பதிவு செய்யப்பட்ட ஆலோசகர்களை கொண்டு இப்பணிக்கு ஆலோசனை சேவைகளுக்கு (Transaction Advisory Services) ஆலோசகராக நியமிக்க ஒப்பம் கோரப்பட்டதில், ஒப்பந்ததாரர் கோரியுள்ள தொகையான ரூ. 4,50,00,000/– மிக அதிகமாக உள்ளது. மேலும் திருவாளர். பிரைஸ் வாட்டர்ஹவுஸ்கூப்பர்ஸ் பிரைவேட் லிமிடெட் அவர்களிடம் விலைக்குறைப்பு கோரியதில், விலைக்குறைப்பினை ஏற்க இயலாது எனவும் கூறப்பட்டமையால், இந்த ஒப்பந்தத்தை ரத்து செய்து, புதிதாக மறு ஒப்பம் கோரலாம் என கருதப்பட்டு, மேற்கண்ட ஒப்பத்தை ரத்து செய்யவும் மற்றும் மறு ஒப்பம் கோரவும் முதன்மை செயலர் / ஆணையர்அவர்களின் ஒப்புதல் 06.01.2016 பெறப்பட்டது.

மேலும், கடந்த 13.01.2016 அன்று மறு ஒப்பம் கோரப்பட்டதில் மேற்கண்ட திருவாளர். பிரைஸ் வாட்டர்ஹவுஸ்கூப்பர்ஸ் பிரைவேட் லிமிடெட் அவர்கள் ஒருவர் மட்டும் அளித்த ஒப்பமானது

22.01.2016 அன்று திறக்கப்பட்டது. அதில் ஒப்பப்பணிக்கான ஆலோசகர் திட்டப்பணிக்கு ரூ.4,50,00,000/– (ரூபாய். நான்கு கோடியே ஐம்பது இலட்சங்கள் மட்டும்) என மீண்டும் அதே விலை நிர்ணயித்துள்ளளமையாலும், மீண்டும் ஒருவர் மட்டுமே ஒப்பம் வழங்கியுள்ளதாலும், இந்த ஒப்பத்தினை ஏற்க இயலாத நிலை உள்ளது.

மேலும் கடந்த 14.01.2016 அன்று மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் முன்னிலையில் நடைபெற்ற சீராய்வு கூட்டத்தில், முதன்மை செயலர் / ஆணையர் அவர்கள், பெறப்பட்ட ஒப்பந்தத்தில் விரிவான திட்ட அறிக்கை (DPR / DFR) இல்லாமல் கோரியுள்ள விலையானது அதிகமாக என்பதாலும், ஆலோசகர் இல்லாமல் திட்டத்தினை செயலாக்க கடினமாக சூழ்நிலை என கூறியதற்கு, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் நேரிடையாக, மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு வாரியத்தின் (TNUIFSL) அவர்களிடம் மேற்கண்ட பணிகளுக்கு ஆலோசகரை நியமிக்கும் பணிகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தியுள்ளார்.

எனவே,

1. திருவாளர். பிரைஸ் வாட்டர்ஹவுஸ்கூப்பர்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் மறு ஒப்ப விலைப்புள்ளியான ரூ. 4,50,00,000/– அதிகம் என்பதால், இந்த மறு ஒப்பத்தினை ரத்து செய்யவும்,
2. மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் முன்னிலையில் நடைபெற்ற சீராய்வு கூட்டத்தில், முதன்மை செயலர் / ஆணையர் அவர்கள், பெறப்பட்ட ஒப்பந்தத்தில் விரிவான திட்ட அறிக்கை (DPR / DFR) இல்லாமல் கோரியுள்ள விலையானது அதிகமாக என்பதாலும், ஆலோசகர் இல்லாமல் திட்டத்தினை செயலாக்க கடினமாக சூழ்நிலை என கூறியதற்கு, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் நேரிடையாக, மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு வாரியம் (TNUIFSL) ஆலோசகரை நியமிக்கும் பணிகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தியபடி மேற்கொள்ளவும்,

மேற்காணும் 1 மற்றும் 2 வரை உள்ள இனங்களுக்கு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

2016–2017ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை கூட்டம் நடைபெறுவதால், இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

தி.க.மே.து.ந.க.எண்.அ7/ 3025 /2015

ஆணையர் அவர்களின் 22.02.2016 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.170/2016 **பொருள் எண்.24**

பெருநகர சென்னை மாநகராட்சி – திடக்கழிவு மேலாண்மை துறை – குப்பை சேகரித்தல், பதனிடுதல் மற்றும் குப்பை கொட்டும் வளாகங்களை சீரமைத்தல் போன்ற 4 சிப்பங்கள் கொண்ட பெரும் திட்டங்கள் – விரிவான சாத்தியக்கூறு அறிக்கை (DFR) தயாரித்தல் மற்றும் ஒப்ப பரிவர்த்தனை ஆலோசனை சேவை (Transaction Advisory Services) பணிகளுக்காக ஆலோசகர்கள் நியமித்தல் – திருவாளர்கள் தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனம் (TNUIFSL) மூலமாக ஆலோசர்கள் நியமிக்க அனுமதி

10.05.2012 என்று நாள் குறித்து, கீழ் குறித்த திட்டங்களுக்கு விருப்ப விண்ணப்பங்கள் ஆர்வமுள்ள ஒப்பந்தப்புள்ளிதாரர்களிடமிருந்து பெறப்பட்டன.

திட்டக்கூறு–1: சென்னை மாநகர் மற்றும் சென்னைக்கு அருகாமையிலுள்ள, சென்னை மாநகராட்சியின் உதவியை நாடும் உள்ளாட்சி அமைப்புகளுக்காக நாள்தோறும் 2500 மெட்ரிக் டன் திடக்கழிவுகளை இறுதியாக தீர்வு செய்ய ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை பதனிடுதல் வசதிகளை நிறுவுதல்

திட்டக்கூறு–2: குறிப்பிட்ட காலக்கெடு நிர்ணயித்து கொடுங்கையூர் மற்றும் பெருங்குடியில் உள்ள குப்பை கொட்டும் வளாகங்களை சீரமைத்தல் மற்றும் அவைகளை அறிவியல் ரீதியில் மூடுதல்

திட்டக்கூறு–3: சென்னை மாநகராட்சியினால் படிப்படியாக குறிப்பிடப்படும் மண்டலங்களில்/வார்டுகளில் உள்ள தெருக்களை பெருக்கி குப்பை அகற்றுதல் மற்றும் வீட்டுக்கு வீடு சென்று குப்பை சேகரித்தல் மற்றும் அவைகளை ஒருங்கிணைந்த திடக்கழிவுகள் பதனிடுதல் திட்ட வளாகத்திற்கு கொண்டு சென்று சேர்த்தல் ஆகிய திட்டங்களை செயலாக்குதல்

கூத்தம்பாக்கம் மற்றும் மீஞ்சூர்–வல்லூரில் இந்த திட்டங்களை செயல்படுத்த சென்னை மாநகரிலிருந்து 30 கிலோ மீட்டர் தூரம் என்பதால் நேரம் கூடுதலாக செலவிடப்படும் என்பதாலும், நிலத்தடி நீர் பாதிக்கப்படும் என்பதாலும், சுற்றுச்சூழல் பாதிக்கப்படும் என்பதாலும் பொது மக்களிடம் இருந்து பலத்த எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டதாலும், மேலும் இதுகுறித்து, பசுமை தீர்ப்பாயத்தில் வழக்கு தொடரப்பட்டமையாலும், எதிர்பார்த்த முன்னேற்றம் இல்லாத சூழ்நிலையில் இத்திட்டத்தினை செயல்படுத்த இயலவில்லை.

மேற்கண்ட திட்டத்தினை செயல்படுத்துவதில் ஏற்பட்ட இடையூறுகளை அரசுக்கு விரிவாக தெரியப்படுத்தி குப்பை பதனிடுதல் திட்டங்களை கூத்தம்பாக்கம் மற்றும் மீஞ்சூர்–வல்லூரில் செயலாக்குவதை கைவிட்டு, இதற்கு பதிலாக, இத்திட்டத்தினை பெருங்குடி மற்றும் கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகங்களிலேயே மேற்கொண்டால், சென்னை மாநகர எல்லைக்குள்ளேயே உள்ள குப்பை கொட்டும் வளாகங்களுக்கு குப்பைகளை எடுத்து செல்வதால் நேரம் சேமிக்கப்படுகிறது. இதில் தற்போது வெட்ட வெளியில் கொட்டப்பட்டு இருக்கும் குப்பைகளின் மீது பசுமைப் போர்வை அமைப்பை ஏற்படுத்தி, இந்த இடங்கள் பசுமையாக காட்சியளிக்கும் வகையிலும், சுகாதாரமாகவும், சுற்றுச் சூழல் மாசு படாத வகையில் பராமரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க, ஒப்பந்ததாரர்களிடமிருந்து திட்ட அறிக்கை கோரியதில், 11 ஒப்பந்ததாரர்களில், ஒரு ஒப்பந்ததாரர் மட்டும் முழுமையில்லாத விரிவான திட்ட அறிக்கையினை சமர்பித்துள்ளார். மற்ற ஒப்பந்ததாரர்கள் திட்ட அறிக்கை ஏதும் சமர்பிக்கவில்லை.

இதுகுறித்து, அரசுக்கு தெரிவித்ததில், அரசாணை எண். 106/2015, நாள். 22.07.2015–ன்படி கீழ்காணும் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

- கூத்தம்பாக்கம் மற்றும் மீஞ்சூர்–வள்ளூரில் குப்பை பதனிடுதல் திட்டங்களை செயல்படுத்துவதை கைவிடவும்,
- குப்பை பதனிடும் திட்டங்களை பெருங்குடி மற்றும் கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகங்களிலேயே செயல்படுத்தவும், பெருங்குடி மற்றும் கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகங்களில், குப்பை பதனிடுதல் திட்டத்தை செயல்படுத்துவதற்கு புதிய ஒப்பந்தப்புள்ளி செய்முறையினை கடைபிடிக்கவும்,

- மேற்சொன்ன குப்பை பதனிடுதல் திட்டத்திற்கு, தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாடு வாரியத்தால் ரூ. 180 கோடி (கூத்தம்பாக்கம் திட்டத்திற்கு ரூ. 100 கோடி எனவும் மற்றும் மீஞ்சூர்–வள்ளூர் திட்டத்திற்கு ரூ. 80 கோடி எனவும் பயன்படுத்திக் கொள்ள) மூலதன மானியமாக வழங்க கொள்கை அளவில் வழங்கப்பட்ட ஒப்புதலை, முறையே கொடுங்கையூர் மற்றும் பெருங்குடிக்கு பயன்படுத்திக் கொள்ள தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாடு வாரியத்தின் ஒப்புதல் கோரவும் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தமிழக அரசின் நிதி செயலர் அவர்களின் தலைமையில் 28.07.2015 அன்றும் அதன் பிறகு தமிழக அரசின் தலைமை செயலர் அவர்களின் தலைமையில் 29.09.2015 அன்றும் சென்னை மாநகராட்சியின் மேலே தெரிவிக்கப்பட்ட திடக்கழிவு மேலாண்மை துறையின் பெரும் திட்டங்கள் குறித்து ஆய்வு கூட்டம் நடத்தப்பட்டு கூட்ட நடவடிக்கை குறிப்பு (Minutes of meeting) வெளியிடப்பட்டது.

அதன் அடிப்படையில் முந்தைய திடக்கழிவு மேலாண்மை திட்டங்களை கைவிட்டு, புதிதாக சில மண்டலங்களில் குப்பை சேகரித்தில், குப்பை பதனிடுதல் மற்றும் குப்பை கொட்டும் வளாகங்களை சீரமைத்தல் திட்டத்தை பெருங்குடி மற்றும் கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகங்களில் செயல்படுத்த மன்றத்தின் பின்னேற்பிற்குட்பட்டு, அரசின் அனுமதி அரசின் அனுமதி கோரி அனுப்பப்பட்ட 02.11.2015 கடிதத்தில் வேண்டப்பட்டது. மன்றத்தீர்மான எண். 698/2015, நாள். 27.11.2015ல் இதற்கு மன்றத்தின் பின்னேற்பு பெறப்பட்டுள்ளது.

அரசு கடிதம் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை எண்.12952/ MC.I/2015-3, நாள்.24.11.2015 அரசு முதன்மை செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை – 9 அவர்களின் கடிதத்தில், கீழ்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

A proposal has been sent to Government for obtaining orders on the following:-

1. Collection of garbage and C&D Waste (Construction and Demolition Waste) in Zone- 1, 2, 3, & 7 & transporting to the processing facility **(Package – I)**
2. Collection of garbage and C&D Waste (Construction and Demolition Waste) in Zone- 11, 12,14, & 15 & transporting to the processing facility **(Package – II)**
3. Integrated MSW Process & scientific land filling, C&D waste and reclamation of landfill sites at Kodungaiyur – North Region (Zone 1 to 8) **(Package – III)**
4. Integrated MSW Process & scientific land filling, C&D waste and reclamation of landfill sites at Perungudi – South Region (Zone 9 to 15) **(Package – IV) and**
5. to constitute a Committee consisting of experts to examine the DPR prepared by the Consultant to be appointed by the TNIDB, offer suggestions in selection of contractor, make suitable recommendations to the tender accepting committee.
6. to appoint a consultant recognized by the TNIDB for preparation of DPR.

In this connection, it has been requested to take necessary action as decided in the meeting held on 29.09.2015 and formal orders will be issued by the Government as and when the proposal is received in full shape alongwith the DPR / DFR.

அதன்படியே, குப்பை கழிவுகளை பதனிடுதல் மற்றும் குப்பை கொட்,டும் வளாகங்களை சீரமைத்தல் திட்டத்தை பெருங்குடி மற்றும் கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகங்களில் செயல்படுத்த, கடந்த 24.11.2015 அன்று தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்தின் பதிவு செய்யப்பட்ட 12 ஆலோசகர்களிடம் ஒப்ப ஆவணங்கள் தயாரிப்பது, ஒப்ப பரிவர்த்தனை ஆலோசனை வழங்குதல் (Submission and accceptance of RFP – bid documents & concession agreement, Completion of pre-bid meeting and issue of additional clarifications and response to bidder queries, Bids Submission and approval of bid evaluation report and Finalization of agreement to be entered into by implementing authority with successful bidder) போன்ற பணிகளுக்காக ஒப்பம் கோரப்பட்டதில், 02.12.2015க்குள் ஒப்பங்கள் வரவேற்கப்பட்டு, அன்றைய தினமே ஒப்பங்கள் திறக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது.

ஆனால்,பருவமழை மற்றும் வெள்ள நிவாரண பணிகள் காரணமாக கடந்த 08.12.2015 அன்று மின்னஞ்சல் மூலம் ஒப்பம் கோருவதை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது. அதன்பிறகு கடந்த 17.12.2015 அன்று மீண்டும் ஒப்பந்தப்புள்ளிகளை சமர்பிக்குமாறு கடிதங்கள் அனுப்பப்பட்டது. அதில் 22.12.2015க்குள் ஒப்பங்கள் வரவேற்கப்பட்டு, அன்றைய தினமே ஒப்பங்கள் திறக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது.

அதன்படி, 22.12.2015 அன்று ஒப்பங்கள் திறக்கப்பட்டதில் திருவாளர். பிரைஸ் வாட்டர்ஹவுஸ்கூப்பர்ஸ் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனத்திடமிருந்து மட்டும் ஒரு ஒப்பம் பெறப்பட்டது. அதில் ஒப்பப்பணிக்கான ஆலோசகர் திட்டப்பணிக்கு ரூ.4,50,00,000/– (ரூபாய். நான்கு கோடியே ஐம்பது இலட்சங்கள் மட்டும்) என விலை நிர்ணயித்துள்ளனர். இந்த விலை குறைக்க கோரி, கடந்த 23.12.2015 அன்று திருவாளர். பிரைஸ் வாட்டர்ஹவுஸ் கூப்பர்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தாரை தொடர்பு கொண்ட போது, வரும் 04.01.2016 வரை அந்நிறுவனம் கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு விடுமுறை எனவும், இவ்விலைக்கு குறைந்த விலைக்குறைப்பினை ஏற்க இயலாது எனவும் தெரிவித்தனர். மேலும் கடந்த 2012ம் ஆண்டு, சென்னை மாநகராட்சியால் மேற்கொள்ளவுள்ள குப்பை பதனிடுதலுக்கான மூன்று பெரும் திட்டங்களுக்கு ஆலோசனை சேவைகளுக்கு (Transaction Advisory Services) ஆலோசகராக TNUIFSL மூலமாக திருவாளர். சி.டி.எம். ஸ்மித் பிரைவேட் லிமிடெட் அவர்களை நியமிக்கப்பட்டு, ரூ.18,67,900/– மற்றும் சேவை வரிகள் உட்பட நான்கு மாதங்களுக்கு நிறைவேற்ற பணி ஆணை TNUIFSL நிறுவனத்தால் வழங்கப்பட்டது. தற்போது சென்னை மாநகராட்சிக்கென கட்டட கழிவுகளை பதனிடுதலுக்கான பணிக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க, சிறப்பு திட்டங்கள் துறை மூலம் ரூ.7,00,000/– மற்றும் சேவை வரி வழங்கப்பட்டு, நான்கு மாதங்களில் விரிவான திட்ட அறிக்கை பெறப்பட்டுள்ளது.

மேற்கண்ட பணிகளுக்கான செலவினத் தொகை குறித்து ஒப்பிட்டதில், தற்போது திருவாளர். பிரைஸ் வாட்டர்ஹவுஸ்கூப்பர்ஸ் பிரைவேட் லிமிடெட் அவர்கள் குப்பை கழிவுகளை பதனிடுதல் மற்றும் குப்பை கொட்டும் வளாகங்களை சீரமைத்தல் திட்டத்தை பெருங்குடி மற்றும் கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகங்களில் செயல்படுத்த, விதிமுறைகளில் (Terms of Reference) ஒப்ப ஆவணங்கள் தயாரிப்பது, ஒப்ப பரிவர்த்தனை ஆலோசனை வழங்குதல் போன்றவைகள் மற்றும் விரிவான திட்ட அறிக்கையினை தவிர்த்து (Excepting DPR / DFR), தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்தின் பதிவு செய்யப்பட்ட ஆலோசகர்களை கொண்டு இப்பணிக்கு ஆலோசனை சேவைகளுக்கு (Transaction Advisory Services) ஆலோசகராக நியமிக்க ஒப்பம் கோரப்பட்டதில், ஒப்பந்ததாரர் கோரியுள்ள தொகையான ரூ. 4,50,00,000/– மிக அதிகமாக உள்ளது. மேலும் திருவாளர். பிரைஸ் வாட்டர்ஹவுஸ்கூப்பர்ஸ் பிரைவேட் லிமிடெட் அவர்களிடம் விலைக்குறைப்பு கோரியதில், விலைக்குறைப்பினை ஏற்க இயலாது எனவும் கூறப்பட்டமையால், இந்த ஒப்பந்தத்தை ரத்து செய்து, புதிதாக மறு ஒப்பம் கோரலாம் என கருதப்பட்டு, மேற்கண்ட ஒப்பத்தை ரத்து செய்யவும் மற்றும் மறு ஒப்பம் கோரவும் ஆணையர் அவர்களின் ஒப்புதல் 22.02.2016 அன்று பெறப்பட்டது.

மேலும், கடந்த 13.01.2016 அன்று மறு ஒப்பம் கோரப்பட்டதில் மேற்கண்ட திருவாளர். பிரைஸ் வாட்டர்ஹவுஸ்கூப்பர்ஸ் பிரைவேட் லிமிடெட் அவர்கள் ஒருவர் மட்டும் அளித்த ஒப்பமானது 22.01.2016 அன்று திறக்கப்பட்டது. அதில் ஒப்பப்பணிக்கான ஆலோசகர் திட்டப்பணிக்கு ரூ.4,50,00,000/– (ரூபாய். நான்கு கோடியே ஐம்பது இலட்சங்கள் மட்டும்) என மீண்டும் அதே விலை நிர்ணயித்துள்ளளமையாலும், மீண்டும் ஒருவர் மட்டுமே ஒப்பம் வழங்கியுள்ளதாலும், இந்த ஒப்பத்தினை ஏற்க இயலாத நிலை உள்ளது.

கடந்த 14.01.2016 அன்று மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் முன்னிலையில் நடைபெற்ற சீராய்வு கூட்டத்தில், முதன்மை செயலர் / ஆணையர் அவர்கள், பெறப்பட்ட ஒப்பந்தத்தில் விரிவான திட்ட அறிக்கை / விரிவான சாத்தியக்கூறு அறிக்கை (DPR/DFR) இல்லாமல் ஒப்ப படிவங்கள் தயாரிப்பதற்கு மட்டும் கோரியுள்ள விலையானது அதிகமாக என்பதாலும், ஆலோசகர் இல்லாமல் திட்டத்தினை செயலாக்க கடினமாக சூழ்நிலை என கூறியதற்கு, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் நேரிடையாக, மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனம் (TNUIFSL) அவர்களிடம் மேற்கண்ட பணிகளுக்கு ஆலோசகரை நியமிக்கும் பணிகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தியுள்ளார்.

இதன் அடிப்படையில் தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனம் (TNUIFSL) அவர்கள் கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு இந்த பணியை மேற்கொள்ளுவதாக தெரிவித்துள்ளார்கள்.

தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி சேவை (TNUIFSL) நிறுவனம் மேற்குறிப்பிட்ட திடக்கழிவு மேலாண்மை திட்டங்களை அரசு தனியார் பங்களிப்பு செயலாக்க (PPP) ஆலோசகர்களை நியமிக்க வரைவு (Draft Terms of Reference) தயாரித்துள்ளதாகவும் கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு பணியை மேற்கொள்ள இசைவதாகவும் தெரிவித்துள்ளார்கள்.

1. மேற்குறிப்பிட்ட ஆலோசகர்களை நியமிக்கும் பணியினை Tamil Nadu Sustainable Urban Develoment Project (TNSUDP) திட்டத்தின் கீழ் உலக வங்கி நிதி பங்களிப்பில் (PDGFC) அதாவது திட்ட மேம்பாட்டு மானிய நிதி குழுவின் ஒப்புதலுக்கு உட்படுத்தப்பட்டு உலக வங்கியின் விதிமுறைகளை பின்பற்றப்படும் என்றும்,
2. சென்னை மாநகராட்சி ஆலோசகர்களை நியமிக்க திருவாளர்கள் தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி சேவை (TNUIFSL) நிறுவனம் அவர்களை கோருவதற்கு மன்றத்தின் ஒப்புதல் பெற்று வழங்குமாறும்,
3. ஒப்ப பரிவர்த்தனை ஆலோசனை சேவைகளை TNIDB நிறுவனத்தின் வழிமுறைகளை பின்பற்றப்படும் என்றும் தெரிவித்துள்ளார்கள்,

இதற்கு சென்னை மாநகராட்சி அவ்வரைவு வரையறைகளில் (Draft Terms of Reference) தேவையான மாற்றங்கள் செய்து தயாரித்து இணைக்கப்பட்டுள்ளது.

எனவே, திருவாளர்கள் தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி சேவை (TNUIFSL) நிறுவனம் மூலம் மேலே தெரிவிக்கப்பட்ட சிப்பம் 1, 2, 3 மற்றும் 4 ஆகிய பணிகளுக்கு ஆலோசகர்களை நியமிக்க மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

2016–2017ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை கூட்டம் நடைபெறுவதால், இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

தி.க.மே.து.ந.க.எண்.அ3/1875/2014

ஆணையர் அவர்களின் 23.02.2016 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.171/2016 **பொருள் எண்.25**

திடக்கழிவு மேலாண்மை துறை–மனித கழிவுகளை அகற்ற மனிதர்களை நியமிப்பதை தடுக்கும் மற்றும் அவர்களின் புனர்வாழ்வு சட்டம், 2013–சட்டத்தை அமலாக்குதல்–ஆய்வாளர்களைநியமனம் செய்தல் மற்றும் அவர்களின் அதிகாரங்களை வரையறுத்தல் குறித்து அரசாணை– அரசாணையினை அமலாக்கி மண்டலங்களுக்கு சுற்றறிக்கை அனுப்ப அனுமதி

மனித கழிவுகளை அகற்ற மனிதர்களை நியமிப்பதை தடுக்கும் மற்றும் அவர்களின் புனர்வாழ்வு சட்டம், 2013ன் பிரிவு 7ல் மனிதக் கழிவுகளை அகற்றும் பணிக்கு மனிதர்களை நியமனம் செய்வது தடை செய்யப்பட்டது. அதன்படி எந்த ஒருவரும் அல்லது எந்த ஒரு நிறுவனமும் அல்லது அமைப்பும் அவ்வாறு மனித கழிவுகளை அகற்ற ஆட்களை நியமிப்பது தடை செய்யப்பட்டுள்ளது. மேலும் அந்த தடையானது இந்த சட்டப்பிரிவு 7, என்றைய தினம் மாநில அரசு அமலுக்கு வரும் என்று குறிப்பிட்டு அறிவிக்கை வெளியிடுகிறதோ அன்றைய தினத்திலிருந்து அமலுக்கு வரும் என்றும் சொல்லப்பட்டுள்ளது. இந்த சட்டப்பிரிவு கீழ்வருமாறு:–

"**Prohibition of persons from engagement or employment for hazardous cleaning of sewers and septic tanks:-** No person, local authority or any agency shall, from such date as the State Government may notify, which shall not be later than one year from the date of commencement of this Act, engage or employ, either directly or indirectly, any person for hazardous cleaning of a sewer or a septic tank. "

இந்த சட்டப்பிரிவில் சொல்லப்பட்டுள்ளதன் அடிப்படையில் தமிழக அரசு மார்ச், 5, 2015 நாளிட்ட அரசிதழில்(Tamil Nadu Government Gazerree) மேற்சொன்ன சட்டப்பிரிவு 7 அமலுக்கு வரும் நாள் மார்ச் 15, 2015 என்று நாள்குறித்து கீழே சொல்லப்பட்டுள்ள அறிவிக்கையினை (Notification) PART II, Section 2–ல் வெளியிட்டது.

MUNICIPAL ADMINISTRATION AND WATER SUPPLY DEPARTMENT
THE PROHIBITION OF EMPLOYMENT AS MANUAL SCAVENGERS AND THEIR REHABILITATION ACT, 2013

(G. O. Ms.No.40, Municipal Administration and Water Supply (MA2) No.II(2)/MAWS/119(d)/2015.

Under Section 7 of the Prohibition of Employment as Manual Scavengers and their Rehabilitation Act, 2013, (Central Act 25 of 2013), the Governor of Tamil Nadu hereby notifies the 15th day of March, 2015, as the date from which no person, local authority or any agency shall, engage or employ, either directly or indirectly, any person for hazardous cleaning of a sewer or a septic tank.

K. PANINDRA REDDY,
Principal Secretary to Government

இந்த அறிவிக்கையினை அனைத்து துறைகள், வட்டார அலுவலகங்கள் மற்றும் மண்டலங்களுக்கும் தெரிவித்து S.W.M.C.No.A3/0744/2015 எண்ணிட்ட 10.04.2015 நாளிட்ட சுற்றறிக்கை திடக்கழிவு மேலாண்மை துறையினால் அனுப்பட்டது.

மேலும், இந்த சட்டத்தில் பிரிவு 20ல் கீழ்வருமாறு சொல்லப்பட்டுள்ளது.

20. Appointment of inspectors and their powers :- (1) The appropriate Government may, by notification, appoint such persons as it thinks fit to be inspectors for the purposes of this Act, and define the local limits within which they shall exercise their powers under this Act.

எனவே, சென்னை மாநகராட்சியில் சுகாதார அலுவலர்களாக (Sanitary Officers)பணிபுரிபவர்களை ஒரு பகுதிக்கு(Unit) ஒருவர் என்று நியமனம் செய்யவும் மற்றும் அவர்களுக்கு மேற்சொன்ன சட்டத்தின் பிரிவு 20(2)ன் கீழ் ஆய்வாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை வழங்கவும் அரசின் அனுமதி வேண்டி அரசுக்கு சென்னை மாநகராட்சி S.W.M.C.No: A3/1875/2015 எண்ணிட்ட 11.01-2016 நாளிட்ட முன்மொழிவினை அனுப்பியது.

தற்போது அரசு கீழ்வரும் அறிவிக்கையினை அரசாணை(நிலை) எண்.3, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.2) துறை, நாள்.13.01.2016ல் வெளியிட்டு அதனை ஜனவரி, 13, 2016 நாளட்ட தமிழக அரசின் அரசிதழ் எண்.10ல் பாகம் 2, பிரிவு 2ல் பிரசுரம் செய்து அதன் நகலினை இணைத்து அரசாணையினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு அனுப்பியுள்ளது.

Notification

In exercise of powers conferred by sub-section(1) of section 20 of the Prohibition of Employment as Manual Scavengers and their Rehabilitation Act, 2013 (Central Act 25 of 2013), the Governor of Tamil Nadu hereby appoints the Sanitary Officers or the Sanitary Inspectors, as the case may be, of the City Municipal Corporations and Municipalities (except Sembakkam Municipality), the Municipal Commissioner of the Sembakkam Municipality and Executive Officers of the Town Panchayats, to be Inspectors for the purposes of the said Act and defines their respective territorial jurisdictions to be the local limits within which they shall exercise their powers under the said Act.

இது குறித்து இங்கு சமர்ப்பிக்கபடுவதாவது, மேற்சொல்லப்பட்டுள்ள சட்டப்பிரிவு 20(2)ல் பல்வேறு பணிகளும் மற்றும் கடமைகளும் அளிக்கப்பட்டுள்ளது. இந்த சட்டப்பிரிவில் கீழ்வருமாறு சொல்லப்பட்டுள்ளது.

(2) Subject to any rules made in this behalf, an inspector may, within the local limits of his jurisdiction, enter, at all reasonable times, with such assistance as he considers necessary, any premises or place for the purpose of,—

(a) examining and testing any latrine, open drain or pit or for conducting an inspection of any premises or place, where he has reason to believe that an offence under this Act has been or is being or is about to be committed, and to prevent employment of any person as manual scavenger;

(b) examine any person whom he finds in such premises or place and who, he has reasonable cause to believe, is employed as a manual scavenger therein, or is otherwise in a position to furnish information about compliance or non-compliance with the provisions of this Act and the rules made thereunder;

(c) require any person whom he finds on such premises, to give information which is in his power to give, with respect to the names and addresses of persons employed on such premises as manual scavenger and of the persons or agency or contractor employing or engaging them;

(d) seize or take copies of such registers, record of wages or notices or portions thereof as he may consider relevant in respect of an offence under this Act which he has reason to believe has been committed by the principal employer or agency; and

(e) exercise such other powers as may be prescribed.

எனவே, மேற்சொன்ன அறிவிக்கையினை பெருநகர சென்னை மாநகராட்சியில் அமலாக்கி ஒவ்வொரு பகுதிக்கும்(Unit) மனித கழிவுகளை அகற்ற மனிதர்களை நியமிப்பதை தடுக்கும் மற்றும் அவர்களின் புனர்வாழ்வு சட்டம், 2013ன் பிரிவு 20 (2)ன் கீழ் உள்ள அதிகாரங்களை பயன்படுத்தி பணிகளை மேற்கொள்ள ஒரு சுகாதார அலுவலரை(Sanitary Officer) ஆய்வாளராக(Inspector) நியமிக்க பெருநகர சென்னை மாநகராட்சியின் அனைத்து மண்டல அலுவலர்களுக்கும் சுற்றறிக்கையின் மூலம் சுகாதார அலுவலர் அறிவுறுத்தல்கள் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

2016–2017ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை கூட்டம் நடைபெறுவதால், இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

சி.தி.து.ந.க.எண்.பி1/0079 /2015

ஆணையர் அவர்களின் 22.02.2016 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.172/2016 **பொருள் எண்.26**

பெருநகர சென்னை மாநகராட்சி – மண்டலம் –9, வார்டு –114, 116,125 (ம) 126ல் உள்ள மெரினா காமராஜர் சாலை மேற்குப் பகுதியில் அகில இந்திய வானொலி நிலையம் முதல் ஆசிரியர் பயிற்சி மைய வாயில் வரை (பகுதி–I) – ஆசிரியர் பயிற்சி மைய வாயில் முதல் பார்த்தசாரதி கோயில் நுழைவாயில் வரையில் (பகுதி–II) – பார்த்தசாரதி கோயில் நுழைவாயில் முதல் மாநில கல்லூரி வரை (பகுதி – III), மாநில கல்லூரி முதல் சுவாமி சிவானந்தா சாலை வரையில் (பகுதி – IV) அமைந்துள்ள பழைய சுற்றுச் சுவர்களை அகற்றி வரலாற்று தூண்கள் மற்றும் நடைபாதை அமைக்கும் பணிக்காக 01.12.2015 முதல் 29.02.2016 வரை பணிக்கால நீட்டிப்பிற்க்கு பின்னேற்பு அனுமதியும், 31.03.2016 வரை பணிக்கால நீட்டிப்பு வழங்க அனுமதி

மண்டலம் –9, வார்டு – 114,116, 125 (ம) 126ல் உள்ள மெரினா காமராஜர் சாலை மேற்குப் பகுதியில் அகில இந்திய வானொலி நிலையம் முதல் ஆசிரியர் பயிற்சி மைய வாயில் வரை (பகுதி–I), ஆசிரியர் பயிற்சி மைய வாயில் முதல் பார்த்தசாரதி கோயில் நுழைவாயில் வரையில் (பகுதி–II) மற்றும் பார்த்தசாரதி கோயில் நுழைவாயில் முதல் மாநில கல்லூரி வரை (பகுதி–III), மாநில கல்லூரி முதல் சுவாமி சிவானந்தா சாலை வரையில் (பகுதி–IV) அமைந்துள்ள பழைய சுற்றுச் சுவர்களை அகற்றி வரலாற்று தூண்கள், சி.ஐ கிரில் மற்றும் சி.ஐ வாயிற் கதவுகள் கொண்டு புதுப்பித்து, கிரானைட் கற்கள் மற்றும் கிரானைட் பில்லர், ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் கைப்பிடி மூலம் நடைபாதை அமைக்கும் பணிக்காக மன்றத்தீர்மான எண்.569 (ம) 570 /2015, நாள்.30.09.2015ல் திருவாளர்கள். ஆர். கிருஷ்ண மூர்த்தி ஆண்டு கோ அவர்களுக்கு 30.11.2015 வரை பணிக்கால நீட்டிப்பு வழங்கப்பட்டது.

பகுதி –1 பிரிவில் உள்ள இராணி மேரி கல்லூரிச் சாலையின் நடைபாதை, கல்லூரி நுழைவு வாயிலின் இடது புறம் 1.5 மீ அகலமும், நுழைவு வாயிலின் வலதுபுறம் 3.7மீ அளவுகளும் இருப்பதால் அவற்றை ஒரே சீராக 5.0மீ அகலத்தில் நடைபாதை அமைக்கவும், கல்லூரி முன் அமைந்துள்ள பேருந்து நிறுத்தத்தில் பேருந்து நிறுத்த தனிவழி (Busbay) அமைப்பதற்கும் அனுமதி வேண்டி உயர் கல்வி துறை செயலர் மற்றும் கல்லூரி முதல்வர் அவர்களுக்கு கடிதம் அனுப்பட்டது. இது தொடர்பாக பதில் ஏதும் பெறப்படாததால் மீண்டும் இதனை வலியுறுத்தி முதன்மை செயலர் / ஆணையர் அவர்கள் மூலம் 26.06.2015 அன்று நேர்முக கடிதம் அனுப்பப்பட்டது. ஆனால் அக்கல்லூரியில் ஏற்கனவே உள்ள சுற்றுசுவர்களை அகற்றி அதே இடத்தில் அமைக்குமாறு வாய்மொழி உத்தரவு, உயர் கல்வி துறை செயலரிடமிருந்து ஜனவரி மாதம் இறுதியில் பெறப்பட்டு பணி தொடங்கப்பட்டது. இதனால் இப்பகுதியில் பணியினை குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் முடிக்க முடியாத நிலை ஏற்ப்பட்டது.

மேலும் கடந்த அக்டோபர் 2015, நவம்பர் 2015 மற்றும் டிசம்பர் 2015 மாதங்களில் ஏற்பட்ட வரலாறு காணாத தொடர்மழை காரணமாக காமராஜர் சாலையில் நடைபெற வேண்டிய பணிகள் முற்றிலுமாக தடைப்பட்டது.

மாண்புமிகு தமிழக முதல்வர் தலைமைச் செயலகத்திற்கு செல்லும் வழியாக காமராஜர் சாலை இருப்பதாலும், மிக முக்கிய பிரமுகர்கள் செல்லும் பாதையாக இருப்பதாலும் பாதுகாப்பு காரணமாக பகல் நேரத்தில் பணியினைச் செய்யவும், கனரக இயந்திரங்கள் இயக்கவும் போக்குவரத்து காவல் துறையினரால் அனுமதி மறுக்கப்பட்டு இரவில் மட்டுமே பணிகள் மேற்கொள்ள வேண்டிய சிரமம் இருப்பதால் இப்பணியை செய்ய முடியாததால், உரிய காலத்தில் முடிக்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. தற்பொழுது போர்கால அடிப்படையில் முழுவீச்சில் பணிகள் நடைப்பெற்று வருகிறது. இதன் பொருட்டு மேற்காணும் பணிக்கு பணிக்கால நீட்டிப்பு வழங்குவது அவசியமாகும்.

திரு.ஆர்.கிருஷ்ண மூர்த்தி ஆண்டு கோ அவர்கள், மேற்கூறிய காரணங்களால் பணிக்காலத்தை மேலும் 5 மாதங்களுக்கு பணி நீட்டிப்பு செய்யுமாறு கடிதம் அளித்துள்ளார். இக்கடிதத்தினை பரிசீலனை செய்யப்பட்டதில் மார்ச்’ 2016 வரை கால நீட்டிப்பு வழங்குவது

அவசியமாகும் என தீர்மானிக்கப்பட்டு மார்ச்' 2016 வரைக்குள் பணியினை முடிக்கப்படவேண்டும் என்றும், தவறும் பட்சத்தில் ஒப்பந்த விதிகளின்படி உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இந்த கால நீட்டிப்பு காலத்தில் செய்யப்படும் பணிகளுக்கு ஒப்பந்ததாரருக்கு விலை ஏற்றம் (Price Escalation) வழங்கப்படமாட்டாது என்ற நிபந்தனைக்குப்பட்டு நிபந்தனைக்குப்பட்டு இப்பணியை மார்ச்' 2016 வரை பணிக்கால நீட்டிப்பு வழங்கலாம் என பரிந்துரைக்கப்படுகிறது.

எனவே, காமராஜர் சாலை பணிக்கு சென்னையில் ஏற்பட்ட வரலாறு காணாத கனமழை மற்றும் வெள்ளம் ஆகியவை கருத்தில் கொண்டு, ஒப்பந்ததாரருக்கு மார்ச்' 2016க்குள் பகுதி–I, பகுதி–II, பகுதி–III மற்றும் பகுதி–IV ஆகிய பணிகள் முடிக்கப்படவேண்டும் என்ற நிபந்தனைக்குபட்பட்டு, பணிகளை முழுமையாக முடிக்க 01.12.2015 முதல் 29.02.2016 வரை பணிக்கால நீட்டிபிற்கு பின்னேற்பு அனுமதியும், 31 .03.2016 வரை பணிக்கால நீட்டிப்பு வழங்க சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம் விதி 1919ன் கீழ் திருத்தப்பட்ட சட்டப்பிரிவு விதி 78(பி) ன்படி மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

2016–2017ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை கூட்டம் நடைபெறுவதால், இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

வ.வ.அ.ந.க.எண்.இ8/9847/2015
ஆணையர் அவர்களின் 29.01.2016 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.173/2016 **பொருள் எண்.27**

தானப்பத்திரம்

மண்டலம்–5, வார்டு–58ல் டாக்டர். முகமது அமீர் அலி மற்றும் 3 நபர்கள் பழைய கதவு எண்.11/1, புதிய கதவு எண்.23, ஈ.வி.கே. சம்பத் சாலை, வேப்பேரி, சென்னை R.S.No.709/1, Block No.17, வேப்பேரி கிராமம் என்ற இடத்தில் புதியதாக கட்டிடம் கட்டுவதற்கு கட்டிட வரைபட அனுமதி வேண்டி PPA/WDCN05/06227/2015, நாள்:09.10.2015ல் விண்ணப்பித்துள்ளார். விண்ணப்பத்தினை ஆய்வு செய்ததில் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் மேம்படுத்தும் வரைபடத்தின்படி (D.D.P) ஈ.வி.கே. சம்பத் சாலையில் 18.0மீ அகலத்திற்கு சாலையை விரிவுப்படுத்தும் உத்தேசம் உள்ள காரணத்தினால் உரிமையாளர் டாக்டர். முகமது அமீர் அலி மற்றும் ஷாமிம் சிராஜூதின் ஆகிய இருவருக்கும் சொந்தமான பொது வழி பாதையில் சுமார் (0.65மீ X 6.70மீ) 4.355 ச.மீ பரப்பளவு சாலையை ஒட்டியுள்ள நிலத்தினை சென்னை மாநகராட்சிக்கு தானமாக வழங்க வேண்டியுள்ளது. இது குறித்து விண்ணப்பதாரருக்கு கடிதம் அனுப்பப்பட்டது. பொது வழிப்பாதையின் விவரங்கள் வேப்பேரி கிராமம், பிளாக் எண்.17, மறு நில அளவை எண்.709/11. மேற்படி நிலத்தினை சென்னை மாநகராட்சிக்கு தானபத்திரம் மூலம் ஒப்படைப்பு செய்திட டாக்டர். முகமது அமீர் அலி மற்றும் ஷாமிம் சிராஜூதின் இருவரும் ஒப்புதல் அளித்துள்ளனர்.

சாலை விரிவாக்கத்திற்காக மேற்படி நிலத்தினை தானப்பத்திரம் மூலமாக சென்னை மாநகராட்சி பெற்று கொள்ள 5வது மண்டல வார்டு குழுவின் பரிந்துரை பின்னர் பெறப்படும்.

எனவே,

(1) மண்டலம்–5, வார்டு–58க்கு உட்பட்ட பழைய கதவு எண்.11/1, புதிய கதவு எண்.23, ஈ.வி.கே. சம்பத் சாலை, வேப்பேரி, சென்னை R.S.No.709/1, Block No.17, வேப்பேரி கிராமம் என்ற இடத்தில் சாலையை ஒட்டியுள்ள பொது வழிப்பாதையில் (0.65மீ X 6.70மீ) 4.355 ச.மீ பரப்பளவு நிலத்தினை சாலை விரிவாக்கத்திற்காக தானப்பத்திரம் மூலம் பெற்றுக் கொள்ளவும்,

(2) மேற்படி இடத்தின் சாலை விரிவாக்கப் பணிக்காகக ஆகும் செலவுத் தொகையான ரூ.7,700/–யை (ரூபாய் ஏழாயிரத்து எழுநூறு மட்டும்) மனுதாரரிடம் வசூல் செய்திடவும்,

மேற்கண்ட 1 முதல் 2 வரை உள்ள இனங்களுக்கு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

2016–2017ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை கூட்டம் நடைபெறுவதால், இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

ப.து.ந.க.எண். 0190/2015
ஆணையர் அவர்களின் 25.02.2016 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.174/2016 **பொருள் எண்.28**

தானப்பத்திரம்

மண்டலம்–9, வார்டு–114ல் திருமதி. உஷா அமர்நாத், டாக்டர். அமர்நாத் ஆர்.சௌலீ ஆகிய இருவர், பழைய கதவு எண்.567/568, புதிய கதவு எண்.158, திருவல்லிகேணி நெடுஞ்சாலை, திருவல்லிகேணி, சென்னை 600 005, S.No.655/40, R.S.No.655/40, Block No.19, திருவல்லிகேணி கிராமம் என்ற இடத்தில் கட்டிடம் கட்டுவதற்கு திட்டம் மற்றும் கட்டிட அனுமதி வேண்டி சென்னை மாநகராட்சி, மத்திய வட்டார அலுவலகம், நகரமைப்பு பிரிவில் PPA/WDCN09/03286/2015, நாள்:28.05.2015ல் திட்ட அனுமதி விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளார்கள். அவர்கள் திட்ட மற்றும் கட்டிட அனுமதி வேண்டி விண்ணப்பித்த இடத்தை ஒட்டிய சாலை ''சென்னை முழுமை வளர்ச்சித் திட்டம் II''–ன்படி 18.0 மீ சாலையாக விரிவாக்கம் செய்ய வேண்டும். சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் விதிகளின்படி சாலை விரிவாக்கத்திற்கு நிலத்தினை தான பத்திரம் மூலம் உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒப்படைத்த பிறகு தான் திட்ட அனுமதி வழங்க இயலும். திருமதி. உஷா அமர்நாத், டாக்டர். அமர்நாத் ஆர்.சௌலீ அவர்கள் தங்களிடத்திலிருந்து சாலை விரிவாக்கம் செய்ய 16.30 ச.மீ [(15.24மீ+14.95மீ/2) X 1.08மீ] =16.30 ச.மீ) நிலத்தினை சென்னை மாநகராட்சிக்கு தானபத்திரம் மூலம் வழங்க இசைவு தெரிவித்துள்ளார்கள்.

எனவே,

(1) மனை உரிமையாளர் திருமதி. உஷா அமர்நாத் மற்றும் டாக்டர். அமர்நாத் ஆர்.சௌலீ அவர்களிடம் இருந்து 16.30ச.மீ நிலத்தினை சென்னை மாநகராட்சி சாலை விரிவாக்கத்திற்கு தானமாக பெற்றுக் கொள்ளவும்,

(2) தானமாக வழங்கப்பட்ட பகுதியில் சாலை விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ள செவாகும் செலவீனம் ரூ.28,000/– யை மனை உரிமையாளர்களிடம் ''ஆணையர் சென்னை மாநகராட்சி'' என்ற பெயரில் வரைவு காசோலையாக பெற்று கொள்ளவும்,

(3) தானமாக வழங்கிய நிலத்திற்கு தளப்பரப்பு குறியீடு (FSI) உபயோகப்படுத்தாததால் நிலத்தின் உரிமையாளருக்கு தானமாக பெறப்படும் இடத்திற்கு ''வளர்ச்சி உரிமை சான்றிதழ்'' சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் மூலம் வழங்க வேண்டி பரிந்துரைப்பதற்கும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

2016–2017ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை கூட்டம் நடைபெறுவதால், இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

****

ப.து.ந.க.எண். 0027/2016
ஆணையர் அவர்களின் 25.02.2016 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.175/2016 **பொருள் எண்.29**

தானப்பத்திரம்

மண்டலம்–6, வார்டு–66ல் திரு. எஸ்.பி.கணேசன்அவர்கள் பழைய கதவு எண்.159, புதிய கதவு எண்.410, பேப்பர் மில்ஸ் ரோடு, பெரவள்ளூர், சென்னை 600 082, T.S.No.59, Block No.10, பெரவள்ளூர் கிராமம் என்ற இடத்தில் கட்டிடம் கட்டுவதற்கு திட்டம் மற்றும் கட்டிட அனுமதி வேண்டி சென்னை மாநகராட்சி, மத்திய வட்டார அலுவலகம், நகரமைப்பு பிரிவில் PPA/WDCN06/05523 /2015, நாள்: 07.09.2015ல் விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளார். திட்ட மற்றும் கட்டிட அனுமதி வேண்டி விண்ணப்பித்த இடத்தை ஒட்டிய சாலை ''சென்னை முழுமை வளர்ச்சித் திட்டம் II''–ன் படி 18.0 மீ சாலையாக விரிவாக்கம் செய்ய வேண்டும். சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் விதிகளின்படி சாலை விரிவாக்கத்திற்கு நிலத்தினை தான பத்திரம் மூலம் உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒப்படைத்த பிறகு தான் திட்ட அனுமதி வழங்க இயலும். எனவே, திரு.எஸ்.பி.கணேசன் அவர்கள் தங்களிடத்திலிருந்து சாலை விரிவாக்கம் செய்ய 9.16ச.மீ [(7.6மீ+7.61மீ)/2] X [(1.11மீ+1.30மீ)/2]= 9.16ச.மீ நிலத்தினை சென்னை மாநகராட்சிக்கு தானபத்திரம் மூலம் வழங்க இசைவு தெரிவித்துள்ளார்.

எனவே,

(1) மனை உரிமையாளர் திரு.எஸ்.பி.கணேசன் அவர்கள் இசைவு பெற்ற தான பத்திரம் மூலம் 9.16 ச.மீ நிலத்தினை சென்னை மாநகராட்சி சாலை விரிவாக்கத்திற்கு தானமாக பெற்றுக் கொள்ளவும்,

(2) தானமாக வழங்கப்பட்ட பகுதியில் சாலை விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ள செவாகும் செலவீனம் ரூ.15,500/–யை மனை உரிமையாளரிடம் ''ஆணையர் சென்னை மாநகராட்சி'' என்ற பெயரில் வரைவு காசோலையாக பெற்று கொள்ளவும்,

(3) தானமாக வழங்கிய நிலத்திற்கு தளப்பரப்பு குறியீடு (FSI) உபயோகப்படுத்தாததால் நிலத்தின் உரிமையாளருக்கு தானமாக பெறப்படும் இடத்திற்கு ''வளர்ச்சி உரிமை சான்றிதழ்'' சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் மூலம் வழங்க வேண்டி பரிந்துரைப்பதற்கும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

2016–2017ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை கூட்டம் நடைபெறுவதால், இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

****

ப.து.ந.க.எண்.001/2016
ஆணையர் அவர்களின் 29.01.2016 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.176/2016 **பொருள் எண்.30**

தானப்பத்திரம்

மண்டலம்–9, வார்டு–125ல் திரு.M.அருண் அவர்கள் பழைய கதவு எண். 125, புதிய கதவு எண்.38, டாக்டர்.ராதாகிருஷ்ணன் சாலை, மைலாப்பூர், சென்னை R.S.No.1042/9, Block No.21, மைலாப்பூர் கிராமம் என்ற இடத்தில், திட்ட மற்றும் கட்டட அனுமதி வேண்டி சென்னை மாநகராட்சி, மத்திய வட்டார அலுவலகத்தில் PPA/WDCN09/06804/2015, நாள். 16.11.2015-ல் விண்ணப்பித்துள்ளார். அவர் திட்ட மற்றும் கட்டட அனுமதி வேண்டி விண்ணப்பித்த இடத்தை ஒட்டிய டாக்டர்.ராதாகிருஷ்ணன் சாலை "சென்னை முழுமை வளர்ச்சித் திட்டம் II"–ன்படி 30.5மீ சாலையாக விரிவாக்கம் செய்யப்பட வேண்டும். சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் விதிகளின்படி சாலை விரிவாக்கத்திற்கு நிலத்தினை தான பத்திரம் மூலம் உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒப்படைத்த பிறகு தான் திட்ட அனுமதி வழங்க இயலும். எனவே, திரு.M.அருண், மனை உரிமையாளர் அவர்கள் சாலை விரிவாக்கம் செய்ய 60.45 ச.மீ. நிலத்தினை சென்னை மாநகராட்சிக்கு தானபத்திரம் மூலம் வழங்க ஒப்புதல் அளித்துள்ளார்.

இது தொடர்பாக சாலை விரிவாக்கத்திற்கு நிலத்தினை தானப்பத்திரம் மூலம் எடுத்துக் கொள்ள உரிய நடவடிக்கை எடுக்க வடக்கு வட்டார அலுவலகத்தில் இருந்து (ம.வ.அ.ந.க.எண்.இ8/6804/2015) நிலம் மற்றும் உடமைத் துறைக்கு அனுப்பப்பட்டது.

நிலம் மற்றும் உடைமைத் துறையிலிருந்து பணித் துறைக்கு (நி.ம.உ.து.ந.க.எண். DA1/1378/2015,நாள்.30.06.2015) மேல் நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டுள்ளது. சாலை விரிவாக்கத்திற்கு வேண்டி அளிக்கப்படும் நிலத்தினை திரு.M.அருண் அவர்களிடமிருந்து சென்னை மாநகராட்சி தானமாக எடுத்துக் கொள்ளலாம் என்று கருதப்படுகிறது.

எனவே,

(1) மனை உரிமையாளர் திரு.M.அருண் அவர்களிடமிருந்து பழைய கதவு எண்.125, புதிய கதவு எண்.38, டாக்டர்.ராதாகிருஷ்ணன் சாலை, மைலாப்பூர், சென்னை R.S.No.1042/9, Block No.21, மைலாப்பூர் கிராமத்தில் உள்ள 60.45 ச.மீ பரப்பளவு நிலத்தினை சாலை விரிவாக்கத்திற்கு தானமாக பெற்றுக் கொள்ளவும்,

(2) தானமாக வழங்கப்பட்ட பகுதியில் சாலை விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ள செலவாகும் செலவீனமான ரூ.1,01,000/– யை "ஆணையர் சென்னை மாநகராட்சி" என்ற பெயரில் வரைவு காசோலையாக விண்ணப்பதாரரிடம் இருந்து பெற்று கொள்ளவும்,

(3) தானமாக வழங்கிய நிலத்திற்கு தளப்பரப்பு குறியீடு (FSI) உபயோகப்படுத்தாததால் நிலத்தின் உரிமையாளருக்கு தானமாக பெறப்படும் இடத்திற்கு "வளர்ச்சி உரிமை சான்றிதழ்" சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் மூலம் வழங்க வேண்டி பரிந்துரைப்பதற்கும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

2016–2017ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை கூட்டம் நடைபெறுவதால், இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

வ.அ.(தெ)ந.க.எண்.அ14/7625/2015

ஆணையர் அவர்களின் 22.02.2016 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.177/2016 **பொருள் எண்.31**

வட்டார அலுவலகம் (தெற்கு) சென்னை பல்கலைக்கழகம், நகர புல எண்.2(பாகம்), பிளாக் எண்.6, கோட்டூர் கிராமத்தில் கட்டப்படவுள்ள உத்தேச அடுக்குமாடி கட்டிடம் மற்றும் நானோ டெக்னாலஜி (Nano Technology) கட்டிடத்திற்கு கட்டிட உரிமக் கட்டணத்திலிருந்து விலக்கு அளிக்க கோருவது – அரசுக்கு குறிப்பு சமர்ப்பிக்க அனுமதி.

சென்னை பல்கலைக்கழகம், நகர புல எண்.2(பாகம்), பிளாக் எண்.6, கோட்டூர் கிராமம் என்ற இடத்தில் கட்டிடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ள அடுக்குமாடி கட்டிடம் மற்றும் நானோ டெக்னாலஜி கட்டிடத்திற்கான கட்டிட அனுமதி வேண்டி விண்ணப்பம் பெறப்பட்டது.

மேற்படி விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டு 20.06.2013 அன்று இவ்வலுவலக கட்டண கேட்பு அறிவிப்பு (Demand Advice) வழங்கப்பட்டுள்ளது. மேற்படி கட்டண கேட்பு அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள கட்டிட உரிமக் கட்டணம் ரூ.29,00,400/–ஐ சென்னை மாநகராட்சிக்கு செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்குமாறு அல்லது நீக்கம் கெய்யுமாறு செயற்பொறியாளர், சென்னை பல்கலைக்கழகம் அவர்களின் 20.04.2015 நாளிட்ட கடிதத்தில் (கடித எண். F7/Blds/2015/186) கோரப்பட்டுள்ளது. இதனைச் தொடர்ந்து கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கும் அதிகாரம் மற்றும் விதியை தளர்வு செய்யும் அதிகாரம் அரசின் வசம் உள்ளதால் இது குறித்து பரிசீலிக்க இயலாது என 24.04.2015 நாளிட்ட இவ்வலுவலக கடிதம் மூலம் மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் மேற்படி கட்டிட உரிமக் கட்டணத்திற்கு விதிவிலக்கு அளிக்கக் கோரி, பதிவாளர், சென்னை பல்கலைக்கழகம் அவர்களால் 17.06.2015 நாளிட்ட கடிதத்தின் (கடித எண்.F7/Blds/2015/284) மூலம் அரசுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து இப்பொருள் குறித்து சென்னை மாநகராட்சி குறிப்பு அனுப்புமாறு அரசு முதன்மை செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களால் 26.08.2015 நாளிட்ட கடிதத்தின் (கடித எண். 15151/MC-I/2015–1) மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து மேற்பார்வை பொறியாளர்(பணிகள்) அவர்களின் 04.01.2016 நாளிட்ட குறிப்பில், சென்னை மாநகராட்சியால் வசூலிக்கப்படும் உரிமக் கட்டணங்களை நிர்ணயிக்கும் அதிகாரம் சென்னை நகர முனிசிபல் விதி 1919 பிரிவு 365(2)–ன்படி சென்னை மாநகராட்சி மாமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து உரிய முடிவெடுக்கும் பொருட்டு சென்னை பல்கலைக்கழக பதிவாளர் அவர்களின் கோரிக்கையை மாமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு மேற்பார்வை பொறியாளர் (பணிகள்) அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சியால் கட்டிட அனுமதி அளிக்கப்பட்டு வரும் அனைத்து அரசு கட்டிடங்களுக்கும் உரிய கட்டணங்கள் வசூலிக்கப்பட்ட பின்னரே கட்டிட அனுமதி வழங்கப்பட்டு வருகிறது. மேலும், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தால் மேற்கண்ட கட்டிடத்திற்கு திட்ட அனுமதிக்கான உரிய கட்டணங்கள் வசூலிக்கப்பட்ட பின்னரே திட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும், பல்கலைக்கழகங்கள் தன்னாட்சி நிறுவனங்களாக செயல்பட்டு வருகின்றன.

மேற்கூறிய காரணங்களின் அடிப்படையில், நகர புல எண்.2(பாகம்), பிளாக் எண்.6, கோட்டூர் கிராமம் என்ற இடத்தில் சென்னை பல்கலைக்கழகத்தால் கட்டப்படவுள்ள உத்தேச அடுக்குமாடி கட்டிடம் மற்றும் நானோ டெக்னாலஜி கட்டிடத்திற்கு, பெருநகர சென்னை மாநகராட்சியால் கட்டண கேட்பு அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள கட்டணத்தை செலுத்துமாறு சென்னை பல்கலைக் கழகத்தை கேட்டுக் கொள்ளலாம் மற்றும் மேற்படி தீர்மானத்தை மாமன்றத்தின் மூலம் அரசுக்கு குறிப்பு சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

2016–2017ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை கூட்டம் நடைபெறுவதால், இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

மா.கு.ந.(ம).ம.கு.ந.எண்.எப்4/0756/2016

ஆணையர் அவர்களின் 25.02.2016 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.178/2016 **பொருள் எண்.32**

பொது சுகாதாரம் மற்றும் மாவட்ட குடும்ப நலத்துறை – மருத்துவ அலுவலர்கள் காலிப் பணியிடங்களை பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத் துறை மூலம் வேற்றுப் பணியிலிருந்து (Deputation) தற்காலிகமாக நிரப்புவதற்கும் – மருத்துவ பணியாளர்கள் தேர்வாணையம் மூலம் (Medical Recruitment Board) நியமனம் செய்வதற்கும் – இம்மருத்துவ அலுவலர்களுக்கு தேசிய நகர்புற திட்டத்தின் நிதியிலிருந்து ஊதியம் வழங்குவதற்கு அனுமதி

சென்னை மாநகராட்சி 174 சதுர கிலோ மீட்டரிலிருந்து 426 சதுர கிலோ மீட்டராக விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. சென்னை மாநகராட்சி விரிவாக்கத்திற்கு முன்பாக 155 வட்டங்களுடன் 10 மண்டலங்களாக செயல்பட்டு வந்தது. சென்னை மாநகராட்சி விரிவாக்கத்திற்கு பின் 200 வட்டங்களுடன் 15 மண்டங்களாக செயல்பட்டு வருகின்றது.

பெருநகர சென்னை மாநகராட்சியின் மக்கள் தொகை ஏறக்குறைய 75 லட்சம் ஆகும். நாள்தோறும் பல்வேறு அலுவல்கள் காரணமாக சென்னை மாநகருக்கு வந்து செல்பவர்களையும் சேர்த்து ஒரு கோடிக்கு மேலாகும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரம் மற்றும் மாவட்ட குடும்ப நலத்துறையில் தேசிய நகர்புற திட்டதின்கீழ் (National Urban Health Mission) தற்போது மருத்துவ பணிகள் நடைபெற்று வருகிறது. தேசிய நகர்புற திட்டத்தின் மூலமாக 15 சமுதாய சுகாதார மையங்கள் (Community Health Centre) மற்றும் மூன்று (24X7) 24 மணி நேர மகப்பேறு மருத்துவமனைகள் (Emergency Obstetric Care) மற்றும் 140 நகர ஆரம்ப சுகாதார நிலையங்கள் (Urban Primary Health Centre) செயல்பட்டு வருகிறது.

140 ஆரம்ப சுகாதார நிலையங்கள், 15 சமுதாய சுகாதார நிலையங்கள் மற்றும் மூன்று (24X7) 24 மணி நேர மகப்பேறு மருத்துவமனைகளில் சுகப்பிரசவங்கள், அறுவைச் சிகிச்சை பிரசவங்கள் ஆண்டொன்றுக்கு ஏறக்குறைய 13,000 மேற்ப்பட்ட பிரசவங்கள் நடைபெறுகிறது. பிரசவத்திற்கு வரும் தாய்மார்களுக்கு ஸ்கேன் எடுத்தல், கர்ப்பிணித் தாய்மார்களுக்கு பாதுக்காப்பான பிரசவம் நடைபெறும் வகையில் கதகதப்பான மெத்தை அளித்தல், பிரசவித்த தாய்மார்களுக்கு முறையான ஊட்டச்சத்து அளித்தல் பிரசவத்திற்கு பின்னர் பிரசவித்த தாய்மார்களை தொடர்ந்து கண்காணித்தல் போன்ற பணிகள் சிறப்பாக செயல்படுத்தப்படுகிறது. மேலும், கர்ப்பிணித் தாய்மார்களுக்கு குடும்ப நல அறுவை சிகிச்சை குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் அதன் முக்கியத்துவத்தை எடுத்துரைத்து அவர்களுக்கு குடும்ப கட்டுப்பாடு அறுவை சிகிச்சை மேற்கொள்வதன் மூலம் ஆண்டுதோறும் 9,000க்கும் மேற்பட்டோறுக்கு குடும்ப நல அறுவை சிகிச்சைகள் மற்றும் குடும்ப கட்டுபாடு அறுவைச் சிகிச்சைகள், குழந்தை நலம், திருத்தப்பட்ட தேசிய காசநோய் கட்டுப்பாடு திட்டம் (RNTCP), தொற்று நோய் அல்லாத பிற நோய்கள் மேற்கொள்ளப்படுகிறது. சிறப்பு மருத்துவ சேவைகள் NUHM மூலம் நடைபெற்று வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சியின் பொது சுகாதாரம் மற்றும் மாவட்ட குடும்ப நலத்துறையின் மருத்துவ பணிகளை மேம்படுத்த தேசிய நகர்புற திட்டத்தின்கீழ் பணிகள் நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 140 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு இரண்டு மருத்துவ அலுவலர்கள் வீதம் 280 மருத்துவ அலுவலர்களும், 15 சமுதாய சுகாதார நிலையங்கள் மற்றும் மூன்று 24 மணிநேர மகப்பேறு மருத்துவமனைகளுக்கு 60 மருத்துவ அலுவலர்களும், மகப்பேறு மருத்துவ அலுவலர்கள் (Obstetrician) 51 நபர்களும், மயக்க மருந்து நிபுணர்கள் (Anaesthetist) 18 நபர்களும், குழந்தை நல மருத்துவர்கள் (Paediatrcian) 33 நபர்களும் தேசிய நகர்புற திட்டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்டுள்ளது.

தற்போது 140 ஆரம்ப சுகாதார நிலையங்களில் (UPHC) 111 மருத்துவ அலுவலர்களும், 15 சமுதாய சுகாதார நிலையங்கள் மற்றும் மூன்று 24 மணிநேர மகப்பேறு மருத்துவமனைகளில்,

19 மகப்பேறு மருத்துவ அலுவலர்கள் (Obstetrician), 8 மயக்க மருந்து நிபுணர்கள் (Anaesthetist), 4 குழந்தை நல மருத்துவர்களும் (Paediatrcian) மற்றும் 1 (Ortho) மருத்துவரும் ஆகமொத்தம் 32 மருத்துவ அலுவலர்கள் பணியாற்றி வருகின்றனர்.

தேசிய நகர்புற திட்டத்தின்கீழ் 140 ஆரம்ப சுகாதார நிலையங்கள், 15 சமுதாய சுகாதார நிலையங்கள் மற்றும் 3 இருபத்து நான்கு மணிநேர மகப்பேறு மருத்துவமனைகளில் பணியாற்ற 188 மருத்துவ அலுவலர்களும், 33 மகப்பேறு மருத்துவ அலுவலர்களும், 10 மயக்க மருந்து நிபுணர்களும் மற்றும் 29 குழந்தை நல மருத்துவ அலுவலர்களும் தேவைப்படுகின்றனர்.

மேலும் பொது சுகாதாரம் மற்றும் மாவட்ட குடும்ப நலத்துறையில் அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் கீழ்கண்டவாறு:

DESIGNATION	SANCTIONED	IN POSITION	VACANT
MEDICAL OFFICER	**268**	**200**	**68**

ஆகவே மேற்கண்ட மருத்துவ அலுவலர்களின் 68 காலிப்பணியிடங்களை நிரப்பும் வரை பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு துறை மூலமாக மருத்துவ அலுவலர்களை வேற்றுப்பணியிலிருந்து (Deputation) நிரப்புவதற்கும், மேலும் மருத்துவ அலுவலர்களை, மருத்துவ பணியாளர்கள் தேர்வாணையம் மூலம் நியமனம் செய்து கொள்வதற்கும் அனுமதி கோரப்படுகிறது.

அ) பொது சுகாதாரம் மற்றும் மாவட்ட குடும்ப நலத்துறையில் மருத்துவ அலுவலர்களின் காலிப்பணியிடங்களை, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு துறை மூலமாக மருத்துவ அலுவலர்களை வேற்றுப்பணியிலிருந்து (Deputation) தற்காலிகமாக நிரப்புவதற்கும்,

ஆ) பெருநகர சென்னை மாநகராட்சியிலுள்ள மருத்துவ அலுவலர்கள் மற்றும் சிறப்பு மருத்துவ அலுவலர்கள் காலிப்பணியிடத்தை, மருத்துவ பணியாளர்கள் தேர்வாணையம் (Medical Recruitment Board) மூலம் நியமனம் செய்வதற்கும்,

இ) இம்மருத்துவ அலுவலர்களுக்கு தேசிய நகர்புற திட்டத்தின் (NUHM) நிதியிலிருந்து ஊதியம் வழங்குவதற்கும்,

மேற்கண்ட அ முதல் இ வரையிலான இனங்களுக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

> ‘‘ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டம் 12.02.2016 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 26.02.2016 அன்று தீர்மான எண்.08/2016ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்) சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

> ‘‘இம்மாத நியமனக்குழு கூட்டம் முடிவுற்ற நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு இதனை நியமனக்குழு சுற்றின் மூலம் பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது.’’

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

****

ம.அ.11.ந.க.எண்.சி1/7188/2015

ஆணையர் அவர்களின் 25.02.2016 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.179/2016 **பொருள் எண்.33**

பெருநகர சென்னை மாநகராட்சி – மண்டலம் 11 – தூய்மை பணியாளர்கள்– பகுதி–32, 33 மற்றும் 34 – கோட்டங்கள்–143 முதல் 155 வரை – துப்புரவு பணி மேற்கொள்வது – சுவர்ண ஜெயந்தி நகர்ப்புற வேலைவாய்ப்பு திட்டக்குழு உறுப்பினர்களை ஈடுபடுத்தி துப்புரவுப் பணி மேற்கொள்ளுதல் – ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள நிர்வாக அனுமதிக்கான காலம் முடிவுறுதல் – 01.04.2016 முதல் ஓராண்டிற்கு 520 சுவர்ண ஜெயந்தி நகர்ப்புற வேலைவாய்ப்பு திட்டக்குழு உறுப்பினர்களை தொடர்ந்து பணியில் ஈடுபடுத்த நிர்வாக அனுமதி

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–11, வளசரவாக்கம் மண்டலம் 28.51 சதுர கிலோமீட்டர் பரப்பளவுடன் 143 முதல் 155 வரையிலான 13 கோட்டங்களை உள்ளடக்கியதாகும். இம்மண்டலத்தின் தற்போதைய மக்கள்தொகை சுமார் 4,33,000 ஆகும். இந்த மண்டலத்தில் 415 கி.மீ. நீளத்தில் 3111 சாலைகள்/தெருக்களும் (11 பேருந்து சாலைகள் மற்றும் 3100 உட்புற சாலைகள்), சுமார் 85,406 குடியிருப்புகளும், 2,687 வணிக நிறுவன கட்டமைப்புகள் மற்றும் 52 கல்வி நிலையங்களும், 102.95 கி.மீ. நீளத்தில் மழைநீர் வடிகால்வாய்களும், 4.00கி.மீ நீளத்தில் கூவம் ஆறும், சுமார் 91.608 கி.மீ நீளத்தில் திறந்தநிலைக் கால்வாய்களும் உள்ளன. இப்பகுதிகளில் தினமும் தூய்மை பணிகள் மேற்கொண்டு சுத்தம் சுகாதாரம் பேண வேண்டியது அவசியமாகிறது. இம்மண்டலத்தில் 286 நிரந்தரப் பணியாளர்களும், 143 மாநகராட்சித் தினக்கூலிப் பணியாளர்களும் ஆக 429 மாநகராட்சி பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். மேலும், இம்மண்டலத்தின் மக்கள் தொகை பெருக்கம் மற்றும் இம்மண்டலத்தின் வளர்ச்சி ஆகியவற்றை கருத்தில் கொண்டு 520 சுவர்ண ஜெயந்தி நகர்ப்புற வேலைவாய்ப்பு திட்டக்குழு உறுப்பினர்கள் தினக்கூலி அடிப்படையில் துப்புரவுப் பணியில் ஈடுபடுத்தப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர். சுவர்ண ஜெயந்தி நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டக்குழு உறுப்பினர்களை துப்புரவு பணியில் ஈடுபடுத்துவதற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்ட காலம் 31/03/2016 உடன் முடிவடைகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்–11ன் மக்கள் தொகை, சாலைகளின் நீளம் குடியிருப்புகளின் எண்ணிக்கை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு அரசாணை (நிலை) எண்.65, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.3) துறை, நாள்.21.04.2008 மற்றும் மத்திய மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் திடக்கழிவு மேலாண்மை மேற்கொள்ளுதல் சம்பந்தமாக வகுத்துள்ள வழிகாட்டுதல்கள் ஆகியவற்றில் குறிப்பிட்டுள்ள அளவுகோல்கள்படி கீழ்க்கண்டவாறு துப்புரவு பணியாளர்கள் தேவைப்பட்டியல் கணக்கிடப்பட்டுள்ளது.

துப்புரவுப் பணியாளர் தேவைப்பட்டியல் கணக்கீடு:–

அரசாணை (நிலை) எண். 65, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 21.04.2008 மற்றும் மாண்புமிகு தேசிய பசுமை தீர்ப்பாயம் 05.02.2015 அன்று வழங்கிய தீர்ப்பின்படி மத்திய மாசுக்கட்டுப்பாடு வாரியம் அளித்துள்ள நகராட்சி திடக்கழிவு மேலாண்மை மேற்கொள்ள வேண்டிய செயல் திட்டத்தின்படி

வ.எண்	பணியாளர் தேவைப் பட்டியல் விவரம் கணக்கிடுவதற்கான அடிப்படை காரணிகள்.	அரசாணை (நிலை) எண். 65, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 21.04.2008 (ம) திடக்கழிவு மேலாண்மை கையேடு பத்தி 19.6.1ல் குறிப்பிட்டுள்ள அளவுகோலின் படி	மாண்புமிகு தேசிய பசுமை தீர்ப்பாயம் 05.02.2015 அன்று வழங்கிய தீர்ப்பின்படி மத்திய மாசுக்கட்டுப்பாடு வாரியம் அளித்துள்ள நகராட்சி திடக்கழிவு மேலாண்மை மேற்கொள்ள வேண்டிய செயல் திட்டத்தின்படி
1	மண்டலம்–11ல் உள்ள மொத்த குடியிருப்புகள் மற்றும் இதர பயன்பாடு கட்டிடங்களின் எண்ணிக்கை :	88145	88145

2	பேருந்து சாலைகளின் நீளம்	14.00 கி.மீ (11 எண்ணிக்கை) அதிக நெருக்கமான சாலை (அதாவது பேருந்து தட சாலைகளில் மற்றும் மார்க்கெட் போன்ற பகுதிகளில்) 250 மீ முதல் 350 மீட்டர் தூரத்திற்கு 1 பெருக்கும் தொழிலாளி என்கிற வழிகாட்டுதலின்படி 14 கி.மீ. சாலைகள் பெருக்க தேவைப்படும் பணியாளர்கள் எண்ணிக்கை. 14000 –––––––––– 250 = 56 பணியாளர்கள்	14.00 கி.மீ (11 எண்ணிக்கை) அத்தியாயம் 4.3 ன்படி, ஜன நெருக்கடி அல்லது மக்கள் தொகை அதிகமுள்ள பகுதிகளில் 350 மீட்டர் தூரத்திற்கு 1 பெருக்கும் தொழிலாளி என்கிற அடிப்படையில் 14000 –––––––––– 350 = 40 பணியாளர்கள்
3	உட்புறச் சாலைகளின் நீளம்	415 கி.மீ மத்திய நெருக்கமான சாலைகளில் 40 மீட்டர் முதல் 600 மீ நீளத்திற்கு பெருக்கும் தொழிலாளி என்கிற அடிப்படையில், 415 கி.மீ உட்புறச் சாலைகளை பெருக்குவதற்கு தேவைப்படும் பணியாளர்கள் எண்ணிக்கை 415000 –––––––––– 400 = 1038 பணியாளர்கள்	415 கி.மீ மக்கள் தொகை மிதமான பகுதிகளில் 500 மீட்டர் முதல் 600 மீட்டர் வரை உள்ள தூரத்திற்கு 1 பெருக்கும் தொழிலாளி என்கிற அடிப்படையில் 415000 –––––––––– 500 = 830 பணியாளர்கள்
4	காம்பாக்ட்டர் மற்றும் இதர குப்பை மற்றும் கட்டிட இடிபாடு மண் அகற்றும் வாகனங்களில் செல்ல தேவைப்படும் பணியாளர்களின் எண்ணிக்கை. மொத்தமாக தேவைப்படும் பணியாளர்கள்	28 வாகனம் x 2 நபர்கள் = 56 நபர்கள்	28 வாகனம் x 2 நபர்கள் = 56 நபர்கள்
5	ஒவ்வொரு நாளும் வாராந்திர விடுப்பு அளிப்பதால் கூடுதலாக தேவைப்படும் பணியாளர்களின் எண்ணிக்கை (மத்திய அரசால் வெளியிடப்பட்டுள்ள கையேட்டின்படி, பகுதி–11 தெருக்களை சுத்தப்படுத்துதல் தலைப்பின் கீழ் பிரிவு 11.3.1.1 (a), (b), (c))	286 ––––––– = 41 நபர்கள் 7	286 ––––––– = 41 நபர்கள் 7
	மொத்த பணியாளர்கள்	**= 1191 பணியாளர்கள்**	**= 967 பணியாளர்கள்**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–11ல் உள்ள குடியிருப்புகளின் எண்ணிக்கை, சாலைகளின் நீளம் மற்றும் மக்கள்தொகை ஆகியவற்றின் அடிப்படையில் கணக்கீடு செய்ததில்,

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.65ன்படி 1191 பணியாளர்களும் மத்திய மாசுக்கட்டுப்பாட்டு வாரிய வழிகாட்டுதல்களின்படி 967 துப்புரவு பணியாளர்களும் மண்டலம்–11ல் துப்புரவு பணி மேற்கொள்ள தேவைப்படுவதாக கணக்கிடப்பட்டுள்ளது.

மண்டலம்–11, வளசரவாக்கம் மண்டலத்தில் தற்போது பணியில் ஈடுபடுத்தப்பட்டு வரும் துப்புரவு பணியாளர்கள் விவரங்கள் கீழ்க்கண்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போது பணிபுரிந்து வரும் பணியாளர்கள் விவரங்கள்

வ. எண்	வார்டு எண்.	மாநகராட்சி நிரந்தரப் பணியாளர்கள்	மாநகராட்சி தினக்கூலி பணியாளர்கள்	சுவர்ண ஜெயந்தி குழு உறுப்பினர்கள்	மொத்தம்
1.	143	10	19	40	69
2.	144	22	3	40	65
3.	145	14	27	40	81
4.	146	16	0	40	56
5.	147	21	0	45	66
6.	148	13	12	40	65
7.	149	38	0	40	78
8.	150	15	39	35	89
9.	151	22	0	38	60
10.	152	58	3	45	106
11.	153	24	1	37	62
12.	154	15	16	35	66
13.	155	18	23	45	86
மொத்தம்		**286**	**143**	**520**	949

இம்மண்டலத்தில் நிரந்தர துப்புரவு பணியாளர்கள் 286 நபர்கள் மற்றும் தினக்கூலி துப்புரவு பணியாளர்கள் 143 ஆக 429 மாநகராட்சி பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். மேலும், சுவர்ண ஜெயந்தி நகர்ப்புற வேலைவாய்ப்பு திட்டக் குழு உறுப்பினர்கள் 520 நபர்களின் பட்டியல் சுவர்ண ஜெயந்தி நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்ட, திட்ட அலுவலர் அவர்களிடம் பெற்று தினக்கூலி அடிப்படையில் துப்புரவு பணிக்காக ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர். அரசாணை எண்.65ன்படி 1191 பணியாளர்களும் மாசுக்கட்டுப்பாட்டு வாரிய திடக்கழிவு மேலாண்மை வழிகாட்டுதலின்படி 967 பணியாளர்களும் மண்டலம்–11ல் துப்புரவுப் பணி மேற்கொள்ள தேவைப்படும் நிலையில் தற்போது சுவர்ண ஜெயந்தி நகர்ப்புற வேலைவாய்ப்பு திட்டக்குழு உறுப்பினர்கள் 520 நபர்களையும் சேர்த்து 949 பணியாளர்கள் மட்டுமே துப்புரவுப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். 20.04.2015 நாளிட்ட மன்றத் தீர்மானத்தில (மன்றத் தீர்மான எண்.136/2015) இந்த மண்டலத்தில் நியமிக்கப்பட்ட சுவர்ண ஜெயந்தி குழுவின் மூலம் பணியாற்றும் பணியாளர்கள் தற்போது பணிசெய்து கொண்டிருந்தால் அப்பணியாளர்கள் மூலம் தொடர்ந்து பணியினை மேற்கொள்ளவும் அவ்வாறு சுவர்ண ஜெயந்தி மூலம் நியமிக்கப்பட்ட பணியாளர்கள் இல்லையெனில், தனியார் நிறுவனம் மூலம் துப்புரவுப் பணியாளர்கள் பணி செய்ய ஒப்பந்தம் கோர பரிசீலிக்கலாம் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் மண்டலம்–11ல் பகுதி 32, 33 மற்றும் 34க்குட்பட்ட பகுதிகளில் 520 சுவர்ண ஜெயந்தி நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டக்குழு உறுப்பினர்களைக் கொண்டு 01.04.2015 முதல் துப்புரவு பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்ட காலம் 31.03.2016 உடன் முடிவடைகிறது. மண்டலம்–11ல் துப்புரவுப் பணி மேற்கொள்ள இந்த 520 குழு உறுப்பினர்களை பணியில் ஈடுபடுத்த நிர்வாக அனுமதி பெறப்பட்ட காலம் முடியும் நாளான 31.03.2016லிருந்து மேலும் 1 வருடத்திற்கு கால நீட்டிப்பு செய்ய வேண்டியது அவசியமானதாக உள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்களுக்கு திடக்கழிவு மேலாண்மைத்துறை கடிதம் எண்.S.W.M.N.o.A7/0497/2013–ல் நாள் ஒன்றுக்கு ரூ.295/– என கூலி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இம்மண்டலத்தில் சுவர்ண ஜெயந்தி நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டக்குழு உறுப்பினர்களை ஈடுபடுத்தி பணியில்

ஈடுபடுத்துவதற்கான ஒப்பந்தகாலம் 31.03.2016 உடன் முடிவடைகிறது. எனவே, 01.04.2016 முதல் மேலும் ஒரு வருட காலம் (366 நாட்கள்), 520 சுவர்ண ஜெயந்தி நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டக்குழு உறுப்பினர்களை பணியில் ஈடுபடுத்த வேண்டி உள்ளதால், திடக்கழிவு மேலாண்மைத்துறை நிர்ணயம் செய்துள்ள தினக்கூலியை அடிப்படையாகக் கொண்டு கீழ்க்கண்டவாறு உத்தேச மதிப்பீடு கணக்கிடப்படுகிறது.

1. மொத்த பணியாளர்கள் – 520 எண்ணிக்கைகள்
2. தினசரி ஊதியம் / நபர் – ரூ. 295/–
3. மொத்த பணி நாட்கள் – 365 நாட்கள்
4. மதிப்பீடு – ரூ. 520 x 295 x 365 = ரூ.5,59,91,000/–

எனவே,

அ) மண்டலம்–11, பகுதி –32, 33 மற்றும் 34ல் அமைந்துள்ள 143 முதல் 155 வரையிலான 13 வார்டுகளில் சுவர்ணஜெயந்தி நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டக்குழு உறுப்பினர்கள் 520 நபர்களை 01.04.2016 முதல் ஓராண்டிற்கு துப்புரவு பணியில் ஈடுபடுத்த நிலைக்குழு (சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி மூலமாக) மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டியும்,

ஆ) இதற்காகும் செலவுத் தொகையான ரூ.5,59,91,000/– (ரூபாய் ஐந்து கோடியே ஐம்பத்தொன்பது இலட்சத்து தொண்ணூற்றோரயிரம் மட்டும்)ஐ பிரிவு குறியீடு 40–41–03 மற்றும் கணக்கு குறியீடு 230–15–01–00 ன் கீழ் தனியார் மயம் துப்புரவு என்ற தலைப்பில் பட்டியை தீர்வு செய்ய அனுமதி வேண்டியும், சமர்ப்பிக்கப்படுகிறது.

மேற்கண்ட 'அ மற்றும் ஆ'' வரையிலான ஆகிய இரண்டு இனங்களுக்கு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

2016–2017ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை கூட்டம் நடைபெறுவதால், இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

****

நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ8/5028/2014

ஆணையர் அவர்களின் 25.02.2016 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.180/2016 **பொருள் எண்.34**

பெருநகர சென்னை மாநகராட்சி – நிலம் மற்றும் உடைமைத்துறை – மண்டலம்–14, வார்டு–185, கொட்டிவாக்கம், பாலவாக்கம் மற்றும் பெருங்குடி திட்டப்பணிக்காக மேல்நிலை மற்றும் கீழ்நிலை நீர்தேக்க தொட்டி அமைக்க சென்னை குடிநீர் வாரியம் நிலம் கோரியது– சென்னை மாநகராட்சியின் இசைவினை காஞ்சிபுர மாவட்ட ஆட்சியருக்கு தெரிவிப்பதற்கு மன்றத்தின் அனுமதி

சென்னை குடிநீர் வாரிய நிர்வாகப்பொறியாளரின் அவர்களின் 21.11.2014 நாளிட்ட கடிதத்தில் மண்டலம்–14, கோட்டம்–185–ல் பாலவாக்கம் பல்கலை நகர் கருணாநிதி தெரு திட்டப்பகுதிக்காக சென்னை குடிநீர் வாரியம் மூலம் மேல்நிலை, கீழ்நிலை நீர்தேக்க தொட்டி அமைக்க வார்டுகுழு பரிந்துரை பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டதாகவும், தற்போது சென்னை பல்கலை கழகத்தினர் பணிகள் மேற்கொள்ள ஆட்சேபணை தெரிவித்துள்ளதால், மாற்று இடமாக மரைக்கா நிறுவன பின்புறம் பூர்விகா ஷோரூம் கிழக்கு கடற்கரை சாலை அருகில் புல எண்.5 பரப்பளவு 46மீX38மீ இடத்தில் பணிகள் மேற்கொள்ள அனுமதிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீகரகற்று வாரிய மேலாண்மை இயக்குநரின் 08.01.2015 நாளிட்ட நேர்முக கடிதத்தில் (நேர்முக கடித ந.க.எண். C.M.W.S.S.B/CmCDM/C.E(c)111/SPL/2014) மேற்படி நிலத்தில் உடனடியாக பணிகள் மேற்கொள்ள மண்டல வார்டுகுழு பரிந்துரை பெற்று முன் நுழைவு அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொாள்ளப்பட்டது.

மேற்படி நிலத்தில் சென்னை குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் மூலம் பணிகளை மேற்கொள்ள மண்டல வார்டு குழு தீர்மான எண். 716, நாள் 10.12.2014 அன்று அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

06.02.2015 நாளிட்ட தனிவட்டாட்சியர்/நி.ம.உ.து–வின் ஆய்வறிக்கை குறிப்பில் மண்டலம்–14, கோட்டம்–185, சோழிங்கநல்லூர் வட்டம், பாலவாக்கம் கிராமம், புல எண். 25/2 மொத்த பரப்பளவு 1 ஹெக்டேர் 82.0 ஏர்ஸ் நிலத்தில் 0.18.5 ஏர்ஸ் குளம் என கிராம கணக்குகளில் தாக்கலாகியுள்ளதாகவும், இப்புலத்தில் சென்னை மாநகராட்சியினரால் திறந்த வெளி பூங்கா அமைக்கப்பட்டு பூங்காவின் தெற்கில் குளம் அமைக்கப்பட்டுள்ளது என தெவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த குளத்தில்தான் மேல்நிலை மற்றும் கீழ்நிலை நீர் தேக்க தொட்டி அமைக்க பணிகள் மேற்கொள்ள அனுமதி கோரப்பட்டுள்ளதாகவும், குளம் அமைந்துள்ள இடத்திற்கு வடக்கில் அமரா நிறுவன மின்மாற்றி (Transformer) அமைக்கப்பட்டுள்ளதாகவும், கிழக்கில் பூர்விகா ஷோரூம் மற்றும் மோட்டார் அறை அமைந்துள்ளதாகவும், தெற்கில் திறந்த வெளி பூங்கா மற்றும் மரைக்கா நிறுவனம் அமைந்துள்ளதாகவும், மேற்கில் அமரா நிறுவன கட்டிடம் அமைந்துள்ளதாகவும், மேற்படி குளத்தில் தற்போது 20 அடி ஆழத்தில் தண்ணீர் நிரப்பப்பட்டு குளத்தை சுற்றி 7 அடி அளவில் காம்பவுண்டு சுவர் எழுப்பப்பட்டுள்ளதாகவும், இந்த குளத்தில் மேல்நிலை மற்றும் கீழ்நிலை நீர்தேக்கத்தொட்டிகள் அமைக்கப்பட்டு தண்ணீர் தேக்கப்பட்டால் கட்டிடம் பாதிக்கப்படலாம் எனவும், மேலும் திறந்தவெளி பூங்காவின் சுற்றுச்சூழலும் அழகும் பாதிக்கப்படும் நிலை ஏற்படும் என்றும், திறந்தவெளி பூங்கா அமைக்கப்பட்டுள்ள நிலத்தை வேறு பயன்பாட்டிற்கு பயன்படுத்தக்கூடாது என உயர்நீதிமன்ற பேராணை எண்.3643/2002 நாள். 24.7.2008–ல் பிறப்பித்த தீப்பாணையில் குறிப்பிடப்பட்டு மேல்நிலை மற்றும் கீழ்நிலை நீர்தேக்க தொட்டிகள் அமைக்க மாற்று இடம் தேர்வு செய்யலாம் என ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி நிலமானது குளம் வகைப்பாடு கொண்டுள்ளதால் நிலமாற்றம் குறித்து காஞ்சிபுர மாவட்ட ஆட்சியரால் நிலமாற்றம் தொடர்பாக பிரேரணை அனுப்பும் பட்சத்தில் இப்பொருள் குறித்து பரிசீலிக்க இயலும் என சென்னை குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்று வாரிய செயற்பொறியாளரிடம் மாவட்ட வருவாய் அலுவலர்/நி.ம.உ.து. அவர்களால் நேரடியாக தெரிவிக்கப்பட்டது.

27.01.2016 நாளிட்ட காஞ்சிபுரம் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் கடிதத்தில் (ந.க.8285/2015/எண்.2, நாள் 27.01.2016.) காஞ்சிபுரம் மாவட்டம், சோழிங்கநல்லூர் வட்டம்,

பாலவாக்கம் கிராமம் புல எண். 25/2, குளம் வகைப்பாட்டில் 0.18.5 ஏர்ஸ் வீஸ்தீரணமுள்ள நிலம் சென்னை மாநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரேற்று வாரியத்திற்கு முன்நுழைவு அனுமதி வழங்கும் பொருட்டு உரிய முன்மொழிவினை கூடுதல் தலைமைச் செயலர் மற்றும் நில நிர்வாக ஆணையர் அவர்கள் மூலம் அரசுச் செயலர் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டதாகவும், எனவே, மேற்படி புலத்தில் சென்னை மாநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீகரற்று வாரியத்திற்கு முன்நுழைவு அனுமதி வழங்குவதற்கு மன்றத்தீர்மானம் பெற்று அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இந்நிலையில், சென்னை மாநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீகரற்று வாரியத்திடமிருந்து பெறப்பட்ட வரைப்படத்தில் குளம் உள்ள இடத்தையும் தற்போது மேல்நிலை மற்றும் கீழ்நிலை நீர்தேக்க தொட்டி அமைக்கப்படவுள்ள இடத்தையும் பரப்பளவுடன் வரைப்படத்துடன் இத்துறைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

எனவே, மண்டலம்–14, கோட்டம்–185, காஞ்சிபுர மாவட்டம், சோழிங்கநல்லூர் வட்டம், பாலவாக்கம் கிராமம் புல எண்.25/2–ல் குளம் வகைப்பாட்டில் 0.18.5 ஏர்ஸ் வீஸ்தீரணத்தில் தற்போது குடிநீர் வாரியத்தின் வரைப்படத்தில் கோரியுள்ள 3 மனை 374 சதுரடி பரப்பளவு நிலத்தில் சென்னை குடிநீர் (ம) கழிவு நீரகற்று வாரியத்தின் மூலம் மேல்நிலை மற்றும் கீழ்நிலை நீர் தேக்க தொட்டி அமைப்பதற்கு சென்னை மாநகராட்சியின் இசைவினை காஞ்சிபுர மாவட்ட ஆட்சியருக்கு தெரிவிப்பதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

2016–2017ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை கூட்டம் நடைபெறுவதால், இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

ம.அ.13.ந.க.எண். சி3/502/2016

ஆணையர் அவர்களின் 25.02.2016 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.181/2016 **பொருள் எண்.35**

மண்டலம்–13 – பகுதி – 40 (அ) , வார்டு – 174–ல் சைதாப்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் வேளச்சேரி பிரதான சாலையில் (கன்னிகாபுரம் எதிரில்) கட்டப்பட்ட பல்நோக்கு மைய கட்டிடத்தில் பொது மக்களின் நலன் கருதி நியாயவிலைக் கடை அமைத்திட டி.யு.சி.எஸ் நிறுவனத்திற்கு வாடகையின்றி ஒதுக்கீடு செய்ய மன்றத்தின் அனுமதி.

மண்டலம்–13 – பகுதி – 40 (அ) , வார்டு – 174–ல் சைதாப்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் வேளச்சேரி பிரதான சாலையில் (கன்னிகாபுரம் எதிரில்) கட்டப்பட்ட பல்நோக்கு மைய கட்டிடத்தில் பொது மக்களின் நலன் கருதி நியாயவிலைக் கடை அமைத்திட மேலாண்மை இயக்குநர், டி.யு.சி.எஸ் அவர்கள் 08.01.2016 நாளிட்ட கடிதத்தில் (கடித எண்.ந.க.எண்.1308/2014 பி2) கோரியுள்ளார்.

வேளச்சேரி பிரதான சாலையில் (கன்னிகாபுரம் எதிரில்) கட்டப்பட்ட பல்நோக்கு மைய கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 30.01.2016 அன்று திறந்து வைக்கப்பட்டது. அந்த பல்நோக்கு மைய கட்டிடத்தின் தரை தளத்தில் 450 சதுர அடி பரப்பளவில் நியாயவிலைக் கடைக்கான வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது. எனவே, மேலாண்மை இயக்குநர், டி.யு.சி.எஸ் அவர்களது கோரிக்கையின்படி பல்நோக்கு மைய கட்டிடத்தில் நியாயவிலை கடைகளுக்காக ஒதுக்கீடு செய்ய 13வது வார்டு குழுவின் அனுமதி பெறப்பட்டுள்ளது (தீர்மான எண்.83, நாள்.27.01.2016). மேலும், மன்ற தீர்மான எண்.573/2015 நாள்.30.09.2015ல் பாராளுமன்ற, சட்டமன்ற மற்றும் மாமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியில் கட்டப்படுகின்ற கட்டிடங்களில் நியாயவிலை கடைகளுக்கு வாடகையின்றி ஒதுக்கீடு செய்ய அனுமதி அளித்துள்ளது.

மேற்குறிப்பிட்ட விவரப்படி, வார்டு–174ல் சைதாப்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் வேளச்சேரி பிரதான சாலையில் (கன்னிகாபுரம் எதிரில்) கட்டப்பட்டுள்ள பல்நோக்கு மைய கட்டிடத்தின் தரை தளத்தில் 450 சதுர அடி பரப்பளவு கொண்ட கட்டிடத்தில் பொது மக்களின் நலன் கருதி நியாயவிலைக்கடை அமைத்திட டி.யு.சி.எஸ் நிறுவனத்திற்கு வாடகையின்றி ஒதுக்கீடு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

2016–2017ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை கூட்டம் நடைபெறுவதால், இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

ம.அ.3.வ.து.ந.க.எண். ஆர்1/851/2016
ஆணையர் அவர்களின் 25.02.2016 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.182/2016 **பொருள் எண்.36**

மண்டலம்–3 – பகுதி – 7 , வார்டு – 26ல் மாதவரம் பெருநகர வளர்ச்சிக் குழும வளாக கனரக வாகனங்கள் நிறுத்துமிடம் – கனரக வாகனங்கள் நிறுத்தக் கட்டணம் வசூல் செய்ய தகுந்த ஒப்பந்ததாரர் மூலம் ஏலம் கோருவதற்கு மன்றத்தின் அனுமதி

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்.3, பகுதி–7, வார்டு–26, ஜி.என்.டி சாலை அருகில் உள்ள சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும வளாக கனரக வாகனங்கள் நிறுத்துமிடத்தில், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தால் திறந்தவெளி இடமாக ஒதுக்கப்பட்ட நிலம், மழைநீர் வடிகால்வாய்கள், தெரு விளக்குகள் மற்றும் பொதுக்கழிப்பிடம் போன்றவை தானப்பத்திரம் எண்.1265/1999, நாள்.01.03.1999ல் அப்போதைய மாதவரம் நகராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டு, தற்சமயம் பெருநகர சென்னை மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் உள்ளது.

மேற்படி வளாகத்தினை மண்டல அலுவலர்–3 அவர்கள் நேரடியாக 24.09.2015 அன்று கள ஆய்வு செய்தததின் அடிப்படையில், அங்கு வந்து செல்லும் வாகனங்களுக்கு கட்டணம் வசூலிக்கும் பட்சத்தில் அந்த நிதியானது பெருநகர சென்னை மாநகராட்சியின் வளர்ச்சிப் பணிகள் செய்ய ஏதுவாக இருக்கும் என கருதப்படுகிறது. இவ்வளாகத்திற்கு நாள் ஒன்றுக்கு பிற மாநிலங்களிலிருந்தும், நம் மாநிலத்தின் பிற பகுதிகளிலிருந்தும் தோராயமாக டிரைலர் வண்டிகள் 100க்கும் அதிகமாகவும், கனரக வாகனங்கள் 300க்கும் அதிகமாகவும் வந்து செல்கின்றன. கனரக வாகனம் நாள் ஒன்றுக்கு தோராயக் கட்டணமாக ரூ.50/–ம், டிரைலர் வாகனம் நாள் ஒன்றுக்கு தோராயக் கட்டணமாக ரூ.100/–ம் வசூலிக்கலாம். இதன்படி, ஒரு மாதத்திற்கு கனரக வாகனக் கட்டணம் 300 எண்ணிக்கை 300 ஓ ரூ.50=ரூ.15,000மும், மாதத்திற்கு ரூ.4,50,000/–மும் வருடத்திற்கு ரூ.54,00,000/–மும், டிரைலர் வாகனக் கட்டணம் நாள் ஒன்றுக்கு 100 எண்ணிக்கை 100 ஓ ரூ.100=ரூ.10,000/–மும் மாதத்திற்கு ரூ.3,00,000/–மும், வருடத்திற்கு ரூ.36,00,000/– ஆக மொத்தம் தோராயமாக ஒரு வருடத்திற்கு ரூ.90,00,000/– பெருநகர சென்னை மாநகராட்சிக்கு வருவாய் ஏற்பட வாய்ப்பு உள்ளது. அதன்படி கனரக வாகனங்களுக்கு நாள் ஒன்றுக்கு தோராயக் கட்டணம் ரூ.50/–ம் டிரைலர் வாகனங்களுக்கு ரூ.100/–ம் நிர்ணயம் செய்யலாம்.

3வது மண்டல வார்டு குழு தனது தீர்மான எண்.108, நாள்.16.10.2015ல் இதற்கு பரிந்துரை அளித்துள்ளது.

எனவே, மண்டலம்–3ல் உள்ள சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும கனரக வாகன வளாகத்தில் உள்ள வாகனம் நிறுத்தும் இடத்திற்கு மேற்கூறிய வாகன நிறுத்தக் கட்டணம், கனரக வாகனங்களுக்கு நாள் ஒன்றுக்கு தோராயக் கட்டணம் ரூ.50/–ம், டிரைலர் வாகனங்களுக்கு ரூ.100/–ம் நிர்ணயம் செய்யவும், அதனை வசூல் செய்யும் பணிக்கு தகுந்த ஒப்பந்ததாரர் மூலம் ஏலம் கோருவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

2016–2017ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை கூட்டம் நடைபெறுவதால், இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

நி.மஉ.து.ந.க.எண்.எல்இ–11/3476/2015
ஆணையர் அவர்களின் 25.02.2016 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.183/2016 **பொருள் எண்.37**

நிலம் மற்றும் உடைமைத்துறை – செயலாக்கம் ஆணை PDGF குழுமம் மூலம் 14.08.2015 நடத்தப்பட்டது– சொத்து மேலாண்மை நிறுவனம் அமைப்பதற்கு அனுமதி

14.08.2015 அன்று மாலை 4.00 மணியளவில் அரசு முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களால் செயலாக்க கூட்டம் நடத்தப்பட்டது. மேற்படி கூட்டத்தில் சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான வணிக கட்டிடங்களில் இருந்து பெறப்படும் வருமானத்தை அதிகரிக்கும் பொருட்டு ஆய்வுக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

சென்னை மாநகராட்சியின் கட்டுபாட்டின் கீழ் வணிக நோக்கத்துடன் செயல்பட்டு வரும் பழைய கட்டிடங்களின் தற்போதைய நிலையிலிருந்து மறுமேம்பாடு செய்வது தொடர்பாக TNSUDP-ன் தொழில் நுட்ப உதவியுடன் எவ்வாறான வகையில் வருவாய் அதிகரிக்கலாம் என்பதின் அறிக்கையை (Feasibility Report) பெற்று அதனடிப்படையில் சென்னை மாநகரட்சியின் கீழ் வணிக நோக்கத்துடன் செயல்பட்டு வரும் அனைத்து சொத்து மற்றும் கட்டிடங்களின் விவரங்களை கண்டறிந்து மறுமேம்பாடு (Redevelopment) செய்யலாம் என்பது குறித்து சொத்து மேலாண்மை நிறுவனம் அமைக்கவும் அதன் மூலம் அனைத்து வணிக சொத்துக்களின் வருவாயை அதிகரிக்கவும், வணிக மாதிரி அமைப்புக்களை நிறுவவும் சாத்தியங்களை ஆராய்ந்து அறிய கோரப்பட்டது.

சென்னை மாநகராட்சியின் முடிவின் படியும் IBRD வழிகாட்டுதலின் படியும் TNSUDP-ன் தொழில் நுட்ப உதவியுடன், தற்போதுள்ள வணிக கட்டிடங்கள் மற்றும் அனைத்து சொத்துக்களின் வருவாயை அதிகரிக்க நிபுணர்களை நியமிக்கலாம்.

எனவே, சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான வணிக கட்டிடங்கள் மற்றும் அனைத்து சொத்துக்களின் வருமானத்தை மேம்படுத்த சொத்து மேலாண்மை நிறுவனம் அமைப்பதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

2016–2017ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை கூட்டம் நடைபெறுவதால், இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

பொ.து.ந.க.எண்.ஈ1/28550/2015

ஆணையர்அவர்களின் 24.02.2016 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.184/2016 **பொருள் எண்.38**

உதவி கணக்கு அலுவலர் பதவிக்கான தெரிவு பட்டியலுக்கு அனுமதி

பெருநகர சென்னை மாநகராட்சியில் உதவி கணக்கு அலுவலர் பதவிக்கான தெரிவுப்பட்டியல் தயாரிக்க கீழ்க்காண் விவரங்கள் பின்வருமாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

1	பதவி உயர்வுக்கான பதவியின் பெயர்	உதவி கணக்கு அலுவலர்
2	மைய நாள்	15.05.2015
3	ஊதிய விகிதம்	ரூ.15600–39100 + தர ஊதியம் 5400
4	காலிப்பணியிட மதிப்பீடு (Estimate of vacancies)	1) அனுமதிக்கப்பட்ட பணியிடம் – 29 (அ) தற்காலிக பணியிடம் – – (ஆ) நிரந்தர பணியிடம் – 29 2) பட்டியல் ஆண்டில் பணியிலிருந்து ஓய்வு பெறுவதால் ஏற்படும் காலிப்பணியிடம் – – 3)மைய நாளன்று உள்ள காலிப்பணியிடம் – 16 4) 5 சதவீதம் விடுப்பு காலிப்பணியிடம் (G.O.Ms.No.) 103 நாள்.09.10.2014) – 5 5) பட்டியல் ஆண்டில் பதவி உயர்வினால் ஏற்படும் காலிப்பணியிடம் – 6) பட்டியல் ஆண்டில் புதியதாக தோற்றுவிக்கப்படும் பணியிடங்கள் – – –––– 21 ––––
5	வளர் நிலை பதவியின் பெயர் மற்றும் தகுதிகள்	நிர்வாக அலுவலர் (அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைகழகத்தால் வழங்கப்பட்ட பட்டம். (ஆ)கண்காணிப்பாளராக பதவியில் மூன்றாண்டு காலம் தகுதி பணி முடித்தவராக இருக்க வேண்டும். (இ) சார்நிலை அலுவலருக்கான கணக்கு தேர்வு பாகம்–I மற்றும் II மற்றும் மாவட்ட அலுவலக நடைமுறை நூல் தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.
6	கடந்த ஆண்டுக்கான தெரிவுப்பட்டியல் முழுமையாக பயன்படுத்தப்பட்டதா ?	கடந்த ஆண்டு உதவி கணக்கு அலுவலர் பதவிக்கு தகுதியான 2 நபர்களுக்கு, உதவி கணக்கு அலுவலர் பதவி உயர்வு வழங்கப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சி பொது பணி விதிகள் –1970ன்படி உதவி கணக்கு அலுவலர் பதவிக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள ஊட்டப்பதவி பட்டதாரி கண்காணிப்பாளர் (Superintendent) (தற்போது நிர்வாக அலுவலர்) ஊட்டப்பதவியில் மூன்றாண்டு பணி நிறைவு செய்திருக்க வேண்டும் என்பதாகும். ஆனால் உதவி கணக்கு அலுவலர் பதவியில் ஏற்படும் பல காலிப்பணியிடங்களை மூன்றாண்டு பணி நிறைவு செய்த பட்டதாரி நிர்வாக அலுவலர்களைக் கொண்டு பதவி உயர்வு மூலம் நிரப்ப தகுதியான நபர்கள் இல்லையென்பதால் உதவி கணக்கு அலுவலர் பதவிக்கு ஒப்பளிக்கப்பட்டுள்ள 29 பணியிடங்களில் 12 கணக்கு அலுவலர்கள் அயற்பணி அடிப்படையில் பணிபுரிந்து வருகின்றனர். 1 உதவி கணக்கு அலுவலர் மட்டும் சென்னை மாநகராட்சியை சார்ந்தவர். மீதமுள்ள பணியிடங்களில் சென்னை மாநகராட்சியை சார்ந்த நிர்வாக அலுவலர்கள் உதவி கணக்கு அலுவலர்களாக கூடுதல் பொறுப்பேற்றுள்ளனர். தற்போது 16 காலிப்பணியிடங்கள் இன்றைய தேதியில் உள்ளன.

மேற்கூறியவைகளின் அடிப்படையில் ஒட்டு மொத்த அலுவலர்களின் நலனைக் கருதி உதவி கணக்கு அலுவலர் பதவிக்கான பணிக்கால தகுதியில் தற்போதுள்ள பணி விதிகளில்

திருத்தங்கள் செய்வதற்கு தீர்மான எண்.403/2010, நாள் 31.08.2010ன்படி மாநகராட்சி மன்றம் அனுமதி அளித்து தீர்மானம் நிறைவேற்றி உள்ளது. அதன்படி நடவடிக்கை மேற்கொள்ள அரசுக்கு இவ்வலுவலக கடிதம் 31.08.2010ல் அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

பதவியின் பெயர்/ சம்பள ஏற்ற முறை	பணி நியமன முறை	தகுதி
உதவி கணக்கு அலுவலர்	பதவி உயர்வின் மூலம் (அ) வேற்றுப்பணி மூலம் பணி நியமனம் (அ) நேரடி நியமனம்	(1) அங்கீகாரம் பெற்றதொரு பல்கலைக் கழகத்திலிருந்து பெற்ற பட்டம். (2) சார்நிலை அலுவலர்களுக்கான கணக்குத் தேர்வு – பாகம் 1 மற்றும் 2 அல்லது அவற்றிற்கிணையாக அரசால் குறிப்பிட்டுள்ள கணக்குத் தேர்வுகளில் தேர்ச்சி மற்றும் (3) சென்னை மாநகராட்சியில் மன்றத்துறையையும் சேர்த்து வகுப்பு–IIIல் கண்காணிப்பாளராகவோ அல்லது தலைமை எழுத்தராகவோ, ஓராண்டிற்குக் குறையாமல் பணியாற்றியிருக்க வேண்டும். (4) உள்ளாட்சி நிதிக் கணக்குகளில் மாவட்ட ஆய்வாளராகவோ (அ) உதவி கருவூல அலுவலகத்தில் இளநிலை கணக்கு அலுவலர் அல்லது சார்நிலை கருவூல அலுவலராகவோ (நிலை–1) அல்லது கருவூலம் மற்றும் கணக்குகள் சார்நிலைப் பணியில் கணக்கராகவோ (நிலை–1) ஐந்து ஆண்டுகளுக்கு குறையாமல் பணியாற்றியிருக்க வேண்டும். Chartered Accountant or Cost and Works Accountant (Final)ல் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

மன்றத் தீர்மான எண்.403/2010,ல் சென்னை மாநகராட்சியில் மன்றத்துறையையும் சேர்த்து வகுப்பு–IIIல் கண்காணிப்பாளராகவோ அல்லது தலைமை எழுத்தராகவோ, ஓராண்டிற்குக் குறையாமல் பணியாற்றியிருக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளதில் “கண்காணிப்பாளர்” என்று குறிப்பிடப்பட்டுள்ள பதவி தற்போது செயல்படும் “நிர்வாக அலுவலர்” என்ற பதவி ஆகும்.

பட்டியல்–1

சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் நிர்வாக அலுவலர்களின் பணி மூப்பு பட்டியல்

வ. எண்	பெயர்	பட்டதாரி /பட்டதாரி அல்லாதவர்	நிர்வாக அலுவலர் பதவியில் பணியில் சேர்ந்த நாள்	குறிப்பு
1	எச்.மஹமூதாபி	பட்டதாரி அல்லாதவர்	2009	பட்டதாரி அல்லாதவர் என்பதால் இப்பட்டியலில் சேர்க்க தகுதி பெறவில்லை.
2	கோகிலா	பட்டதாரி அல்லாதவர்	2011	பட்டதாரி அல்லாதவர் என்பதால் இப்பட்டியலில் சேர்க்க தகுதி பெறவில்லை.
3	என்.மைதிலி	பட்டதாரி அல்லாதவர்	2011	பட்டதாரி அல்லாதவர் என்பதால் இப்பட்டியலில் சேர்க்க தகுதி பெறவில்லை.
4	எஸ்.கௌரி	பட்டதாரி அல்லாதவர்	2012	பட்டதாரி அல்லாதவர் என்பதால் இப்பட்டியலில் சேர்க்க தகுதி பெறவில்லை.

5	எஸ்.கோதைநாயகி	பட்டதாரி அல்லாதவர்	2013	பட்டதாரி அல்லாதவர் என்பதால் இப்பட்டியலில் சேர்க்க தகுதி பெறவில்லை.
6	என்.ஏ.ரமாதேவி	பட்டதாரி அல்லாதவர்	2013	பட்டதாரி அல்லாதவர் என்பதால் இப்பட்டியலில் சேர்க்க தகுதி பெறவில்லை.
7	ஆர்.அன்பரசு	**பட்டதாரி**	25.07.2013 மு.ப.	**தகுதி பெற்றுள்ளார்**
8	எம்.சந்திரபுஷ்பம்	பட்டதாரி அல்லாதவர்	2013	பட்டதாரி அல்லாதவர் என்பதால் இப்பட்டியலில் சேர்க்க தகுதி பெறவில்லை.
9	எல்.வெண்மதி	**பட்டதாரி**	23.10.2013	**தகுதி பெற்றுள்ளார்**
10	பி.எச்.சங்கர்	**பட்டதாரி**	30.06.2014	மன்ற தீர்மானம் எண்.403/2010–ன்படி ஓராண்டிற்கு குறையாமல் கண்காணிப்பாளராக (நிர்வாக அலுவலராக) பணிபுரியவில்லை என்பதால் இப்பட்டியலில் சேர்க்க தகுதி பெறவில்லை.
11	வி.சித்ரா	**பட்டதாரி**	30.06.2014	மன்ற தீர்மானம் எண்.403/2010–ன்படி ஓராண்டிற்கு குறையாமல் கண்காணிப்பாளராக (நிர்வாக அலுவலராக) பணிபுரியவில்லை என்பதால் இப்பட்டியலில் சேர்க்க தகுதி பெறவில்லை.
12	வி.உஷா	பட்டதாரி அல்லாதவர்	2014	பட்டதாரி அல்லாதவர் என்பதால் இப்பட்டியலில் சேர்க்க தகுதி பெறவில்லை.
13	எம்.ஜெ.வசந்தி	**பட்டதாரி**	30.06.2014	மன்ற தீர்மானம் எண்.403/2010–ன்படி ஓராண்டிற்கு குறையாமல் கண்காணிப்பாளராக (நிர்வாக அலுவலராக) பணிபுரியவில்லை என்பதால் இப்பட்டியலில் சேர்க்க தகுதி பெறவில்லை.
14	ஜி.ரேணுகா	**பட்டதாரி**	14.08.2014	மன்ற தீர்மானம் எண்.403/2010–ன்படி ஓராண்டிற்கு குறையாமல் கண்காணிப்பாளராக (நிர்வாக அலுவலராக) பணிபுரியவில்லை என்பதால் இப்பட்டியலில் சேர்க்க தகுதி பெறவில்லை.
15	டி.கே.தாமரை செல்வன்	**பட்டதாரி**	20.11.2014	மன்ற தீர்மானம் எண்.403/2010–ன்படி ஓராண்டிற்கு குறையாமல் கண்காணிப்பாளராக (நிர்வாக அலுவலராக) பணிபுரியவில்லை என்பதால் இப்பட்டியலில் சேர்க்க தகுதி பெறவில்லை.

16	ச.கணேசன்	**பட்டதாரி**	10.12.2014	மன்ற தீர்மானம் எண்.403/2010–ன்படி ஓராண்டிற்கு குறையாமல் கண்காணிப்பாளராக (நிர்வாக அலுவலராக) பணிபுரியவில்லை என்பதால் இப்பட்டியலில் சேர்க்க தகுதி பெறவில்லை.
17	ஆர்.முனீர் அகமது	பட்டதாரி அல்லாதவர்	2015	பட்டதாரி அல்லாதவர் என்பதால் இப்பட்டியலில் சேர்க்க தகுதி பெறவில்லை.
18	எஸ்.தமிழ் செல்வி	**பட்டதாரி**	10.09.2015	உதவி கணக்கு அலுவலர் பதவி உயர்வுக்கு மைய நாளான 15.05.2015 அன்று தனியர் நிர்வாக அலுவலர் பதவியில் இல்லை. அதனால் பட்டியலில் சேர்க்க தகுதி பெறவில்லை.
19	விஜயலட்சுமி	பட்டதாரி அல்லாதவர்		பட்டதாரி அல்லாதவர் என்பதால் இப்பட்டியலில் சேர்க்க தகுதி பெறவில்லை. மற்றும் உதவி கணக்கு அலுவலர் பதவி உயர்வுக்கு மைய நாளான 15.05.2015 அன்று தனியர் நிர்வாக அலுவலர் பதவியில் இல்லை. அதனால் பட்டியலில் சேர்க்க தகுதி பெறவில்லை.
20	ஜெ.சுமதி	**பட்டதாரி**	18.01.2016	உதவி கணக்கு அலுவலர் பதவி உயர்வுக்கு மைய நாளான 15.05.2015 அன்று தனியர் நிர்வாக அலுவலர் பதவியில் இல்லை. அதனால் பட்டியலில் சேர்க்க தகுதி பெறவில்லை.

மேற்கண்ட சூழலில் உதவி கணக்கு அலுவலர் பதவிக்கு தெரிவுப்பட்டியல் தயாரிக்க 14.01.2015 நாளிட்ட சுற்றறிக்கையின்படி, கண்காணிப்பாளர் பதவியில் 3 ஆண்டுகள் பணிமுடித்து நிர்வாக அலுவலராக பணிபுரியும் நபர்களின் விவரங்கள் மட்டும் பெறப்பட்டுள்ளது.

15.05.2015 அன்று மைய நாளாகக் கொண்டு துறை/மண்டலங்களிலிருந்து பெறப்பட்ட பரிந்துரையின் அடிப்படையில் பணிமூப்பின்படி நிர்வாக அலுவலர்களின் விவரம் பின்வருமாறு :–

பட்டியல்–2

வ. எண்.	**பெயர் மற்றும் துறை/மண்டலம் (திருவாளர்கள்)**	**நிர்வாக அலுவலர் பதவியில் பணியில் சேர்ந்த நாள்**	**மையநாளான 15.5.2015ல் நிர்வாக அலுவலர் பதவியில் பணி முடித்த காலம்**
1	ர.அன்பரசு, நிர்வாக அலுவலர், மண்டலம்–15	25.07.2013	**1 வருடம் 8 மாதம்** (மன்ற தீர்மானம் எண்.403/2010–ன்படி உதவி கணக்கு அலுவலர் பதவிக்கு தகுதி பெறுகிறார்)
2	எல்.வெண்மதி, நிர்வாக அலுவலர், மண்டலம்–2	23.10.2013	**1 வருடம் 6 மாதம்** (மன்ற தீர்மானம் எண்.403/2010–ன்படி உதவி கணக்கு அலுவலர் பதவிக்கு தகுதி பெறுகிறார்)
3	பி.எச்.சங்கர், நிர்வாக அலுவலர், தெற்கு வட்டார அலுவலகம் .	30.06.2014	**10 மாதம்** (மன்ற தீர்மானம் எண்.403/2010–ன்படி உதவி கணக்கு அலுவலர் பதவிக்கு தகுதி பெறவில்லை)
4	வி.சித்ரா, நிர்வாக அலுவலர், வடக்கு வட்டார	30.06.2014	**10 மாதம்** (மன்ற தீர்மானம் எண்.403/2010–ன்படி உதவி கணக்கு அலுவலர் பதவிக்கு தகுதி

	அலுவலகம்.		பெறவில்லை)
5	எம்.ஜே.வசந்தி, நிர்வாகஅலுவலர், மண்டலம்–8	30.06.2014	**10 மாதம்** (மன்ற தீர்மானம் எண்.403/2010–ன்படி உதவி கணக்கு அலுவலர் பதவிக்கு தகுதி பெறவில்லை)
6	ஜி.ரேணுகா, நிர்வாக அலுவலர், மண்டலம்–5	14.08.2014	**8 மாதம் 18 நாட்கள்** (மன்ற தீர்மானம் எண்.403/2010–ன்படி உதவி கணக்கு அலுவலர் பதவிக்கு தகுதி பெறவில்லை)
7	தாமரைச்செல்வன், நிர்வாக அலுவலர், தொற்று நோய் மருத்துவ மனை.	20.11.2014	**5 மாதம் 10 நாட்கள்** (மன்ற தீர்மானம் எண்.403/2010–ன்படி உதவி கணக்கு அலுவலர் பதவிக்கு தகுதி பெறவில்லை)
8	ச.கணேசன், நிர்வாக அலுவலர், மண்டலம்–14.	10.12.2014	**5 மாதம்** (மன்ற தீர்மானம் எண்.403/2010–ன்படி உதவி கணக்கு அலுவலர் பதவிக்கு தகுதி பெறவில்லை)

பட்டியல்–1ல் வரிசை எண்.1 முதல் 6 வரையும், வரிசை எண்.8, 12, 17–ல் கண்டுள்ளவர்களை பட்டதாரி அல்லாதவர் என்பதாலும், வரிசை எண்.10, 11, 13, 14, 15, 16, 18–ல் கண்டுள்ளவர்கள் தற்போதைய நாளன்று ஓராண்டிற்கு மேலாக நிர்வாக அலுவலராக பணிபுரிந்திருப்பினும் மன்ற தீர்மானம் எண்.403/2010–ன்படி தெரிவித்துள்ளவாறு ஓராண்டிற்கு குறையாமல் பணிபுரிந்திருக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளதால், 15.05.2015 மைய நாளன்று ஓராண்டிற்கு குறையாமல் கண்காணிப்பாளராக (நிர்வாக அலுவலராக) பணிபுரியவில்லை என்பதாலும், வரிசை எண்.19 மற்றும் 20 ல் கண்டுள்ளவர்களை உதவி கணக்கு அலுவலர் பதவிக்கு மைய நாளான 15.05.2015க்கு பின்பு (18.01.2016 மற்றும் 10.09.2015) நிர்வாக அலுவலர்களாக பதவி உயர்வு பெற்றுள்ளமையாலும், விதிகளில் குறிப்பிட்ட கல்வித்தகுதியின் அடிப்படையிலும், மன்றத்தீர்மானம் எண்.403/2010 நாள் 31.08.2010–ன் படியும், தனியர்களின் பெயர்களை உதவி கணக்கு அலுவலர் தெரிவுப்பட்டியலுக்கு பரிசீலிக்க இயலாத நிலை உள்ளது.

பட்டியல்–2ல் வரிசை எண்.1 மற்றும் 2ல் கண்டுள்ள நபர்கள் (திரு ஆர். அன்பரசு, மற்றும் எல்.வெண்மதி) விதிகளில் குறிப்பிட்டுள்ள கல்வித்தகுதியின் அடிப்படையிலும், மன்றத்தீர்மானம் எண்.403/2010 நாள் 31.08.2010–ன்படி ஓராண்டிற்கு குறையாமல் பணிபுரிந்துள்ளதின் அடிப்படையிலும் தற்போது தயாரிக்கப்பட உள்ள உதவி கணக்கு அலுவலர் பதவிக்கான தெரிவுப்பட்டியலில் இடம் பெற தகுதியுள்ளவர்களாக உள்ளனர்.

05.01.2016 நாளிட்ட பட்டதாரி அமைச்சு பணி அலுவலர்களின் மனுவில், 22.12.2015 நாளிட்ட அரசு கடிதத்தில் சென்னை மாநகராட்சி பொதுப்பணி விதிகள்1970 விதி 3ன்படி பட்டியல் வகுப்பு –II, வகை2ல் வரும் உதவி கணக்கு அலுவலர் பதவி உயர்வுக்கு வகுக்கப்பட்ட விதிகள் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது எனவும்,

1) "சென்னை மாநகராட்சியின் மன்றத்துறையையும் சேர்த்து வகுப்பு–3ல் கண்காணிப்பாளராகவோ அல்லது தலைமை எழுத்தராகவோ மூன்றாண்டுகளுக்கு குறையாமல் பணியாற்றியிருக்க வேண்டும், மற்றும்
2) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தால் பட்டம் பெற்றிருக்க வேண்டும் மற்றும்
3) சார்நிலை அலுவலருக்கான கணக்குத்தேர்வு பாகம் I மற்றும் II தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், சென்னை மாநகராட்சி சட்டம் 1919, பிரிவு 85(3) (b)ன்படி, உதவி கணக்கு அலுவலர் பதவி உயர்வு வழங்குவது குறித்து சென்னை மாநகராட்சி அளவிலேயே முடிவெடுத்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப் பணிக்கப்பட்டுள்ளதாக கடிதத்தில், தெளிவுரை வழங்கப்பட்டதன் அடிப்படையில், சென்னை மாநகராட்சியில் கண்காணிப்பாளர் பதவியில் மேற்காண் தகுதிகள் இருந்தும் உதவி கணக்கு அலுவலருக்கான காலிப்பணியிடங்கள் நிரப்பப்படாததன் காரணமாக, பல

வருடங்களாக பதவி உயர்வு இன்றி மன உளைச்சலுடன் பணிபுரிந்து வரும் எங்களுக்கு மே–2015 மைய நாளிட்ட உதவி கணக்கு அலுவலருக்கான தேர்ந்த பட்டியலை தயார் செய்து பதவி உயர்வு வழங்கி உதவிடுமாறு கோரப்பட்டுள்ளது.

28.01.2016 நாளிட்ட பட்டதாரி கண்காணிப்பாளர்களின் மனுவில், சென்னை மாநகராட்சி பொது விதிகள் 1970–ல் உதவி கணக்கு அலுவலர் பதவிக்கான நியமன முறையில், கண்காணிப்பாளர் பதவியில் 3 ஆண்டுகள் குறையாமல் பணியாற்றியிருக்க வேண்டுமென விதிகள் உள்ளனவே தவிர, நிர்வாக அலுவலராக பணிபுரிய வேண்டுமென விதிகளில் வழிவகையில்லை. இந்நிலையில், நிர்வாக அலுவலராக பணிபுரியும் நபர்களுக்கு மட்டும் பதவி உயர்வு வழங்குவது என்பது சென்னை மாநகராட்சி பொது விதிகள் 1970–க்கு புறம்பானதாகும் என்றும், எனவே கண்காணிப்பாளர் பதவியில் 3 ஆண்டுகள் பணிமுடித்து நிர்வாக அலுவலர்களின் பெயர்களை மட்டும் தெரிவுப்பட்டியலில் எடுத்துக்கொள்ளாமல், கண்காணிப்பாளர் பதவியில் 3 ஆண்டுகள் பணிமுடித்த மற்ற பட்டதாரி கண்காணிப்பாளர் பெயர்களையும் மூப்பு அடிப்படையில் பரிசீலிக்குமாறும் கோரப்பட்டுள்ளது.

இதன் தொடர்பாக சமர்ப்பிக்கப்படுவது யாதெனில், 1970 ஆண்டில் உருவாக்கப்பட்ட பணி விதிகளில் “கண்காணிப்பாளர் ” / தலைமை எழுத்தர் பதவி “உதவி கணக்கு அலுவலர்” பதவிக்கு ஊட்டப்பதவியாக குறிப்பிடப்பட்டுள்ளது. தற்போது செயல்பட்டு வரும் “நிர்வாக அலுவலர் ” என்ற பதவி கடந்த காலங்களில் “கண்காணிப்பாளர்” என்ற பதவியாக செயல்பட்டு வந்துள்ளது. அதற்கு பின்னரே “பிரிவு மேலாளர்” என்ற பதவி தற்போது “கண்காணிப்பாளர்” என பெயர் மாற்றம் செய்யப்பட்டு செயல்பட்டு வருகிறது. மேற்காண் உதவி கணக்கு அலுவலர் பதவிக்கு 1970 ஆம் ஆண்டில் பணிவிதிகள் தயாரிக்கப்பட்ட தருவாயில், தற்போதைய “கண்காணிப்பாளர்” பதவி “பிரிவு மேலாளர்” என செயல்பட்டு வந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். பெருநகர சென்னை மாநகராட்சியில் இதுநாள் வரை “ நிர்வாக அலுவலர்” என்ற பதவியிலிருந்தே “உதவி கணக்கு அலுவலராக ” பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சி துணை விதிகளில் நிர்வாக அலுவலர் என்ற பதவி என தெரிவிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

எனவே, விதிகளின் படி கண்காணிப்பாளராக (நிர்வாக அலுவலர் பதவியில் பணிபுரிபவர்) பணிபுரிபவர்களை ஊட்டப்பதவியாக கொண்டு இதுநாள் வரை உதவி கணக்கு அலுவலர் பதவி உயர்வு வழங்கப்பட்டு வருகிறது. எனவே, பிரிவு மேலாளராக செயல்பட்டு வந்து கண்காணிப்பாளர் என பெயர்மாற்றம் செய்யப்பட்ட பதவியில் இருந்து நேரடியாக உதவி கணக்கு அலுவலராக பதவி உயர்வு வழங்க பரிசீலிக்க இயலாது என்பதால், 05.01.2016 மற்றும் 28.01.2016 நாளிட்ட கடிதங்களின் வாயிலாக கோரப்பட்டுள்ள மனுதாரர்களின் கோரிக்கையினை பரிசீலிக்க இயலாத நிலை உள்ளது.

28.01.2016 மற்றும் 02.02.2016 நாளிட்ட பட்டதாரி அல்லாத நிர்வாக அலுவலர்களின் மனு மற்றும் மாண்புமிகு மேயர் அவர்களிடம் அளிக்கப்பட்ட மனுவில், நாங்கள் சென்னை மாநகராட்சியில் நிர்வாக அலுவலர்களாக பதவி வகித்தும் கணக்கு அலுவலர்களாக பணிபுரிந்தும் வருகிறோம். நாங்கள் அனைவரும் பட்டதாரி அல்லாத நிர்வாக அலுவலர்கள் எனவும்,

பட்டதாரி அல்லாத தாங்கள் நிர்வாக அலுவலராக 2009, 2010 ஆம் ஆண்டு முதல் பதவி உயர்வு பெற்று உதவி கணக்கு அலுவலர்களாக கூடுதல் பொறுப்பு வகித்து வருவதாகவும் மேலும் தங்களுக்கு இது நாள் வரை உதவி கணக்கு அலுவலர்களாக கூடுதல் பொறுப்பு வகித்து வந்ததற்கு எவ்வித பணப்பயனும் வழங்கப்படவில்லை எனவும், இது தவிர, சென்னை மாநகராட்சியில் 3 ஆண்டு பணி முடித்த பட்டதாரி நிர்வாக அலுவலர் எவரும் இல்லாததால், உதவி கணக்கு அலுவலர் பதவியில் கடந்த பல ஆண்டுகளாக நிறைய காலிப்பணியிடங்கள் பதவி உயர்வு மூலம் நிரப்பப்படாமல் இருந்தது எனவும், நிர்வாக நலன் கருதி பட்டதாரி மற்றும் பட்டதாரி அல்லாத நிர்வாக அலுவலர்களை உதவி கணக்கு அலுவலர்களாக கூடுதல் பொறுப்பு வகிக்க ஆணை பிறப்பிக்கப்பட்டு நாங்களும் தொடர்ந்து உதவி கணக்கு அலுவலர்களாக பணிபுரிந்து வருகிறோம் எனவும், தாங்களும் நிர்வாக நலனை மட்டும் கருத்தில் கொண்டு பல ஆண்டுகளாக உதவி கணக்கு அலுவலர்களாக எவ்வித பணப்பயனுமின்றி பணிபுரிந்து வருகிறோம் எனவும் ஆனால், பதவி உயர்வு வழங்கும் நேர்வில் மட்டும் பட்டதாரி அல்லாத நிர்வாக அலுவலர்கள் உதவி கணக்கு அலுவலர் பதவிக்கு தகுதியில்லை என்ற அடிப்படையில் விதிகளை சுட்டிக்காட்டி எங்கள் பெயர்களை உதவி கணக்கு அலுவலர் பதவிக்கு தயாரிக்கப்படும் பட்டியலில் சேர்க்க இயலாது என

நிர்வாகம் மறுக்கிறது எனவும், இது தங்களுக்கு மிகுந்த வேதனையையும், மன உளைச்சலையும் தருகின்றது எனவும் மேற்காணும் சுற்றறிக்கையின்படி உதவி கணக்கு அலுவலர் பதவிக்கு தெரிவுப்பட்டியல் தயாரிக்கப்பட்டால், எங்களை விட மிகவும் இளையவரான பட்டதாரி நிர்வாக அலுவலர்களும், பட்டதாரி கண்காணிப்பாளர்களும் உதவி கணக்கு அலுவலர் பதவி உயர்வு பெறுவார்கள் எனவும், பட்டதாரி அல்லாத நிர்வாக அலுவலர்களாகிய நாங்கள் 2016, 2017, 2018 ஆம் ஆண்டுகளில் ஓய்வு பெறவுள்ளோம் எனவும், தனியர்கள் அனைவரும் Junior Accountancy Test ல் தேர்ச்சி பெற்றுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, மனுதாரர்களின் கோரிக்கையினை சென்னை மாநகராட்சியின் பொது பணிவிதிகளில் வகுப்பு I மற்றும் வகுப்பு II ஆகிய பதவிகளான தலைமை கணக்கு அலுவலர் பதவி மற்றும் உதவி கணக்கு அலுவலர் பதவிகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட பணிவிதிகள் மற்றும் கல்வித்தகுதிகளில் திருத்தம் மேற்கொண்டு அரசு கருவூலகத்துறையில் உள்ளது போல பட்டதாரி மற்றும் பட்டதாரி அல்லாத நிர்வாக அலுவலர்களை விகிதாசாரத்தின் அடிப்படையில் உதவி கணக்கு அலுவலர்களாகவும் தலைமை கணக்கு அலுவலர்களாகவும் பதவி உயர்வு பெற வழிவகை செய்யும்படி கோரியுள்ளனர்.

இதன் தொடர்பாக மேலும் சமர்ப்பிக்கப்படுவது யாதெனில், 1970 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட பணிவிதிகளில், உதவி கணக்கு அலுவலர் பதவிக்கு அங்கீகாரம் பெற்றதொரு பல்கலை கழகத்திலிருந்து பட்டம் பெறவேண்டும் என்பதினை கல்வித்தகுதியாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

எனவே, 28.01.2016 மற்றும் 02.02.2016 நாளிட்ட பட்டதாரி அல்லாத நிர்வாக அலுவலர்களின் மனு மற்றும் மாண்புமிகு மேயர் அவர்களிடம் அளிக்கப்பட்ட மனுவில் கோரப்பட்டுள்ள கோரிக்கையினை, தனியர்கள் பட்டம் பெறாத நிர்வாக அலுவலர்கள் என்பதால், விதிகளின் படி இவர்களின் பெயரை உதவி கணக்கு அலுவலர் பதவிக்கு தெரிவுப்பட்டியலில் பெயர் சேர்க்க இயலாத நிலை உள்ளது.

உதவி கணக்கு அலுவலர் பதவியில் உள்ள காலிப்பணியிடங்கள் விவரம்

வ எ ண்	பதவியின் பெயர்	அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள்	உதவி கணக்கு அலுவலர் பதவியில் பொறுப்பு வகிக்கும் நிர்வாக அலுவலர்கள் எண்ணிக்கை	உதவி கணக்கு அலுவலர் பதவியில் பொறுப்பு வகிக்கும் உதவி வருவாய் அலுவலர் எண்ணிக்கை	உதவி கணக்கு அலுவலர் அயற்பணியில் பணிபுரியும் செ.மா. அலுவலர் எண்ணிக்கை	குறிப்பு
1	**உதவி கணக்கு அலுவலர்**	**29**	**15**	**1**	**1**	**16 காலிப் பணியிடங்கள் பதவி உயர்வு மூலம் நிரப்பப்பட வேண்டும்.**

இந்நிலையில், 2014–2015 ஆம் ஆண்டிற்கான உதவி கணக்கு அலுவலர் பதவி உயர்வுக்கான 2 நபர் கொண்ட 15.05.2014–ஐ மைய நாளாக கொண்ட திருத்திய தெரிவுப்பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தீர்மானம் பெறப்பட்டு, அரசின் ஆணை வேண்டி அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பப்பட்டது. 22.12.2015 நாளிட்ட அரசுக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு சென்னை மாநகராட்சி பொதுப்பணி விதிகள் 1970 விதி எண்.3, பட்டியல் வகுப்பு வகை –II, வகை 2ன்படி ஊட்டப்பதவியான கண்காணிப்பாளர் பதவியில் (பிரிவு மேலாளர் தற்போது கண்காணிப்பாளர்) 3 ஆண்டுகளுக்கு மேல் பணிபுரிந்துள்ளமையால், சென்னை மாநகராட்சி சட்டம் 1919, பிரிவு 83 (3)

(b) ன்படி, திரு.எஸ்.சுரேஷ் மற்றும் திருமதி.ஜி.சுகுணா ஆகிய நிர்வாக அலுவலர்களுக்கு உதவி கணக்கு அலுவலர் பதவி உயர்வு வழங்குவது குறித்து சென்னை மாநகராட்சி அளவிலேயே முடிவெடுத்துக் கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்ட நிலையில், 2014–2015 ஆம் ஆண்டிற்கு உதவி கணக்கு அலுவலர் பதவிக்கு மேற்கண்ட நிர்வாக அலுவலர்கள், கண்காணிப்பாளர் பதவியில் (முந்தைய பதவி பிரிவு மேலாளர் பதவி) 3 ஆண்டுகளுக்கு மேல் பணி முடித்துள்ளதால் உதவி கணக்கு அலுவலர் பதவி உயர்வுக்கான விதிகளின்படி பதவி உயர்வுக்கு தகுதியுள்ளவர்களாக அமைகின்றனர் என தெரிவித்துள்ள நிலையிலும், சென்னை மாநகராட்சி அளவிலேயே உதவி கணக்கு அலுவலர் பதவிக்கான தெரிவுப்பட்டியல் மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டு 31.12.2015 அன்று உதவி கணக்கு அலுவலர் பதவி உயர்வு அளிக்கப்பட்டது .

22.12.2015 நாளிட்ட அரசு கடிதத்தில், சென்னை மாநகராட்சி மன்றத் தீர்மான எண்.403/2010, நாள்.31.08.2010ல் பெறப்பட்ட அனுமதியின் அடிப்படையில், சென்னை மாநகராட்சி பொதுப்பணி விதிகள் 1970–ல் உதவி கணக்கு அலுவலர் பதவி உயர்வுக்கு, சென்னை மாநகராட்சியின் மன்றத் துறையையும் சேர்த்து வகுப்பு–3ல் கண்காணிப்பாளராகவோ அல்லது தலைமை எழுத்தராகவோ மூன்றாண்டுகளுக்கு பதிலாக ஓராண்டு குறையாமல் பணியாற்றியிருக்க வேண்டும் என்ற திருத்தம் கோரும் சென்னை மாநகராட்சியின் செயற்குறிப்பு அரசால் பரிசீலிக்கப்பட்டு வருகிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், 22.12.2015 நாளிட்ட அரசுக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்களின் அடிப்படையிலும், மற்றும் மன்றத்தீர்மானம் எண்.403/2010, நாள்.31.08.2010–ன் அடிப்படையிலும், மேலும் சென்னை மாநகராட்சி அளவில் இதுநாள் வரை “நிர்வாக அலுவலர்” பதவியிலிருந்தே “ உதவி கணக்கு அலுவலர்” பதவி உயர்வு வழங்கப்பட்டு வந்துள்ள நிலையிலும் 2015–2016ஆம் ஆண்டிற்கான “உதவி கணக்கு அலுவலர்” பதவி உயர்வுக்கு 14.01.2015ல் கண்டுள்ள சுற்றறிக்கையின்படி தயாரிக்கப்பட்டுள்ள கண்காணிப்பாளர் பதவியில் 3 ஆண்டுகள் பணிமுடித்து நிர்வாக அலுவலர்களாக பணிபுரியும் நிர்வாக அலுவலர்களின் பெயர்களைக் கொண்டும் மற்றும் சென்னை மாநகராட்சி மன்றத்தீர்மானம் எண்.403/2010, நாள் 31.08.2010–ன்படி வகுப்பு–3ல் கண்காணிப்பாளராகவோ (நிர்வாக அலுவலராக பணிபுரிபவர்) /தலைமை எழுத்தராகவோ 3 ஆண்டுகளுக்கு பதில் ஓராண்டு குறையாமல் பணியாற்றி இருக்க வேண்டும் என்பதின் அடிப்படையிலும் உதவிக்கணக்கு அலுவலர் பதவிக்கான தெரிவுப்பட்டியல் தயாரிப்பது தொடர்பாக,

கீழ்கண்ட இனங்களின் மீது நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(அ) பட்டியல்–2ல் வரிசை எண்.1 மற்றும் 2ல் கண்டுள்ள நிர்வாக அலுவலர்கள் 1970 ஆம் ஆண்டு பணிவிதிகளின் படியும், மன்றத்தீர்மானம் எண்.403/2010, நாள் 31.08.2010–ன் படியும், நிர்வாக அலுவலர் பதவியில் (முன்னர் இப்பதவியின் பெயர் கண்காணிப்பாளர்) ஓராண்டு குறையாமல் பணிமுடித்தும் நிர்வாக அலுவலர்கள் பதவிக்கான கல்வித்தகுதி பட்டப்படிப்பு பெற்று கண்காணிப்பாளர் (பிரிவு மேலாளர்) பதவியில் 3 ஆண்டுகள் பணி முடித்து நிர்வாக அலுவலர்களாக பணிபுரிபவர்களை கொண்டு உதவி கணக்கு அலுவலர் பதவிக்கான தெரிவுப்பட்டியல் தயாரித்து உதவி கணக்கு அலுவலர் பதவி உயர்வு வழங்கவும்,

பட்டியல்–2

வ.எண்.	பெயர் மற்றும் துறை/மண்டலம் (திருவாளர்கள்)	நிர்வாக அலுவலர் பதவியில் பணியில் சேர்ந்த நாள்	மையநாளான 15.5.2015ல் நிர்வாக அலுவலர் பதவியில் பணி முடித்த காலம்
1	ர.அன்பரசு, நிர்வாக அலுவலர், மண்டலம்–15	25.07.2013	1 வருடம் 8 மாதம் (மன்ற தீர்மானம் எண்.403/2010–ன்படி உதவி கணக்கு அலுவலர் பதவிக்கு தகுதி பெறுகிறார்)
2	எல்.வெண்மதி, நிர்வாக அலுவலர், மண்டலம்–2	23.10.2013	1 வருடம் 6 மாதம் (மன்ற தீர்மானம் எண்.403/2010–ன்படி உதவி கணக்கு அலுவலர் பதவிக்கு தகுதி பெறுகிறார்)

(ஆ) பட்டியல்–1ல் வரிசை எண்.1 முதல் 6 வரையும், வரிசை எண்.8, 12, 17, மற்றும் 19–ல் கண்டுள்ளவர்களை பட்டதாரி அல்லாதவர் என்பதாலும், வரிசை எண்.10, 11, 13, 14, 15, 16, ல் கண்டுள்ளவர்கள் தற்போதைய நாளன்று ஓராண்டிற்கு மேலாக நிர்வாக அலுவலராக பணிபுரிந்திருப்பினும் மன்ற தீர்மானம் எண்.403/2010–ன்படி தெரிவித்துள்ளவாறு ஓராண்டிற்கு குறையாமல் பணிபுரிந்திருக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளதால், 15.05.2015 மைய நாளன்று ஓராண்டிற்கு குறையாமல் கண்காணிப்பாளராக (நிர்வாக அலுவலராக) பணிபுரியவில்லை என்பதாலும், தனியர்களின் பெயர்களை உதவி கணக்கு அலுவலர் தெரிவுப்பட்டியலில் சேர்க்காமல் ஒத்தி வைக்கவும், இந்த விவரத்தினை சம்மந்தப்பட்ட தனியர்களுக்கு கடிதம் வாயிலாக தெரிவிக்கவும்

(இ) பட்டியல்–1ல் வரிசை எண்.18 மற்றும் 20 ல் கண்டுள்ளவர்களை உதவி கணக்கு அலுவலர் பதவிக்கு மைய நாளான 15.05.2015க்கு பின்பு (10.09.2015 மற்றும் 18.01.2016) நிர்வாக அலுவலர்களாக பதவி உயர்வு பெற்றுள்ளமையாலும், விதிகளில் குறிப்பிட்டுள்ள கல்வித்தகுதியின் அடிப்படையிலும், மன்றத்தீர்மானம் எண்.403/2010 நாள் 31.08.2010–ன் படியும், தனியர்களின் பெயர்களை உதவி கணக்கு அலுவலர் தெரிவுப்பட்டியலில் சேர்க்காமல் ஒத்தி வைக்கவும், இந்த விவரத்தினை சம்மந்தப்பட்ட தனியர்களுக்கு கடிதம் வாயிலாக தெரிவிக்கவும்.

"இம்மாத நியமனக்குழு கூட்டம் முடிவுற்ற நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு இதனை நியமனக்குழு சுற்றின் மூலம் பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

பே.சா.து.ந.க.எண்.பி1/0171/34/2016
ஆணையர் அவர்களின் 25.02.2016 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.185/2016 **பொருள் எண்.39**

மண்டலம் – 1 (திருவொற்றியூர்) –பகுதி–1,2 மற்றும் 3, வார்டு–2,4,6,7,8,9 மற்றும் 13ல், உள்ள (41 சாலைகள் – சிப்பம் 1 – உட்புற சாலைகளை மேம்படுத்தும் பணி மேற்கொள்ளுதல் – MIDF நிதி 2015–16 – பேருந்து சாலைகள் துறை மூலமாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது – குறைந்த ஒப்பந்ததாரரான திருகே.சுந்தர்ராஜன் அவர்களுக்கு பணியினை அளிக்க அனுமதி

சென்னை மாநகராட்சி, 2015–16 ஆம் ஆண்டு MIDF நிதி மற்றும் வங்கிக்கடன் நிதி ஆகியவற்றின் மூலம் மண்டலம் – 1 (திருவொற்றியூர்) வார்டு–2,4,6,7,8,9 மற்றும் 13ல், உள்ள 4.345 கி.மீ நீளமுடைய 41 எண்ணிக்கையிலான உட்புற சாலைகளை ரூபாய் 1.98 கோடி மதிப்பீட்டில் சிமெண்ட் கான்கிரீட் சாலைகளாக மேம்படுத்தும் பணிகளுக்கு 29.01.2016 அன்று பேருந்து சாலைத்துறை மூலமாக ஒப்பம் கோரப்பட்டது. இதற்கான அறிவிப்பு சென்னை மாநகராட்சி ஒப்பந்த செய்தி மலர் 21, இதழ் 1108, நாள்.14.01.2016 மற்றும் தினமணி, நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்ல் நாளிதழ்களில் 15.01.2016. அன்று வெளியிடப்பட்டது.

இதற்கான கருத்துக் கேட்பு கூட்டம் 25.01.2016 அன்று நடைபெற்றது. ஒப்ப நாளான 29.01.2016 அன்று ஒப்பத்தில் கலந்துகொண்ட கீழ்கண்ட ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் தொழில்நுட்ப ஆவணம் திறக்கப்பட்டது.

1) திருகே.சுந்தர்ராஜன்
2) திருவாளர்கள்.ஜெயஸ்ரீ கன்ஸ்ட்ரக்ஷன்

தொழில்நுட்ப ஆவணம் மதிப்பீடு செய்யப்பட்டதில் மேற்படி ஒப்பத்தில் கலந்துகொண்ட ஒப்பந்ததாரர்கள் திருகே.சுந்தர்ராஜன் மற்றும் திருவாளர்கள்.ஜெயஸ்ரீ கன்ஸ்ட்ரக்ஷன் அவர்கள் சமர்ப்பித்த ஆவணங்களின் அடிப்படையில் இருவரும் தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களாக அறிவிக்கப்பட்டார்கள். தகுதி வாய்ந்த இரண்டு ஒப்பந்ததாரர்களின் நிதி ஆவணம் 05.02.2016 அன்று திறக்கப்பட்டது.

அதன் விவரம் வருமாறு:

வ. எண்.	ஒப்பந்ததாரர்கள் பெயர்	அலுவலக மதிப்பீட்டுத் தொகை 2015–2016ஆம் ஆண்டு விலை விவரப்படி ரூ.	ஒப்பத்தொகை ரூ.	2015–16ம் ஆண்டின் விலைப்படி ஒப்ப சதவீதம் உயர்வு (அ) குறைவு
1	திரு.கே.சுந்தர்ராஜன்	ரூ.1,92,77,073.83	ரூ.2,21,70,113.80	(+) 15.00 அதிகம்
2	திருவாளர்கள்.ஜெயஸ்ரீ கன்ஸ்ட்ரக்ஷன்	ரூ.1,92,77,073.83	ரூ.2,27,60,940.00	(+) 18.07 அதிகம்

மேற்படி ஒப்பத்தில் ஒப்பந்ததாரர் திரு.கே.சுந்தர்ராஜன் அவர்களிடம் நடைபெற்ற விலைக்குறைப்பு பேச்சுவார்த்தை கோரப்பட்டதற்கு, ஒப்பந்ததாரர் ரூ.2,19,98,324.00ற்கு விலைகுறைப்பு செய்து கடிதம் அளித்துள்ளார். இவ்விலையானது 2015–16ம் ஆண்டு அலுவலக விலை விவர மதிப்பீடு தொகையை விட (+)14.12 விழுக்காடு அதிகமாகும். ஆகவே, மேலும் விலைகுறைப்பு செய்யும்படி கோரப்பட்டதற்கு தனது இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தையில் ஒப்பந்ததாரர் ரூ.2,08,05,985.90ற்கு விலைகுறைப்பு செய்து கடிதம் வழங்கியுள்ளார். இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தைக்கு பின் திரு.கே.சுந்தர்ராஜன் அவர்களது ஒப்பத்தொகையான ரூ.2,08,05,985.90யானது 2015–16ம் ஆண்டு அலுவலக விலை விவர மதிப்பீடு தொகையை விட (+) 7.93 விழுக்காடு அதிகமாகும்.

எனவே, இப்பணிக்கான ஒப்பத்தை திரு கே.சுந்தர்ராஜன் அவாக்ளுக்கு 2015–2016ம் ஆண்டு விலை விவரப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (+)7.93 விழுக்காடு அதிகமான ஒப்பத்தொகை ரூ.2,08,05,985.90ற்கு பணியினை வழங்க ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 பிரிவு 7(1) மற்றும் 7(2)ன்படி மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

2016–2017ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை கூட்டம் நடைபெறுவதால், இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

பே.சா.து.ந.க.எண்.பி2/0171/35/2016
ஆணையர் அவர்களின் 25.02.2016 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.186/2016 **பொருள் எண்.40**

மண்டலம் – 3 (மாதவரம்) – வார்டு–22,26 மற்றும் 27ல், உள்ள (46 சாலைகள்) – சிப்பம் 2 – உட்புற சாலைகளை மேம்படுத்தும் பணி மேற்கொள்ளுதல் – MIDF நிதி 2015–16 – பேருந்து சாலைகள் துறை மூலமாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது – குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர் டி.ஜே.ஆறுமுகம் அண்டு கோ அவர்களுக்கு பணியினை அளிக்க அனுமதி

சென்னை மாநகராட்சி, 2015–16 ஆம் ஆண்டு MIDF நிதி மற்றும் வங்கிக்கடன் நிதி ஆகியவற்றின் மூலம் மண்டலம் – 3 (மாதவரம்) – வார்டு–22,26 மற்றும் 27ல், உள்ள 5.625 கி.மீ நீளமுடைய 46 எண்ணிக்கை உட்புற சாலைகளை ரூபாய் 3.31 கோடி மதிப்பீட்டில் சிமெண்ட் காங்கிரீட் சாலைகளாக மேம்படுத்தும் பணிகளுக்கு 29.01.2016 அன்று பேருந்து சாலைத்துறை மூலமாக ஒப்பம் கோரப்பட்டது. இதற்கான அறிவிப்பு சென்னை மாநகராட்சி ஒப்பந்த செய்தி மலர் 21, இதழ் 1108, நாள்.14.01.2016 மற்றும் தினமணி, நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்ல் நாளிதழ்களில் 15.01.2016. அன்று வெளியிடப்பட்டது.

இதற்கான கருத்துக் கேட்பு கூட்டம் 25.01.2016 அன்று நடைபெற்றது. ஒப்ப நாளான 29.01.2016 அன்று ஒப்பத்தில் கலந்துகொண்ட கீழ்கண்ட ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் தொழில்நுட்ப ஆவணம் திறக்கப்பட்டது.

1) திருவாளர் டி.ஜே.ஆறுமுகம் அண்டு கோ

தொழில்நுட்ப ஆவணம் மதிப்பீடு செய்யப்பட்டதில் மேற்படி ஒப்பத்தில் கலந்துகொண்ட ஒரே ஒப்பந்ததாரர்கள் திருவாளர் டி.ஜே.ஆறுமுகம் அண்டு கோ அவர்கள் சமர்ப்பித்த ஆவணங்களின் அடிப்படையில் தகுதி வாய்ந்த ஒப்பந்தரர்களாக அறிவிக்கப்பட்டார். தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரரின் நிதி ஆவணம் 05.02.2016 அன்று திறக்கப்பட்டது.

அதன் விவரம் வருமாறு:

வ. எண்.	ஒப்பந்ததாரர்கள் பெயர்	அலுவலக மதிப்பீட்டுத் தொகை 2015–2016ஆம் ஆண்டு விலை விவரப்படி ரூ.	ஒப்பத்தொகை ரூ.	ஒப்ப சதவீதம் உயர்வு (அ) குறைவு
1	திருவாளர் டி.ஜே.ஆறுமுகம் அண்டு கோ	ரூ.3,30,52,284.62	ரூ.4,11,86,045.00	(+) 24.61 % அதிகம்

மேற்படி ஒப்பத்தில் ஒப்பந்ததாரர் திருவாளர் டி.ஜே.ஆறுமுகம் அண்டு கோ அவர்களிடம் நடைபெற்ற விலைக்குறைப்பு பேச்சுவார்த்தை கோரப்பட்டதற்கு, ஒப்பந்ததாரர் ரூ.3,54,19,932.50ற்கு விலைகுறைப்பு செய்து கடிதம் அளித்துள்ளார். இவ்விலையானது 2015–16ம் ஆண்டு அலுவலக விலை விவர மதிப்பீடு தொகையை விட (+) 7.16% விழுக்காடு அதிகமாகும். ஆகவே, மேலும் விலைகுறைப்பு செய்யும்படி கோரப்பட்டதற்கு தனது இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தையில் ஒப்பந்ததாரர் ரூ.3,52,96,440.45ற்கு விலைகுறைப்பு செய்து கடிதம் வழங்கியுள்ளார். இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தைக்கு பின் திருவாளர் டி.ஜே.ஆறுமுகம் அண்டு கோ அவர்களது ஒப்பத்தொகையான ரூ.3,52,96,440.45/–யானது 2015–16ம் ஆண்டு அலுவலக விலை விவர மதிப்பீடு தொகையை விட (+) 6.79% விழுக்காடு அதிகமாகும். ஆனால் சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் (–) 0.01% விழுக்காடு குறைவாகும்.

எனவே, இப்பணிக்கான ஒப்பந்தத்தை திருவாளர் டி.ஜே.ஆறுமுகம் அண்டு கோ அவர்களுக்கு 2015–2016ம் ஆண்டு விலை விவரப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (+)6.79% அதிகமான ஒப்பத்தொகை ரூ.3,52,96,440.45ற்கு பணியாணை வழங்க ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம், 1998 பிரிவு 7(1) மற்றும் 7(2)ன்படி மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

2016–2017ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை கூட்டம் நடைபெறுவதால், இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

பே.சா.து.ந.க.எண்.பி2 /0171/36/2016
ஆணையர் அவர்களின் 25.02.2016 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.187/2016 **பொருள் எண்.41**

மண்டலம் – 3 (மாதவரம்) – வார்டு–27,28, 30 மற்றும் 33ல், உள்ள (55 சாலைகள்) – சிப்பம் 3 – உட்புற சாலைகளை மேம்படுத்தும் பணி மேற்கொள்ளுதல் – MIDF நிதி 2015–16 – பேருந்து சாலைகள் துறை மூலமாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது – குறைந்த ஒப்பந்ததாரரான திரு.கே.சுப்பிரமணி அவர்களுக்கு பணியினை அளிக்க அனுமதி

சென்னை மாநகராட்சி, 2015–16 ஆம் ஆண்டு MIDF நிதி மற்றும் வங்கிக்கடன் நிதி ஆகியவற்றின் மூலம் மண்டலம் – 3 (மாதவரம்) – வார்டு–27,28, 30 மற்றும் 33ல், உள்ள 5.625 கி.மீ நீளமுடைய 55 எண்ணிக்கை உட்புற சாலைகளை ரூபாய் 3.36 கோடி மதிப்பீட்டில் சிமெண்ட் காங்கிரீட் சாலைகளாக மேம்படுத்தும் பணிகளுக்கு 29.01.2016 அன்று பேருந்து சாலைத்துறை மூலமாக ஒப்பம் கோரப்பட்டது. இதற்கான அறிவிப்பு சென்னை மாநகராட்சி ஒப்பந்த செய்தி மலர் 21, இதழ் 1108, நாள்.14.01.2016 மற்றும் தினமணி, நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்ல் நாளிதழ்களில் 15.01.2016. அன்று வெளியிடப்பட்டது.

இதற்கான கருத்துக் கேட்பு கூட்டம் 25.01.2016 அன்று நடைபெற்றது. ஒப்ப நாளான 29.01.2016 அன்று ஒப்பத்தில் கலந்துகொண்ட கீழ்கண்ட ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் தொழில்நுட்ப ஆவணம் திறக்கப்பட்டது.

1) திருவாளர் டி.ஜே.ஆறுமுகம் அண்டு கோ
2) திரு.கே.சுப்பிரமணி

தொழில்நுட்ப ஆவணம் மதிப்பீடு செய்யப்பட்டதில் மேற்படி ஒப்பத்தில் கலந்துகொண்ட ஒப்பந்ததாரர்கள் திருவாளர் டி.ஜே.ஆறுமுகம் அண்டு கோ மற்றும் திரு.கே.சுப்பிரமணி அவர்கள் சமர்ப்பித்த ஆவணங்களின் அடிப்படையில் இருவரும் தகுதி வாய்ந்த ஒப்பந்தரர்களாக அறிவிக்கப்பட்டார்கள். தகுதி வாய்ந்த இரண்டு ஒப்பந்ததாரரின் நிதி ஆவணம் 05.02.2016 அன்று திறக்கப்பட்டது.

அதன் விவரம் வருமாறு:

வ. எண்.	ஒப்பந்ததாரர்கள் பெயர்	அலுவலக மதிப்பீட்டுத் தொகை 2015–2016ஆம் ஆண்டு விலை விவரப்படி ரூ.	ஒப்பத்தொகை ரூ.	ஒப்ப சதவீதம் உயர்வு (அ) குறைவு
1	திரு.கே.சுப்பிரமணி	ரூ.3,35,08,926.77	ரூ.4,19,31,460.00	(+) 25.14 % அதிகம்
2	திருவாளர் டி.ஜே.ஆறுமுகம் அண்டு கோ	ரூ.3,35,08,926.77	ரூ.4,40,39,513.00	(+) 31.43 % அதிகம்

மேற்படி ஒப்பத்தில் ஒப்பந்ததாரர் திரு.கே.சுப்பிரமணி அவர்களிடம் நடைபெற்ற விலைக்குறைப்பு பேச்சுவார்த்தை கோரப்பட்டதற்கு, ஒப்பந்ததாரர் ரூ.3,58,51,398.30ற்கு விலைகுறைப்பு செய்து கடிதம் அளித்துள்ளார். இவ்விலையானது 2015–16ம் ஆண்டு அலுவலக விலை விவர மதிப்பீடு தொகையை விட (+) 6.99% விழுக்காடு அதிகமாகும். ஆகவே, மேலும் விலைகுறைப்பு செய்யும்படி கோரப்பட்டதற்கு தனது இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தையில் ஒப்பந்ததாரர் ரூ.3,57,40,060/–ற்கு விலைகுறைப்பு செய்து கடிதம் வழங்கியுள்ளார். இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தைக்கு பின் திரு.கே.சுப்பிரமணி அவர்களது ஒப்பத்தொகையான ரூ.3,57,40,060/– யானது 2015–16ம் ஆண்டு அலுவலக விலை விவர மதிப்பீடு தொகையை விட (+) 6.66% விழுக்காடு அதிகமாகும். ஆனால் சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் (–) 0.02% விழுக்காடு குறைவாகும்.

எனவே, இப்பணிக்கான ஒப்பந்தத்தை திரு.கே.சுப்பிரமணி அவர்களுக்கு 2015–2016ம் ஆண்டு விலை விவரப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (+)6.66% அதிகமான

ஒப்பத்தொகை ரூ.3,57,40,060/–ற்கு பணியாணை வழங்க ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம், 1998 பிரிவு 7(1) மற்றும் 7(2)ன்படி மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

2016–2017ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை கூட்டம் நடைபெறுவதால், இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

பே.சா.து.ந.க.எண்.பி2/0171/37/2016
ஆணையர் அவர்களின் 25.02.2016 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.188/2016 **பொருள் எண்.42**

சென்னை மாநகராட்சி, 2015–16 ஆம் ஆண்டு MIDF நிதி மற்றும் வங்கிக்கடன் நிதி ஆகியவற்றின் மூலம் மண்டலம் – 13 (அடையார்), வார்டு –171ல், உள்ள 3.03 கி.மீ நீளமுடைய 23 எண்ணிக்கையிலான உட்புற சாலைகளை ரூபாய் 3.33 கோடி மதிப்பீட்டில் சிமெண்ட் சாலைகளாக மேம்படுத்தும் பணிகளுக்கு 29.01.2016ல் பேருந்து சாலைத்துறை மூலமாக ஒப்பம் கோரப்பட்டது. இதற்கான அறிவிப்பு சென்னை மாநகராட்சி ஒப்பந்த செய்தி மலர் 21, இதழ் 1108, நாள்.14.01.2016 மற்றும் தினத்தந்தி, நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்ல் நாளிதழ்களில் 15.01.2016. அன்று வெளியிடப்பட்டது.

இதற்கான கருத்துக் கேட்பு கூட்டம் 25.01.2016 அன்று நடைபெற்றது. ஒப்ப நாளான 29.01.2016 அன்று ஒப்பத்தில் கலந்துகொண்ட கீழ்கண்ட ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் தொழில்நுட்ப ஆவணம் திறக்கப்பட்டது.

1) திருவாளர்கள். ஆர்.கே. அண்டு சன்ஸ்
2) திருவாளர்கள். எஸ்.ஆர்.சி. புராஜக்ட்ஸ் பிரைவேட் லிமிடெட்

தொழில் நுட்ப ஆவணம் மதிப்பீடு செய்யப்பட்டதில் மேற்படி ஒப்பத்தில் கலந்துகொண்ட ஒப்பந்ததாரர்கள் திருவாளர்கள். ஆர்.கே. அண்டு சன்ஸ் மற்றும் திருவாளர்கள். எஸ்.ஆர்.சி. புராஜக்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் அவர்கள் சமர்ப்பித்த ஆவணங்களின் அடிப்படையில் இருவரும் தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களாக அறிவிக்கப்பட்டார்கள். தகுதி வாய்ந்த இரண்டு ஒப்பந்ததாரர்களின் நிதி ஆவணம் 04.02.2016 அன்று திறக்கப்பட்டது. அதன் விவரம் வருமாறு:

வ. எண்	ஒப்பந்ததாரர்கள் பெயர் திரு / திருவாளர்கள்	அலுவலக மதிப்பீட்டுத் தொகை 2015–16 ஆம் ஆண்டு விலை விவரப்படி ரூ.	ஒப்பத்தொகை ரூ.	2015–16 ஆம் ஆண்டு விலை விவரப்படி ஒப்ப சதவீதம் உயர்வு (அ) குறைவு
1	ஆர்.கே. அண்டு சன்ஸ்	ரூ. 3,22,93,525.87	ரூ.3,94,31,561.00	(+) 22.10 % அதிகம்
2	எஸ்.ஆர்.சி. புராஜக்ட்ஸ் பிரைவேட் லிமிடெட்	ரூ. 3,22,93,525.87	ரூ.4,23,04,830.00	(+) 31.00 % அதிகம்

மேற்படி ஒப்பத்தில் குறைந்த ஒப்பந்ததாரர் திருவாளர்கள். ஆர்.கே. அண்டு சன்ஸ் அவர்களிடம் விலைக்குறைப்பு பேச்சுவார்த்தை கோரப்பட்டதற்கு, ஒப்பந்ததாரர் ரூ.3,42,26,594.92–க்கு விலைகுறைப்பு செய்து கடிதம் அளித்துள்ளார். இவ்விலையானது 2015–16ம் ஆண்டு அலுவலக விலை விவர மதிப்பீடு தொகையை விட (+) 5.99 % விழுக்காடு அதிகமாகும். ஆகவே, மேலும் விலைகுறைப்பு செய்யும்படி கோரப்பட்டதற்கு தனது இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தையில் ஒப்பந்ததாரர் ரூ.3,40,80,698.17–க்கு விலைகுறைப்பு செய்து கடிதம் வழங்கியுள்ளார். இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தைக்கு பின் திருவாளர்கள். ஆர்.கே. அண்டு சன்ஸ் அவர்களது ஒப்பத்தொகையான ரூ.3,40,80,698.17 ஆனது 2015–16ம் ஆண்டு அலுவலக விலை விவர மதிப்பீடு தொகையை விட (+) 5.53 % விழுக்காடு அதிகமாகும். ஆனால் தற்போதைய சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் (–) 0.06 % விழுக்காடு குறைவாகும்.

எனவே, இப்பணிக்கான ஒப்பத்தை திருவாளர்கள். ஆர்.கே. அண்டு சன்ஸ் அவர்களுக்கு 2015–2016ம் ஆண்டு விலை விவரப்பட்டியலின் படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (+)5.53%

அதிகமான ஒப்பத்தொகை ரூ.3,40,80,698.17க்கு பணியினை வழங்க ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம், 1998 பிரிவு 7(1) மற்றும் 7(2)ன்படி மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

2016–2017ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை கூட்டம் நடைபெறுவதால், இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

பே.சா.து.ந.க.எண்.பி2/0171/53/2016
ஆணையர் அவர்களின் 25.02.2016 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.204/2016 **பொருள் எண்.58**

மண்டலம்–13 (அடையார்) – வார்டு – 171, 173, 174 மற்றும் 177 (53 சாலைகள்) – சிப்பம் 20 உட்புற சாலைகளை மேம்படுத்தும் பணி மேற்கொள்ளுதல் – MIDF நிதி பணி 2015–16 – பேருந்து சாலைகள் துறை மூலமாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது – குறைந்த ஒப்பந்ததாரரான திரு.கே.சுந்தரராஜன் அவர்களுக்கு பணியினை அளிக்க அனுமதி

சென்னை மாநகராட்சி, 2015–16 ஆம் ஆண்டு MIDF நிதி மற்றும் வங்கிக்கடன் நிதி ஆகியவற்றின் மூலம் மண்டலம் – 13 (அடையார்), வார்டு – 171, 173, 174 மற்றும் 177ல், உள்ள 4.16 கி.மீ நீளமுடைய 53 எண்ணிக்கையிலான உட்புற சாலைகளை ரூபாய் 3.39 கோடி மதிப்பீட்டில் சிமெண்ட் சாலைகளாக மேம்படுத்தும் பணிகளுக்கு 29.01.2016ல் பேருந்து சாலைத்துறை மூலமாக ஒப்பம் கோரப்பட்டது. இதற்கான அறிவிப்பு சென்னை மாநகராட்சி ஒப்பந்த செய்தி மலர் 21, இதழ் 1108, நாள்.14.01.2016 மற்றும் தினத்தந்தி, நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்ல் நாளிதழ்களில் 15.01.2016. அன்று வெளியிடப்பட்டது.

இதற்கான கருத்துக் கேட்பு கூட்டம் 25.01.2016 அன்று நடைபெற்றது. ஒப்ப நாளான 29.01.2016 அன்று ஒப்பத்தில் கலந்துகொண்ட கீழ்கண்ட ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் தொழில்நுட்ப ஆவணம் திறக்கப்பட்டது.

1) திரு. கே. சுந்தரராஜன்
2) திருவாளர்கள்.ஜெயஸ்ரீ கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்

தொழில் நுட்ப ஆவணம் மதிப்பீடு செய்யப்பட்டதில் மேற்படி ஒப்பத்தில் கலந்துகொண்ட ஒப்பந்ததாரர்கள் திரு. கே. சுந்தரராஜன் மற்றும் திருவாளர்கள். ஜெயஸ்ரீ கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்கள் சமர்ப்பித்த ஆவணங்களின் அடிப்படையில் இருவரும் தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களாக அறிவிக்கப்பட்டார்கள். தகுதி வாய்ந்த இரண்டு ஒப்பந்ததாரர்களின் நிதி ஆவணம் 04.02.2016 அன்று திறக்கப்பட்டது. அதன் விவரம் வருமாறு:

வ. எண்.	ஒப்பந்ததாரர்கள் பெயர் திரு / திருவாளர்கள்	அலுவலக மதிப்பீட்டுத் தொகை 2015–16 ஆம் ஆண்டு விலை விவரப்படி ரூ.	ஒப்பத்தொகை ரூ.	2015–16 ஆம் ஆண்டு விலை விவரப்படி ஒப்ப சதவீதம் உயர்வு (அ) குறைவு
1	கே. சுந்தரராஜன்	ரூ. 3,29,56,095.56	ரூ.3,80,69,101.00	(+) 15.51 % அதிகம்
2	ஜெயஸ்ரீ கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்	ரூ. 3,29,56,095.56	ரூ.3,93,60,146.82	(+) 19.43 % அதிகம்

மேற்படி ஒப்பத்தில் குறைந்த ஒப்பந்ததாரர் திரு.கே.சுந்தரராஜன் அவர்களிடம் விலைக்குறைப்பு பேச்சுவார்த்தை கோரப்பட்டதற்கு, ஒப்பந்ததாரர் ரூ.3,55,51,931.00–க்கு விலைகுறைப்பு செய்து கடிதம் அளித்துள்ளார். இவ்விலையானது 2015–16ம் ஆண்டு அலுவலக விலை விவர மதிப்பீடு தொகையை விட (+)7.88% விழுக்காடு அதிகமாகும். ஆகவே, மேலும் விலைகுறைப்பு செய்யும்படி கோரப்பட்டதற்கு தனது இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தையில் ஒப்பந்ததாரர் ரூ.3,52,43,613/–க்கு விலைகுறைப்பு செய்து கடிதம் வழங்கியுள்ளார். இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தைக்கு பின் திரு.கே.சுந்தரராஜன்அவர்களது ஒப்பத் தொகையான ரூ.3,52,43,613.00 ஆனது 2015–16ம் ஆண்டு அலுவலக விலை விவர மதிப்பீடு தொகையை விட (+)6.94% விழுக்காடு அதிகமாகும். ஆனால் தற்போதைய சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் (–)0.09% விழுக்காடு குறைவாகும்.

எனவே, இப்பணிக்கான ஒப்பத்தை திரு. கே. சுந்தரராஜன் அவர்களுக்கு 2015–2016ம் ஆண்டு விலை விவரப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (+)6.94% அதிகமான

ஒப்பத்தொகை ரூ.3,52,43,613/–க்கு பணியினை வழங்க ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 பிரிவு 7(1) மற்றும் 7(2)ன்படி மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

2016–2017ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை கூட்டம் நடைபெறுவதால், இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

பே.சா.து.ந.க.எண்.பி2/0171/54 /2016
ஆணையர் அவர்களின் 25.02.2016 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.205/2016 **பொருள் எண்.59**

மண்டலம்–13 (அடையார்) – வார்டு – 177, 178, 179 மற்றும் 180 (28 சாலைகள்) – சிப்பம் 21 உட்புற சாலைகளை மேம்படுத்தும் பணி மேற்கொள்ளுதல் – MIDF நிதி பணி 2015–16 – பேருந்து சாலைகள் துறை மூலமாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது – குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள். ஜி.கே. எண்டர்பிரைசஸ் அவர்களுக்கு பணியினை அளிக்க அனுமதி

சென்னை மாநகராட்சி, 2015–16 ஆம் ஆண்டு MIDF நிதி மற்றும் வங்கிக்கடன் நிதி ஆகியவற்றின் மூலம் மண்டலம்–13 (அடையார்) வார்டு –177, 178, 179 மற்றும் 180ல், உள்ள 3.75 கி.மீ நீளமுடைய 28 எண்ணிக்கையிலான உட்புற சாலைகளை ரூபாய் 3.64 கோடி மதிப்பீட்டில் சிமெண்ட் சாலைகளாக மேம்படுத்தும் பணிகளுக்கு 29.01.2016ல் பேருந்து சாலைத்துறை மூலமாக ஒப்பம் கோரப்பட்டது. இதற்கான அறிவிப்பு சென்னை மாநகராட்சி ஒப்பந்த செய்தி மலர் 21, இதழ் 1108, நாள்.14.01.2016 மற்றும் தினத்தந்தி, நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்ல் நாளிதழ்களில் 15.01.2016. அன்று வெளியிடப்பட்டது.

இதற்கான கருத்துக் கேட்பு கூட்டம் 25.01.2016 அன்று நடைபெற்றது. ஒப்ப நாளான 29.01.2016 அன்று ஒப்பத்தில் கலந்துகொண்ட கீழ்கண்ட ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் தொழில்நுட்ப ஆவணம் திறக்கப்பட்டது.

1) திருவாளர்கள். ஜி.கே. எண்டர்பிரைசஸ்
2) திருவாளர்கள்.கன்ஸ்ட்ரக்டிவ் பீப்பிள் இன்ப்ரா புராஜக்ட்பிரைவேட் லிமிடெட்
3) திருவாளர்கள்.தாமஸ் அய்யாதுரை இன்ப்ராஸ்டெக்சர்ஸ் பிரைவேட் லிமிடெட்

தொழில் நுட்ப ஆவணம் மதிப்பீடு செய்யப்பட்டதில் மேற்படி ஒப்பத்தில் கலந்துகொண்ட ஒப்பந்ததாரர்கள் திருவாளர்கள். ஜி.கே. எண்டர்பிரைசஸ், திருவாளர்கள்.கன்ஸ்ட்ரக்டிவ் பீப்பிள் இன்ப்ரா புராஜக்ட் பிரைவேட் லிமிடெட் மற்றும் திருவாளர்கள். தாமஸ் அய்யாதுரை இன்ப்ராஸ்டெக்சர்ஸ் பிரைவேட் லிமிடெட் அவர்கள் சமர்ப்பித்த ஆவணங்களின் அடிப்படையில் திருவாளர்கள். ஜி.கே. எண்டர்பிரைசஸ் அவர்கள் தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரராக அறிவிக்கப்பட்டார்கள். தகுதி வாய்ந்த ஒரு ஒப்பந்ததாரரின் நிதி ஆவணம் 04.02.2016 அன்று திறக்கப்பட்டது. அதன் விவரம் வருமாறு:

வ. எண்.	ஒப்பந்ததாரர்கள் பெயர் திரு / திருவாளர்கள்	அலுவலக மதிப்பீட்டுத் தொகை 2015–16 ஆம் ஆண்டு விலை விவரப்படி ரூ.	ஒப்பத்தொகை ரூ.	2015–16 ஆம் ஆண்டு விலை விவரப்படி ஒப்ப சதவீதம் உயர்வு (அ) குறைவு
1	ஜி.கே. எண்டர்பிரைசஸ்	ரூ. 3,52,93,254.60	ரூ.4,12,19,196.00	(+) 16.79 % அதிகம்

மேற்படி ஒப்பத்தில் குறைந்த ஒப்பந்ததாரர் திருவாளர்கள். ஜி.கே. எண்டர்பிரைசஸ் அவர்களிடம் விலைக்குறைப்பு பேச்சுவார்த்தை கோரப்பட்டதற்கு, ஒப்பந்ததாரர் ரூ.3,79,64,795.80க்கு விலைகுறைப்பு செய்து கடிதம் அளித்துள்ளார். இவ்விலையானது 2015–16ம் ஆண்டு அலுவலக விலை விவர மதிப்பீடு தொகையை விட (+)7.57% விழுக்காடு அதிகமாகும். ஆகவே, மேலும் விலைகுறைப்பு செய்யும்படி கோரப்பட்டதற்கு தனது இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தையில் ஒப்பந்ததாரர் ரூ.3,79,21,594.90க்கு விலைகுறைப்பு செய்து கடிதம் வழங்கியுள்ளார். இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தைக்குபின் திருவாளர்கள். ஜி.கே. எண்டர்பிரைசஸ் அவர்களது ஒப்பத்தொகையான ரூ.3,79,21,594.90 ஆனது 2015–16ம் ஆண்டு அலுவலக விலை விவர மதிப்பீடு தொகையை விட (+)7.45% விழுக்காடு அதிகமாகும். ஆனால் தற்போதைய சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் (–) 0.04% விழுக்காடு குறைவாகும்.

எனவே, இப்பணிக்கான ஒப்பத்தை திருவாளர்கள். ஜி.கே. எண்டர்பிரைசஸ் அவர்களுக்கு 2015–2016ம் ஆண்டு விலை விவரப்பட்டியலின் படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (+)7.45%

அதிகமான ஒப்பத்தொகை ரூ.3,79,21,594.90க்கு பணியினை வழங்க ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 பிரிவு 7(1) மற்றும் 7(2)ன்படி மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

2016–2017ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை கூட்டம் நடைபெறுவதால், இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

பே.சா.து.ந.க.எண்.பி2/0171/55/2016
ஆணையர் அவர்களின் 25.02.2016 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.206/2016 **பொருள் எண்.60**

மண்டலம்–13 (அடையார்) – வார்டு – 180 (36 சாலைகள்) – சிப்பம் 22 உட்புற சாலைகளை மேம்படுத்தும் பணி மேற்கொள்ளுதல் – MIDF நிதி பணி 2015–16 – பேருந்து சாலைகள் துறை மூலமாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது – குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள். எம்.ஆர். கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களுக்கு பணியினை அளிக்க அனுமதி

சென்னை மாநகராட்சி, 2015–16 ஆம் ஆண்டு MIDF நிதி மற்றும் வங்கிக்கடன் நிதி ஆகியவற்றின் மூலம் மண்டலம் – 13 (அடையார்), வார்டு –180ல், உள்ள 3.45 கி.மீ நீளமுடைய 36 எண்ணிக்கையிலான உட்புற சாலைகளை ரூபாய் 3.14 கோடி மதிப்பீட்டில் சிமெண்ட் சாலைகளாக மேம்படுத்தும் பணிகளுக்கு 29.01.2016ல் பேருந்து சாலைத்துறை மூலமாக ஒப்பம் கோரப்பட்டது. இதற்கான அறிவிப்பு சென்னை மாநகராட்சி ஒப்பந்த செய்தி மலர் 21, இதழ் 1108, நாள்.14.01.2016 மற்றும் தினத்தந்தி, நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்ல் நாளிதழ்களில் 15.01.2016. அன்று வெளியிடப்பட்டது.

இதற்கான கருத்துக் கேட்பு கூட்டம் 25.01.2016 அன்று நடைபெற்றது. ஒப்ப நாளான 29.01.2016 அன்று ஒப்பத்தில் கலந்துகொண்ட கீழ்கண்ட ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் தொழில்நுட்ப ஆவணம் திறக்கப்பட்டது.

1) திருவாளர்கள். எம். ஆர். கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்
2) திருவாளர்கள்.அமுதா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் (நிறுவனம்)

தொழில் நுட்ப ஆவணம் மதிப்பீடு செய்யப்பட்டதில் மேற்படி ஒப்பத்தில் கலந்துகொண்ட ஒப்பந்ததாரர்கள் திருவாளர்கள். எம். ஆர். கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் மற்றும் திருவாளர்கள். அமுதா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் (நிறுவனம்) அவர்கள் சமர்ப்பித்த ஆவணங்களின் அடிப்படையில் இருவரும் தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களாக அறிவிக்கப்பட்டார்கள். தகுதி வாய்ந்த இரண்டு ஒப்பந்ததாரர்களின் நிதி ஆவணம் 04.02.2016 அன்று திறக்கப்பட்டது. அதன் விவரம் வருமாறு:

வ. எண்.	ஒப்பந்ததாரர்கள் பெயர் திரு / திருவாளர்கள்	அலுவலக மதிப்பீட்டுத் தொகை 2015–16 ஆம் ஆண்டு விலை விவரப்படி ரூ.	ஒப்பத்தொகை ரூ.	2015–16 ஆம் ஆண்டு விலை விவரப்படி ஒப்ப சதவீதம் உயர்வு (அ) குறைவு
1	எம்.ஆர். கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்	ரூ. 3,05,05,476.71	ரூ.3,65,54,590.00	(+) 19.83 % அதிகம்
2	அமுதா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் (நிறுவனம்)	ரூ. 3,05,05,476.71	ரூ.3,72,30,585.00	(+) 22.05 % அதிகம்

மேற்படி ஒப்பத்தில் குறைந்த ஒப்பந்ததாரர் திருவாளர்கள். எம். ஆர். கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களிடம் விலைக்குறைப்பு பேச்சுவார்த்தை கோரப்பட்டதற்கு, ஒப்பந்ததாரர் ரூ.3,29,72,213.00க்கு விலைகுறைப்பு செய்து கடிதம் அளித்துள்ளார். இவ்விலையானது 2015–16ம் ஆண்டு அலுவலக விலை விவர மதிப்பீடு தொகையை விட (+)8.09% விழுக்காடு அதிகமாகும். ஆகவே, மேலும் விலைகுறைப்பு செய்யும்படி கோரப்பட்டதற்கு தனது இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தையில் ஒப்பந்ததாரர் ரூ.3,28,99,385.00–க்கு விலைகுறைப்பு செய்து கடிதம் வழங்கியுள்ளார். இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தைக்கு பின் திருவாளர்கள்.எம்.ஆர். கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களது ஒப்பத்தொகையான ரூ.3,28,99,385.00 ஆனது 2015–16ம் ஆண்டு அலுவலக விலை விவர மதிப்பீடு தொகையை விட (+)7.85% விழுக்காடு அதிகமாகும். ஆனால் தற்போதைய சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் (–)0.07% விழுக்காடு குறைவாகும்.

எனவே, இப்பணிக்கான ஒப்பத்தை திருவாளர்கள்.எம்.ஆர்.கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களுக்கு 2015–2016ம் ஆண்டு விலை விவரப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (+)7.85% அதிகமான ஒப்பத்தொகை ரூ.3,28,99,385/–க்கு பணியினை வழங்க ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 பிரிவு 7(1) மற்றும் 7(2)ன்படி மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

2016–2017ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை கூட்டம் நடைபெறுவதால், இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

பே.சா.து.ந.க.எண்.பி1/0171/56/2016

ஆணையர் அவர்களின் 25.02.2016 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.207/2016 **பொருள் எண்.61**

மண்டலம்–15 (சோழிங்கநல்லூர்) – வார்டு – 192 மற்றும் 193 (22 சாலைகள்) – சிப்பம் 23 உட்புற சாலைகளை மேம்படுத்தும் பணி மேற்கொள்ளுதல் – மூலதன நிதி பணி 2015–16 – பேருந்து சாலைகள் துறை மூலமாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது – குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள்.பாபுஜிசிவில் கன்ஸ்ட்ரக்ஷன் அவர்களுக்கு பணியினை அளிக்க அனுமதி

சென்னை மாநகராட்சி, 2015–16 ஆம் ஆண்டு MIDF நிதி மற்றும் வங்கிக்கடன் நிதி ஆகியவற்றின் மூலம் மண்டலம் – 15 (சோழங்கநல்லூர்), வார்டு – 192 மற்றும் 193ல், உள்ள 4.02 கி.மீ நீளமுடைய 22 எண்ணிக்கை உட்புற சாலைகளை ரூபாய் 2.64 கோடி மதிப்பீட்டில் சிமெண்ட் சாலைகளாக மேம்படுத்தும் பணிகளுக்கு 29.01.2016ல் பேருந்து சாலைத்துறை மூலமாக ஒப்பம் கோரப்பட்டது. இதற்கான அறிவிப்பு சென்னை மாநகராட்சி ஒப்பந்த செய்தி மலர் 21, இதழ் 1108, நாள்.14.01.2016 மற்றும் தினத்தந்தி, நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்ல் நாளிதழ்களில் 15.01.2016. அன்று வெளியிடப்பட்டது.

இதற்கான கருத்துக் கேட்பு கூட்டம் 25.01.2016 அன்று நடைபெற்றது. ஒப்ப நாளான 29.01.2016 அன்று ஒப்பத்தில் கலந்துகொண்ட கீழ்கண்ட ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் தொழில்நுட்ப ஆவணம் திறக்கப்பட்டது.

1) திருவாளர்கள்.பாபுஜிசிவில் கன்ஸ்ட்ரக்ஷன்,

தொழில் நுட்ப ஆவணம் மதிப்பீடு செய்யப்பட்டதில் மேற்படி ஒப்பத்தில் கலந்துகொண்ட ஒப்பந்ததாரர் திருவாளர்கள்.பாபுஜிசிவில் கன்ஸ்ட்ரக்ஷன் அவர்கள் சமர்ப்பித்த ஆவணங்களின் அடிப்படையில் தகுதி வாய்ந்த ஒப்பந்தாரராக அறிவிக்கப்பட்டார். மேற்படி ஒப்பந்ததாரரின் நிதி ஆவணம் 04.02.2016 அன்று திறக்கப்பட்டது. அதன் விவரம் வருமாறு:

வ. எண்.	ஒப்பந்ததாரர்கள் பெயர் திரு / திருவாளர்கள்	அலுவலக மதிப்பீட்டுத் தொகை 2015–16 ஆம் ஆண்டு விலை விவரப்படி ரூ.	ஒப்பத்தொகை ரூ.	ஒப்ப சதவீதம் உயர்வு (அ) குறைவு
1	திருவாளர்கள்.பாபுஜிசிவில் கன்ஸ்ட்ரக்ஷன்	ரூ. 2,63,53,966.73	ரூ.3,28,10,492.00	(+) 24.50 % அதிகம்

மேற்படி ஒப்பத்தில் குறைந்த ஒப்பந்ததாரர் திருவாளர்கள்.பாபுஜிசிவில் கன்ஸ்ட்ரக்ஷன் அவர்களிடம் விலைக்குறைப்பு பேச்சுவார்த்தை கோரப்பட்டதற்கு, ஒப்பந்ததாரர்ரூ.3,03,86,592/–க்கு விலைகுறைப்பு செய்து கடிதம் அளித்துள்ளார். இவ்விலையானது 2015–16ம் ஆண்டு அலுவலக விலை விவர மதிப்பீடு தொகையை விட (+)15.30% விழுக்காடு அதிகமாகும். ஆகவே, மேலும் விலைகுறைப்பு செய்யும்படி கோரப்பட்டதற்கு தனது இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தையில் ஒப்பந்ததாரர் ரூ.2,84,46,694.95க்கு விலைகுறைப்பு செய்து கடிதம் வழங்கியுள்ளார். இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தைக்கு பின் திருவாளர்கள்.பாபுஜிசிவில் கன்ஸ்ட்ரக்ஷன் அவர்களது ஒப்பத்தொகையான ரூ.2,84,46,694.95 ஆனது 2015–16ம் ஆண்டு அலுவலக விலை விவர மதிப்பீடு தொகையை விட (+)7.94% விழுக்காடு அதிகமாகும். ஆனால் சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் (–)3.73% விழுக்காடு குறைவாகும்.

எனவே இப்பணிக்கான ஒப்பத்தை திருவாளர்கள்.பாபுஜிசிவில் கன்ஸ்ட்ரக்ஷன் அவர்களுக்கு 2015–2016ம் ஆண்டு விலை விவரப்பட்டியலின் படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (+)5.53% அதிகமான ஒப்பத்தொகை ரூ.2,84,46,694.95க்கு பணியினை வழங்க ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 பிரிவு 7(1) மற்றும் 7(2)ன்படி மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

2016–2017ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை கூட்டம் நடைபெறுவதால், இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

பே.சா.து.ந.க.எண்.பி1/0171/57/2016

ஆணையர் அவர்களின் 25.02.2016 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.208/2016 **பொருள் எண்.62**

மண்டலம்–15 (சோழிங்கநல்லூர்) – வார்டு – 194, 195 மற்றும் 197 (18 சாலைகள்) – சிப்பம்–24 உட்புற சாலைகளை மேம்படுத்தும் பணி மேற்கொள்ளுதல் – மூலதன நிதி பணி 2015–16 – பேருந்து சாலைகள் துறை மூலமாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது – குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள்.பாபுஜிசிவில் கன்ஸ்ட்ரக்ஷன் அவர்களுக்கு பணியினை அளிக்க அனுமதி

சென்னை மாநகராட்சி, 2015–16 ஆம் ஆண்டு MIDF நிதி மற்றும் வங்கிக்கடன் நிதி ஆகியவற்றின் மூலம் மண்டலம் – 15 (சோழங்கநல்லூர்), வார்டு–194, 195 மற்றும் 197ல், உள்ள 3.14 கி.மீ நீளமுடைய 18 எண்ணிக்கை உட்புற சாலைகளை ரூபாய் 3.90 கோடி மதிப்பீட்டில் சிமெண்ட் சாலைகளாக மேம்படுத்தும் பணிகளுக்கு 29.01.2016ல் பேருந்து சாலைத்துறை மூலமாக ஒப்பம் கோரப்பட்டது. இதற்கான அறிவிப்பு சென்னை மாநகராட்சி ஒப்பந்த செய்தி மலர் 21, இதழ் 1108, நாள்.14.01.2016 மற்றும் தினத்தந்தி, நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்ல் நாளிதழ்களில் 15.01.2016. அன்று வெளியிடப்பட்டது.

இதற்கான கருத்துக் கேட்பு கூட்டம் 25.01.2016 அன்று நடைபெற்றது. ஒப்ப நாளான 29.01.2016 அன்று ஒப்பத்தில் கலந்துகொண்ட கீழ்கண்ட ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் தொழில்நுட்ப ஆவணம் திறக்கப்பட்டது.

1) திருவாளர்கள்.பாபுஜிசிவில் கன்ஸ்ட்ரக்ஷன்

தொழில் நுட்ப ஆவணம் மதிப்பீடு செய்யப்பட்டதில் மேற்படி ஒப்பத்தில் கலந்துகொண்ட ஒப்பந்ததாரர் திருவாளர்கள்.பாபுஜிசிவில் கன்ஸ்ட்ரக்ஷன் அவர்கள் சமர்ப்பித்த ஆவணங்களின் அடிப்படையில் தகுதி வாய்ந்த ஒப்பந்தாரராக அறிவிக்கப்பட்டார். மேற்படி ஒப்பந்ததாரரின் நிதி ஆவணம் 04.02.2016 அன்று திறக்கப்பட்டது. அதன் விவரம் வருமாறு:

வ. எண்.	ஒப்பந்ததாரர்கள் பெயர் திரு / திருவாளர்கள்	அலுவலக மதிப்பீட்டுத் தொகை 2015–16 ஆம் ஆண்டு விலை விவரப்படி ரூ.	ஒப்பத்தொகை ரூ.	ஒப்ப சதவீதம் உயர்வு (அ) குறைவு
1	திருவாளர்கள்.பாபுஜிசிவில் கன்ஸ்ட்ரக்ஷன்	ரூ. 3,18,12,356.64	ரூ.4,01,68,427.00	(+) 26.27 % அதிகம்

மேற்படி ஒப்பத்தில் குறைந்த ஒப்பந்ததாரர் திருவாளர்கள்.பாபுஜிசிவில் கன்ஸ்ட்ரக்ஷன் அவர்களிடம் விலைக்குறைப்பு பேச்சுவார்த்தை கோரப்பட்டதற்கு, ஒப்பந்ததாரர் ரூ.3,91,47,427/–க்கு விலைகுறைப்பு செய்து கடிதம் அளித்துள்ளார். இவ்விலையானது 2015–16ம் ஆண்டு அலுவலக விலை விவர மதிப்பீடு தொகையை விட (+) 23.06 % விழுக்காடு அதிகமாகும். ஆகவே, மேலும் விலைகுறைப்பு செய்யும்படி கோரப்பட்டதற்கு தனது இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தையில் ஒப்பந்ததாரர் ரூ.3,43,44,003.85க்கு விலைகுறைப்பு செய்து கடிதம் வழங்கியுள்ளார். இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தைக்கு பின் திருவாளர்கள்.பாபுஜிசிவில் கன்ஸ்ட்ரக்ஷன் அவர்களது ஒப்பத்தொகையான ரூ.3,43,44,003.85ஆனது 2015–16ம் ஆண்டு அலுவலக விலை விவர மதிப்பீடு தொகையை விட (+)7.96% விழுக்காடு அதிகமாகும். ஆனால் சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் (–)6.61 % விழுக்காடு குறைவாகும்.

எனவே இப்பணிக்கான ஒப்பத்தை திருவாளர்கள்.பாபுஜிசிவில் கன்ஸ்ட்ரக்ஷன் அவர்களுக்கு, 2015–2016ம் ஆண்டு விலை விவரப்பட்டியலின் படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (+)7.96% அதிகமான ஒப்பத்தொகை ரூ.3,43,44,003.85க்கு பணியினை வழங்க ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 பிரிவு 7(1) மற்றும் 7(2)ன்படி மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

2016–2017ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை கூட்டம் நடைபெறுவதால், இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

பே.சா.து.ந.க.எண். பி1/0171/58/2016

ஆணையர் அவர்களின் 25.02.2016 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.209/2016 **பொருள் எண்.63**

மண்டலம்–15 (சோழிங்கநல்லூர்) – வார்டு – 197, 198 மற்றும் 199 (29 சாலைகள்) – சிப்பம் 25 உட்புறசாலைகளை மேம்படுத்தும் பணி மேற்கொள்ளுதல் – மூலதன நிதி பணி 2015–16 – பேருந்துசாலைகள்துறை மூலமாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது – குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள்.ஸ்ரீ வெங்கடேஸ்வரா ரோடு கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் பி.லிட் அவர்களுக்கு பணியினை அளிக்க அனுமதி

சென்னை மாநகராட்சி, 2015–16 ஆம் ஆண்டு MIDF நிதி மற்றும் வங்கிக்கடன் நிதி ஆகியவற்றின் மூலம் மண்டலம் – 15 (சோழங்கநல்லூர்), வார்டு–197, 198 மற்றும் 199 ல், உள்ள 3.23 கி.மீ நீளமுடைய 18 எண்ணிக்கை உட்புற சாலைகளை ரூபாய் 2.79 கோடி மதிப்பீட்டில் சிமெண்ட் சாலைகளாக மேம்படுத்தும் பணிகளுக்கு 29.01.2016ல் பேருந்து சாலைத்துறை மூலமாக ஒப்பம் கோரப்பட்டது. இதற்கான அறிவிப்பு சென்னை மாநகராட்சி ஒப்பந்த செய்தி மலர் 21, இதழ் 1108, நாள்.14.01.2016 மற்றும் தினத்தந்தி, நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்ல் நாளிதழ்களில் 15.01.2016. அன்று வெளியிடப்பட்டது.

இதற்கான கருத்துக் கேட்பு கூட்டம் 25.01.2016 அன்று நடைபெற்றது. ஒப்ப நாளான 29.01.2016 அன்று ஒப்பத்தில் கலந்துகொண்ட கீழ்கண்ட ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் தொழில்நுட்ப ஆவணம் திறக்கப்பட்டது.

1. திருவாளர்கள்.ஸ்ரீ வெங்கடேஸ்வரா ரோடு கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் பி.லிட்
2. திருவாளர்கள்.செந்தூர் முருகன் கன்ஸ்ட்ரக்ஷன்

தொழில் நுட்ப ஆவணம் மதிப்பீடு செய்யப்பட்டதில் மேற்படி ஒப்பத்தில் கலந்துகொண்ட ஒப்பந்ததாரர்கள் திருவாளர்கள்.ஸ்ரீ வெங்கடேஸ்வரா ரோடு கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் பி.லிட் மற்றும் திருவாளர்கள்.செந்தூர் முருகன் கன்ஸ்ட்ரக்ஷன் அவர்கள் சமர்ப்பித்த ஆவணங்களின் அடிப்படையில் இருவரும் தகுதி வாய்ந்த ஒப்பந்தரர்களாக அறிவிக்கப்பட்டார்கள். தகுதி வாய்ந்த இரண்டு ஒப்பந்ததாரரின் நிதி ஆவணம் 04.02.2016 அன்று திறக்கப்பட்டது.

அதன் விவரம் வருமாறு:

வ. எண்.	ஒப்பந்ததாரர்கள் பெயர் திரு / திருவாளர்கள்	அலுவலக மதிப்பீட்டுத் தொகை 2015–16 ஆம் ஆண்டு விலை விவரப்படி ரூ.	ஒப்பத்தொகை ரூ.	ஒப்ப சதவீதம் உயர்வு (அ) குறைவு
1	திருவாளர்கள். ஸ்ரீ வெங்கடேஸ்வரா ரோடு கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் பி.லிட்	ரூ. 2,70,80,063.27	ரூ.3,21,91,130.43	(+) 18.87 % அதிகம்
2	திருவாளர்கள்.செந்தூர் முருகன் கன்ஸ்ட்ரக்ஷன்	ரூ. 2,70,80,063.27	ரூ.3,38,14,050.87	(+) 24.87 % அதிகம்

மேற்படி ஒப்பத்தில் குறைந்த ஒப்பந்ததாரர் திருவாளர்கள்.ஸ்ரீ வெங்கடேஸ்வரா ரோடு கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் பி.லிட்அவர்களிடம் விலைக்குறைப்பு பேச்சுவார்த்தை கோரப்பட்டதற்கு, ஒப்பந்ததாரர் ரூ.2,95,14,941.22/–க்கு விலைகுறைப்பு செய்து கடிதம் அளித்துள்ளார். வ்விலையானது 2015–16ம் ஆண்டு அலுவலக விலை விவர மதிப்பீடு தொகையை விட (+)8.99% விழுக்காடு அதிகமாகும். ஆகவே, மேலும் விலைகுறைப்பு செய்யும்படி கோரப்பட்டதற்கு தனது இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தையில் ஒப்பந்ததாரர் ரூ.2,92,29,509.26/–க்கு விலைகுறைப்பு செய்து கடிதம் வழங்கியுள்ளார். இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தைக்கு பின் திருவாளர்கள். ஸ்ரீ வெங்கடேஸ்வரா ரோடு கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் பி.லிட் அவர்களது ஒப்பத்தொகையான ரூ.2,92,29,509.26/–ஆனது 2015–16ம் ஆண்டு அலுவலக விலை விவர மதிப்பீடு தொகையை விட (+)7.94% விழுக்காடு அதிகமாகும். ஆனால் சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் (–)5.81% விழுக்காடு குறைவாகும்.

எனவே, இப்பணிக்கான ஒப்பந்தத்தை திருவாளர்கள்.ஸ்ரீ வெங்கடேஸ்வரா ரோடு கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் பி.லிட்அவர்களுக்கு 2015–2016ம் ஆண்டு விலை விவரப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (+) 7.94% அதிகமான ஒப்பத்தொகை ரூ.2,92,29,509.26/–க்கு பணியினை வழங்க ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 பிரிவு 7(1) மற்றும் 7(2)ன்படி மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

2016–2017ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை கூட்டம் நடைபெறுவதால், இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

பே.சா.து.ந.க.எண்.பி2/0171/59/2016
ஆணையர் அவர்களின் 25.02.2016 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.210/2016 **பொருள் எண்.64**

மண்டலம்–15 (சோழிங்கநல்லூர்) – வார்டு – 199 மற்றும் 200 (13 சாலைகள்) – சிப்பம் 26 உட்புற சாலைகளை மேம்படுத்தும் பணி மேற்கொள்ளுதல் – மூலதன நிதி பணி 2015–16 – பேருந்து சாலைகள் துறை மூலமாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது – குறைந்த ஒப்பந்ததாரரான திரு.எம்.கே.கோபி அவர்களுக்கு பணியினை அளிக்க அனுமதி

சென்னை மாநகராட்சி, 2015–16 ஆம் ஆண்டு MIDF நிதி மற்றும் வங்கிக்கடன் நிதி ஆகியவற்றின் மூலம் மண்டலம் – 15 (சோழங்கநல்லூர்), வார்டு–199 மற்றும் 200ல், உள்ள 2.98 கி.மீ நீளமுடைய 13 எண்ணிக்கை உட்புற சாலைகளை ரூபாய் 2.50 கோடி மதிப்பீட்டில் சிமெண்ட் சாலைகளாக மேம்படுத்தும் பணிகளுக்கு 29.01.2016ல் பேருந்து சாலைத்துறை மூலமாக ஒப்பம் கோரப்பட்டது. இதற்கான அறிவிப்பு சென்னை மாநகராட்சி ஒப்பந்த செய்தி மலர் 21, இதழ் 1108, நாள்.14.01.2016 மற்றும் தினத்தந்தி, நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்ல் நாளிதழ்களில் 15.01.2016. அன்று வெளியிடப்பட்டது.

இதற்கான கருத்துக் கேட்பு கூட்டம் 25.01.2016 அன்று நடைபெற்றது. ஒப்ப நாளான 29.01.2016 அன்று ஒப்பத்தில் கலந்துகொண்ட கீழ்கண்ட ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் தொழில்நுட்ப ஆவணம் திறக்கப்பட்டது.

1. திரு.எம்.கே.கோபி
2. திரு.வி.வாசுதேவன்

தொழில் நுட்ப ஆவணம் மதிப்பீடு செய்யப்பட்டதில் மேற்படி ஒப்பத்தில் கலந்துகொண்ட ஒப்பந்ததாரர்கள் திரு.எம்.கே.கோபி மற்றும் திரு.வி.வாசுதேவன்அவர்கள் சமர்ப்பித்த ஆவணங்களின் அடிப்படையில் இருவரும் தகுதி வாய்ந்த ஒப்பந்தரர்களாக அறிவிக்கப்பட்டார்கள். தகுதி வாய்ந்த இரண்டு ஒப்பந்ததாரரின் நிதி ஆவணம் 04.02.2016 அன்று திறக்கப்பட்டது. அதன் விவரம் வருமாறு:

வ. எண்.	ஒப்பந்ததாரர்கள் பெயர் திரு / திருவாளர்கள்	அலுவலக மதிப்பீட்டுத் தொகை 2015–16 ஆம் ஆண்டு விலை விவரப்படி ரூ.	ஒப்பத்தொகை ரூ.	ஒப்ப சதவீதம் உயர்வு (அ) குறைவு
1	திரு.எம்.கே.கோபி	ரூ. 2,42,63,579.31	ரூ.5,36,16,050.00	(+) 120.97 % அதிகம்
2	திரு.வி.வாசுதேவன்	ரூ. 2,42,63,579.31	ரூ.6,27,15,080.00	(+) 158.47 % அதிகம்

மேற்படி ஒப்பத்தில் குறைந்த ஒப்பந்ததாரர் திரு.எம்.கே.கோபிஅவர்களிடம் விலைக்குறைப்பு பேச்சுவார்த்தை கோரப்பட்டதற்கு, ஒப்பந்ததாரர் ரூ.5,04,78,445/–க்கு விலைகுறைப்பு செய்து கடிதம் அளித்துள்ளார். இவ்விலையானது 2015–16ம் ஆண்டு அலுவலக விலை விவர மதிப்பீடு தொகையை விட (+)108.04% விழுக்காடு அதிகமாகும். ஆகவே, மேலும் விலைகுறைப்பு செய்யும்படி கோரப்பட்டதற்கு தனது இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தையில் ஒப்பந்ததாரர் ரூ.2,59,28,707/–க்கு விலைகுறைப்பு செய்து கடிதம் வழங்கியுள்ளார். இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தைக்கு பின் திரு.எம்.கே.கோபி அவர்களது ஒப்பத்தொகையான ரூ.2,59,28,707/–ஆனது 2015–16ம் ஆண்டு அலுவலக விலை விவர மதிப்பீடு தொகையை விட (+) 6.86 % விழுக்காடு அதிகமாகும். ஆனால் சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் (–) 0.08 % விழுக்காடு குறைவாகும்.

எனவே, இப்பணிக்கான ஒப்பத்தை திரு.எம்.கே.கோபி அவர்களுக்கு 2015–2016ம் ஆண்டு விலை விவரப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (+)6.86% அதிகமான ஒப்பத்தொகை ரூ.2,59,28,707/–க்கு பணியினை வழங்க ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 பிரிவு 7(1) மற்றும் 7(2)ன்படி மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

2016–2017ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை கூட்டம் நடைபெறுவதால், இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

பே.சா.து.ந.க.எண்.பி2 /0171/1/2016
ஆணையர் அவர்களின் 25.02.2016 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.211/2016 **பொருள் எண்.65**

மண்டலம் – 1,2 மற்றும் 3 (மாதவரம்) – வார்டு–'7,8,10,11,18,19,22,23 மற்றும் 24ல், உள்ள (28 சாலைகள் – சிப்பம் 1 – உட்புற சாலைகளை மேம்படுத்தும் பணி மேற்கொள்ளுதல் – MIDF நிதி 2015–16 – பேருந்து சாலைகள் துறை மூலமாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது – குறைந்த ஒப்பந்ததாரரான திரு.கே. துர்வாசுலு அவர்களுக்கு பணியினை அளிக்க அனுமதி

சென்னை மாநகராட்சி, 2015–16 ஆம் ஆண்டு MIDF நிதி மற்றும் வங்கிக்கடன் நிதி ஆகியவற்றின் மூலம் மண்டலம் – 1,2 மற்றும் 3 (மாதவரம்) – வார்டு–'7,8,10,11,18,19,22,23 மற்றும் 24ல், உள்ள 5.625 கி.மீ நீளமுடைய 28 எண்ணிக்கை உட்புற சாலைகளை ரூபாய் 3.61 கோடி மதிப்பீட்டில் தார் சாலைகளாக மேம்படுத்தும் பணிகளுக்கு 29.01.2016 அன்று பேருந்து சாலைத்துறை மூலமாக ஒப்பம் கோரப்பட்டது. இதற்கான அறிவிப்பு சென்னை மாநகராட்சி ஒப்பந்த செய்தி மலர் 21, இதழ் 1108, நாள்.14.01.2016 மற்றும் தினமணி, நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்ல் நாளிதழ்களில் 15.01.2016. அன்று வெளியிடப்பட்டது.

இதற்கான கருத்துக் கேட்பு கூட்டம் 25.01.2016 அன்று நடைபெற்றது. ஒப்ப நாளான 29.01.2016 அன்று ஒப்பத்தில் கலந்துகொண்ட கீழ்கண்ட ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் தொழில்நுட்ப ஆவணம் திறக்கப்பட்டது.

1) திரு.கே. துர்வாசுலு
2) திரு.ஜி. நாகேஸ்வரன்

தொழில்நுட்ப ஆவணம் மதிப்பீடு செய்யப்பட்டதில் மேற்படி ஒப்பத்தில் கலந்துகொண்ட ஒப்பந்ததாரர்கள் திரு.கே. துர்வாசுலு அவர்கள் சமர்ப்பித்த ஆவணங்களின் அடிப்படையில் தகுதி வாய்ந்த ஒப்பந்தரர்களாக அறிவிக்கப்பட்டார்கள். தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரரின் நிதி ஆவணம் 05.02.2016 அன்று திறக்கப்பட்டது.

அதன் விவரம் வருமாறு:

வ. எண்.	ஒப்பந்ததாரர்கள் பெயர்	அலுவலக மதிப்பீட்டுத் தொகை 2015–2016ஆம் ஆண்டு விலை விவரப்படி ரூ.	ஒப்பத்தொகை ரூ.	ஒப்ப சதவீதம் உயர்வு (அ) குறைவு
1	திரு.கே. துர்வாசுலு	ரூ.3,60,16,139.76	ரூ.4,35,48,463.35	(+) 20.91 % அதிகம்

மேற்படி ஒப்பத்தில் ஒப்பந்ததாரர் திரு.கே. துர்வாசுலு அவர்களிடம் நடைபெற்ற விலைக்குறைப்பு பேச்சுவார்த்தை கோரப்பட்டதற்கு, ஒப்பந்ததாரர் ரூ.3,87,55,715.27ற்கு விலைகுறைப்பு செய்து கடிதம் அளித்துள்ளார். இவ்விலையானது 2015–16ம் ஆண்டு அலுவலக விலை விவர மதிப்பீடு தொகையை விட (+) 7.61% விழுக்காடு அதிகமாகும். ஆகவே, மேலும் விலைகுறைப்பு செய்யும்படி கோரப்பட்டதற்கு தனது இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தையில் ஒப்பந்ததாரர் ரூ.3,87,32,000.28ற்கு விலைகுறைப்பு செய்து கடிதம் வழங்கியுள்ளார். இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தைக்கு பின் திரு.கே. துர்வாசுலு அவர்களது ஒப்பத்தொகையான ரூ.3,87,32,000.28/–யானது 2015–16ம் ஆண்டு அலுவலக விலை விவர மதிப்பீடு தொகையை விட (+) 7.54% விழுக்காடு அதிகமாகும். ஆனால் சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் (–) 0.01% விழுக்காடு குறைவாகும்.

எனவே, இப்பணிக்கான ஒப்பந்தத்தை திரு.கே. துர்வாசுலு அவர்களுக்கு 2015–2016ம் ஆண்டு விலை விவரப்பட்டியலின் படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (+)7.54% அதிகமான ஒப்பத்தொகை ரூ.3,87,32,000.28ற்கு பணியினை வழங்க ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம், 1998 பிரிவு 7(1) மற்றும் 7(2)ன்படி மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

2016–2017ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை கூட்டம் நடைபெறுவதால், இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

பே.சா.து.ந.க.எண். பி2 /0171/2/2016
ஆணையர் அவர்களின் 25.02.2016 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.212/2016 **பொருள் எண்.66**

மண்டலம் – 3 (மாதவரம்) – வார்டு–24,25,26,28,30 மற்றும் 31ல், உள்ள (53 சாலைகள்) – சிப்பம் 2 – உட்புற சாலைகளை மேம்படுத்தும் பணி மேற்கொள்ளுதல் – MIDF நிதி 2015–16 – பேருந்து சாலைகள் துறை மூலமாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது – குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர் ஜெனிஃபா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களுக்கு பணியினை அளிக்க மன்றத்தின் அனுமதி

சென்னை மாநகராட்சி, 2015–16 ஆம் ஆண்டு MIDF நிதி மற்றும் வங்கிக்கடன் நிதி ஆகியவற்றின் மூலம் மண்டலம் – 3 (மாதவரம்) வார்டு–24,25,26,28,30 மற்றும் 31ல், உள்ள 5.625 கி.மீ நீளமுடைய 53 எண்ணிக்கை உட்புற சாலைகளை ரூபாய் 3.45 கோடி மதிப்பீட்டில் தார் சாலைகளாக மேம்படுத்தும் பணிகளுக்கு 29.01.2016 அன்று பேருந்து சாலைத்துறை மூலமாக ஒப்பம் கோரப்பட்டது. இதற்கான அறிவிப்பு சென்னை மாநகராட்சி ஒப்பந்த செய்தி மலர் 21, இதழ் 1108, நாள்.14.01.2016 மற்றும் தினமணி, நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்ல் நாளிதழ்களில் 15.01.2016. அன்று வெளியிடப்பட்டது.

இதற்கான கருத்துக் கேட்பு கூட்டம் 25.01.2016 அன்று நடைபெற்றது. ஒப்ப நாளான 29.01.2016 அன்று ஒப்பத்தில் கலந்துகொண்ட கீழ்கண்ட ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் தொழில்நுட்ப ஆவணம் திறக்கப்பட்டது.

2) திருவாளர் ஜெனிஃபா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்
3) திருவாளர் எஸ்.பி. பில்டர்ஸ்

தொழில்நுட்ப ஆவணம் மதிப்பீடு செய்யப்பட்டதில் மேற்படி ஒப்பத்தில் கலந்துகொண்ட ஒப்பந்ததாரர்கள் திருவாளர் ஜெனிஃபா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் மற்றும் திருவாளர் எஸ்.பி. பில்டர்ஸ் அவர்கள் சமர்ப்பித்த ஆவணங்களின் அடிப்படையில் இருவரும் தகுதி வாய்ந்த ஒப்பந்தரர்களாக அறிவிக்கப்பட்டார்கள். தகுதி வாய்ந்த இரண்டு ஒப்பந்ததாரரின் நிதி ஆவணம் 05.02.2016 அன்று திறக்கப்பட்டது.

அதன் விவரம் வருமாறு:

வ. எண்.	ஒப்பந்ததாரர்கள் பெயர்	அலுவலக மதிப்பீட்டுத் தொகை 2015–2016ஆம் ஆண்டு விலை விவரப்படி ரூ.	ஒப்பத்தொகை ரூ.	ஒப்ப சதவீதம் உயர்வு (அ) குறைவு
1	திருவாளர் ஜெனிஃபா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்	ரூ.3,44,00,503.68	ரூ.4,10,61,988.00	(+) 19.36 % அதிகம்
2	திருவாளர் எஸ்.பி. பில்டர்ஸ்	ரூ.3,44,00,503.68	ரூ.4,54,95,028.00	(+) 32.25 % அதிகம்

மேற்படி ஒப்பத்தில் ஒப்பந்ததாரர் திருவாளர் ஜெனிஃபா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களிடம் நடைபெற்ற விலைக்குறைப்பு பேச்சுவார்த்தை கோரப்பட்டதற்கு, ஒப்பந்ததாரர் ரூ.3,72,84,271.30ற்கு விலைகுறைப்பு செய்து கடிதம் அளித்துள்ளார். இவ்விலையானது 2015–16ம் ஆண்டு அலுவலக விலை விவர மதிப்பீடு தொகையை விட (+) 8.38% விழுக்காடு அதிகமாகும். ஆகவே, மேலும் விலைகுறைப்பு செய்யும்படி கோரப்பட்டதற்கு தனது இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தையில் ஒப்பந்ததாரர் ரூ.3,71,34,431.30ற்கு விலைகுறைப்பு செய்து கடிதம் வழங்கியுள்ளார். இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தைக்கு பின் திருவாளர் ஜெனிஃபா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களது ஒப்பத்தொகையான ரூ.3,71,34,431.30/– யானது 2015–16ம் ஆண்டு அலுவலக விலை விவர மதிப்பீடு தொகையை விட (+) 7.95% விழுக்காடு அதிகமாகும். ஆனால் சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் (–) 0.26% விழுக்காடு குறைவாகும்.

எனவே இப்பணிக்கான ஒப்பத்தைதிருவாளர் ஜெனிஃபா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களுக்கு 2015–2016ம் ஆண்டு விலை விவரப்பட்டியலின் படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (+) 7.95%

அதிகமான ஒப்பத்தொகை ரூ.3,71,34,431.30ற்கு பணியினை வழங்க ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 பிரிவு 7(1) மற்றும் 7(2)ன்படி மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

2016–2017ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை கூட்டம் நடைபெறுவதால், இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

பே.சா.து.ந.க.எண்.பி2 /0171/3/2016
ஆணையர் அவர்களின் 25.02.2016 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.213/2016 **பொருள் எண்.67**

மண்டலம் 4 (குண்டையார்பேட்டை) – வார்டு – 34,35, 36,37,44 மற்றும் 45 (52 சாலைகள்) – சிப்பம் 3 – உட்புற சாலைகளை மேம்படுத்தும் பணி மேற்கொள்ளுதல் – MIDF நிதி 2015–16 – பேருந்து சாலைகள் துறை மூலமாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது – குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள்.கற்பகம் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களுக்கு பணியினை அளிக்க அனுமதி

சென்னை மாநகராட்சி, 2015–16 ஆம் ஆண்டு MIDF நிதி மற்றும் வங்கிக்கடன் நிதி ஆகியவற்றின் மூலம் மண்டலம் – 4 (குண்டையார்பேட்டை) – வார்டு வார்டு – 34,35,36,37,44 மற்றும் 45ல், உள்ள 7.95 கி.மீ நீளமுடைய 52 எண்ணிக்கையிலான உட்புற சாலைகளை ரூபாய் 3.72 கோடி மதிப்பீட்டில் தார் சாலைகளாக மேம்படுத்தும் பணிகளுக்கு 29.01.2016ல் பேருந்து சாலைத்துறை மூலமாக ஒப்பம் கோரப்பட்டது. இதற்கான அறிவிப்பு சென்னை மாநகராட்சி ஒப்பந்த செய்தி மலர் 21, இதழ் 1108, நாள்.14.01.2016 மற்றும் தினமணி, நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்ல் நாளிதழ்களில் 15.01.2016. அன்று வெளியிடப்பட்டது.

இதற்கான கருத்துக் கேட்பு கூட்டம் 25.01.2016 அன்று நடைபெற்றது. ஒப்ப நாளான 29.01.2016 அன்று ஒப்பத்தில் கலந்துகொண்ட கீழ்கண்ட ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் தொழில்நுட்ப ஆவணம் திறக்கப்பட்டது. ஒப்பந்தத்தில் கீழ்கண்ட ஒப்பந்ததாரர்கள் விலைப்புள்ளிகள் அளித்துள்ளனர்.

1) திருவாளர்கள்.கற்பகம் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்
2) திருவாளர்கள். நியூ பாரத் எலக்ட்ரிக்கல்ஸ் & எண்டர்பிரைசஸ்

தொழில்நுட்ப ஆவணம் மதிப்பீடு செய்யப்பட்டதில் மேற்படி ஒப்பத்தில் கலந்துகொண்ட ஒப்பந்ததாரர்கள் திருவாளர்கள்.திருவாளர்கள்.கற்பகம் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் மற்றும் திருவாளர்கள். நியூ பாரத் எலக்ட்ரிக்கல்ஸ் & எண்டர்பிரைசஸ் அவர்கள் சமர்ப்பித்த ஆவணங்களின் அடிப்படையில் இருவரும் தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களாக அறிவிக்கப்பட்டார்கள். தகுதி வாய்ந்த இரண்டு ஒப்பந்ததாரரின் நிதி ஆவணம் 04.02.2016 அன்று திறக்கப்பட்டது.

அதன் விவரம் வருமாறு:

வ. எண்.	ஒப்பந்ததாரர்கள் பெயர்	அலுவலக மதிப்பீட்டுத் தொகை 2014–2015ஆம் ஆண்டு விலை விவரப்படி ரூ.	ஒப்பத்தொகை ரூ.	2015–16ம் ஆண்டின் விலைவிவரப்படி ஒப்ப சதவீதம் உயர்வு (அ) குறைவு
1	திருவாளர்கள். கற்பகம் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்	ரூ. 3,71,74,644.05	ரூ.4,27,13,498.15	(+)14.99 % அதிகம்
2	திருவாளர்கள். நியூ பாரத் எலக்ட்ரிக்கல்ஸ் & எண்டர்பிரைசஸ்	ரூ. 3,71,74,644.05	ரூ.5,21,69,565.00	(+)40.34 % அதிகம்

மேற்படி ஒப்பத்தில் ஒப்பந்ததாரர் திருவாளர்கள்.கற்பகம் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களிடம் நடைபெற்ற விலைக்குறைப்பு பேச்சுவார்த்தை கோரப்பட்டதற்கு, ஒப்பந்ததாரர் ரூ.3,99,37,189.75ற்கு விலைகுறைப்பு செய்து கடிதம் அளித்துள்ளார். இவ்விலையானது 2015–16ம் ஆண்டு அலுவலக விலை விவர மதிப்பீடு தொகையை விட (+)7.43% விழுக்காடு அதிகமாகும். ஆகவே, மேலும் விலைகுறைப்பு செய்யும்படி கோரப்பட்டதற்கு தனது இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தையில் ஒப்பந்ததாரர் ரூ.3,98,51,628.35ற்கு விலைகுறைப்பு செய்து கடிதம் வழங்கியுள்ளார். இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தைக்கு பின் திருவாளர்கள்.கற்பகம் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களது ஒப்பத்தொகையான ரூ.3,98,51,628.35/–யானது 2015–16ம் ஆண்டு அலுவலக விலை விவர மதிப்பீடு தொகையை விட (+)7.20% விழுக்காடு அதிகமாகும். ஆனால் தற்போதைய சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் (–) 0.10% விழுக்காடு குறைவாகும்.

எனவே இப்பணிக்கான ஒப்பத்தை திருவாளர்கள். கற்பகம் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களுக்கு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம், 1998 பிரிவு 7 (1) மற்றும் 7 (2) ன்படி, 2015–2016ம் ஆண்டு விலை விவரப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (+) 7.20% விழுக்காடு அதிகமான ஒப்பத்தொகை ரூ.3,98,51,628.35ற்கு பணியினை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

2016–2017ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை கூட்டம் நடைபெறுவதால், இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

பே.சா.து.ந.க.எண்.பி2 /0171/04/2016

ஆணையர் அவர்களின் 25.02.2016 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.214/2016 **பொருள் எண்.68**

மண்டலம்–5 (இராயபுரம் – வார்டு–53,59,60 மற்றும் 62ல் உள்ள (12 சாலைகள்) – சிப்பம் 4 உட்புற சாலைகளை மேம்படுத்தும் பணி மேற்கொள்ளுதல் – MIDF நிதி பணி 2015–16 – பேருந்து சாலைகள் துறை மூலமாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது – குறைந்த ஒப்பந்ததாரரான திரு.எஸ்.மகாதேவன் அவர்களுக்கு பணியினை அளிக்க அனுமதி

சென்னை மாநகராட்சி, 2015–16 ஆம் ஆண்டு MIDF நிதி மற்றும் வங்கிக்கடன் நிதி ஆகியவற்றின் மூலம் மண்டலம்–5 (இராயபுரம்) – வார்டு – 53,59,60, மற்றும் 62ல் உள்ள 2.824 கி.மீ நீளமுடைய 12 எண்ணிக்கையிலான உட்புற சாலைகளை ரூபாய் 1.37 கோடி மதிப்பீட்டில் தார் சாலைகளாக மேம்படுத்தும் பணிகளுக்கு 29.01.2016ல் பேருந்து சாலைத்துறை மூலமாக ஒப்பம் கோரப்பட்டது. இதற்கான அறிவிப்பு சென்னை மாநகராட்சி ஒப்பந்த செய்தி மலர் 21, இதழ் 1108, நாள்.14.01.2016 மற்றும் தினமணி, நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்ல் நாளிதழ்களில் 15.01.2016. அன்று வெளியிடப்பட்டது.

இதற்கான கருத்துக் கேட்பு கூட்டம் 25.01.2016 அன்று நடைபெற்றது. ஒப்ப நாளான 29.01.2016 அன்று ஒப்பத்தில் கலந்துகொண்ட கீழ்கண்ட ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் தொழில்நுட்ப ஆவணம் திறக்கப்பட்டது.

1) திரு.டி.எம்.சுப்பிரமணியம் அன்ட் கோ
2) திரு.வி.வாசுதேவன்
3) திரு.எஸ்.மகாதேவன்

தொழில் நுட்ப ஆவணம் மதிப்பீடு செய்யப்பட்டதில் மேற்படி ஒப்பத்தில் கலந்துகொண்ட ஒப்பந்ததாரர்கள் திரு.டி.எம்.சுப்பிரமணியம் அன்ட் கோ, திரு.வி.வாசுதேவன் மற்றும் திரு.எஸ்.மகாதேவன்ஆகிய மூவரும் தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களாக அறிவிக்கப்பட்டார்கள். தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரரின் நிதி ஆவணம் 04.02.2016 அன்று திறக்கப்பட்டது. அதன் விவரம் வருமாறு:

வ. எண்	ஒப்பந்ததாரர்கள் பெயர் திரு / திருவாளர்கள்	அலுவலக மதிப்பீட்டுத் தொகை 2015–16 ஆம் ஆண்டு விலை விவரப்படி ரூ.	ஒப்பத்தொகை ரூ.	2015–16 ஆம் ஆண்டு விலை விவரப்படி ஒப்ப சதவீதம் உயர்வு (அ) குறைவு
1,	எஸ்.மாகதேவன்	ரூ.1,36,87,817.70	ரூ.1,41,23,170.00	(+)3.18 % அதிகம்
2.	வி.வாசுதேவன்	ரூ.1,36,87,817.70	ரூ.1,51,16,520.00	(+)10.44 % அதிகம்
3	டி.எம்.சுப்பிரமணியம் அன்ட் கோ	ரூ.1,36,87,817.70	ரூ.1,65,95,780.00	(+)21.24 % அதிகம்

மேற்படி ஒப்பத்தில் குறைந்த ஒப்பந்ததாரர் திரு.எஸ்.மகாதேவன் அவர்களிடம் விலைக்குறைப்பு பேச்சுவார்த்தை கோரப்பட்டதற்கு, ஒப்பந்ததாரர் மேலும் விலைகுறைப்பு செய்ய இயலாது என கடிதம் அளித்துள்ளார். ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகையான ரூ.1,41,23,170/– 2015–16ம் ஆண்டு அலுவலக விலை விவர மதிப்பீடு தொகையை விட (+) 3.18 % விழுக்காடு அதிகமாகும். ஆனால் தற்போதைய சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் (–) 11.51 % விழுக்காடு குறைவாகும்.

எனவே, இப்பணிக்கான ஒப்பத்தை திரு. எஸ்.மகாதேவன் அவர்களுக்கு 2015–2016ம் ஆண்டு விலை விவரப்பட்டியலின் படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (+)3.18% அதிகமான ஒப்பத்தொகை ரூ.1,41,23,170/–க்கு பணியினை வழங்க ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம், 1998 பிரிவு 7(1) மற்றும் 7(2)ன்படி, மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது

2016–2017ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை கூட்டம் நடைபெறுவதால், இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

பே.சா.து.ந.க.எண். பி2/0171/5/2016

ஆணையர் அவர்களின் 25.02.2016 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.215/2016 **பொருள் எண்.69**

மண்டலம் – 6 (திரு.வி.க.நகர்) – வார்டு–64, 65, 66 மற்றும் 67ல், உள்ள (92 சாலைகள் – சிப்பம் 5 – உட்புற சாலைகளை மேம்படுத்தும் பணி மேற்கொள்ளுதல் – MIDF நிதி 2015–16 – பேருந்து சாலைகள் துறை மூலமாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது – குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள். எஸ். பி. பில்டர்ஸ் அவர்களுக்கு பணியினை அளிக்க அனுமதி

சென்னை மாநகராட்சி, 2015–16 ஆம் ஆண்டு MIDF நிதி மற்றும் வங்கிக்கடன் நிதி ஆகியவற்றின் மூலம் மண்டலம் – 6 (திரு.வி.க.நகர்) – வார்டு–64, 65, 66 மற்றும் 67ல், உள்ள 9.92 கி.மீ நீளமுடைய 92 எண்ணிக்கையிலான உட்புற சாலைகளை ரூபாய் 3.74 கோடி மதிப்பீட்டில் தார் சாலைகளாக மேம்படுத்தும் பணிகளுக்கு 29.01.2016 அன்று பேருந்து சாலைத்துறை மூலமாக ஒப்பம் கோரப்பட்டது. இதற்கான அறிவிப்பு சென்னை மாநகராட்சி ஒப்பந்த செய்தி மலர் 21, இதழ் 1108, நாள்.14.01.2016 மற்றும் தினமணி, நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்ல் நாளிதழ்களில் 15.01.2016. அன்று வெளியிடப்பட்டது.

இதற்கான கருத்துக் கேட்பு கூட்டம் 25.01.2016 அன்று நடைபெற்றது. ஒப்ப நாளான 29.01.2016 அன்று ஒப்பத்தில் கலந்துகொண்ட கீழ்கண்ட ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் தொழில்நுட்ப ஆவணம் திறக்கப்பட்டது.

1) திருவாளர்கள். எஸ். பி. பில்டர்ஸ்
2) திருவாளர்கள். டி.ஜே. ஆறுமுகம் அண்டு கம்பெனி

தொழில்நுட்ப ஆவணம் மதிப்பீடு செய்யப்பட்டதில் மேற்படி ஒப்பத்தில் கலந்துகொண்ட ஒப்பந்ததாரர்கள் திருவாளர்கள். எஸ். பி. பில்டர்ஸ் மற்றும் திருவாளர்கள். டி.ஜே. ஆறுமுகம் அண்டு கம்பெனி அவர்கள் சமர்ப்பித்த ஆவணங்களின் அடிப்படையில் இருவரும் தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களாக அறிவிக்கப்பட்டார்கள். தகுதி வாய்ந்த இரண்டு ஒப்பந்ததாரரின் நிதி ஆவணம் 04.02.2016 அன்று திறக்கப்பட்டது.

அதன் விவரம் வருமாறு:

வ. எண்.	ஒப்பந்ததாரர்கள் பெயர்	அலுவலக மதிப்பீட்டுத் தொகை 2015–2016ஆம் ஆண்டு விலை விவரப்படி ரூ.	ஒப்பத் தொகை ரூ.	2015–16ஆம் ஆண்டின் விலைவிவரப்படி ஒப்ப சதவீதம் உயர்வு (அ) குறைவு
1	திருவாளர்கள். எஸ். பி. பில்டர்ஸ்	ரூ.3,61,80,643.43	ரூ.4,59,51,060.00	(+) 27.00 % அதிகம்
2	திருவாளர்கள். டி.ஜே. ஆறுமுகம் அண்டு கம்பெனி	ரூ.3,61,80,643.43	ரூ.4,82,55,819.00	(+) 33.37 % அதிகம்

மேற்படி ஒப்பத்தில் ஒப்பந்ததாரர் திருவாளர்கள். எஸ். பி. பில்டர்ஸ் அவர்களிடம் நடைபெற்ற விலைக்குறைப்பு பேச்சுவார்த்தை கோரப்பட்டதற்கு, ஒப்பந்ததாரர் ரூ.3,98,64,272/–ற்கு விலைகுறைப்பு செய்து கடிதம் அளித்துள்ளார். இவ்விலையானது 2015–16ம் ஆண்டு அலுவலக விலை விவர மதிப்பீடு தொகையை விட (+) 10.18 % விழுக்காடு அதிகமாகும். ஆகவே, மேலும் விலைகுறைப்பு செய்யும்படி கோரப்பட்டதற்கு தனது இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தையில் ஒப்பந்ததாரர் ரூ.3,90,57,104.80ற்கு விலைகுறைப்பு செய்து கடிதம் வழங்கியுள்ளார். இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தைக்கு பின் திருவாளர்கள். எஸ். பி. பில்டர்ஸ் அவர்களது ஒப்பத்தொகையான ரூ.3,90,57,104.80/–யானது 2015–16ம் ஆண்டு அலுவலக விலை விவர மதிப்பீடு தொகையை விட (+) 7.95 % விழுக்காடு அதிகமாகும். ஆனால் தற்போதைய சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் (–) 1.97 % விழுக்காடு குறைவாகும்.

எனவே இப்பணிக்கான ஒப்பத்தை திருவாளர்கள்.எஸ்.பி.பில்டர்ஸ் அவர்களுக்கு 2015–2016ம் ஆண்டு விலை விவரப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (+)7.95% அதிகமான ஒப்பத்தொகை ரூ.3,90,57,104.80ற்கு பணியினை வழங்க ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 பிரிவு 7(1) மற்றும் 7(2)ன்படி மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

2016–2017ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை கூட்டம் நடைபெறுவதால், இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

பே.சா.து.ந.க.எண்.பி2/0171/6/2016
ஆணையர் அவர்களின் 25.02.2016 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.216/2016 **பொருள் எண்.70**

மண்டலம் – 6 (திரு.வி.க.நகர்) – வார்டு–67 மற்றும் 68ல், உள்ள (40 சாலைகள் – சிப்பம் 6 – உட்புற சாலைகளை மேம்படுத்தும் பணி மேற்கொள்ளுதல் – MIDF நிதி 2015–16 – பேருந்து சாலைகள் துறை மூலமாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது – குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள். சி. ஆர். கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களுக்கு பணியினை அளிக்க அனுமதி

சென்னை மாநகராட்சி, 2015–16 ஆம் ஆண்டு MIDF நிதி மற்றும் வங்கிக்கடன் நிதி ஆகியவற்றின் மூலம் மண்டலம் – 6 (திரு.வி.க.நகர்) வார்டு–67 மற்றும் 68ல், உள்ள 8.38 கி.மீ நீளமுடைய 40 எண்ணிக்கையிலான உட்புற சாலைகளை ரூபாய் 3.70 கோடி மதிப்பீட்டில் தார் சாலைகளாக மேம்படுத்தும் பணிகளுக்கு 29.01.2016 அன்று பேருந்து சாலைத்துறை மூலமாக ஒப்பம் கோரப்பட்டது. இதற்கான அறிவிப்பு சென்னை மாநகராட்சி ஒப்பந்த செய்தி மலர் 21, இதழ் 1108, நாள்.14.01.2016 மற்றும் தினமணி, நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்ல் நாளிதழ்களில் 15.01.2016. அன்று வெளியிடப்பட்டது.

இதற்கான கருத்துக் கேட்பு கூட்டம் 25.01.2016 அன்று நடைபெற்றது. ஒப்ப நாளான 29.01.2016 அன்று ஒப்பத்தில் கலந்துகொண்ட கீழ்கண்ட ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் தொழில்நுட்ப ஆவணம் திறக்கப்பட்டது.

1) திருவாளர்கள். சி. ஆர். கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்
2) திரு. கே. சுந்தரராஜன்

தொழில்நுட்ப ஆவணம் மதிப்பீடு செய்யப்பட்டதில் மேற்படி ஒப்பத்தில் கலந்துகொண்ட ஒப்பந்ததாரர்கள் திருவாளர்கள். சி. ஆர். கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் மற்றும் திரு. கே. சுந்தரராஜன் அவர்கள் சமர்ப்பித்த ஆவணங்களின் அடிப்படையில் இருவரும் தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களாக அறிவிக்கப்பட்டார்கள். தகுதி வாய்ந்த இரண்டு ஒப்பந்ததாரரின் நிதி ஆவணம் 04.02.2016 அன்று திறக்கப்பட்டது.

அதன் விவரம் வருமாறு:

வ. எண்.	ஒப்பந்ததாரர்கள் பெயர்	அலுவலக மதிப்பீட்டுத் தொகை 2015–2016ஆம் ஆண்டு விலை விவரப்படி ரூ.	ஒப்பத் தொகை ரூ.	2015–16ஆம் ஆண்டின் விலைவிவரப்படி ஒப்ப சதவீதம் உயர்வு (அ) குறைவு
1	திருவாளர்கள். சி. ஆர். கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்	ரூ.3,57,46,008.60	ரூ.4,24,26,772.00	(+) 18.69% அதிகம்
2	திருவாளர்கள். டி.ஜே. ஆறுமுகம் அண்டு கம்பெனி	ரூ.3,57,46,008.60	ரூ.4,38,58,950.00	(+) 22.69 % அதிகம்

மேற்படி ஒப்பத்தில் ஒப்பந்ததாரர் திருவாளர்கள். சி. ஆர். கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களிடம் நடைபெற்ற விலைக்குறைப்பு பேச்சுவார்த்தை கோரப்பட்டதற்கு, ஒப்பந்ததாரர் ரூ.4,04,47,691/–ற்கு விலைகுறைப்பு செய்து கடிதம் அளித்துள்ளார். இவ்விலையானது 2015–16ம் ஆண்டு அலுவலக விலை விவர மதிப்பீடு தொகையை விட (+)13.15% விழுக்காடு அதிகமாகும். ஆகவே, மேலும் விலைகுறைப்பு செய்யும்படி கோரப்பட்டதற்கு தனது இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தையில் ஒப்பந்ததாரர் ரூ.3,85,95,634.49ற்கு விலைகுறைப்பு செய்து கடிதம் வழங்கியுள்ளார். இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தைக்கு பின் திருவாளர்கள்.சி.ஆர்.கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களது ஒப்பத் தொகையான ரூ.3,85,95,634.49யானது 2015–16ம் ஆண்டு அலுவலக விலை விவர மதிப்பீடு தொகையை விட (+)7.97% விழுக்காடு அதிகமாகும். ஆனால் தற்போதைய சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் (–)1.82% விழுக்காடு குறைவாகும்.

எனவே இப்பணிக்கான ஒப்பத்தை திருவாளர்கள்.சி.ஆர்.கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களுக்கு 2015–2016ம் ஆண்டு விலை விவரப்பட்டியலின் படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (+)7.97% அதிகமான ஒப்பத்தொகை ரூ.3,85,95,634.49ற்கு பணியினை வழங்க ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 பிரிவு 7(1) மற்றும் 7(2)ன்படி மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

2016–2017ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை கூட்டம் நடைபெறுவதால், இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

பே.சா.து.ந.க.எண். பி2/0171/7/2016
ஆணையர் அவர்களின் 25.02.2016 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.217/2016 **பொருள் எண்.71**

மண்டலம் – 6 (திரு.வி.க.நகர்) – வார்டு–68, 70, 75, 77 மற்றும் 78ல், உள்ள (27 சாலைகள் – சிப்பம் 7 – உட்புற சாலைகளை மேம்படுத்தும் பணி மேற்கொள்ளுதல் – MIDF நிதி 2015–16 – பேருந்து சாலைகள் துறை மூலமாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது – குறைந்த ஒப்பந்ததாரரான திரு. E. சரவணன் அவர்களுக்கு பணியினை அளிக்க அனுமதி

சென்னை மாநகராட்சி, 2015–16 ஆம் ஆண்டு MIDF நிதி மற்றும் வங்கிக்கடன் நிதி ஆகியவற்றின் மூலம் மண்டலம் – 6 (திரு.வி.க.நகர்) – வார்டு–68, 70, 75, 77 மற்றும் 78ல், உள்ள 7.71 கி.மீ நீளமுடைய 27 எண்ணிக்கையிலான உட்புற சாலைகளை ரூபாய் 3.62 கோடி மதிப்பீட்டில் தார் சாலைகளாக மேம்படுத்தும் பணிகளுக்கு 29.01.2016 அன்று பேருந்து சாலைத்துறை மூலமாக ஒப்பம் கோரப்பட்டது. இதற்கான அறிவிப்பு சென்னை மாநகராட்சி ஒப்பந்த செய்தி மலர் 21, இதழ் 1108, நாள்.14.01.2016 மற்றும் தினமணி, நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்ல் நாளிதழ்களில் 15.01.2016. அன்று வெளியிடப்பட்டது.

இதற்கான கருத்துக் கேட்பு கூட்டம் 25.01.2016 அன்று நடைபெற்றது. ஒப்ப நாளான 29.01.2016 அன்று ஒப்பத்தில் கலந்துகொண்ட கீழ்கண்ட ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் தொழில்நுட்ப ஆவணம் திறக்கப்பட்டது.

1) திரு. E. சரவணன்
2) திரு. D. குமார்

தொழில்நுட்ப ஆவணம் மதிப்பீடு செய்யப்பட்டதில் மேற்படி ஒப்பத்தில் கலந்துகொண்ட ஒப்பந்ததாரர்கள் திரு. E. சரவணன் மற்றும் திரு. D. குமார் அவர்கள் சமர்ப்பித்த ஆவணங்களின் அடிப்படையில் இருவரும் தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களாக அறிவிக்கப்பட்டார்கள். தகுதி வாய்ந்த இரண்டு ஒப்பந்ததாரரின் நிதி ஆவணம் 04.02.2016 அன்று திறக்கப்பட்டது.

அதன் விவரம் வருமாறு:

வ. எண்.	ஒப்பந்ததாரர்கள் பெயர்	அலுவலக மதிப்பீட்டுத் தொகை 2015–2016ஆம் ஆண்டு விலை விவரப்படி ரூ.	ஒப்பத் தொகை ரூ.	2015–16ஆம் ஆண்டின் விலைவிவரப்படி ஒப்ப சதவீதம் உயர்வு (அ) குறைவு
1	திரு. E. சரவணன்	ரூ.3,50,46,473.21	ரூ.4,38,76,247.60	(+) 25.19 % அதிகம்
2	திரு. D. குமார்	ரூ.3,50,46,473.21	ரூ.4,56,31,321.66	(+) 30.20 % அதிகம்

மேற்படி ஒப்பத்தில் ஒப்பந்ததாரர் திரு. E. சரவணன் அவர்களிடம் நடைபெற்ற விலைக்குறைப்பு பேச்சுவார்த்தை கோரப்பட்டதற்கு, ஒப்பந்ததாரர் ரூ.3,85,62,326.69ற்கு விலைகுறைப்பு செய்து கடிதம் அளித்துள்ளார். இவ்விலையானது 2015–16ம் ஆண்டு அலுவலக விலை விவர மதிப்பீடு தொகையை விட (+) 10.03% விழுக்காடு அதிகமாகும். ஆகவே, மேலும் விலைகுறைப்பு செய்யும்படி கோரப்பட்டதற்கு தனது இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தையில் ஒப்பந்ததாரர் ரூ.3,78,21,317.23ற்கு விலைகுறைப்பு செய்து கடிதம் வழங்கியுள்ளார். இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தைக்கு பின் திரு.E.சரவணன் அவர்களது ஒப்பத்தொகையான ரூ.3,78,21,317.23/– யானது 2015–16ம் ஆண்டு அலுவலக விலை விவர மதிப்பீடு தொகையை விட (+)7.92 % விழுக்காடு அதிகமாகும்.ஆனால் தற்போதைய சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் (–)2.00% விழுக்காடு குறைவாகும்.

எனவே இப்பணிக்கான ஒப்பத்தை திரு. E. சரவணன் அவர்களுக்கு 2015–2016ம் ஆண்டு விலை விவரப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (+)7.92% அதிகமான ஒப்பத்தொகை

ரூ.3,78,21,317.23ற்கு பணியினை வழங்க ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 பிரிவு 7(1) மற்றும் 7(2)ன்படி மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

2016–2017ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை கூட்டம் நடைபெறுவதால், இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

பே.சா.து.ந.க.எண். பி2 /0171/08/2016
ஆணையர் அவர்களின் 25.02.2016 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.218/2016 **பொருள் எண்.72**

மண்டலம் – 7 (அம்பத்தூர்) வார்டு–83 மற்றும் 84ல், உள்ள (27 சாலைகள்) – சிப்பம் 8 – உட்புற சாலைகளை மேம்படுத்தும் பணி மேற்கொள்ளுதல் – MIDF நிதி 2015–16 – பேருந்து சாலைகள் துறை மூலமாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது – குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள்.செந்தூர் முருகன் கன்ஸ்ட்ரக்ஷன் அவர்களுக்கு பணியினை அளிக்க அனுமதி

பெருநகர சென்னை மாநகராட்சி, 2015–16 ஆம் ஆண்டு MIDF நிதி மற்றும் வங்கிக்கடன் நிதி ஆகியவற்றின் மூலம் மண்டலம் – 7 (அம்பத்தூர்) – வார்டு–83 மற்றும் 84ல், உள்ள 5.625 கி.மீ நீளமுடைய 27 எண்ணிக்கையிலான உட்புற சாலைகளை ரூபாய் 3.32 கோடி மதிப்பீட்டில் தார் சாலைகளாக மேம்படுத்தும் பணிகளுக்கு 29.01.2016 அன்று பேருந்து சாலைத்துறை மூலமாக ஒப்பம் கோரப்பட்டது. இதற்கான அறிவிப்பு பெருநகர சென்னை மாநகராட்சி ஒப்பந்த செய்தி மலர் 21, இதழ் 1108, நாள்.14.01.2016 மற்றும் தினமணி, நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்ல் நாளிதழ்களில் 15.01.2016. அன்று வெளியிடப்பட்டது.

இதற்கான கருத்துக் கேட்பு கூட்டம் 25.01.2016 அன்று நடைபெற்றது. ஒப்ப நாளான 29.01.2016 அன்று ஒப்பத்தில் கலந்துகொண்ட கீழ்கண்ட ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் தொழில்நுட்ப ஆவணம் திறக்கப்பட்டது.

1) திருவாளர்கள்.செந்தூர் முருகன் கன்ஸ்ட்ரக்ஷன்
2) திருவாளர்கள்.ஸ்ரீ வெங்கடேஷ்வரா கன்ஸ்ட்ரக்ஷன்

தொழில்நுட்ப ஆவணம் மதிப்பீடு செய்யப்பட்டதில் மேற்படி ஒப்பத்தில் கலந்துகொண்ட ஒப்பந்ததாரர்கள் திருவாளர்கள்.செந்தூர் முருகன் கன்ஸ்ட்ரக்சன் மற்றும் திருவாளர்கள். ஸ்ரீ வெங்கடேஷ்வரா கன்ஸ்ட்ரக்சன் அவர்கள் சமர்ப்பித்த ஆவணங்களின் அடிப்படையில் இருவரும் தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களாக அறிவிக்கப்பட்டார்கள். தகுதி வாய்ந்த இரண்டு ஒப்பந்ததாரரின் நிதி ஆவணம் 05.02.2016 அன்று திறக்கப்பட்டது.அதன் விவரம் வருமாறு:

வ. எண்	ஒப்பந்ததாரர்கள் பெயர்	அலுவலக மதிப்பீட்டுத் தொகை 2015–2016ஆம் ஆண்டு விலை விவரப்படி ரூ.	ஒப்பத்தொகை ரூ.	2015–16ஆம் ஆண்டின் விலைப்படி ஒப்ப சதவீதம் உயர்வு (அ) குறைவு
1	திருவாளர்கள்.செந்தூர் முருகன் கன்ஸ்ட்ரக்ஷன்	ரூ.3,31,98,378.60	ரூ.4,13,86,178.00	(+) 24.66 % அதிகம்
2	திருவாளர்கள்.ஸ்ரீ வெங்கடேஷ்வரா கன்ஸ்ட்ரக்ஷன்	ரூ.3,31,98,378.60	ரூ.4,29,40,871.00	(+) 29.35 % அதிகம்

12. குறைந்த ஒப்பம் அளித்தவருடன் பேச்சுவார்த்தை தேவையா ? ஆம் எனில் நடத்தப்பட்ட நாள் : ஆம் 19.02.2015 நாளிட்ட கடிதத்தில் ஒப்பந்ததாரர் திரு.ஜி.நாகேஸ்வரன், தனது விலை பட்டியலிருந்து குறைத்து ரூ.3,41,73,993.88க்கு பணியினை மேற்கொள்ள சம்மதம் தெரிவித்துள்ளார்.

13. இறுதி ஒப்பத்தொகை ஒப்ப சதவீதம் : ரூ.3,41,73,993.88 (+) 2.29 % அதிகம்

14. குறைந்த ஒப்ப சதவீதம் அளித்த ஒப்பந்ததாரரின் பதிவின் நிலை பதிவு நாள் : முதல் வகுப்பு

15. கூடுதல் பிணை வைப்புத் தொகை செலுத்தப்பட்ட விவரம் : பொருந்தாது
அ) கேட்பு காசோலை எண் / நாள்

16. பணிக்கான நிதி ஆதாரம் உள்ளதா ? : ஆம்
அ) வரவு செலவுத்திட்ட தலைப்பு : மூலதன செலவினம் 2015 – 2016

17. ஒப்பந்தப்புள்ளி செல்லத்தக்க காலம் : 90 நாட்கள்

மேற்கண்ட பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு ஒப்பத்தில் இரண்டு ஒப்பங்கள் பெறப்பட்டன. இவற்றில் குறைந்த ஒப்பந்ததாரரான திரு. ஜி. நாகேஸ்வரன் அவர்கள் அளித்த ஒப்ப தொகை ரூ.3,73,39,781.80. ஆகும். இது 2014 – 2015 ஆம் ஆண்டின் இவ்வலுவலக பணி மதிப்பீட்டுத் தொகையான ரூ. 3,34,08,741.31 வுடன் ஒப்பிடுகையில் இவ்வொப்பந்ததாரர் அளித்துள்ள ஒப்பத்தொகை (+) 11.77% அதிகமாகும். மேலும் 2015–16 ஆம் ஆண்டின் விலைப்பட்டியலுடன் ஒப்பிடும் போது இது 10.82% அதிகமாகும், எனவே, 19.02.2016 அன்று ஒப்பந்ததாரருடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையில் ஒப்பந்ததாரர் அளித்துள்ள இறுதி ஒப்பத்தொகை ரூ.3,41,73,993.88 மற்றும் ஒப்ப சதவீதம் (+) 2.29 % அதிகம் ஆகும்.

மேலும் ஒப்பந்ததாரர் பேச்சு வார்த்தைக்குப் பிறகு அளித்துள்ள இந்த ஒப்பத் தொாகை 19.12.2015 நாளிட்ட சந்தை விலையுடன் ஒப்பிடும் போது, (–)1.33% குறைவாகும்.

22.02.2016 அன்று நடைபெற்ற உயர் மட்ட ஒப்ப கூர்ந்தாய்வு குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டதில் தீர்மான எண்.5/2015–2016ன்படி இவ்வொப்பத்தினை ஏற்க பரிந்துரைக்கப்பட்டது.

எனவே, மேற்கண்ட பணிக்காக பெறப்பட்ட ஒப்பங்களில் திரு. ஜி. நாகேஸ்வரன், அவர்கள் அளித்த ஒப்ப விலை 2014 – 2015ம் ஆண்டின் விலை விகிதத்தின் படி (+) 2.29% அதிகம் என்பதால் இப்பணிக்கான ஒப்பத்தை திரு.ஜி. நாகேஸ்வரன் அவர்களுக்கு ரூ.3,41,73,993.88 மதிப்பிற்கு பணிகள் அளிக்க ஒப்பந்தபுள்ளி சட்டம் 1998 பிரிவு 7(1) மற்றும் (2)ன்படி மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

2016–2017ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை கூட்டம் நடைபெறுவதால், இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

ம.நீ.வ.து.ந.க.எண்.பி4/ 795/2016
ஆணையர் அவர்களின் 25.02.2016 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.257/2016 **பொருள் எண்.111**

சென்னை மாநகரில் கழிவு நீர் மற்றும் மழைநீர் வடிகால்வாய்களை மேம்படுத்தப்பட்ட முறையில் பராமரிப்பு பணிகளை சுகாதாரமான முறையில் செயலாக்க பணியாளர்களுக்கு பயிற்சியும் இதன் தொடர்புடைய அங்கத்தினர்க்கு விழிப்புணர்வு அளிக்கும் திட்டத்திற்கு அனுமதி

சென்னையில் கழிவு நீர் கால்வாய் மற்றும் மழைநீர் வடிகால்வாய்களை பராமரிப்பது பெரிய சவாலாக உள்ளது. மேலும் கழிவு நீர் கால்வாய் மற்றும் மழைநீர் வடிகால்வாய்களை மனிதர்களை கொண்டு சுத்தம் செய்வது சட்டபூர்வமாக தடை செய்யப்பட்டுள்ளது.

கழிவு நீர் கால்வாய் மற்றும் மழைநீர் வடிகால்வாய்களை சுத்தம் செய்ய பல்வேறு இயந்திரங்களை பயன்படுத்தி பல இடங்களில் சுத்தம் செய்யப்பட்டு வருகிறது.

இருப்பினும், சென்னையில் பல இடங்களில் குறுகிய சந்துகள், வாகனங்கள் செல்ல இயலாத சாலைகள் கால்வாய்களில் மற்றும் ஆற்று ஓரங்களில், பாலங்களின் அடியில், நீர்நிலை முகத்துவாரங்களில், குளம் குட்டை மற்றும் ஏரிகளின் கரை ஓரங்களில் இயந்திரங்களை கொண்டு சுத்தம் செய்வது நடைமுறை சாத்தியம் அற்றது.

ஆகையால், தவிர்க்க முடியாத சூழ்நிலைகளில் போதிய பாதுகாப்பு உபகரணங்களுடன் பணியாளர்களை கொண்டு சுத்தம் செய்யும் பணியினை மேற்கொள்ள வேண்டிய நிர்பந்தம் உள்ளது.

இதனால் அவர்களின் சுகாதாரம் பெருமளவில் பாதிப்படைகிறது. மேலும், தாங்கள் பணியில் மேற்கொள்ளப்பட வேண்டிய பாதுகாப்புகள் பற்றி அவர்களிடையே விழிப்புணர்வு இல்லை. எனவே, வடிகால்வாய்களை சுத்தம் செய்யும் பணியில் ஈடுபடும் பணியாளர்கள் இப்பணியினை எவ்வாறு பாதுகாப்பு மற்றும் சுகாதாரமான முறையில் செயலாக்க வேண்டும் என்பது குறித்து அவர்களுக்கு பயிற்சி அளிப்பதும் பொதுமக்கள் மற்றும் இப்பணியில் தொடர்புடைய அங்கத்தினர்க்கும் கழிவு நீர் கால்வாய் மற்றும் மழைநீர் வடிகால்வாய்களை சுத்தமான நிலையில் பராமரிக்க விழிப்புணர்வு ஏற்படுத்துவது அத்தியாவசியமாகும்.

இதற்காக சென்னை மாநகரின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள கழிவு நீர் கால்வாய் மற்றும் மழைநீர் வடிகால்வாய்களை சுத்தம் செய்யும் பணியாளர்களை கணக்கெடுத்து அவர்களுக்கு பாதுகாப்பு உபகரணங்களை பயன்படுத்தி பணியினை பாதுகாப்புடன் சுகாதாரமான முறையில் மேற்கொள்வது மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கு பயிற்சி அளிக்க ஒரு திட்டம் வகுக்க வேண்டியது அத்தியாவசியமாகிறது. இத்திட்டம் பற்றிய விரிவான குறிப்புரை கீழ்வருமாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

அடிப்படை கோட்பாடு:

சென்னை மாநகரில் கழிவுநீர் கால்வாய் சுத்திகரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள மனித கழிவுகளை சுத்தம் செய்யும் பணியாளர்களின் கணக்கெடுப்பு நடந்து கொண்டிருக்கும் போது சுமார் 200 கழிவு நீர் கால்வாய்களை சுத்திகரிக்கும் பணியாளர்கள் உள்ளனர் என்று மதிப்பிடப்பட்டது. மனித கழிவுகளை சுத்தம் செய்யும் பணியாளர்களின் பணி அதி காலையில் துவங்கி அவர்கள் பணியினை முடிக்கும் வரையில் நடைபெறுவது உண்மையான நிகழ்வாகும். அவர்கள் கிட்டத்தட்ட அவர்களின் பணியினை எந்த ஒரு பாதுகாப்பு உபகரணமும் இன்றி செய்கின்றனர். குப்பைகளை சேகரிப்பது மற்றும் அவைகளை சேர்த்து வைக்கும் இடத்தில் கொட்டுவது ஆகிய பணிகள் பணியாளர்களால் கையுறைகள், பூட்ஸ் மற்றும் மூக்கு கவசம் இன்றி செய்யும் முறையினால் அவர்கள் கடுமையான சுகாதார கேடு அபாயங்களுக்கு ஆளாகிறார்கள். குப்பை கொட்டும் வளாகங்களில் உருவாகும் துர்நாற்றம் மற்றும் நச்சு வாயு ஆகியவைகளுடன், போதுமான அளவிற்கு பாதுகாப்பு உபகரணங்கள் பயன்படுத்தப்படாததால், அவர்களின் பணிபுரியும் நிலை மிகவும் சுகாதாரமற்றதாக உள்ளது.

எதிர்நோக்கப்படும் சவால்கள்

அதே நேரத்தில் சென்னை மாநகரமும் அதன் கழிவுநீர் கால்வாய் அமைப்புகளை பராமரிப்பதில் எண்ணிலடங்கா இடர்பாடுகளை சந்திக்கிறது. சென்னை மாநகரத்தில் உள்ள கழிவு நீர் கால்வாய் முறை சுமார் 100 ஆண்டுகள் பழமையானது. இந்த கழிவுநீர் கால்வாய்களை பராமரிப்பது 1978 வரையில் நகர உள்ளாட்சி அமைப்பின், அதாவது சென்னை மாநகராட்சியின் பொறுப்பாக இருந்தது. ஆகஸ்ட், 1978ல், சென்னை பெறுநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றல் வாரியம் என்ற சட்ட பூர்வமான அமைப்பு நிர்மாணிக்கப்பட்டது. அந்த அமைப்பு சென்னை மாநகரம் மற்றும் அதனுடன் நகரப்பகுதிகள் உள்ளடங்கிய சென்னை பெருநகர பகுதியில் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றல் பணிகளை நிறைவேற்ற ஒட்டு மொத்த பொறுப்பு கொண்டதாகும்.

ஆண்டுகள் உருண்டோட, சென்னை மாநகரம், வடக்கு திசையிலும், மேற்கு திசையிலும், தெற்கு திசையிலும், வங்காள விரிகுடாவை ஒட்டி கிழக்கு பகுதியிலும் விரிவடைந்து வந்தது. 1978ல், 176 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டதாக இருந்தது. அது 2011ல், அருகாமையில் உள்ள 42 உள்ளாட்சி அமைப்புகள் இணைக்கப்பட்டு, 200 வார்டுகளை கொண்டு 426 சதுர கிலோ மீட்டர் பரப்பளவுள்ளதாக விரிவாக்கப்பட்டது. இதன் தற்போதைய மொத்த மக்கள் தொகை சுமார் 7.06 மில்லியன் ஆகும். 1,00,237 மனித நுழைவாயில்கள் கொண்ட மொத்தம் 3994 கிலோ மீட்டர் நீளத்திற்கு கட்டப்பட்டுள்ள கழிவுநீர் கால்வாய்கள் மற்றும் 231 கழிவு நீர் ஏற்றல் நிலையங்கள் ஆகியவைகளை கீழே சொல்லப்பட்டுள்ள காரணங்களினால் பராமரிப்பது பெரிய சவாலான ஒன்றாகும்.

அ) சென்னை மாநகரம் சமதளமான புவியியல் அமைப்பை கொண்டிருத்தல்,

ஆ) கழிவுநீர் கால்வாய்களில் அதிக அளவிலான தூர் உள்வருதல்.

இ) பிரதான குழாய்களுக்கு கழிவுநீரினை கடத்த போதுமான அளவிற்கு ஈர்ப்பு ஒட்டம் இல்லாதது. (Inadequacy of gravity)

ஈ) கழிவுநீர் கால்வாய்களில் மழைநீர் உள் விடப்படுதல்.

உ) கழிவுநீர் ஏற்றல் நிலையங்களின் கழிவு நீர் ஏற்றலில் உள்ன திறன் குறைவு (inadequacy of pumping capacity)

தொழிலாளர்கள் பணிபுரியும் தற்போது நடைமுறையில் உள்ள மோசமான சுகாதார சூழ்நியினால், உடலில் வெட்டுகாயங்கள் ஏற்படுதல், காயம் ஏற்படுதல், கண் எரிச்சல் மற்றும் தோலில் நிறம் மாறுதல், போன்ற பலவிதமான உடல் நல அபாயங்களுக்கு ஆளாகிறார்கள். அநேகமான தொழிலாளர்கள், எச்சரிக்கை இல்லாவர்களாகவும், அவர்களின் உடல் நலம் பாதிக்கும் இனங்களில் சாதாரணமாகவும் நடந்து கொள்கிறார்கள். மேலும் அவர்கள் நோய் தொற்றுதல், காயம் ஏற்படுதல், இயலாமல் போதல் ஆகிய இனங்களில் பொறுத்தமற்ற வகையில் செயல்படுகிறார்கள்.

மனித கழிவுகளை சுத்தம் செய்பவர்(Manual Scavenger) என்னும் சொல்லுக்கு சொற்பொருள் விளக்கம்.(Definition)

'' கழிவுநீர் கால்வாய் சுத்திகரிக்கும் பணியாளர்(Sewer Worker)களை வேலைக்கு அமர்த்துதலை (Employment) தடை செய்தல் மற்றும் அவர்களுக்கான புனர் வாழ்வு சட்டம் 2013 ன் '' படி, கால்வாய்களை சுத்திகரிக்கும் பணியாளர் என்பதன் சொற்பொருள் விளக்கமாவது, ஒரு தனி நபரால் அல்லது ஒரு உள்ளாட்சி அமைப்பினால் அல்லது ஒரு முகமை அமைப்பினால் அல்லது ஒரு ஒப்பந்ததாரரினால், சுகாதாரமற்ற கழிவறையில் உள்ள அல்லது திறந்த நிலையில் உள்ள அல்லது கால்வாயில் உள்ள அல்லது மலக்குழியில் உள்ள மனிதக் கழிவினை சுத்தம் செய்ய, சுமந்து செல்ல, கொண்டு சென்று கொட்ட அல்லது இன்ன பிற வகையில் கையாள, நியமிக்கப்பட்ட நபர் என்று பொருள்படும். ஆரம்ப காலங்களில், கழிவுநீர் கால்வாய் கண்காணிப்பாளரின் மேற்பார்வையில் கழிவுநீர் கால்வாய் சுத்தம் செய்யும் குழுக்களினால், மனிதர்களை பயன்படுத்தியும் முங்கில் பத்தைகளை உபயோகித்தும் கழிவுநீர் கால்வாய்களில் ஏற்படும் அடைப்புகள் அகற்றப்பட்டன. மனித நுழைவாயிலில் இருக்கும் தூர், மனிதனால் உள்ளே இறங்கி வாளிகள் மற்றும் கயிறு கொண்டு அகற்றப்பட்டன.

கழிவுநீர் கால்வாய் (Sewer) மற்றும் கழிவு நீர் தொட்டி(Septic tank) ஆகியவைகளை சுத்தம் செய்யும் அபாயகரமான பணிகளை செய்ய மனிதர்களை நியமனம் செய்வதை சட்டம் தடை செய்கிறது. மேலும், தவிர்க்க இயலாத நிகழ்வுகளில் பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் கருவிகள் அளிக்க வேண்டியது அவசியமாகும். சட்டம் மேலும் மாநில அரசுகள் அவரவர்களின் மாநிலத்தில்

உள்ள கழிவுநீர் கால்வாய்களை சுத்திகரிக்கும் பணியாளர்களை இனம் கண்டு பட்டியலிட்டு அவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கும் நடவடிக்கைகளை விரைவாக எடுக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறது. கழிவுநீர் கால்வாய்களை சுத்தம் செய்யும் தொழிலாளர்களின் இந்த நெருக்கடியான சூழ்நிலையில் மற்றும் அவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்க வேண்டும் என்ற சட்டத்தின் நிர்பந்தம் ஆகியவைகளை கருத்தில் கொண்டு பெருநகர சென்னை மாநகராட்சி கழிவுநீர் கால்வாய்களை சுத்தம் செய்வதில் தரம் மற்றும் அவைகளை சுத்தம் செய்யும் பணியாளர்களின் பாதுகாப்பு ஆகியவைகளுக்காக திட்டங்கள் தீட்டியுள்ளது. கழிவுநீர் கால்வாய்களில் தொழிலாளர்கள் இறங்கி பணி செய்வதை தடுக்க சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்றல் வாரியம் கழிவு நீர் கால்வாய்களில் தூரினை அகற்றும் பணி மற்றம் அடைப்புகளை நீக்கும் பணி ஆகியவைகளை இயந்திரமயமாக்கியுள்ளது. சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றல் வாரியம், கழிவுநீர் கால்வாய்களை அடைப்புகள் இல்லாமல் பராமரிக்கவும் மற்றும் குழாய்கள் மற்றும் மனித நுழைவாயில்களில் முறையாக அவ்வப்போது தூரினை அகற்றி பராமரிக்கவும், தொழிலாளர்களை பயன்படுத்தாமல் இருக்க கீழ்வரும் இயந்திரங்களை கொள்முதல் செய்துள்ளது.

Sewer Cleaning rods	For removal of sewer blocks
Jet Rodding Machine	For flushing of sewer and removal of sewer blocks
Sewer Suction cum jet rodding maching	For Flushing of sewers, removal of sewer blocks and removal of silt from manholes
Super-sucker Machine	For removal of silt from manholes
Grab Bucket Machine	For removal of silt from manholes
Desilting Machines	For removal of silt from manholes

மேலும், பொதுமக்களையும் முக்கிய அங்கத்தினர்களையும் கழிவுநீர்கால்வாய் சுத்திகரிப்பு மற்றும் சுகாதார பணியாளர்கள், உணவகங்கள், திருமண மண்டபங்கள் மாட்டுத் தொழுவங்கள் போன்ற நிறுவனங்கள் ஆகியவர்களையும் போதுமான நடவடிக்கைகள் எடுப்பது குறித்து உணரச்செய்ய அரசும் ஆரம்ப கட்ட கலந்தறிதல்களை மேற்கொண்டுள்ளது.

நோக்கங்கள்:

இந்த திட்டத்தின் முக்கியமான நோக்கங்களாவன

- பாதுகாப்பான முறையில் கழிவுநீர் கால்வாய்களை சுத்தம் செய்யும் முறைகளை பழக்கவழக்கத்தின் ஒன்றாக கொண்டுவர பயிற்சி அளித்தல்
- அடைப்பு இல்லாத கழிவுநீர் வடிகால் திட்டத்தை பராமரிக்க வேண்டும் என்றும் பொதுமக்களுக்கும் முக்கியமாக அங்கம் வகிப்பவர்களுக்கும் ஒரு உணர்வினை ஏற்படுத்துதல்

இந்த நோக்கங்கள் சென்னை மாநகராட்சியினை இரண்டு கிளைகளை கொண்ட செயல்முறையினை மேற்கொள்ள செய்துள்ளது. இந்த செயல்பாடுகள் சென்னை மாநகரில் அடைப்பு இல்லாது தங்குதடையின் கழிவு நீர் செல்லுமாறு அவைகளை பராமரிக்க கழிவுநீர் கால்வாய்களை சுத்தம் செய்யும் தொழிலாளர்கள் மற்றும் பிற அங்கத்திளர்களுக்கு பாதுகாப்பான கையாளல் மற்றும் தகவல், கல்வி மற்றும் தகவல் பரிமாற்றம்(IEC) ஆகிய இனங்களில் பயிற்சி அளிக்க உத்தேசித்துள்ளது.

செயல்பாடுகள்:

மேற்சொன்ன செயல்பாட்டு முறைகளின் அடிப்படையில் இந்த திட்டத்தின் நோக்கங்களை அடைய கீழ்வரும் செயல்கள் மேற்கொள்ளப்படும்.

1. பெருநகர சென்னை மாநகராட்சியிடம் இருக்கும் விவரங்களைக் கொண்டு சென்னை மாநகரில் கழிவுநீர் சால்வாய்களை சுத்தம் செய்யும் தொழிலாளர்களை கணக்கெடுத்து பட்டியலிடுதல்
2. ஒவ்வொருவரையும் தனித்தனியாக சந்தித்து இதற்கென வடிவமைக்கப்பட்ட படிவத்தை நிரப்புதல்–புள்ளிவிவர வங்கியினை உருவாக்க கணக்கெடுப்பின் மூலம் தேவையான விவரங்களை சேகரித்தல்
3. பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் செயல்பாடுகள் ஆகியவைகைளை அவர்களின் உணர்வில் ஒன்றாக கொண்டுவரவும் மற்றும் தகுந்த முறையில் உடல் நலத்தை பேணும் முறையினை அவர்கள் உணரவும் பயிற்சி அளித்தல்

4. கழிவுநீர் கால்வாய்களை சுத்தம் செய்யும் தொழிலாளர்கள் அவர்களுக்குள் தகவல்களை ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்ளுதல் மற்றும் மற்றும் அவர்களுடைய நடத்தை முறைகளில் மாறுதல் கொண்டுவர அறிவுறைகள் வழங்குதல்
5. அவர்களின் நடத்தையில் தேவையான மாறுதல்கள் ஏற்பட உயர் அளவில் ஆதரவு குழுக்களை அமைத்தல்
6. கழிவுநீர் கால்வாய்களில் ஏற்படும் அடைப்புகளை தவிர்த்தல் குறித்து அங்கத்தினர்கள் பங்கேற்பதை அதிகரிக்க பணிமனைகளை(workshop) நடத்துதல்

எதிர்பார்க்கப்படும் பயன்கள்

இந்த செயல்பாடுகளினால் அறிவு விஸ்தரிக்கப்பட்டு தரமாக கழிவுநீர் கால்வாய்களை பராமரிப்பது குறித்து கழிவுநீர் கால்வாய்களை சுத்தம் செய்யும் தொழிலாளர்கள் மற்றும் முக்கிய பொறுப்பு மிக்க அங்கத்தினர்கள் புரிந்து கொள்வார்கள். இந்த சேவைகளினால் எதிர்பார்க்கப்படும் பயன்கள்:

- அறிவார்ந்த மற்றும் விழிப்புணர்வு கொண்ட பணியாளர்கள் எப்போதும் பாதுகாப்பான முறைகளை கையாள்வார்கள்.
- அடைப்பு இல்லாத கழிவுநீர் கால்வாய் முறையினை பராமரிக்க ஆதரவான வசதிகளை அளிக்க அதிக எண்ணிக்கையில் அங்கத்தினர்கள் கிடைப்பார்கள்.
- நவீனமான மற்றும் தரமான பாதுகாப்பு முறைகளை செயல்படுத்துவதற்காக திறம்பாடான ஒத்த நிலையில் உள்ள தகவல் பரிமாற்ற குழுக்கள் கழிவுநீர் கால்வாய்களை சுத்தம் செய்யும் குழுவில் உருவாகும்.
- உடல் நலம் பேணும் உணர்வு ஏற்படுவதன் மூலம் நோய்கள் வரும்போது உடனடியாக சிகிச்சைக்காக வருபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து உடனடி சிகிச்சை அளிக்கப்படுதல்
- நவீன செயல்முறைகளை ஆதாரத்துடன் திரும்பத் திரும்ப பயிற்சி அளித்தல்.

அளவீடுகள்:

இத்திட்டத்தினால் கிடைக்கும் பயன்களை கீழே சொல்லப்பட்டுள்ள பல்வேறு அளவீடுகள் மூலம் அளவிடலாம்.

- 100 சதவிகித கழிவுநீர் கால்வாய்களை சுத்தம் செய்யும் தொழிலாளர்கள் கணக்கீடு செய்யப்பட்டு அவர்கள் பட்டியலிடப்படுதல்.
- சென்னை மாநகராட்சியில் முழுமையாக இனம் காணப்பட்ட கழிவுநீர் கால்வாய்களை சுத்தம் செய்யும் பணியாளர்களின் பட்டியல்
- 100 சதவிகித கழிவுநீர் கால்வாய்களை சுத்தம் செய்யும் தொழிலாளர்கள் கழிவு நீர் கால்வாய்கள் பராமரிப்பு பணியில் பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் செயல்பாட்டு முறைகளில் பயிற்சி பெற்றவர்களாக இருத்தல்
- கழிவுநீர் கால்வாய்களை சுத்தம் செய்யும் தொழிலாளர்கள் நல்ல முறையில் அணுகும் நடத்தை
- 20 ஒத்த நிலை உள்ள குழுக்கள் அமைக்கப்படுதல் மற்றும் 20 குழுக்கள் தகுந்த சேவைப்பணிகளில் பயிற்சி பெற்றவர்களாக இருத்தல்
- பங்கு பெறும் அங்கத்தினர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்படுதல்.
- கழிவுநீர் குழாய்களை பராமரிப்பதில் அங்கத்தினர்களால் மேற்கொள்ளப்படும் நவீன செயல்பாட்டு முறைகள்.
- சென்னை குடிநீர் மற்றும் தனியார் கழிவு நீர் அகற்றல் சேவை பணிகள் நிறுவனங்கள் உட்பட பொதுமக்கள் மற்றும் ஆதரவு சங்கங்கள் ஆகியவர்களின் எண்ணிக்கை/பட்டியல்
- கழிவுநீர் கால்வாய்களில் ஏற்படும் அடைப்புகளை நீக்குவதில் உதவி எண். 24/7 க்கு செயல்பட்டு உடனடி சேவைகளை வழங்குதல்

திட்ட காலம்:

இந்த திட்ட முன்மொழிவு, தொழிலாளர்கள் மற்றும் முக்கியமான அங்கத்தினர்கள் ஆகியவர்களிடையே அவர்கள் நடந்து கொள்ளும் விதத்தில் ஒரு மாற்றத்தை கொண்டு வருவதை நோக்கமாக கொண்டுள்ளது. நடந்து கொள்ளும் விதத்தில் ஒரு வன்மையான மாற்றத்தை உறுதி

செய்ய இந்த திட்டம் ஒரு குறைந்த பட்ச காலத்திற்கு, அதன் குறிக்கோளை அடைய நடத்தப்பட வேண்டும். திட்டம் ஆரம்பித்த நாளிலிருந்து இந்த உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டம் 18 மாதங்களுக்கு செயல்படுத்தப்பட வேண்டும்.

உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டத்திற்கான விரிவான செயல்பாடுகள் செயல் திட்டத்தில் தரப்பட்டுள்ளன.

திட்ட மேலாண்மை :

இந்த திட்டம் கழிவுநீர் கால்வாய் மேலாண்மையில் அனுபவம் கொண்ட வல்லுநர், பயிற்சி மற்றம் தகவல் அளித்தல் ஆகியவகைகளில் அனுபவம் கொண்ட வல்லுநர், மற்றும் கண்காணித்தல், ஆவணப்படுத்துதல் மற்றும் திட்டத்திற்கான நிதியினை தருவித்தல் மற்றும் நிர்வாகம் செய்தல் ஆகியவைகளில் அனுபவம் உள்ள வல்லுநர் ஆகியவர்களைக் கொண்ட செயல் படுத்தப்டும் முறையினை கொண்டிருக்க வேண்டும்.

இந்த திட்டத்திற்காக பெருநகர சென்னை மாநகராட்சியின் ஆணையரின் நேரடியான கட்டுப்பாட்டிலும் வழிகாட்டலிலும் செயல்படும் ஒரு திட்ட ஒருங்கிணைப்பாளர் இருக்க வேண்டும். அவர், இந்த திட்டத்திற்கு வழிநடத்தும் தலைவராக இருந்து, தகவல், கல்வி மற்றும் தகவல் பரிமாற்றம்(IEC), சுகாதாரம் மற்றும் சமூகத்தை திரட்டுதல் ஆகிய இனங்களில் வல்லமை பெற்றவர்களை கொண்ட குழுவுடன் இணைந்து செயல்பட்டு இந்த திட்டத்தின் செயல்பாடுகளை நிறைவேற்ற வேண்டும். சென்னை குடிநீர் இந்த திட்டத்திற்கும் மற்றும் குழுவிற்கும் தேவையான தொழில் நுட்ப வல்லமையை அளிக்கும் தொழில் நுட்ப ஆலோசகர்களாக இருப்பார்கள். அவர்களின் ஒவ்வொருவரின் பொறுப்பும் கீழ்வருமாறு:

திட்ட ஒருங்கிணைப்பாளர்:

- இந்த திட்டம் செயலாக்கப்படுதல் தொடர்பாக பொருப்பு கொண்டவர் மற்றும் ஆணையருக்கு பதில் சொல்ல கடமை பட்டவர்.
- ஆணையர் அவர்கள் திட்ட முன்னேற்றம் சம்பந்தமாக கேட்கும் கேள்விகளுக்கு பதில் சொல்ல வேண்டும்.
- திட்ட செயல்பாடுகளுக்கு பொறுப்பு கொண்டவராவார்.
- கழிவுநீர் கால்வாய் சுத்தம் செய்யும் தொழிலாளர்களின் பயிற்சி நிகழ்வுகள் சம்பந்தமாக ஏற்பாடுகள் செய்தல் மற்றும் ஒருங்கிணைந்து செயல்படுதல்.
- அங்கத்தினர்களுக்கான பணிமனைகளை நடத்துதல் மற்றும் தொடர் நடவடிக்கைகளை எடுத்தல்
- திட்டமிடல் மற்றும் அனைத்து திட்ட பணியாளர்களின் பணிகளை வராந்திர, மாத மற்றும் காலாண்டு அடிப்படையில் சீராய்வு செய்தல்
- திட்டம் நன்றாக செயல்பட கள மேற்பார்வை மற்றும் ஆதரவு சேவைகளை அவ்வப்போது மேற்பார்வை செய்தல்
- ஆணையருக்கு அவ்வப்போது திட்ட முன்னேற்றம் பற்றிய மற்றும் சீராய்வு பற்றிய தகவல்களை சமர்ப்பித்தல்.

திட்டத்தை இணைந்து செயலாக்குபவர்–சமூகத்தை திரட்டுபவர்.

- கழிவுநீர் கால்வாய்களை சுத்தம் செய்யும் தொழிலாளர்களிடையே ஒத்த நிலையினை வளர்க்கவும் மற்றும் ஒத்த நிலை குழுக்களை அமைக்கவும் பொறுப்பு கொண்டவர்.
- ஒத்த நிலை குழுக்களுடன் அவ்வப்போது அதன் தலைவர்களுடன் கூட்டம் நடத்துதல்.
- பயிற்சி மற்றும் பணிமனைகள் ஏற்பாடு செய்யும் திட்ட ஒருங்கிணைப்பாளரின் பணியில் அவருக்கு உதவி செய்தல்.
- அனைவருக்குள்ளும் ஒரு புரிந்துணர்வினை பராமரிக்கவும் மற்றும் சம்பந்தப்பட்ட துறைகளுடனும் கழிவுநீர் அகற்றல் துறையில் உள்ள தனியார் நிறுவனங்களுடனும் உள்ள தொடர்பினை பலப்படுத்தவும் தேவையான அனைத்து செயல்களையும் மேற்கொள்ள வேண்டும்.
- அவ்வப்போது பயிற்சியின் மீதும் மற்றும் பணிமனைகளின் மீதும் தொடர்ந்து கண்காணித்து அது குறித்து முன்னேற்ற அறிக்கையினை சமர்ப்பித்தல்.

- களத்தில் உள்ள நிலைபற்றிய அறிக்கைகளை தயார் செய்தல் மற்றும் திட்ட ஒருங்கிணைப்பாளருக்கு சீராய்வு கூட்டங்களை நடத்துவதற்கு உதவி செய்தல்.
- மற்ற இரண்டு திட்டத்தை இணைந்து செயலாக்குவர்களுடன் ஒருங்கிணைந்து செயல்படுதல் மற்றும் அவசியமான நேரங்களில் அவர்களில் பொறுப்புகளை பங்கு போட்டு செயலாக்குதல்.
- அனைத்து சம்பந்தப்பட்ட ஆவணங்களையும் மற்றும் பதிவேடுகளையும் பராமரித்து நாளது தேதிவரையில் பதிவு செய்ய வேண்டும்.

திட்டத்தை இணைந்து செயலாக்குபவர்–சுகாதாரம்

- கழிவுநீர் கால்வாய்களை சுத்தம் செய்யும் தொழிலாளர்களுக்கு ஆலோசனைகள் வழங்குதல் மற்றும் அவர்களின் உடல் நலத்தில் அக்கரை செலுத்துதல்–அவ்வப்போது, தவறாமல், தனிப்பட்ட/குழு/குடும்பம் ஆக உள்ளவர்களுக்கு அவர்களின் சுகாதாரத்தை பேணும் உணர்வினை வளர்க்க அறிவுரைகள் வழங்குதல்.
- கழிவுநீர் கால்வாய்களை சுத்தம் செய்யும் தொழிலாளர்களின் உடல் நலம் குறித்து அவ்வப்போது கண்காணிக்க வேண்டும் மற்றும் அவர்களை தகுந்த பரிசோதனைகளுக்காக சுகாதார நிலையங்களுக்கு அனுப்ப வேண்டும்.
- அவ்வாறு சுகாதார நிலையங்களுக்கு அனுப்பப்பட்டவர்களின் உடல் நிலை குறித்தும் மற்றும் அவர்கள் பாதுகாப்பு நடவடிக்கைகளை பின்பற்றுகிறார்களா என்றும் கண்காணிக்க வேண்டும்.
- கழிவுநீர் கால்வாய்களை சுத்தம் செய்யும் தொழிலாளர்களிடையே உள்ள ஒத்த நிலை குழுக்கள் மற்றும் சுகாதார நிலையங்கள் ஆகியவற்றுக்கிடையே உள்ள உறவினை அக்குழுக்களின் தன்னார்வ தொண்டர்களின் மூலம் பலப்படுத்துல்.
- கழிவுநீர் கால்வாய்களை சுத்தம் செய்யும் தொழிலாளர்களுக்கு பாதுகாப்புடன் பணி செய்ய வேண்டும் என்று உணர்வினை அவர்களுக்குள் உருவாக்க, சம்பந்தப்பட்ட திட்டத்தை இணைந்து செயல்படுத்துபவர்–தகவல், கல்வி மற்றும் தகவல் பரிமாற்றம்–(IEC) அவர்களுக்கு உதவி செய்தல்.
- கழிவுநீர் கால்வாய்களை சுத்தம் செய்யும் தொழிலாளர்களை மருத்துவ பரிசோனைக்கு அனுப்பிய நிகழ்வுகள் குறித்து அறிக்கைகள் தயார் செய்து திட்ட ஒருங்கிணைப்பாளருக்கு சீராய்வு செய்வதில் உதவி செய்ய வேண்டும்.
- மற்ற 2 திட்டத்தை இணைந்து செயல்படுத்துபவர்களுடன் ஒருங்கிணைந்து அவசியமான நேரங்களில் அவர்களின் பொருப்புகளை பங்கு போட்டு செயலாக்க வேண்டும்.
- அனைத்து சம்பந்தப்பட்ட ஆவணங்களையும் மற்றும் பதிவேடுகளையும் பராமரித்து நாளது தேதிவரையில் பதிவு செய்ய வேண்டும்.

திட்டத்தை இணைந்து செயல்படுத்துபவர்–தகவல், கல்வி மற்றும் தகவல் பரிமாற்றம்–(IEC) :

- கழிவுநீர் கால்வாய்களை சுத்தம் செய்யும் தொழிலாளர்கள் இந்த திட்ட காலத்திற்குள் பாதுகாப்பு பற்றிய உணர்வடன் நடக்குமாறு கொண்டுவர பொறுப்பாவார்.
- ஒத்த நிலையில் உள்ள குழுக்களிடம் அவ்வப்போது தகவல், கல்வி மற்றும் தகவல் பரிமாற்றம் பற்றிய கூட்டங்களை நடத்துதல்.
- ஆலோசனைகள் மூலம் சுகாதார தகவல்களை கழிவுநீர் கால்வாய்களை சுத்தம் செய்யும் தொழிலாளர்களுக்கு தெரிவிக்க திட்டத்தை இணைந்து செயல்படுத்துவர்–சுகாதாரம் அவர்களுக்கு உதவி செய்தல்
- கழிவுநீர் கால்வாய்களை சுத்தம் செய்யும் தொழிலாளர்களிடம் பாதுகாப்பு பற்றிய உணர்வுடன் அவர்கள் நடந்து கொள்ள தகவல், கல்வி மற்றும் தகவல் பரிமாற்றத்திற்காக சுகாதார மற்றும் பிற சம்பந்தப்பட்ட துறைகளுடன் தொடர்பு ஏற்படுத்துதல்
- கழிவுநீர் கால்வாய்களை சுத்தம் செய்யும் தொழிலாளர்கள் அவர்கள் உடல் நலத்தின் முக்கியத்துவம் பற்றிய உணர்வு பெற மாதிரி மற்றும் எளிமையான தகவல்களை தயார் செய்தல்.
- திட்ட நடைமுறை ஆவணங்கள், சிறந்த செயல்பாட்டுமுறைகள், மற்றம் நிகழ்வுகளின் ஆய்வின் அடிப்படையில் திட்டம் தொடர்ந்து செயல்படவும் நிலைத்து நீடிக்கவும் தேவையான

அத்தாட்சிகள் தொடர்பான அறிக்கைகள் தயார் செய்ய திட்ட ஒருங்கிணைப்பாளருக்கு உதவி செய்ய வேண்டும்.

- சீராய்விற்காக தகவல், கல்வி மற்றும் தகவல் பரிமாற்றம் பற்றிய அறிக்கைகள் தயார் செய்தல்.
- அனைத்து திட்ட அறிக்கைகளை தயார் செய்தல் மற்றும் அவைகளை உரிய நேரத்தில் சமர்ப்பித்தல் வேண்டும்.
- மற்ற 2 திட்டத்தை இணைந்து செயல்படுத்துபவர்களுடன் ஒருங்கிணைந்து அவசியமான நேரங்களில் அவர்களின் பொருப்புகளை பங்கு போட்டு செயலாக்க வேண்டும்.
- அனைத்து சம்பந்தப்பட்ட ஆவணங்களையும் மற்றும் பதிவேடுகளையும் பராமரித்து நாளது தேதிவரையில் பதிவு செய்ய வேண்டும்.

கணக்காளர்:

- இந்த திட்டத்திற்கான அனைத்து நிதி பரிவர்த்தனைகளுக்கும் பொருப்பாவார்.
- அனைத்து நிதி பரிவர்த்தனைகளுக்கும் சம்பந்தப்பட்ட பதிவேடுகள், ஆவணங்கள் பராமரிக்க வேண்டும்.
- திட்ட ஒருங்கிணைப்பாளருக்கு வரவு செலவு நிதி ஒதுக்கீட்டில் உள்ள நிதி பற்றிய அறிக்கைகளையும் மற்றும் செலவினங்களுக்கான விதிமுறைகள் மற்றும் நடைமுறைகள் ஆகியவைகளைப்பற்றி திட்ட ஒருங்கிணைப்பாளருக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.
- திட்டத்திற்கான மாதாந்திர நிதி அறிக்கை மற்றும் அட்டவணைகள்(Statements), தயாரித்து சமர்ப்பிக்க வேண்டும்.
- தகுதியான அனைத்து செலவினங்களையும் உரிய காலத்தில் மேற்கொண்டு அதற்கான தகுந்த பதிவேடுகளை பராமரிக்க வேண்டும்.
- அனைத்து நிதி சம்பந்தமான பரிவர்த்தனைகளுக்கு ரசீது மற்றும் செலவு சீட்டுகள் பெறப்பட வேண்டும்.
- கேட்கப்படும் போது உள்நிர்வாக தணிக்கை மற்றும் வெளியார் தணிக்கை ஆகியவைகளுக்கு கணக்குகளை சமர்ப்பிக்க வேண்டும்.
- திட்ட ஒருங்கிணைப்பாளரால் வழங்கப்படும் இன்ன பிற பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

திட்ட ஒருங்கிணைப்பாளர் திட்டம் இடையூறின்றி செயல்படுவதை உறுதி செய்து, இந்த திட்டத்தின் கீழ் வழங்கப்படும் சேவைகளின் தரத்தினை கண்காணிக்க வேண்டும்.

இந்த திட்டத்தின் பணியாளர்களுக்கு பொருத்தமான கல்வி தகுதி மற்றும் அவர்களுக்கான ஊதியங்கள்.

திட்ட ஒருங்கிணைப்பாளர்

சமூகப்பணி /சமூக அறிவியலில் முதுகலைப்பட்டம் இத்துடன் ஒரு திட்டத்தின் தலைமை பதவியில் 5 ஆண்டுகள் பணியாற்றிய அனுபவம்–ஒரு மாதத்திற்கு ரூ.30,000/– தொகுப்பூதியம்

திட்டத்தை இணைந்து செயலாக்குபவர்–சமூகவிழிப்புணர்வு ஏற்படுத்துபவர்

சமூகப்பணி /சமூக அறிவியலில் முதுகலைப்பட்டம் இத்துடன் ஒரு திட்டத்தில் இணைந்து செயல்படுவதில் 2–3 ஆண்டுகள் அனுபவம்–ஒரு மாதத்திற்கு ரூ.20,000/– தொகுப்பூதியம்

திட்டத்தை இணைந்து செயலாக்குபவர்–சுகாதாரம்

சமூகப்பணி /சமூக அறிவியல்/பொது சுகாதாரத்தில் முதுகலைப்பட்டம் ஒரு திட்டத்தில் இணைந்து செயல்பட்டு ஆலோசனைகள் வழங்குவதில் 2–3 ஆண்டுகள் அனுபவம்–ஒரு மாதத்திற்கு ரூ.20,000/– தொகுப்பூதியம்

திட்டத்தை இணைந்து செயலாக்குபவர்–தகவல், கல்வி மற்றும் தகவல் பரிமாற்றம்

சமூகப்பணி /தகவல் பரிமாற்றம்/இதழியல்/பொது சுகாதாரத்தில் முதுகலைப்பட்டம் இத்துடன் கல்வி மற்றும் தகவல் பரிமாற்றத்தில் நிபுணத்துவம் மற்றும் தகவல் பரிமாற்ற நடவடிக்கைகளில் ஒரு திட்டத்தில் இணைந்து செயலாக்கியதில் 2–3 ஆண்டுகள் அனுபவம்– ஒரு மாதத்திற்கு ரூ.20,000/– தொகுப்பூதியம்

கணக்காளர்:

வணிகவியலில் இளங்கலை பட்டப்படிப்பு இத்துடன் ஒரு திட்டத்தில் இணைந்து கணக்குத்துறையில் சுயமாக பணிசெய்ததில் 2–3 ஆண்டுகள் அனுபவம் – ஒரு மாதத்திற்கு ரூ.15,000/– தொகுப்பூதியம் இந்த திட்டத்தை கண்காணிக்கும் முறையின் ஒரு பகுதியாக, கீழ்க்கண்ட ஆவணங்களை இந்த திட்டம் அளிக்க வேண்டும்.

- திட்டம் பற்றிய புரிந்துணர்வு அறிக்கை(Project Inception Report)
- மாதாந்திர திட்ட முன்னேற்ற அறிக்கைகள்
- காலாண்டு சீராய்வு அறிக்கைகள்
- நடைமுறை ஆவணங்கள் (Process Documentation)

திட்டம் நீடித்து நிலையாக இருக்க, ஒத்த நிலை குழுக்கள்(Peer Groups) மற்றும் அங்கத்தினர்களை ஒரு வலையத்திற்குள்(networking) கொண்டு வருதல் இத்திட்டத்திற்கு அடிப்படையாக அமையும்.

மேலும் இந்த திட்டம் தொடர்பாக பாதுகாப்பு உபகரணங்கள் கொள்முதல் செய்யவும் பயிற்சி வகுப்புகள் நடத்தவும் மற்றும் பிற செலவினங்களுக்குமாக இத்திட்டத்திற்கு உத்தேசிக்கப்பட்ட தோராய செலவினம் 18 மாதங்களுக்கு ரூ.25,00,000/– என மதிப்பிடப்படுகிறது.

எனவே, மேற்சொன்ன திட்டத்தை சென்னை மாநகரில் உள்ள கழிவு நீர் கால்வாய் மற்றும் மழைநீர் வடிகால்வாய்களை சுத்தம் செய்யும் பணியாளர்களின் நலன் கருதி மேற்கொள்ளப்படும் இந்த திட்டத்தை செயலாக்க மன்றத்தின் கொள்கை அளவிலான அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

2016–2017ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை கூட்டம் நடைபெறுவதால், இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

க.து.ந.க.எண்.பி1/394/2016

ஆணையர் அவர்களின் 26.02.2016 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.258/2016 **பொருள் எண்.112**

மண்டலம்–1, வார்டு–2, கத்திவாக்கத்தில் மீன் அங்காடி கட்டும் பணிக்கான மதிப்பீட்டிற்கு அனுமதி

வார்டு எண் :2 **மண்டலம் :** 1

பணியின் பெயர்.	மண்டலம்–1, வார்டு–2, கத்திவாக்கத்தில் மீன் அங்காடி கட்டும் பணி
பரிந்துரை செய்தவரின் விவரம்	மாண்புமிகு மேயர்
எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம்	மண்டலம்–1
சம்பந்தப்பட்ட துறையால் அனுமதி	பெறப்பட்டுள்ளது
தொழில் நுட்ப அனுமதி அளித்த அதிகாரி செயல்முறை ஆணை	தலைமை பொறியாளர் (கட்டடம்) T.S.No.43/2015-16
மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப்பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது	2015 -2016 ஆம் அலுவலக விலை விவரப்படி
மதிப்பீட்டின் தொகை	ரூ. 2,49,00,000.00
(அ) கட்டுமான பணி செலவு	ரூ. 2,11,92,466.09
(ஆ) மேலான மேற்பார்வை செலவு	ரூ. 21,19,246.61
(இ) சிறு மேற்பார்வை செலவு	ரூ. 5,29,811.65
(ஈ) எதிர்பாரா செலவு	ரூ. 6,04,626.33
(உ) தமிழ்நாடு கட்டுமாண தொழிலாளர்கள் நல வாரியம் 1%	ரூ. 2,11,924.66
(ஊ) தர நிர்ணயம்	ரூ. 2,11,924.66
(எ) மின்சாரம்	ரூ. 30,000.00
மொத்தம்	ரூ. 2,49,00,000.00
வரைபடம் வைக்கப்பட்டுள்ளதா	ஆம்
மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளித்த வார்டு குழுவின் தீர்மான எண் மற்றும் நாள்	பெறப்படவுள்ளது
ஏற்கனவே எப்போது செய்யப்பட்டது	புதிய பணி
நிதியின் தன்மை	Under TNFDC Scheme for construction of retail / wholesale fish markets
இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி	ரூ. 2,49,00,000.00

மேற்கண்ட பணிக்காக 2015-2016 ஆம் அலுவலக விலை விவரப்படி ரூ.2,49,00,000/- (ரூபாய் இரண்டு கோடியே நாற்த்தொன்பது இலட்சம் மட்டும்) தயாரிக்கப்பட்டுள்ள திட்ட மதிப்பீட்டிற்கு தமிழ்நாடு அரசு சிறப்பிதழ் எண்.6/2008, நாள்.26.08.2008ல் வெளியிடப்பட்டுள்ள கூடுதல் அதிகாரங்களின்படி பெருநகர சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம் விதி 1919ல் விதி (78)ன்படி மன்றத்தின் அனுமதியும், இப்பணிக்காக TNFDC நிதி–40% பெறப்பட்ட பின்னர் ஒப்பம் கோருவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

2016–2017ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை கூட்டம் நடைபெறுவதால், இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

க.து.ந.க.எண்.பி1/395/2016

ஆணையர் அவர்களின் 26.02.2016 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.259/2016 **பொருள் எண்.113**

மண்டலம்–1, வார்டு–9, பட்டினத்தார் கோயில் தெருவில் மீன் அங்காடி கட்டும் பணிக்கான மதிப்பீட்டிற்கு அனுமதி

வார்டு எண் :9 **மண்டலம்:**1

பணியின் பெயர்.	மண்டலம்–1,வார்டு–9, பட்டினத்தார் கோயில் தெருவில் மீன் அங்காடி கட்டும் பணி
பரிந்துரை செய்தவரின் விவரம்	மாண்புமிகு மேயர்
எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம்	மண்டலம்–1
சம்பந்தப்பட்ட துறையால் அனுமதி	பெறப்பட்டுள்ளது
தொழில் நுட்ப அனுமதி அளித்த அதிகாரி செயல்முறை ஆணை	தலைமை பொறியாளர் (கட்டடம்) T.S.No.44/2015-16
மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப்பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது	2015 -2016 ஆம் அலுவலக விலை விவரப்படி
மதிப்பீட்டின் தொகை	ரூ. 3,08,00,000.00
(அ) கட்டுமான பணி செலவு	ரூ. 2,62,99,313.77
(ஆ) மேலான மேற்பார்வை செலவு	ரூ. 26,29,931.38
(இ) சிறு மேற்பார்வை செலவு	ரூ. 6,57,482.84
(ஈ) எதிர்பாரா செலவு	ரூ. 6,57,285.73
(உ) தமிழ்நாடு கட்டுமாண தொழிலாளர்கள் நல வாரியம் 1%	ரூ. 2,62,993.14
(ஊ) தர நிர்ணயம்	ரூ. 2,62,993.14
(எ) மின்சாரம்	ரூ. 30,000.00
மொத்தம்	ரூ. 3,08,00,000.00
வரைபடம் வைக்கப்பட்டுள்ளதா	ஆம்
மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளித்த வார்டு குழுவின் தீர்மான எண் மற்றும் நாள்	பெறப்படவுள்ளது
ஏற்கனவே எப்போது செய்யப்பட்டது	புதிய பணி
நிதியின் தன்மை	Under TNFDC Scheme for construction of retail / wholesale fish markets

மேற்கண்ட பணிக்காக 2015-2016 ஆம் அலுவலக விலை விவரப்படி ரூ.3,08,00,000/- (ரூபாய் மூன்று கோடியே எட்டு இலட்சம் மட்டும்) தயாரிக்கப்பட்டுள்ள திட்ட மதிப்பீட்டிற்கு தமிழ்நாடு அரசு சிறப்பிதழ் எண்.6/2008, நாள்.26.08.2008ல் வெளியிடப்பட்டுள்ள கூடுதல் அதிகாரங்களின்படி பெருநகர சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம் விதி 1919ல் விதி (78)ன்படி மன்றத்தின் அனுமதியும், இப்பணிக்காக TNFDC நிதி–40% பெறப்பட்ட பின்னர் ஒப்பம் கோருவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

2016–2017ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை கூட்டம் நடைபெறுவதால், இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

க.து.ந.க.எண்.பி1/511/2016

ஆணையர் அவர்களின் 26.02.2016 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.260/2016 **பொருள் எண்.114**

மண்டலம்–5, வார்டு–58, கண்ணப்பர் திடலில் வர்த்தக வளாகம் (தரைதளம் மற்றும் முதல் தளம்) கட்டும்பணிக்கான மதிப்பீட்டிற்கு அனுமதி

வார்டு எண் :58 **மண்டலம் : 5**

பணியின் பெயர்.	மண்டலம்–5, வார்டு–58, கண்ணப்பர் திடலில் வர்த்தக வளாகம் (தரைதளம் மற்றும் முதல் தளம்) கட்டும் பணி
பரிந்துரை செய்தவரின் விவரம்	மாண்புமிகு மேயர்
எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம்	மண்டலம்–5
சம்பந்தப்பட்ட துறையால் அனுமதி	பெறப்பட்டுள்ளது
தொழில் நுட்ப அனுமதி அளித்த அதிகாரி செயல்முறை ஆணை மற்றும் நாள்	தலைமைப் பொறியாளர் (கட்டடம்) T.S.No. /2015-16, நாள். .02.2016 பின்னர் பெறப்படும்.
மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப்பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது	2015-2016 ஆம் ஆண்டின் பொதுப் பணித்துறையின் தோராய தரை பரப்பளவு விலைப்பட்டியல்களின் அடிப்படை விவரப்படி
மதிப்பீட்டின் தொகை	ரூ. 9,97,50,000.00
(அ) கட்டுமான பணி செலவு	ரூ . 8,10,08,630.00
(ஆ) மேலான மேற்பார்வை செலவு	ரூ. 81,00,863.00
(இ) சிறு மேற்பார்வை செலவு	ரூ. 20,25,215.75
(ஈ) கலந்தறிதர் கட்டணம்	ரூ. 40,50,431.50
(உ) தமிழ்நாடு கட்டுமாண தொழிலாளர்கள் நல வாரியம் 1%	ரூ. 8,10,086.30
(எ) தர நிர்ணயம்	ரூ. 8,10,086.30
(ஏ) எதிர்பாரா செலவு	ரூ. 20,34,600.85
(ஐ) மின்சாரம்/குடிநீர் மற்ற பிற இனங்கள்	ரூ. 1,00,000.00
(ஒ) மற்ற பிற இனங்கள்	ரூ. 8,10,086.30
மொத்தம்	ரூ. 9,97,50,000.00
ரபடம் வைக்கப்பட்டுள்ளதா	ஆம். இதில் கூடைப்பந்து மற்றும் இறகு பந்து மைதானம் வணிக வளாகத்துடன் அமைக்கப்படும்.
மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளித்த வார்டு குழுவின் தீர்மான எண் மற்றும் நாள்	பெறப்படவுள்ளது
ஏற்கனவே எப்போது செய்யப்பட்டது	புதிய பணி
நிதியின் தன்மை	மூலதனநிதி

மேற்கண்ட பணிக்காக பொதுப்பணித்துறையின் தோராய தரை பரப்பளவு விலைப்பட்டியல்களின் அடிப்படையில் ரூ.9,97,50,000/–க்கு (ரூபாய் ஒன்பது கோடியே தொண்ணூற்று ஏழு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) தயாரிக்கப்பட்டுள்ள தோராய திட்ட மதிப்பீட்டிற்கு தமிழ்நாடு அரசு சிறப்பிதழ் எண்.6/2008, நாள்.26.08.2008ல் வெளியிடப்பட்டுள்ள கூடுதல் அதிகாரங்களின்படி பெருநகர சென்னை மாநகர முனிசிபல் சட்டம் விதி 1919ல் விதி (78)ன்படி மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

2016–2017ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை கூட்டம் நடைபெறுவதால், இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

****

க.து.ந.க.எண்.பி1/403 /2016

ஆணையர் அவர்களின் 26.02.2016 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.261/2016 **பொருள் எண்.115**

மண்டலம்–5, வார்டு–58, ரிப்பன் மாளிகை வளாகத்தில் உள்ள வருவாய் துறை கட்டடத்தை முழுவதும் புதுப்பிக்கும் பணிக்கான மதிப்பீட்டிற்கு அனுமதி

வார்டு எண் :58 **மண்டலம் :** 5

பணியின் பெயர்.	மண்டலம்–5, வார்டு–58, ரிப்பன் மாளிகை வளாகத்தில் உள்ள வருவாய் துறை கட்டடத்தை முழுவதும் புதுப்பிக்கும் பணி
பரிந்துரை செய்தவரின் விவரம்	துணை ஆணையர்(வ(மு)நிதி)
எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம்	மண்டலம்–5
சம்பந்தப்பட்ட துறையால் அனுமதி	பெறப்பட்டுள்ளது
தொழில் நுட்ப அனுமதி அளித்த அதிகாரி செயல்முறை ஆணை மற்றும் நாள்	தலைமை பொறியாளர் (கட்டடம்) T.S.No.49/2015-16
மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப்பட்யலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது	2015 -2016 ஆம் அலுவலக விலை விவரப்படி
மதிப்பீட்டின் தொகை	ரூ. 2,91,00,000.00
(அ) கட்டுமான பணி செலவு	ரூ. 2,46,40,059.71
(ஆ) மேலான மேற்பார்வை செலவு	ரூ. 24,64,005.97
(இ) சிறு மேற்பார்வை செலவு	ரூ. 6,16,001.49
(ஈ) எதிர்பாரா செலவு	ரூ. 6,15,731.03
(உ) தமிழ்நாடு கட்டுமாண தொழிலாளர்கள் நல வாரியம் 1%	ரூ. 2,46,400.60
(ஊ) தர நிர்ணயம்	ரூ. 2,46,400.60
(எ) மாற்று ஏற்பாடுகள் பணி	ரூ. 25,000.00
(ஏ) மற்ற பிற இனங்கள்	ரூ. 2,46,400.60
மொத்தம்	ரூ. 2,91,00,000.00
வரைபடம் வைக்கப்பட்டுள்ளதா	ஆம்
மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளித்த வார்டு குழுவின் தீர்மான எண் மற்றும் நாள்	பெறப்படவுள்ளது
ஏற்கனவே எப்போது செய்யப்பட்டது	புதிய பணி
நிதியின் தன்மை	மூலதனநிதி

மேற்கண்ட பணிக்காக 2015-2016 ஆம் அலுவலக விலை விவரப்படி ரூ.2,91,00,000/- (ரூபாய் இரண்டு கோடியே தொண்ணூற்று ஒரு இலட்சம் மட்டும்) தயாரிக்கப்பட்டுள்ள திட்ட மதிப்பீட்டிற்கு தமிழ்நாடு அரசு சிறப்பிதழ் எண்.6/2008, நாள்.26.08.2008ல் வெளியிடப்பட்டுள்ள கூடுதல் அதிகாரங்களின்படி பெருநகர சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம் விதி 1919ல் விதி (78)ன்படி மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

2016–2017ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை கூட்டம் நடைபெறுவதால், இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

க.து.ந.க.எண்.பி1/441/2016

ஆணையர் அவர்களின் 26.02.2016 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.262/2016 **பொருள் எண்.116**

மண்டலம்–5, வார்டு–61, எழும்பூர், வெங்கு தெருவில் உள்விளையாட்டு அரங்கம் கட்டும் பணிக்கான மதிப்பீட்டிற்கு அனுமதி

வார்டு எண் :61 **மண்டலம் : 5**

பணியின் பெயர்	மண்டலம்–5, வார்டு–61, எழும்பூர், வெங்கு தெருவில் உள்விளையாட்டு அரங்கம் கட்டும் பணி
பரிந்துரை செய்தவரின் விவரம்	மாண்புமிகு மேயர்
எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம்	மண்டலம்–5
சம்பந்தப்பட்ட துறையால் அனுமதி	பெறப்பட்டுள்ளது
தொழில் நுட்ப அனுமதி அளித்த அதிகாரி செயல்முறை ஆணை	தலைமை பொறியாளர் (கட்டடம்) T.S.No.48/2015-16,
மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப்பட்யலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது	2015 -2016ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி
மதிப்பீட்டின் தொகை	ரூ. 7,35,00,000.00
(அ) கட்டுமான பணி செலவு	ரூ. 6,07,58,650.39
(ஆ) மேலான மேற்பார்வை செலவு	ரூ. 60,75,865.04
(இ) சிறு மேற்பார்வை செலவு	ரூ. 15,18,966.26
(ஈ) எதிர்பாரா செலவு	ரூ. 15,17,474.81
(உ) தமிழ்நாடு கட்டுமாண தொழிலாளர்கள் நல வாரியம் 1%	ரூ. 6,07,586.50
(ஊ) கலந்தறி கட்டணம்	ரூ. 30,21,457.00
மொத்தம்	ரூ. 7,35,00,000.00
வரைபடம் வைக்கப்பட்டுள்ளதா	ஆம்
மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளித்த வார்டு குழுவின் தீர்மான எண் மற்றும் நாள்	பெறப்படவுள்ளது
ஏற்கனவே எப்போது செய்யப்பட்டது	புதிய பணி
நிதியின் தன்மை	மூலதனநிதி
இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி	ரூ. 7,35,00,000.00

மேற்கண்ட பணிக்காக 2015-2016ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி ரூ.7,35,00,000/–க்கு (ரூபாய் ஏழு கோடியே முப்பத்தைந்து இலட்சம் மட்டும்) தயாரிக்கப்பட்டுள்ள திட்ட மதிப்பீட்டிற்கு தமிழ்நாடு அரசு சிறப்பிதழ் எண்.6/2008, நாள்.26.08.2008ல் வெளியிடப்பட்டுள்ள கூடுதல் அதிகாரங்களின்படி பெருநகர சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம் விதி 1919ல் விதி (78)ன்படி மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

2016–2017ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை கூட்டம் நடைபெறுவதால், இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

க.து.ந.க.எண்.பி1/397/2016

ஆணையர் அவர்களின் 26.02.2016 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.263/2016 **பொருள் எண்.117**

மண்டலம்–6, வார்டு–74, நம்மாள்வார் பேட்டையில் சில்லறை மீன் அங்காடி கட்டும் பணிக்கான மதிப்பீட்டிற்கு அனுமதி

வார்டு எண் :74 **மண்டலம் :6**

பணியின் பெயர்.	மண்டலம்–6, வார்டு–74, நம்மாள்வார் பேட்டையில் சில்லறை மீன் அங்காடி கட்டும் பணி
பரிந்துரை செய்தவரின் விவரம்	மாண்புமிகு மேயர்
எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம்	மண்டலம்–6
சம்பந்தப்பட்ட துறையால் அனுமதி	பெறப்பட்டுள்ளது
தொழில் நுட்ப அனுமதி அளித்த அதிகாரி செயல்முறை ஆணை	தலைமை பொறியாளர் (கட்டடம்) T.S.No.46/2015-16
மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப்பட்யலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது	2015 -2016 ஆம் அலுவலக விலை விவரப்படி
மதிப்பீட்டின் தொகை	ரூ. 1,48,80,000.00
(அ) கட்டுமான பணி செலவு	ரூ. 1,26,92,363.34
(ஆ) மேலான மேற்பார்வை செலவு	ரூ. 12,69,236.33
(இ) சிறு மேற்பார்வை செலவு	ரூ. 3,17,309.08
(ஈ) எதிர்பாரா செலவு	ரூ. 3,17,243.99
(உ) தமிழ்நாடு கட்டுமாண தொழிலாளர்கள் நல வாரியம் 1%	ரூ. 1,26,923.63
(ஊ) தர நிர்ணயம்	ரூ. 1,26,923.63
(எ) மின்சாரம்	ரூ. 30,000.00
மொத்தம்	ரூ. 1,48,80,000.00
வரைபடம் வைக்கப்பட்டுள்ளதா	ஆம்
மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளித்த வார்டு குழுவின் தீர்மான எண் மற்றும் நாள்	பெறப்படவுள்ளது
ஏற்கனவே எப்போது செய்யப்பட்டது	புதிய பணி
நிதியின் தன்மை	Under TNFDC Scheme for construction of retail / wholesale fish markets

மேற்கண்ட பணிக்காக 2015-2016 ஆம் அலுவலக விலை விவரப்படி ரூ.1,48,80,000/- (ரூபாய் ஒரு கோடியே நாற்பத்தெட்டு இலட்சத்து என்பதாயிரம் மட்டும்) தயாரிக்கப்பட்டுள்ள திட்ட மதிப்பீட்டிற்கு தமிழ்நாடு அரசு சிறப்பிதழ் எண்.6/2008, நாள்.26.08.2008ல் வெளியிடப்பட்டுள்ள கூடுதல் அதிகாரங்களின்படி பெருநகர சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம் விதி 1919ல் விதி (78)ன்படி மன்றத்தின் அனுமதியும், இப்பணிக்காக TNFDC நிதி–40% பெறப்பட்ட பின்னர் ஒப்பம் கோருவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

2016–2017ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை கூட்டம் நடைபெறுவதால், இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

க.து.ந.க.எண்.பி2/434/2016

ஆணையர் அவர்களின் 26.02.2016 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.264/2016 **பொருள் எண்.118**

மண்டலம்–10, பகுதி–30, வார்டு–142, சைதாப்பேட்டை, கோடம்பாக்கம் சாலையில் உள்ள மாந்தோப்பு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் உள்விளையாட்டு அரங்கம் கட்டும் பணிக்கான மதிப்பீட்டிற்கு அனுமதி

வார்டு எண் :142 **மண்டலம் : 10**

பணியின் பெயர்	மண்டலம்–10, பகுதி–30, வார்டு–142, சைதாப்பேட்டை, கோடம்பாக்கம் சாலையில் உள்ள மாந்தோப்பு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் உள்விளையாட்டு அரங்கம் கட்டும் பணி
பரிந்துரை செய்தவரின் விவரம்	மாண்புமிகு மேயர்
எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம்	மண்டலம்–10
சம்பந்தப்பட்ட துறையால் அனுமதி	பெறப்பட்டுள்ளது
தொழில் நுட்ப அனுமதி அளித்த அதிகாரி செயல்முறை ஆணை	தலைமை பொறியாளர் (கட்டடம்) T.S.No.47/2015-16
மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப்பட்யலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது	2015 -2016 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி
மதிப்பீட்டின் தொகை	ரூ.5,27,70,000.00
(அ) கட்டுமான பணி செலவு	ரூ. 4,32,13,240.24
(ஆ) மேலான மேற்பார்வை செலவு	ரூ. 43,21,324.02
(இ) சிறு மேற்பார்வை செலவு	ரூ. 10,80,331.01
(ஈ) தர நிர்ணயம் 1%	ரூ. 4,32,132.40
(உ) தமிழ்நாடு கட்டுமாண தொழிலாளர்கள் நல வாரியம் 1%	ரூ. 4,32,132.40
(ஊ) எதிர்பாரா செலவு	ரூ. 10,80,177.92
(எ) கலந்தறி கட்டணம்	ரூ. 21,60,662.01
(ஏ) மின்சார இணைப்பு கட்டணம்	ரூ. 50,000.00
மொத்தம்	**ரூ.**5,27,70,000.00
வரைபடம் வைக்கப்பட்டுள்ளதா	ஆம்
மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளித்த வார்டு குழுவின் தீர்மான எண் மற்றும் நாள்	பெறப்படவுள்ளது
ஏற்கனவே எப்போது செய்யப்பட்டது	புதிய பணி
நிதியின் தன்மை	மூலதனநிதி

மேற்கண்ட பணிக்காக 2015-2016ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி ரூ.5,27,70,000/–க்கு (ரூபாய் ஐந்து கோடியே இருபத்தேழு இலட்சத்து எழுபதாயிரம் மட்டும்) தயாரிக்கப்பட்டுள்ள திட்ட மதிப்பீட்டிற்கு தமிழ்நாடு அரசு சிறப்பிதழ் எண்.6/2008, நாள்.26.08.2008ல் வெளியிடப்பட்டுள்ள கூடுதல் அதிகாரங்களின்படி பெருநகர சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம் விதி 1919ல் விதி (78)ன்படி நிலைக்குழுக்கள் (பணிகள்) மற்றும் (வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

2016–2017ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை கூட்டம் நடைபெறுவதால், இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

க.து.ந.க.எண்.பி1/398/2016

ஆணையர் அவர்களின் 26.02.2016 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.265/2016 **பொருள் எண்.119**

மண்டலம்–11, வார்டு–150, காரம்பாக்கம் காந்தி நகரில் சில்லறை மீன் அங்காடி கட்டும் பணிக்கான மதிப்பீட்டிற்கு அனுமதி

வார்டு எண் :150 **மண்டலம் :** 11

பணியின் பெயர்.	மண்டலம்–11,வார்டு–150, காரம்பாக்கம் காந்தி நகரில் சில்லறை மீன் அங்காடி கட்டும் பணி
பரிந்துரை செய்தவரின் விவரம்	மாண்புமிகு மேயர்
எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம்	மண்டலம்–11
சம்பந்தப்பட்ட துறையால் அனுமதி	பெறப்பட்டுள்ளது
தொழில் நுட்ப அனுமதி அளித்த அதிகாரி செயல்முறை ஆணை	தலைமை பொறியாளர் (கட்டடம்) T.S.No.42/2015-16
மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப்பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது	2015 -2016 ஆம் அலுவலக விலை விவரப்படி
மதிப்பீட்டின் தொகை	ரூ. 1,01,00,000.00
(அ) கட்டுமான பணி செலவு	ரூ. 85,96,490.28
(ஆ) மேலான மேற்பார்வை செலவு	ரூ. 8,59,649.03
(இ) சிறு மேற்பார்வை செலவு	ரூ. 2,14,912.26
(ஈ) எதிர்பாரா செலவு	ரூ. 2,07,018.63
(உ) தமிழ்நாடு கட்டுமாண தொழிலாளர்கள் நல வாரியம் 1%	ரூ. 85,964.90
(ஊ) தர நிர்ணயம்	ரூ. 85,964.90
(எ) மின்சாரம்	ரூ. 50,000.00
மொத்தம்	ரூ. 1,01,00,000.00
வரைபடம் வைக்கப்பட்டுள்ளதா	ஆம்
மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளித்த வார்டு குழுவின் தீர்மான எண் மற்றும் நாள்	பெறப்படவுள்ளது
ஏற்கனவே எப்போது செய்யப்பட்டது	புதிய பணி
நிதியின் தன்மை	Under TNFDC Scheme for construction of retail / wholesale fish markets

மேற்கண்ட பணிக்காக 2015-2016 ஆம் அலுவலக விலை விவரப்படி ரூ.1,01,00,000/- (ரூபாய் ஒரு கோடியே ஒரு இலட்சம் மட்டும்) தயாரிக்கப்பட்டுள்ள திட்ட மதிப்பீட்டிற்கு தமிழ்நாடு அரசு சிறப்பிதழ் எண்.6/2008, நாள்.26.08.2008ல் வெளியிடப்பட்டுள்ள கூடுதல் அதிகாரங்களின்படி பெருநகர சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம் விதி 1919ல் விதி (78)ன்படி மன்றத்தின் அனுமதியும், இப்பணிக்காக TNFDC நிதி–40% பெறப்பட்ட பின்னர் ஒப்பம் கோருவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

2016–2017ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை கூட்டம் நடைபெறுவதால், இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

க.து.ந.க.எண்.பி10/839/2015

ஆணையர் அவர்களின் 26.02.2016 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.266/2016 **பொருள் எண்.120**

மண்டலம்–10, வார்டு–136, தியாகராய நகர், சிவஞானம் தெருவில் அடித்தளத்தில் இரு சக்கர வாகன நிறுத்துமிடம் மற்றும் மூன்று தளங்களில் நான்கு சக்கர வாகன நிறுத்துமிடம் கட்டும் பணி என்பதற்கு பதிலாக மண்டலம்–10, வார்டு–136, தியாகராய நகர், சிவஞானம் தெருவில் அடித்தளத்தில் இரு சக்கர வாகன நிறுத்துமிடம் மற்றும் தரை தளம் மற்றும் ஆறு தளங்களில் நான்கு சக்கர வாகன நிறுத்துமிடம் கட்டும் பணி என திருத்தம் செய்ய மன்றத்தின் அனுமதி

வார்டு எண் : 136 **மண்டலம் : 10**

ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட மன்ற தீர்மானத்தின்படி மண்டலம்–10, வார்டு–136, தியாகராய நகர், சிவஞானம் தெருவில் அடித்தளத்தில் இரு சக்கர வாகன நிறுத்துமிடம் மற்றும் ஆறு தளங்களில் நான்கு சக்கர வாகன நிறுத்துமிடம் கட்டும் பணிக்காக பொதுப்பணித்துறையின் தோராய தரை பரப்பளவு விலைப் பட்டியல்களின் அடிப்படையில் திட்ட மதிப்பீடு ரூ.23,42,00,000/-க்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு அரசின் நிர்வாக அனுமதியும், இத்திட்டத்திற்கு ஹட்கோ போன்ற நிதி நிறுவனங்களிடம் கடன் பெற்று ஒப்பம் கோரவும் அரசின் ஒப்புதல் பெற அரசுக்கு குறிப்பு அனுப்ப மன்றத்தின் அனுமதி பெறப்பட்டு, தேவையான ஆவணங்கள் இணைக்கப்பட்டு அரசுக்கு கடிதம் அனுப்பப்பட்டது.

அரசு கடிதத்தில், 10.02.2016 நாளிட்ட கடிதத்தின் மூலம் பெறப்பட்ட இத்திட்டத்திற்கான திட்ட மதிப்பீட்டில் அடித்தளம், தரைதளம் மற்றும் ஆறு தளங்களுக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது என்றும், இது மேற்சொன்ன தீர்மானத்தில் அடித்தளம், தரைதளம் மற்றும் மூன்று தளங்கள் என பெறப்பட்ட அனுமதிக்கு மாறாக உள்ளது என்றும், இதனை மீண்டும் ஆய்வு செய்து, விரிவான திருத்திய செயற்குறிப்பு உரிய ஆவணங்களுடன் அரசுக்கு அனுப்பி வைக்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்காக முதலில் அனைத்து தளங்களில் வணிக வளாகம் மற்றும் வாகன நிறுத்துமிடமாக சென்னை மாநகராட்சி சார்பில் 15.25 உயரம் உள்ள கட்டடம் கட்ட திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. அதன் பின்னர் நடந்த ஆய்வுகூட்டத்தில் அனைத்து தளங்களும் வாகன நிறுத்துமிடமாக உபயோகிக்கலாம் என கருத்தில் கொண்டு, வாகன நிறுத்தம் தளங்களுக்கு இடையே உள்ள உயரம் குறைவாக இருப்பதால் அதே 15.25மீ உயரத்தில் அடித்தளம் + தரைத்தளம் + 6 தளங்களுக்கு திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. மேற்கண்ட சிவஞானம் தெரு வணிகப்பகுதியாக இருப்பதால், அவ்விடத்தில் அதிக வாகன நிறுத்துமிடம் தேவை என்பதை கருத்தில் கொண்டு திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட பணிக்காக திட்ட மதிப்பீட்டின்படி அடித்தளம், தரைதளம் மற்றும் ஆறு தளங்களுக்கு ரூ.23,42,00,000/–க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. மன்றத் தீர்மான எண்.424/2015, நாள்.03.08.2015 தீர்மானத்தில் ஏற்கனவே இருந்த திட்ட மதிப்பீட்டில் அடித்தளத்தில் இரு சக்கர வாகன நிறுத்துமிடம் மற்றும் மூன்று தளங்களில் நான்கு சக்கர வாகன நிறுத்துமிடம் கட்டும் பணி என குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, மேற்கண்ட மன்றத் தீர்மானத்தில் மண்டலம்–10, வார்டு–136, தியாகராய நகர், சிவஞானம் தெருவில் அடித்தளத்தில் இரு சக்கர வாகன நிறுத்துமிடம் மற்றும் மூன்று தளங்களில் நான்கு சக்கர வாகன நிறுத்துமிடம் கட்டும் பணி என்பதற்கு பதிலாக மண்டலம்–10, வார்டு–136, தியாகராய நகர், சிவஞானம் தெருவில் அடித்தளத்தில் இரு சக்கர வாகன நிறுத்துமிடம் மற்றும் தரை தளம் மற்றும் ஆறு தளங்களில் நான்கு சக்கர வாகன நிறுத்துமிடம் கட்டும் பணி என திருத்தம் செய்யவும், இவ்விவரத்தினை அரசுக்கு தெரிவிக்கும்பொருட்டு அரசுக்கு கடிதம் அனுப்பவும் மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

2016–2017ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை கூட்டம் நடைபெறுவதால், இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

க.து.ந.க.எண்.பி1/2317/2015

ஆணையர் அவர்களின் 26.02.2016 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.267/2016 **பொருள் எண்.121**

மண்டலம்–5, வார்டு–58, ரிப்பன் மாளிகை வளாகத்தில் மென்மையான இயற்கை நிலக்காட்சி (Soft landscape) பணிக்காக திருவாளர்கள். R.கிருஷ்ணமூர்த்தி அன்டு கோ அவர்களுக்கு பணி வழங்க அனுமதி

வார்டு எண் : 58 **மண்டலம் : 5**

பணியின் பெயர்.	மண்டலம்–5, வார்டு–58, ரிப்பன் மாளிகை வளாகத்தில் மென்மையான இயற்கை நிலக்காட்சி (Soft landscape) பணி
மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெற்ற விவரம்	மன்றத்தீர்மானஎண்.525/2015 நாள்.31.08.2015
எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம்	ரிப்பன் மாளிகை (தலைமையகம்)
மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப் பட்டி யலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது	2014-2014 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி
மதிப்பீட்டின் தொகை	ரூ. 7,11,65,000.00
(அ) கட்டுமான பணி செலவு	ரூ. 5,70,83,969.85
(ஆ) மேலான மேற்பார்வை செலவு	ரூ. 57,08,396.99
(இ) சிறு மேற்பார்வை செலவு	ரூ. 14,27,099.25
(ஈ) எதிர்பாரா செலவு	ரூ. 14,22,556.77
(உ) தமிழ்நாடு கட்டுமாண தொழிலாளர்கள் நல வாரியம் 1%	ரூ. 5,70,839.70
(ஊ) தர நிர்ணயம்	ரூ. 5,70,839.70
(எ) கலந்தறிதர் கட்டணம்	ரூ. 42,81,297.74
(ஏ) Shifting Charges	ரூ. 1,00,000.00
மொத்தம்	ரூ. 7,11,65,000.00
எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது / நாள்	1. சென்னை மாநகராட்சி செய்தி மலர். நாள் . 14.01.2016 2. நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் 13.01.2016. 3 மக்கள் குரல். 13.01.2016
ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்வதற்கான கடைசி நாள்	22.01.2016
ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 15 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா ? இல்லை எனில் உரிய அலுவலரின் ஒப்புதல் பெற்ற விவரம் குறிப்பிடவும்	குறுகிய கால ஒப்பம். தலைமை பொறியாளர்(கட்டடம்) அவர்களின் அனுமதி பெறப்பட்டுள்ளது
எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன?	இரண்டு(e.Tender) இணையத்தளத்தின் மூலம் ஒப்பப்படிவம் பெறப்பட்டுள்ளது)

ஒப்பத்தில் பங்கேற்றவர்களின் விவரம்

வ. எ ண்	ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர்கள் திரு / திருவாளர்கள்/ திருமதி	பணியின் அலுவலக மதிப்பு (ரூ.)	ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை (ரூ.)	2015-2016 ஆம் ஆண்டின் விலைவிகிதம் விழுக்காடு அதிகம்/குறைவு
1.	R. கிருஷ்ணமூர்த்தி அன்டு கோ	5,70,83,969.85	6,92,34,760.00	(+) 21.29 % அதிகம்
2.	SRK.அசோசியேட்ஸ்	5,70,83,969.85	7,25,75,330.00	(+) 27.14 % அதிகம்

குறைந்த ஒப்பம் அளித்தவருடன் பேச்சுவார்த்தை தேவையா? ஆம் எனில் நடத்தப்பட்ட நாள்	ஆம். நாள். 19.02.2016, மற்றும் 22.02.2016 மற்றும் 23.02.2016 ஒப்பந்ததாரர் தன்னுடைய ஒப்பத்தொகையை 6,23,96,715.00ஆக குறைக்க சம்மதம் தெரிவித்துள்ளார்
பேச்சு வார்த்தைக்குப்பின் /ஒப்பத் தொகை/ ஒப்ப சதவீதம் .	ரூ.6,23,96,715.00 (+)9.31% அதிகம் 2014-2015 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி
குறைந்த ஒப்ப சதவீதம் அளித்த ஒப்பந்ததாரரின் பதவியின் பதிவு	வகுப்பு – 1
பணிக்கான நிதி ஆதாரம் அ) வரவு செலவு திட்ட தலைப்பு	மூலதன நிதி
ஒப்பந்தப்புள்ளி செல்லத்தக்க காலம் .	21.04.2016

மேற்கண்ட பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு ஒப்ப இறுதி நாளான 22.01.2016 அன்று இரண்டு ஒப்பங்கள் (e-tender) மூலமாக பெறப்பட்டன. இரண்டு ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு ஒப்பந்ததாரர்கள் ஒப்ப முன்தகுதி நிபந்தனைகள் பூர்த்தி செய்துள்ளமையால் இவர்களின் விலைப்புள்ளி ஒப்பங்கள் (Price Bid) 25.01.2016 அன்று திறக்கப்பட்டன. இதில் குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள். R.கிருஷ்ணமூர்த்தி அன்டு கோ அவர்களின் ஒப்பத் தொகை 2014-2015 ஆம் ஆண்டின் இவ்வலுவலக பணி மதிப்பீட்டுத் தொகையான ரூ.5,70,83,969.85 யை விட (+)21.29 % அதிகமாகும். இதன்படி ஒப்பந்ததாரர் அளித்துள்ள ஒப்பத்தொகை ரூ.6,92,34,760.00ஆகும். எனவே, 19.02.2016 அன்று நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைக்குபின் ஒப்பந்ததாரர் தன்னுடைய ஒப்பத்தொகையை ரூ.6,68,67,620.00ஆக குறைக்க சம்மதம் தெரிவித்துள்ளார். மேலும் 22.02.2016 அன்று நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைக்குபின் ஒப்பந்ததாரர் தன்னுடைய ஒப்பத்தொகையை ரூ.6,56,06,460.00ஆக குறைக்க சம்மதம் தெரிவித்துள்ளார். மீண்டும் இறுதியாக 23.02.2016 அன்று நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைக்குபின் ஒப்பந்ததாரர் தன்னுடைய ஒப்பத்தொகையை ரூ.6,23,96,715.00ஆக குறைக்க சம்மதம் தெரிவித்துள்ளார். இதன்படி ஒப்பந்ததாரர் அளித்துள்ள இறுதி ஒப்பத்தொகை ரூ.6,23,96,715.00 மற்றும் ஒப்ப சதவீதம் (+) 9.31% அதிகமாகும்.

ஒப்பந்தாரரின் இறுதி ஒப்பத்தொகை	ரூ.6,23,96,715.00
ஒப்பந்ததாரரின் இறுதி ஒப்ப சதவீதம் 2014-2015 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி	(+) 9.31% அதிகம்
ஒப்பந்ததாரரின் இறுதி ஒப்ப சதவீதம் 2015-2016 ஆம் ஆண்டின் அலுவலக விலையுடன் ஒப்பிடுகையில்	(+) 7.60% அதிகம்
The Hindu (Habitat) dated.13.02.2016 ஒப்பிடுகையில் ஒப்பந்ததாரர் ஒப்ப சதவீதம்	(+) 3.57 % அதிகம்

மேலும், மேலே குறிப்பிட்டுள்ளவாறு 25.02.2016 அன்று ஒப்ப கூர்ந்தாய்வுக் குழுவில் (TENDER SCRUTINY COMMITTEE) மேற்கண்ட பணிக்காக ரூ.6,23,96,715.00க்கான

ஒப்பத்தை ஏற்று இவ்வொப்பப்பணியை திருவாளர்கள். R.கிருஷ்ணமூர்த்தி அன்டு கோ அவர்களுக்கு வழங்கலாம் என பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

எனவே, குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள். R.கிருஷ்ணமூர்த்தி அன்டு கோ அவர்களின் ரூ.6,23,96,715.00 (ரூபாய் ஆறு கோடியே இறுபத்து மூன்று இலட்சத்து தொண்ணூற்று ஆறாயிரத்து எழுநூற்று பதினைந்து மட்டும்) கான ஒப்பத்தை ஏற்று இவ்வொப்பப்பணியை திருவாளர்கள். R.கிருஷ்ணமூர்த்தி அன்டு கோ அவர்களுக்கு அளிக்க பெருநகர சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம் விதி 1919ல் விதி 80(2)ன்படி மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

2016–2017ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை கூட்டம் நடைபெறுவதால், இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

க.து.ந.க.எண்.பி1/2349/2015
ஆணையர் அவர்களின் 26.02.2016 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.268/2016 **பொருள் எண்.122**

மண்டலம்–9,வார்டு–113, நுங்கம்பாக்கம் உத்தமர் காந்தி சாலையில் மண்டல அலுவலகம்–9 கட்டும் பணிக்காக திருவாளர்கள். R.கிருஷ்ணமூர்த்தி அன்டு கோ அவர்களுக்கு பணி வழங்க அனுமதி

வார்டு எண் : 113 **மண்டலம் : 9**

பணியின் பெயர்.	மண்டலம்–9, வார்டு–113, நுங்கம்பாக்கம் உத்தமர் காந்தி சாலையில் மண்டல அலுவலகம்–9 கட்டும் பணி
மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெற்ற விவரம்	மன்றத்தீர்மானஎண்.502/2015 நாள்.31.08.2015
எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம்	மண்டலம்–9
மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப்பட்யலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது	2014-2015 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி
மதிப்பீட்டின் தொகை	ரூ. 9,99,90,000.00
(அ) கட்டுமான பணி செலவு	ரூ. 8,79,63,538.96
(ஆ) மேலான மேற்பார்வை செலவு	ரூ. 87,96,353.90
(இ) சிறு மேற்பார்வை செலவு	ரூ. 8,79,635.39
(ஈ) எதிர்பாரா செலவு	ரூ. 10,31,018.66
(உ) தமிழ்நாடு கட்டுமாண தொழிலாளர்கள் நல வாரியம் 1%	ரூ. 8,79,635.39
(எ) தர நிர்ணயம்	ரூ. 4,39,817.70
மொத்தம்	ரூ. 9,99,90,000.00
எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது / நாள்	சென்னை மாநகராட்சி செய்தி மலர். நாள் . 20.01.2016 2. நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் 20.01.2016. 3) நமது எம்.ஜி.ஆர். 20.01.2016
ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்வதற்கான கடைசி நாள்	29.01.2016
ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 15 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா ? இல்லை எனில் உரிய அலுவலரின் ஒப்புதல் பெற்ற விவரம் குறிப்பிடவும்	குறுகிய கால ஒப்பம். தலைமை பொறியாளர்(கட்டடம்) அவர்களின் அனுமதி பெறப்பட்டுள்ளது
எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன?	இரண்டு(e.Tender) இணையத்தளத்தின் மூலம் ஒப்பப்படிவம் பெறப்பட்டுள்ளது)

ஒப்பத்தில் பங்கேற்றவர்களின் விவரம்

வ. எ ண்	ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர்கள் திரு / திருவாளர்கள் / திருமதி	பணியின் அலுவலக மதிப்பு (ரூ.)	ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை (ரூ.)	2014-2015 ஆம் ஆண்டின் விலைவிகிதம் விழுக்காடு அதிகம்/குறைவு
1.	R. கிருஷ்ணமூர்த்தி அன்டு கோ	8,79,63,538.96	10,31,30,937.50	(+) 17.24 % அதிகம்
2.	SMP.அசோசியேட்ஸ்	8,79,63,538.96	10,96,20,195.55	(+) 24.62 % அதிகம்

குறைந்த ஒப்பம் அளித்தவருடன் பேச்சுவார்த்தை தேவையா? ஆம் எனில் நடத்தப்பட்ட நாள்	ஆம். நாள். 19.02.2016, மற்றும் 22.02.2016 ஒப்பந்ததாரர் தன்னுடைய ஒப்பத்தொகையை 9,29,16,247.50ஆக குறைக்க சம்மதம் தெரிவித்துள்ளார்
பேச்சு வார்த்தைக்குப்பின் /ஒப்பத் தொகை / ஒப்ப சதவீதம் .	ரூ.9,29,16,247.50 (+) 5.63% அதிகம் 2014-2015 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி
குறைந்த ஒப்ப சதவீதம் அளித்த ஒப்பந்ததாரரின் பதவியின் பதிவு	வகுப்பு –1
பணிக்கான நிதி ஆதாரம் அ) வரவு செலவு திட்ட தலைப்பு	மூலதன நிதி
ஒப்பந்தப்புள்ளி செல்லத்தக்க காலம் .	28.04.2016

மேற்கண்ட பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு ஒப்ப இறுதி நாளான 29.01.2016 அன்று இரண்டு ஒப்பங்கள் (e-tender) மூலமாக பெறப்பட்டன. இரண்டு ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு ஒப்பந்ததாரர்கள் ஒப்ப முன்தகுதி நிபந்தனைகள் பூர்த்தி செய்துள்ளமையால் இவர்களின் விலைப்புள்ளி ஒப்பங்கள் (Price Bid) 08.02.2016 அன்று திறக்கப்பட்டன. இதில் குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள். R.கிருஷ்ணமூர்த்தி அன்டு கோ அவர்களின் ஒப்பத் தொகை 2014-2015 ஆம் ஆண்டின் இவ்வலுவலக பணி மதிப்பீட்டுத் தொகையான ரூ.8,79,63,538.96 யை விட (+)17.24 % அதிகமாகும். இதன்படி ஒப்பந்ததாரர் அளித்துள்ள ஒப்பத்தொகை ரூ.10,31,30,937.50ஆகும். எனவே, 19.02.2016 அன்று நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைக்குபின் ஒப்பந்ததாரர் தன்னுடைய ஒப்பத்தொகையை ரூ.9,31,88,457.50ஆக குறைக்க சம்மதம் தெரிவித்துள்ளார். மீண்டும் 22.02.2016 அன்று நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைக்குபின் ஒப்பந்ததாரர் தன்னுடைய ஒப்பத்தொகையை ரூ.9,29,16,247.50ஆக குறைக்க சம்மதம் தெரிவித்துள்ளார். இதன்படி ஒப்பந்ததாரர் அளித்துள்ள இறுதி ஒப்பத்தொகை ரூ.9,29,16,247.50மற்றும் ஒப்ப சதவீதம் (+) 5.63% அதிகமாகும்.

ஒப்பந்தாரரின் இறுதி ஒப்பத்தொகை	ரூ.9,29,16,247.50
ஒப்பந்ததாரரின் இறுதி ஒப்ப சதவீதம் 2014-2015 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி	(+) 5.63% அதிகம்
ஒப்பந்ததாரரின் இறுதி ஒப்ப சதவீதம் 2015-2016 ஆம் ஆண்டின் அலுவலக விலையுடன் ஒப்பிடுகையில்	(+) 4.15% அதிகம்
The Hindu (Habitat) dated.13.02.2016 ஒப்பிடுகையில் ஒப்பந்ததாரர் ஒப்ப சதவீதம்	(+) 0.28 % அதிகம்

மேலும், மேலே குறிப்பிட்டுள்ளவாறு 25.02.2016 அன்று ஒப்ப கூர்ந்தாய்வுக் குழுவில் (TENDER SCRUTINY COMMITTEE) மேற்கண்ட பணிக்காக ரூ.9,29,16,247.50க்கான

ஒப்பத்தை ஏற்று இவ்வொப்பப்பணியை திருவாளர்கள். R.கிருஷ்ணமூர்த்தி அன்டு கோ அவர்களுக்கு வழங்கலாம் என பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

எனவே, குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள். R.கிருஷ்ணமூர்த்தி அன்டு கோ அவர்களின் ரூ.9,29,16,247.50 (ரூபாய் ஒன்பது கோடியே இறுபத்தொன்பது இலட்சத்து பதினாராயிரத்து இறுநூற்று நாற்பத்தேழு மற்றும் ஐம்பது பைசா மட்டும்) கான ஒப்பத்தை ஏற்று இவ்வொப்பப்பணியை திருவாளர்கள். R.கிருஷ்ணமூர்த்தி அன்டு கோ அவர்களுக்கு அளிக்க பெருநகர சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம் விதி 1919 ல் விதி 80(2) ன்படி மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

2016–2017ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை கூட்டம் நடைபெறுவதால், இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

க.து.ந.க.எண்.பி1/2554/2015
ஆணையர் அவர்களின் 26.02.2016 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.269/2016 **பொருள் எண்.123**

மண்டலம்–9,வார்டு–113, நுங்கம்பாக்கம் உத்தமர் காந்தி சாலையில் பல அடுக்கு மாடிகளுடன் கூடிய வாகன நிறுத்துமிடம் கட்டும் பணிக்காக திருவாளர்கள். R.கிருஷ்ணமூர்த்தி அன்டு கோ அவர்களுக்கு பணி வழங்க அனுமதி

வார்டு எண் : 113 **மண்டலம் : 9**

பணியின் பெயர்.	மண்டலம்–9, வார்டு–113, நுங்கம்பாக்கம் உத்தமர் காந்தி சாலையில் பல அடுக்கு மாடிகளுடன் கூடிய வாகன நிறுத்துமிடம் கட்டும் பணி
மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெற்ற விவரம்	556/2015 நாள்.30.09.2015
எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம்	மண்டலம்–9
மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப்பட்யலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது	
மதிப்பீட்டின் தொகை	ரூ. 9,99,90,000.00
(அ) கட்டுமான பணி செலவு	ரூ. 8,94,85,496.00
(ஆ) மேலான மேற்பார்வை செலவு	ரூ. 78,28,939.04
(இ) சிறு மேற்பார்வை செலவு	ரூ. 8,90,677.00
(ஈ) எதிர்பாரா செலவு	ரூ. 8,90,033.00
(உ) தமிழ்நாடு கட்டுமாண தொழிலாளர்கள் நல வாரியம் 1%	ரூ. 8,94,854.96
மொத்தம்	ரூ. 9,99,90,000.00
எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது / நாள்	1. சென்னை மாநகராட்சி செய்தி மலர். நாள் . 20.01.2016 2. நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் 20.01.2016. 3) நமது எம்.ஜி.ஆர். 20.01.2016
ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்வதற்கான கடைசி நாள்	29.01.2016
ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 15 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா ? இல்லை எனில் உரிய அலுவலரின் ஒப்புதல் பெற்ற விவரம் குறிப்பிடவும்	குறுகிய கால ஒப்பம். தலைமை பொறியாளர் (கட்டடம் அவர்களின் அனுமதி பெறப்பட்டுள்ளது
எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன?	ஒன்று (e.Tender) இணையத்தளத்தின் மூலம் ஒப்பப்படிவம் பெறப்பட்டுள்ளது)

ஒப்பத்தில் பங்கேற்றவர்களின் விவரம்

வ. எண்	ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர்கள் திரு / திருவாளர்கள்/திருமதி	பணியின் அலுவலக மதிப்பு (ரூ.)	ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை(ரூ.)	விலைவிகிதம் விழுக்காடு அதிகம்/குறைவு
1.	R. கிருஷ்ணமூர்த்தி அன்டு கோ	8,94,85,496.00	11,53,26,034.00	(+) 28.88 % அதிகம்

குறைந்த ஒப்பம் அளித்தவருடன் பேச்சுவார்த்தை தேவையா? ஆம் எனில் நடத்தப்பட்ட நாள்	ஆம். நாள். 23.02.2016, 24.02.2016 மற்றும் 25.02.2016 ஒப்பந்ததாரர் தன்னுடைய ஒப்பத்தொகையை 11,17,67,384.50ஆக குறைக்க சம்மதம் தெரிவித்துள்ளார்
பேச்சு வார்த்தைக்குப்பின் /ஒப்பத் தொகை/ ஒப்ப சதவீதம் .	ரூ.11,17,67,384.50 (+) 24.90% அதிகம்
குறைந்த ஒப்ப சதவீதம் அளித்த ஒப்பந்ததாரரின் பதவியின் பதிவு	வகுப்பு –1
பணிக்கான நிதி ஆதாரம் அ) வரவு செலவு திட்ட தலைப்பு	மூலதன நிதி
ஒப்பந்தப்புள்ளி செல்லத்தக்க காலம் .	28.04.2016

மேற்கண்ட பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு ஒப்ப இறுதி நாளான 29.01.2016 அன்று ஒற்றை ஒப்பம் (e-tender) மூலமாக பெறப்பட்டன. ஒற்றை ஒப்பந்ததாரரின் தொழில்நுட்ப ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. ஒற்றை ஒப்பந்ததாரர். திருவாளர்கள். R.கிருஷ்ணமூர்த்தி அன்டு கோ அவர்கள் திருவாளர்கள்.Pisa Sotefin Parking Private Ltd அவர்களுடன் Joint venture Agreement சமர்ப்பித்துள்ளார்கள். இந்த இரு நிறுவனங்கள் கூட்டு Eligibility Cretaria ஆய்வு செய்து திருவாளர்கள்.R.கிருஷ்ணமூர்த்தி அன்டு கோ Joint venture with திருவாளர்கள்.Pisa Sotefin Parking Private Ltd அவர்கள் பூர்த்தி செய்துள்ளனர்.

எனவே, ஒப்பந்ததாதரின் Technical Bid, Concept and Design அனைத்தும் ஒப்ப உயர்மட்ட குழுவின் (High leval Committee) முன் சமர்ப்பிக்கப்பட்டு 21.02.2016 அன்று ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

ஒப்பந்ததாரர் ஒப்ப முன்தகுதி நிபந்தனைகள் பூர்த்தி செய்துள்ளமையால் இவரின் விலைப்புள்ளி ஒப்பங்கள் (Price Bid) 23.02.2016 அன்று திறக்கப்பட்டன. ஒப்பந்ததாரரான திருவாளர்கள். R.கிருஷ்ணமூர்த்தி அன்டு கோ அவர்களின் ஒப்பத் தொகை இவ்வலுவலக பணி மதிப்பீட்டுத் தொகையான ரூ.8,94,85,496.00 யை விட (+)28.88 % அதிகமாகும். இதன்படி ஒப்பந்ததாரர் அளித்துள்ள ஒப்பத்தொகை ரூ.11,53,26,034.00 ஆகும். எனவே, 23.02.2016 அன்று நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைக்குபின் ஒப்பந்ததாரர் தன்னுடைய ஒப்பத்தொகையை ரூ.11,36,46,579.92ஆக குறைக்க சம்மதம் தெரிவித்துள்ளார். மேலும் 24.02.2016 அன்று நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைக்குபின் ஒப்பந்ததாரர் தன்னுடைய ஒப்பத்தொகையை ரூ.11,31,99,152.44ஆக குறைக்க சம்மதம் தெரிவித்துள்ளார். மீண்டும் 25.02.2016 அன்று நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைக்குபின் ஒப்பந்ததாரர் தன்னுடைய ஒப்பத்தொகையை ரூ.11,17,67,384.50ஆக குறைக்க சம்மதம் தெரிவித்துள்ளா இதன்படி ஒப்பந்ததாரர் அளித்துள்ள இறுதி ஒப்பத்தொகை ரூ.11,17,67,384.50மற்றும் ஒப்ப சதவீதம் (+) 24.90% அதிகமாகும்.

மேலும் இப்பணி சிறப்பு தன்மை வாய்ந்ததாலும் Electrical, Clading ஆகிய பணிகளும் சேர்த்து ஒப்பத்திலேயே அனைத்து கூடுதல் பணிகளும் செய்து முழுமையாக பணி மேற்கொள்ளஒப்பந்ததாரர் முன்வந்துள்ளதால் இக்கூடுதல் சதவீதத்திற்கு 25.02.2016 அன்று ஒப்ப கூர்ந்தாய்வுக் குழுவில் (TENDER SCRUTINY COMMITTEE) மேற்கண்ட பணிக்காக ரூ.11,17,67,384.50 க்கான ஒப்பத்தை ஏற்று இவ்வொப்பப்பணியை திருவாளர்கள். R.கிருஷ்ணமூர்த்தி அன்டு கோ Joint venture with திருவாளர்கள்.Pisa Sotefin Parking Private Ltd அவர்களுக்கு வழங்கலாம் என பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

எனவே, ஒப்பந்ததாரரான திருவாளர்கள். R.கிருஷ்ணமூர்த்தி அன்டு கோ அவர்களின் ரூ.11,17,67,384.50 (ரூபாய் பதினோரு கோடியே பதினேழு இலட்சத்து அறுபத்து ஏழாயிரத்து முன்னூற்று என்பத்து நான்கு மற்றும் ஐம்பது பைசா மட்டும்) கான ஒப்பத்தை ஏற்று இவ்வொப்பப்பணியை திருவாளர்கள். R.கிருஷ்ணமூர்த்தி அன்டு கோ அவர்களுக்கு அளிக்க பெருநகர சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம் விதி 1919 ல் விதி 80(2) மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

2016–2017ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை கூட்டம் நடைபெறுவதால், இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

க.து.ந.க.எண்.பி1/2489/2015
ஆணையர் அவர்களின் 26.02.2016 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.270/2016 **பொருள் எண்.124**

மண்டலம்–13, வார்டு–175, கோட்டூர்புரம் கெனால் பேங்க் சாலையில் மீன் அங்காடி கட்டும் பணிக்காக திருவாளர்கள். R.கிருஷ்ணமூர்த்தி அன்டு கோ அவர்களுக்கு பணி வழங்க அனுமதி

வார்டு எண் : 175 **மண்டலம் : 13**

பணியின் பெயர்.	மண்டலம்–13, வார்டு–175, கோட்டூர் புரம் கெனால் பேங்க் சாலையில் மீன் அங்காடி கட்டும் பணி
மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெற்ற விவரம்	மன்றத்தீர்மானஎண்.517/2015 நாள்.31.08.2015
எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம்	மண்டலம்–13
மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப் பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது	2015-2016 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி
மதிப்பீட்டின் தொகை	ரூ. 7,92,00,000.00
(அ) கட்டுமான பணி செலவு	ரூ. 6,06,42,826.31
(ஆ) மேலான மேற்பார்வை செலவு	ரூ. 60,64,282.63
(இ) சிறு மேற்பார்வை செலவு	ரூ. 15,16,070.66
(ஈ) எதிர்பாரா செலவு	ரூ. 15,16,070.66
(உ) தமிழ்நாடு கட்டுமாண தொழிலாளர்கள் நல வாரியம் 1%	ரூ. 6,06,428.26
(ஊ) தர நிர்ணயம்	ரூ. 6,06,428.26
(எ) கலந்தறிதர் கட்டணம்	ரூ. 30,32,141.30
(ஏ) எஸ்கலேசன் சார்ஜஸ்	ரூ. 30,32,141.30
(ஐ) மின்சாரம்	ரூ. 1,00,000.00
(ஒ) மற்ற பிற இனங்கள்	ரூ. 20,83,610.61
மொத்தம்	ரூ. 7,92,00,000.00
எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது / நாள்	1. சென்னை மாநகராட்சி செய்தி மலர். நாள் . 14.01.2016 2. நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் 13.01.2016. 3. மக்கள் குரல். 13.01.2016
ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்வதற்கான கடைசி நாள்	22.01.2016
ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 15 நாட்கள் ஒதுக்கப் பட்டுள்ளதா ? இல்லை எனில் உரிய அலுவலரின் ஒப்புதல் பெற்ற விவரம் குறிப்பிடவும்	குறுகிய கால ஒப்பம். தலைமை பொறியாளர்(கட்டடம்) அவர்களின் அனுமதி பெறப்பட்டுள்ளது
எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன?	இரண்டு(e.Tender) இணையத்தளத்தின் மூலம் ஒப்பப்படிவம் பெறப்பட்டுள்ளது)

ஒப்பத்தில் பங்கேற்றவர்களின் விவரம்

வ. எ ண்	ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர்கள் திரு / திருவாளர்கள் / திருமதி	பணியின் அலுவலக மதிப்பு (ரூ.)	ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை (ரூ.)	2015-2016 ஆம் ஆண்டின் விலைவிகிதம் விழுக்காடு அதிகம் / குறைவு
1.	R. கிருஷ்ணமூர்த்தி அன்டு கோ	6,06,42,826.31	7,44,00,545.00	(+) 22.69 % அதிகம்
2.	SRK.அசோசியேட்ஸ்	6,06,42,826.31	7,73,39,725.00	(+) 27.53 % அதிகம்

குறைந்த ஒப்பம் அளித்தவருடன் பேச்சுவார்த்தை தேவையா? ஆம் எனில் நடத்தப்பட்ட நாள்	ஆம். நாள். 27.01.2016, மற்றும் 29.01.2016 ஒப்பந்ததாரர் தன்னுடைய ஒப்பத்தொகையை 6,86,63,850.00ஆக குறைக்க சம்மதம் தெரிவித்துள்ளார்
பேச்சு வார்த்தைக்குப்பின் /ஒப்பத் தொகை/ ஒப்ப சதவீதம் .	ரூ.6,86,63,850.00 (+) 13.23% அதிகம் 2015-2016 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி
குறைந்த ஒப்ப சதவீதம் அளித்த ஒப்பந்ததாரரின் பதவியின் பதிவு	வகுப்பு – 1
பணிக்கான நிதி ஆதாரம் அ) வரவு செலவு திட்ட தலைப்பு	மூலதன நிதி
ஒப்பந்தப்புள்ளி செல்லத்தக்க காலம் .	21.04.2016

மேற்கண்ட பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு ஒப்ப இறுதி நாளான 22.01.2016 அன்று இரண்டு ஒப்பங்கள் (e-tender) மூலமாக பெறப்பட்டன. இரண்டு ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு ஒப்பந்ததாரர்கள் ஒப்ப முன்தகுதி நிபந்தனைகள் பூர்த்தி செய்துள்ளமையால் இவர்களின் விலைப்புள்ளி ஒப்பங்கள் (Price Bid) 25.01.2016 அன்று திறக்கப்பட்டன. இதில் குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள். R.கிருஷ்ணமூர்த்தி அன்டு கோ அவர்களின் ஒப்பத் தொகை 2015-2016 ஆம் ஆண்டின் இவ்வலுவலக பணி மதிப்பீட்டுத் தொகையான ரூ.6,06,42,826.31யை விட (+)22.69 % அதிகமாகும். இதன்படி ஒப்பந்ததாரர் அளித்துள்ள ஒப்பத்தொகை ரூ.7,44,00,545.00ஆகும். எனவே, 27.01.2016 அன்று நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைக்குபின் ஒப்பந்ததாரர் தன்னுடைய ஒப்பத்தொகையை ரூ.7,36,85,675.00ஆக குறைக்க சம்மதம் தெரிவித்துள்ளார். 29.01.2016 அன்று நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைக்குபின் ஒப்பந்ததாரர் தன்னுடைய ஒப்பத்தொகையை ரூ.6,96,21,075.00ஆக குறைக்க சம்மதம் தெரிவித்துள்ளார். 29.01.2016 அன்று நடத்தப்பட்ட மூன்றாம் கட்ட பேச்சுவார்த்தைக்குபின் ஒப்பந்ததாரர் தன்னுடைய ஒப்பத்தொகையை ரூ.6,86,63,850.00ஆக குறைக்க சம்மதம் தெரிவித்துள்ளார்.இதன்படி ஒப்பந்ததாரர் அளித்துள்ள இறுதி ஒப்பத்தொகை ரூ.6,86,63,850.00 மற்றும் ஒப்ப சதவீதம் (+) 13.23% அதிகமாகும்.

ஒப்பந்தாரரின் இறுதி ஒப்பத்தொகை	ரூ.6,86,63,850.00
ஒப்பந்ததாரரின் இறுதி ஒப்ப சதவீதம் 2015-2016 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி	(+) 13.23% அதிகம்
The Hindu (Habitat) dated.23.01.2016 ஒப்பிடுகையில் ஒப்பந்ததாரர் ஒப்ப சதவீதம்	(+) 2.27 % அதிகம்

மேலும், மேலே குறிப்பிட்டுள்ளவாறு 25.02.2016 அன்று ஒப்ப கூர்ந்தாய்வுக் குழுவில் (TENDER SCRUTINY COMMITTEE) மேற்கண்ட பணிக்காக ரூ.6,86,63,850.00க்கான ஒப்பத்தை ஏற்று இவ்வொப்பப்பணியை திருவாளர்கள். R.கிருஷ்ணமூர்த்தி அன்டு கோ அவர்களுக்கு வழங்கலாம் என பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

எனவே, குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள். R.கிருஷ்ணமூர்த்தி அன்டு கோ அவர்களின் ரூ.6,86,63,850.00 (ரூபாய் ஆறு கோடியே என்பத்தாறு இலட்சத்து அறுபத்து மூன்றாயிரத்து என்னூற்று ஐம்பது மட்டும்)கான ஒப்பத்தை ஏற்று இவ்வொப்பப்பணியை

திருவாளர்கள். R.கிருஷ்ணமூர்த்தி அன்டு கோ அவர்களுக்கு அளிக்க சென்னை மாநகர முனிசிபல் சட்டம் விதி 1919ல் விதி 80(2)ன்படி மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

2016–2017ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை கூட்டம் நடைபெறுவதால், இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

சி.தி.து.ந.க.எண்.பி1/623/2015

ஆணையர் அவர்களின் 23.02.2016 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.271/2016 **பொருள் எண்.125**

சிறப்பு திட்டங்கள் துறை – அடல் புனரமைப்பு மற்றும் நகர்புற மற்றும் திட்ட ம் (AMRUT) – பூங்கா அமைப்பதற்கு அம்ருத் உயர்மட்ட குழு ஒப்புதல் அளித்துள்ள நிபந்தனைகளுக்கு அனுமதி

அடல் புனரமைப்பு மற்றும் நகர்புற மற்றும் திட்டத்தில் (AMRUT) மேற்கொள்ள சென்னை மாநகராட்சி மூலம் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டது.

அடல் புனரமைப்பு மற்றும் நகர்புற மற்றும் திட்டத்தில் அ) குடிநீர் வழங்கல் ஆ) கழிவு நீர் அகற்றுதல் இ) கழிவு நீர் தொட்டி மூலம் அகற்றுதல் ஈ) மழைநீர் வடிகால் அமைத்தல் உ) நகர்புற போக்குவரத்து திட்டங்களுக்கு முன்னுறிமை அளிக்கப்படுகிறது. அட்டல் நகர்புற மற்றும் புத்துணர்வு மாற்றத்திற்கான திட்டங்கள் நிறைவேற்ற ஒவ்வொரு ஆண்டும் ‘‘மாநில வருடாந்திர செயல் திட்டங்கள் ’’ முடிவு செய்யப்படுகிறது. மாநில வருடாந்திர செயல் திட்டத்தின் நிதியில் 2.5 சதவீதத்திற்கு நிகராக பூங்கா அமைக்கும் பணி மேற்கொள்ளப்படவேண்டும்.

சென்னையை பொருத்தவரை நடப்பாண்டில் மாநில வருடாந்திர செயல் திட்டத்தில் சென்னை குடிநீர் வாரியத்தை சார்ந்த திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. மேலும், நடப்பாண்டில் 8 பூங்கா பணிகள் ரூ.1100.95 லட்சங்கள் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு மாநில உயர்மட்ட குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டது. அடல் புனரமைப்பு மற்றும் நகர்புற மற்றும் திட்டத்திற்கான மாநில அளவில் உயர்மட்ட குழு, நாள்.29.01.2016ல் கீழ்காணும் 8 பூங்கா பணிகளை அட்டல் நகர்புற மற்றும் புத்துணர்வு மாற்றத்திற்கான திட்டத்தில் நிறைவேற்ற ஒப்புதல் அளித்துள்ளது.

பணியின் பெயர்	திட்ட எண்.	திட்ட மதிப்பீடு	ஒப்புதல் தொகை	மத்திய அரசு பங்கு	தமிழக அரசு பங்கு	நகர்புற உள்ளாட்சி பங்கு
1. குருசாமி நகர் நந்தகோபால் தெரு பூங்கா	அம்ருத் – 0015	89.75	1100.95	550.48	220.19	330.28
2. குன்றத்தூர் பிரதான சாலை மதனந்தபுரம் பூங்கா		46.92				
3. வி.ஜி.என். இலட்சுமி நகர் விஸ்வநாதன் பழனி தெரு பூங்கா		27.94				
4.வி.ஜி.என். இலட்சுமி நகர் கலைமகள் தெரு பூங்கா		129.05				
5. ரிவர் வ்யூஅவென்யூ பிரதான சாலை		65.52				
6. ஆர்காட் சாலை (நவீன் ப்ளாட்ஸ் அருகில்) பூங்கா		64.87				
7. ராதா மோகன் தெரு ஃபீனிக்ஸ் மால் பூங்கா		435.90				
8. குமாரசாமி நகர் பிரதான சாலை பூங்கா		241.00				

மேலும், தமிழ்நாடு நகர்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தின் 19.02.2016 நாளிட்ட கடிதத்தில் ஒப்புதல் அளித்து கடிதம் அளித்துள்ளது. இந்த ஒப்புதல் கடிதத்தில் கீழ்வரும் நிபந்தனைகளை விதித்துள்ளது.

1. ஒப்பளிக்கப்பட்ட பணிகளை 12 மாத காலத்தில் நிறைவேற்ற வேண்டும்
2. இத்திட்டத்திற்கு உரிய தொழிநுட்ப மற்றும் ஆட்சி முறை ஒப்பளிப்பு பெறவேண்டும்.
3. பணியை அட்டல் நகர்புற மற்றும் புத்துணர்வு மாற்றத்திற்கான திட்டத்திற்கான வழிகாட்டுதலின்படியும், அனைத்து பூங்காவிலும் சிறுவர்களுக்கான விளையாட்டு சாதனங்கள் கட்டாயம் இடம்பெற்றிருக்க வேண்டும்.
4. இப்பணியை நிறைவேற்றுவதற்கான அட்டவணைப்படி நிறைவேற்ற வேண்டும்.
5. பணி நிறைவேற்றும் இடம் குறித்து இடம் பிரட்சனை / வழங்குகள் இல்லாத இடமாக தேர்ந்தெடுக்கப்படவேண்டும்.
6. பணியை நிறைவேற்ற தக்க ஒப்பந்தகாரரை தேர்ந்தெடுத்து உரிய காலத்தில் பணியை முடிக்க வேண்டும்.

7. அடல் புனரமைப்பு மற்றும் நகர்புற மற்றும் திட்டத்தின் வழிகாட்டுதலின்படி 11 சீர்திருத்தங்கள் நிறைவேற்றி 10 சதவீதம் நிதியை மத்திய அரசிடமிருந்து பெறவேண்டும்.
8. இப்பணியை மேற்கொள்ள பிற துறைகளின் ஒத்துழைப்பு பெற்று பணியின் திட்ட மதிப்பிற்குள் நிறைவேற்றிட வேண்டும்.
9. அடல் புனரமைப்பு மற்றும் நகர்புற மற்றும் திட்டத்தை மத்திய அரசு மூலம் நியமிக்கும் மேற்பார்வை நபரின் பரிந்துரையின்படி 2 மற்றும் 3 வது தவணை வழங்கப்படும்.
10. நவீன தொழில்நுட்பம் மற்றும் கைபேசியில் உள்ள சிறப்பு பயன்பாடுகள் மூலம் மூன்றாம் நபர் மூலமும் பணியில் முன்னேற்றம் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்படும்.
11. பூங்காவை தனியார் பங்களிப்பு மூலம் பராமரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும் இதுகுறித்து கீழ்காணும் இனங்களுக்கு மன்றத்தின் ஒப்புதல் பெற வேண்டியுள்ளது. :

1. அடல் புனரமைப்பு மற்றும் நகர்புற மற்றும் திட்டத்தின் கீழ் ரூ.1100.95 லட்சங்கள் மதிப்பீட்டில் கீழ்காணும் நிதி பங்களிப்பு மூலம் நிறைவேற்றுவதற்கு ஒப்புதல்

திட்டத்தின் பெயர்	ஒப்பளிக்கப்பட்ட தொகை	மத்திய அரசின் பங்கு (50 சதவீதம்)	மாநில அரசின் பங்கு (20 சதவீதம்)	பெருநகர சென்னை மாநகராட்சியின் பங்கு (30 சதவீதம்)
பூங்கா அமைக்கும் பணி	ரூ.1100.95 லட்சங்கள்	ரூ.550.48 லட்சங்கள்	ரூ.220.19 லட்சங்கள்	ரூ.330.28 லட்சங்கள்

2. மேலும், ஒப்புதல் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் அடல் புனரமைப்பு மற்றும் நகர்புற மற்றும் திட்ட த்திற்கான வழிகாட்டுதலின்படி பணியை நிறைவேற்றுவதற்கு ஒப்புதல்
3. பூங்காவை தனியார் பங்களிப்பு மூலம் பராமரிக்க நடவடிக்கை எடுக்க ஒப்புதல்.
4. மேலும், அம்ருத் திட்டத்தின் வரையறுக்கப்பட்ட சீர்திருத்தங்களில் டிஜிட்டல் இந்தியா திட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஒப்புதல்

அட்டல் நகர்புற மற்றும் புத்துணர்வு மாற்றத்திற்கான திட்டத்திற்கான ஒப்புதல் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள 11 நிபந்தனைகள் மற்றும் மேலே குறிப்பிட்டுள்ள இனங்களுக்கு மன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளது.

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சியில் அட்டல் நகர்புற மற்றும் புத்துணர்வு மாற்றத்திற்கான திட்டங்களை நிறைவேற்ற ஒப்புதல் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள 11 நிபந்தனைகள் மற்றும் மேலே குறிப்பிட்டுள்ள இனங்களுக்கும் மன்றத்தில் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

2016–2017ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை கூட்டம் நடைபெறுவதால், இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

பே.சா.து.ந.க.எண்.பி1/4642/2015

ஆணையர் அவர்களின் 25.02.2016 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.272/2016 **பொருள் எண்.126**

பேருந்து சாலைகள் துறை – மண்டலம் 9, கோட்டம் – 114ல் உள்ள காமராஜர் சாலையில் அண்ணா சதுக்கம் பேருந்து நிறுத்தத்திற்கு நவீன வசதிகளுடன் கூடிய பேருந்து நிழற்குடை மற்றும் கழிவு நீர் வடிகால் வாயும் அமைக்கும் பணிக்கு – ஒப்பங்கள் கோரப்பட்டது – குறைந்த விலைப்புள்ளி அளித்த திருவாளர்கள். தாமஸ் ஐயாதுரை இன்ஃப்ராஸ்ட்ரக்சர் (பி) லிட் அவர்களுக்கு பணியாணை வழங்க அனுமதி

மண்டலம் 9, கோட்டம் – 114ல் உள்ள காமராஜர் சாலையில் அண்ணா சதுக்கம் பேருந்து நிறுத்தத்திற்கு நவீன வசதிகளுடன் கூடிய பேருந்து நிழற்குடை மற்றும் கழிவு நீர் வடிகால்வாய் அமைக்கும் பணிக்கு 2014–15ம் ஆண்டின் அலுவலக விலைப்பட்டியல்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட ரூ. 2,76,30,000/– மதிப்பீட்டிற்கு ஆட்சி முறை ஒப்பளிப்பு மன்றத்தீர்மான எண்.693/2015, நாள்.27.11.2015ல் பெறப்பட்டுள்ளது.

மேற்கண்ட மன்றத்தீர்மானத்தின் அடிப்படையில் பேருந்து சாலைகள் துறை மூலமாக இப்பணியை மேற்கொள்வதற்காக இரண்டு உறை முறையில் தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்பங்கள் வரவேற்பதற்கு இறுதி நாள்.05.02.2016 என நிர்ணயம் செய்யப்பட்டு 19.01.2016 அறிவிப்பு வெளியிடப்பட்டு 20.01.2016 நாளிட்ட நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆங்கில நாளிதழ் மற்றும் தினத்தந்தி தமிழ் நாளிதழ் மற்றும் சென்னை மாநகராட்சி ஒப்பந்த புள்ளி செய்தி மலர் மற்றும் மாநில ஒப்பந்தபுள்ளி மலரிலும் பிரசுரிக்கப்பட்டது.

ஒப்ப நாளான 05.02.2016 அன்று தொழில்நுட்ப ஆவணம் கலந்து கொண்ட ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் திறக்கப்பட்டது. அதில் திருவாளர்கள். தாமஸ் ஐயாதுரை இன்ஃப்ராஸ்ட்டரக்சர் (பி) லிட் ஒரே ஒரு ஒப்பந்ததாரர் மட்டுமே பங்கு பெற்றுள்ளார். திருவாளர்கள். தாமஸ் ஐயாதுரை இன்ஃப்ராஸ்ட்டரக்சர் (பி) லிட் அவர்களின் தொழில்நுட்ப ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டதின் அடிப்படையில் தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரரர் ஆவார்.

எனவே தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களின் நிதி ஆவணம் 10.02.2016 அன்று திறக்கப்பட்டது.

வ. எண்	ஒப்பந்ததாரர்	பணியின் மதிப்பீடு (ரூபாய் கோடியில்)	ஒப்பத் தொகை	2014–15ம் ஆண்டின் அலுவலக விலையுடன் ஒப்பிடுகையில் ஒப்ப சதவீதம் அதிகம் / குறைவு	2015–16ம் ஆண்டின் அலுவலக விலையுடன் ஒப்பிடுகையில் ஒப்ப சதவீதம் அதிகம் / குறைவு
1	தாமஸ் ஐயாதுரை இன்ஃப்ராஸ்ட்டரக்சர் (பி) லிட்	23415473.7	2,58,19,440/–	10.27% அதிகம்	29.69% அதிகம்

ஒப்பத்தில் பங்கேற்ற திருவாளர்கள். தாமஸ் ஐயாதுரை இன்ஃப்ராஸ்ட்டரக்சர் (பி) லிட் அவர்கள் அளித்துள்ள ஒப்பத் தொகை ரூ.2,58,19,440.00 ஆகும். இத்தொகையை 2014–15ம் ஆண்டின் அலுவலக விலையுடன் ஒப்பிடுகையில் (+)10.27%அதிகம். 2015–16ம் ஆண்டின் அலுவலக விலையுடன் ஒப்பிடுகையில் (+)29.69% அதிகம்.

திருவாளர்கள். தாமஸ் ஐயாதுரை இன்ஃப்ராஸ்ட்டரக்சர் (பி) லிட் அவர்களிடம் விலைக்குறைப்பு வேண்டி கடிதம் அளிக்கப்பட்டது. திருவாளர்கள். தாமஸ் ஐயாதுரை இன்ஃப்ராஸ்ட்டரக்சர் (பி) லிட் அவர்கள் ஒப்பத்தில் பங்கேற்ற போது குறிப்பிட்ட தொகை ரூ.25819440.00 இருந்து ரூ.21559040.00க்கு தொகைக்கு பணியினை செய்ய விலைக்குறைப்பு செய்து கடிதம் அளித்துள்ளார்கள்.

முதல் கட்ட பேச்சுவார்த்தைக்குப்பின் ஒப்பத் தொகை

வ எ ண்	ஒப்பந்ததாரரின் பெயர்	பணியின் மதிப்பு	ஒப்பத்தில் குறிப்பிடப் பட்ட தொகை	முதற்கட்ட பேச்சு வார்த்தையில் ஒப்புக் கொண்ட தொகை ரூ.	2014–15ம் ஆண்டு விலைப் பட்டியல் களின்படி ஒப்ப சதவீதம்	2015–16ம் ஆண்டு விலைப்பட்டி யல்களின்ப டி ஒப்ப சதவீதம்
1	தாமஸ் ஐயாதுரை இன்ஃப்ராஸ்ட்ட ரக்சர் (பி) லிட்	23415473.70	25819440/–	21559040.00	(–)7.93% குறைவு	(+)8.29% அதிகம்

இவ்வொப்பத் தொகையை 2014–15ம் ஆண்டின் அலுவலக விலையுடன் ஒப்பிடுகையில் (–)7.93% குறைவு ஆகும். மேலும் 2015–16ம் ஆண்டின் அலுவலக விலையுடன் ஒப்பிடுகையில் (+)8.29% அதிகம். மேலும், 2வது முறையாக விலைக்குறைப்பு வேண்டி கடிதம் அனுப்பப்பட்டது. திருவாளர்கள். தாமஸ் ஐயாதுரை இன்ஃப்ராஸ்ட்டரக்சர் (பி) லிட் அவர்கள் மேற்கண்ட பணியினை ரூ.20884080.00க்கு செய்ய சம்மதம் தெரிவித்து கடிதம் அளித்துள்ளார்கள்.

இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தைக்குப்பின் ஒப்பத் தொகை						
வ. எ ண்	ஒப்பந்ததாரரின் பெயர்	பணியின் மதிப்பு	ஒப்பத்தில் குறிப்பிடப் பட்ட தொகை	இரண்டாம் கட்ட பேச்சு வார்த்தையில் ஒப்புக் கொண்ட தொகை ரூ.	2014–15ம் ஆண்டு விலைப் பட்டியல் களின்படி ஒப்ப சதவீதம்	2015–16ம் ஆண்டு விலைப் பட்டியல் களின்படி ஒப்ப சதவீதம்
1	தாமஸ் ஐயாதுரை இன்ஃப்ராஸ்ட்டரக்சர் (பி) லிட்	23415473.70	25819440/–	20884080.00	(–)10.81% குறைவு	(+)4.90% அதிகம்

இந்த ஒப்பந்த புள்ளியானது தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர் கலந்து கொண்ட ஒப்பந்த புள்ளி ஆகும். இந்த அனைத்து விவரங்களும் ஒப்பங்கள் ஆராயும் குழுமத்தின் பரிசீலனைக்காக 19.02.2016 அன்று வைக்கப்பட்டது, எல்லாவற்றையும் தெளிவாக ஆராய்ந்த ஒப்பங்கள் ஆராயும் குழுமம் திருவாளர்கள். தாமஸ் ஐயாதுரை இன்ஃப்ராஸ்ட்டரக்சர் (பி) லிட் அவர்கள் அளித்த ஒப்பத் தொகை ரூ.20884080.00யினை ஏற்று பணி வழங்கலாம் என பரிந்துரை செய்துள்ளது.

எனவே, இப்பணிக்கான ஒப்பத்தினை திருவாளர்கள். தாமஸ் ஐயாதுரை இன்ஃப்ராஸ்ட்டரக்சர் (பி) லிட் அவர்களுக்கு பணிகள் அளிக்க கீழ்க்கண்ட இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

1) திருவாளர்கள். தாமஸ் ஐயாதுரை இன்ஃப்ராஸ்ட்டரக்சர் (பி) லிட் அவர்களுக்கு ரூ.20884080.00க்கு மதிப்பிற்கு 2015–16ம் ஆண்டின் அலுவலக விலையைவிட (+) 4.90 % அதிகமான விழுக்காட்டில் பணிகள் அளிக்கவும்
2) பொது மக்களின் நலனை கருத்தில் கொண்டு வருகிற கோடை காலத்திற்குள் பேருந்து நிழற்குடை (Bus Bay) முடிக்க வேண்டும் என்ற அவசியத்தை கருத்தில் கொண்டு உடனடியாக இப்பணியினை செய்ல்படுத்திட அவசரம் மற்றும் அவசரம் கருதி தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்ப விதிகளின்படி ஒப்பத் தொகை இரண்டு கோடிக்கு மேலான ஒப்பங்கள் திறப்பதற்கான கால அவகாசம் 30 நாட்கள் இருக்க வேண்டும் என்ற விதியை தளர்த்தி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி குறுகியகால ஒப்பம் கோரியதற்கும்

மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

2016–2017ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை கூட்டம் நடைபெறுவதால், இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

****

பே.சா.து.ந.க.எண்.பி2/139/2016
ஆணையர் அவர்களின் 25.02.2016 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.273/2016 **பொருள் எண்.127**

பேருந்து சாலைகள் துறை – மண்டலம் 4,5,6,8,9,10,11,12 மற்றும் 13வரை உள்ள பேருந்து தட சாலைகளில் போக்குவரத்து அபிவிருத்தி மேற்கொள்ளும் பணிகளுக்காக ஒப்பந்த புள்ளி கோரப்பட்டது – குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களுக்கு பணியாணை வழங்க அனுமதி

TURIP 2013–14 இயக்குநர் நகராட்சி நிர்வாகம் ஆணையர் செயல்முறை ஆணையம் கடித எண். Roc No.4203/2013E3, நாள். 18.01.2014, TURIP 2015–16 இயக்குநர் நகராட்சி நிர்வாகம் ஆணையர் செயல்முறை ஆணையம் கடித எண். Roc No.8121/2015E3, நாள். 27.08.2015 மற்றும் மன்றத் தீர்மான எண்.623/2015, நாள்.27.10.2015ன்படி பெருநகர சென்னை மாநகராட்சியில், இயற்கை சீற்றங்களினாலும், சேவைத் துறையினரின் பணிகளாலும் மிக மோசமான நிலையை அடைந்த பேருந்து தட சாலைகள் TURIF 2014-15 நிதியில் 41 சாலைகளும் TURIF 2015-16 நிதியில் 92 சாலைகளும் ஆக மொத்தம் 133 சாலைகள் சீர் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட சாலைகளில் போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்தவும், பொதுமக்களின் பயன்பாட்டிற்காகவும் வாகனங்கள் தடையின்றி சீராக செல்வதற்கு ஏதுவாகவும் 133 பேருந்து சாலைகளில் அறிவிப்பு பலகைகள் (Sign Boards) இரவில் சாலைகளில் ஒளிரும் வர்ணம் பூசவும் (Thermoplastic Paint), Pavement Marker மற்றும் Vertical Delineator போன்ற சாலை அபிவிருத்தி பணிகள் செய்ய வேண்டியது அவசியமாகிறது.

மேலும், இப்பணிகளில் சிறப்பு நிபுணத்துவம் வாய்ந்த நிறுவனங்கள் கலந்து கொள்ளும் பொருட்டு சாலை போக்குவரத்து அபிவிருத்தி பணிகளுக்கு தனியாக மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

எனவே, பொதுமக்கள் நலன் மற்றும் இப்பணியின் அவசர அவசியம் கருதி 2015–16ம் ஆண்டு விலை விவர பட்டியல்படி மண்டலம் 4,5,6,8,9,10,11,12 மற்றும் 13 வரை உள்ள பேருந்து தட சாலைகளில் போக்குவரத்து அபிவிருத்தி பணிகள் மேற்கொள்வதற்கு இரண்டு உறை முறையில் தகுதி வாய்ந்த ஒப்பங்களுக்கு 12.01.2016 அன்று ஒப்ப அறிவிப்பு கோரப்பட்டது. ஒப்பந்த அறிவிப்பு 13.01.2016 அன்று ஆங்கில நாளிதழ் இந்தியன் எக்ஸ்பிரஸ் மற்றும் தமிழ் நாளிதழ் மக்கள் குரல் ஆகியவற்றில் பிரசுரிக்கப்பட்டது. பின்னர் இப்பணிக்கான மதிப்பீட்டு தொகை மாற்றம் செய்து திருத்திய ஒப்பம் கோரப்பட்டு 21.01.2016 அன்று ஆங்கில நாளிதழ் இந்தியன் எக்ஸ்பிரஸ் மற்றும் தமிழ் நாளிதழ் மக்கள் குரல் ஆகியவற்றில் பிரசுரிக்கப்பட்டது. மின்னணு முறையில் (e-tender) மட்டுமே ஒப்பந்தபுள்ளி சமர்ப்பிப்பதற்கு அனுமதிக்கப்பட்டது.

ஒப்ப நாளான 27.01.2016 அன்று தொழில் நுட்ப ஆவணம், கலந்து கொண்ட ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டது. அந்த தொழில் நுட்ப ஆவணங்கள் மதிப்பீடு செய்யப்பட்டது. தொழில் நுட்ப ஆவணங்களின் அடிப்படையில் தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களின் நிதி ஆவணம் 10.02.2016 அன்று திறக்கப்பட்டது.

அதன்படி, போக்குவரத்து அபிவிருத்தி செய்யும் பணிக்காக தகுதி பெற்ற ஒப்பந்ததாரர்கள் அளித்த விலை விவரப்பட்டியல் பின்வருமாறு:

அட்டவணை – I

வ எ ண்	பணியின் பெயர்	ஒப்பந்ததாரர் பெயர் திரு / திருவாளர்கள்	அலுவலக விலை	ஒப்பந்ததாரர் அளித்த தொகை (ரூபாய்)	ஒப்பந்ததாரர்கள் அளித்த விலை விகிதம் 2015–16 ஆண்டு அலுவலக விலைப் பட்டியல் படி
1	மண்டலம்–4,5 மற்றும் 6ல் உள்ள 21 எண்ணிக்கையிலான பேருந்து தட சாலைகள் போக்குவரத்து அபிவிருத்தி பணி	ஸ்ரீ பாலாஜி அசோசியேட்ஸ்	1,11,89,120.50	1,23,08,032.55	(+) 10.00 %
2	மண்டலம்–6 மற்றும் 8ல் உள்ள 18 எண்ணிக்கையிலான பேருந்து தடசாலைகள் போக்குவரத்து அபிவிருத்தி பணி	ஸ்ரீ பாலாஜி அசோசியேட்ஸ்	1,11,96,051.60	1,23,15,656.76	(+) 10.00 %
3	மண்டலம்–8 மற்றும் 9ல் உள்ள 12 எண்ணிக்கையிலான பேருந்து தட சாலைகள் போக்குவரத்து அபிவிருத்தி பணி	வரதன் இன்ப்ராஸ்ட்ரக்சர்	1,55,95,866.20	1,71,55,452.82	(+) 10.00 %
		ஸ்ரீ பாலாஜி அசோசியேட்ஸ்	1,55,95,866.20	1,74,67,370.14	(+) 12.00 %
4	மண்டலம்–10, 11, 12 மற்றும் 13ல் உள்ள 23 எண்ணிக்கையிலான பேருந்து தட சாலைகள் போக்குவரத்து அபிவிருத்தி பணி	ஸ்ரீ பாலாஜி அசோசியேட்ஸ்	1,09,24,798.90	1,20,17,278.79	(+) 10.00 %
5	மண்டலம்–4, 5, 6 மற்றும் 8 முதல் 13 வரையில் உள்ள 29 எண்ணிக்கையிலான பேருந்து தட சாலைகள் போக்குவரத்து அபிவிருத்தி பணி	ஸ்ரீ பாலாஜி அசோசியேட்ஸ்	1,18,92,395.10	1,30,81,634.61	(+) 10.00 %

குறைந்த விலைவிகிதம் அளித்த ஒப்பந்ததாரர்களின் ஒப்பத்தொகையானது 2015–16ஆம் ஆண்டு விலைவிவரப்படியான அலுவலக மதிப்பீடு தொகையை விட அதிகம். இதனை விலை குறைப்பு செய்ய, ஒப்பந்ததாரர்களிடம் கேட்டுக்கொண்டதன் பேரில் விலை குறைப்பு செய்ய ஒப்புக்கொண்டார்கள். விலை குறைப்பு செய்த ஒப்பங்களின் விவரம் பின்வருமாறு:

அட்டவணை – II

வ எ ண்	பணியின் பெயர்	ஒப்பந்த தாரர்கள் பெயர் திரு / திருவாளர்கள்	பேச்சு வார்த்தைக்கு பின் ஒப்பந்ததாரர் களுக்கு முடிவு செய்யப்பட்ட தொகை ரூ.	பேச்சு வார்த்தைக்கு பின் ஒப்பந்ததாரர் களுக்கு முடிவு செய்யப்பட்ட விலை விகிதம் 2015–16 அலுவலக விலைப் பட்டியல் படி
1	மண்டலம்–4,5 மற்றும் 6ல் உள்ள 21 எண்ணிக்கையிலான பேருந்து தட சாலைகள் போக்குவரத்து அபிவிருத்தி பணி	ஸ்ரீ பாலாஜி அசோசியேட்ஸ்	1,17,15,009.16	(+) 4.70%
2	மண்டலம்–6 மற்றும் 8ல் உள்ள 18	ஸ்ரீ பாலாஜி	1,17,44,658.13	(+) 4.90%

	எண்ணிக்கையிலான பேருந்து தட சாலைகள் போக்குவரத்து அபிவிருத்தி பணி	அசோசியேட்ஸ்		
3	மண்டலம்–8 மற்றும் 9ல் உள்ள 12 எண்ணிக்கையிலான பேருந்து தட சாலைகள் போக்குவரத்து அபிவிருத்தி பணி	வரதன் இன்ப்ரா ஸ்ட்ரக்சர்	1,63,67,861.58	(+) 4.95%
4	மண்டலம்–10, 11, 12 மற்றும் 13ல் உள்ள 23 எண்ணிக்கையிலான பேருந்து தட சாலைகள் போக்குவரத்து அபிவிருத்தி பணி	ஸ்ரீ பாலாஜி அசோசியேட்ஸ்	1,14,49,189.25	(+) 4.80%
5	மண்டலம்–4, 5, 6 மற்றும் 8 முதல் 13 வரையில் உள்ள 29 எண்ணிக்கையிலான பேருந்து தட சாலைகள் போக்குவரத்து அபிவிருத்தி பணி	ஸ்ரீ பாலாஜி அசோசியேட்ஸ்	1,24,39,445.27	(+) 4.60%

அட்டவணை II–ன் படி ஒப்பந்ததாரர்கள் அளித்த ஒப்பத் தொகையை அரசாணைப் பெறப்பட்ட 2015–16 அலுவலக விலைப்பட்டியலுடன் தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளுடன் ஒப்பிடுகையில் (+) 7.50% முதல் (+) 8.60% வரை அதிகமாக உள்ளது. இது சம்மந்தமாக கீழ்காணும் விவரங்கள் பேருந்து சாலைகள் துறையின் மூலம் ஒப்பங்கள் ஆராயும் குழுமத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

1. இந்த ஒப்பந்தப்புள்ளியானது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்கள் மின்னணு (e-tender) முறையில் கலந்து கொண்ட ஒப்பந்தப்புள்ளி ஆகும். குறைந்த பணிக்காலமான 6 மாதங்கள் மற்றும் சந்தை நிலவரத்தை கருத்தில் கொண்டால் குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர்கள் குறிப்பிட்டுள்ள ஒப்பந்தத் தொகையானது ஏற்றுக்கொள்ளத் தக்க நிலையில் உள்ளது.
2. பணிகள் முன்னேற்றம் கருதி ஒப்பம் திறக்கப்படும் வாரத்தில் வெளியிடப்பட்ட மூலப் பொருட்கள் விலை, தொழிலாளர்களின் ஊதியம் மற்றும் போக்குவரத்து வாகன செலவு ஆகியவற்றிற்கான விலை விவரங்களின் அடிப்படையில் பணிகளுக்கான மதிப்பீடு தொகை மற்றும் துறை விலை விவர அடிப்படையிலான மதிப்பீட்டு தொகை ஆகிய இரண்டினையும் ஒப்பிட்டு, ஏற்படும் வித்தியாச சதவீதத்தில் பணிகள் வழங்கலாம் என 29.10.2007 நாளிட்ட தீர்மான எண்.512/2007ன் படி மன்றம் அனுமதி அளித்துள்ளது.

மேற்குறிப்பிட்ட காரணங்களை கருத்தில் கொண்டு குறைந்த விலைவிகிதம் அளித்த ஒப்பந்ததாரர்களுக்கு பணியை வழங்க 19.02.2016அன்று நடந்த ஒப்பங்கள் ஆராயும் குழுமம் பரிந்துரை வேண்டி சமர்ப்பிக்கப்பட்டது.

அதன்படி, இவ்வொப்பத்தொகையானது 2015–16ஆம் ஆண்டு விலைவிவரப்படியான அலுவலக மதிப்பீட்டு தொகையைவிட அதிகமாக இருந்தாலும், இப்பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு இதனை 19.02.2016 அன்று துணை ஆணையர் (பணிகள்) அவர்கள் தலைமையில் நடந்த உயர்மட்ட ஒப்பம் ஆராயும் குழு ஏற்று, ஒப்புதல் அளித்துள்ளது.

அட்டவணை III

வ எ ண்	பணியின் பெயர்	ஒப்பந்ததாரர்கள் பெயர் திரு / திருவாளர்கள்	பேச்சு வார்த்தைக்குபின் ஒப்பந்ததாரர் களுக்கு முடிவு செய்யப்பட்ட தொகை ரூ.	பேச்சு வார்த்தைக்கு பின் ஒப்பந்ததாரர் களுக்கு முடிவு செய்யப்பட்ட விலை விகிதம் 2015–16 அலுவலக விலைப் பட்டியல்படி
1	மண்டலம்–4,5 மற்றும் 6ல் உள்ள 21 எண்ணிக்கையிலான பேருந்து தட சாலைகள் போக்குவரத்து அபிவிருத்தி பணி	ஸ்ரீ பாலாஜி அசோசியேட்ஸ்	1,17,15,009.16	(+) 4.70%
2	மண்டலம்–6 மற்றும் 8ல் உள்ள 18 எண்ணிக்கையிலான பேருந்து தட சாலைகள் போக்குவரத்து அபிவிருத்தி பணி	ஸ்ரீ பாலாஜி அசோசியேட்ஸ்	1,17,44,658.13	(+) 4.90%
3	மண்டலம்–8 மற்றும் 9ல் உள்ள 12 எண்ணிக்கையிலான பேருந்து தட சாலைகள் போக்குவரத்து அபிவிருத்தி பணி	வரதன் இன்ப்ராஸ்ட்ரக்சர்	1,63,67,861.58	(+) 4.95%
4	மண்டலம்–10, 11, 12 மற்றும் 13ல் உள்ள 23 எண்ணிக்கையிலான பேருந்து தட சாலைகள் போக்குவரத்து அபிவிருத்தி பணி	ஸ்ரீ பாலாஜி அசோசியேட்ஸ்	1,14,49,189.25	(+) 4.80%
5	மண்டலம்–4, 5, 6 மற்றும் 8 முதல் 13 வரையில் உள்ள 29 எண்ணிக்கையிலான பேருந்து தட சாலைகள் போக்குவரத்து அபிவிருத்தி பணி	ஸ்ரீ பாலாஜி அசோசியேட்ஸ்	1,24,39,445.27	(+) 4.60%

எனவே, மேற்கண்ட அட்டவணையின்படி முடிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களுக்கு, ஒப்பத்தினை முடிவு செய்யப்பட்ட ஒப்பத்தொகைக்கு பணி ஆணை வழங்க ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 பிரிவு 7(1) மற்றும் 7(2) ன்படி மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

2016–2017ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை கூட்டம் நடைபெறுவதால், இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

பே.சா.து.ந.க.எண்.பி2/142/2016

ஆணையர் அவர்களின் 25.02.2016 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.274/2016 **பொருள் எண்.128**

பேருந்து சாலைகள் துறை – மண்டலம் 8,9,10 மற்றும் 13வரை உள்ள பேருந்து தட சாலைகளில் போக்குவரத்து அபிவிருத்தி மேற்கொள்ளும் பணிகளுக்காக ஒப்பந்த புள்ளி கோரப்பட்டது – குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களுக்கு பணியாணை வழங்க அனுமதி

TURIP 2013–14 இயக்குநர் நகராட்சி நிர்வாகம் ஆணையர் செயல்முறை ஆணையம் கடித எண். Roc No.4203/2013E3, நாள். 18.01.2014, TURIP 2015–16 இயக்குநர் நகராட்சி நிர்வாகம் ஆணையர் செயல்முறை ஆணையம் கடித எண். Roc No.8121/2015E3, நாள். 27.08.2015, மன்றத் தீர்மான எண்.623/2015, நாள். 27.10.2015ன்படி பெருநகர சென்னை மாநகராட்சியில், இயற்கை சீற்றங்களினாலும், சேவைத் துறையினரின் பணிகளாலும் மிக மோசமான நிலையை அடைந்த பேருந்து தட சாலைகள் TURIF 2014-15 நிதியில் 41 சாலைகளும் TURIF 2015-16 நிதியில் 92 சாலைகளும் ஆக மொத்தம் 133 சாலைகள் சீர் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட சாலைகளில் போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்தவும், பொதுமக்களின் பயன்பாட்டிற்காகவும் வாகனங்கள் தடையின்றி சீராக செல்வதற்கு ஏதுவாகவும் 133 பேருந்து சாலைகளில் அறிவிப்பு பலகைகள் (Sign Boards) இரவில் சாலைகளில் ஒளிரும் வர்ணம் பூசவும் (Thermoplastic Paint), Pavement Marker மற்றும் Vertical Delineator போன்ற சாலை அபிவிருத்தி பணிகள் செய்ய வேண்டியது அவசியமாகிறது.

மேலும், இப்பணிகளில் சிறப்பு நிபுணத்துவம் வாய்ந்த நிறுவனங்கள் கலந்து கொள்ளும் பொருட்டு சாலை போக்குவரத்து அபிவிருத்தி பணிகளுக்கு தனியாக மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

எனவே, பொதுமக்கள் நலன் மற்றும் இப்பணியின் அவசர அவசியம் கருதி 2015–16ம் ஆண்டு விலை விவர பட்டியல்படி மண்டலம் 8,9,10 மற்றும் 13 வரை உள்ள பேருந்து தட சாலைகளில் போக்குவரத்து அபிவிருத்தி பணிகள் மேற்கொள்வதற்கு இரண்டு உறை முறையில் தகுதி வாய்ந்த ஒப்பங்களுக்கு 12.01.2016 அன்று ஒப்ப அறிவிப்பு கோரப்பட்டது. ஒப்பந்த அறிவிப்பு 13.01.2016 அன்று ஆங்கில நாளிதழ் இந்தியன் எக்ஸ்பிரஸ் மற்றும் தமிழ் நாளிதழ் மக்கள் குரல் ஆகியவற்றில் பிரசுரிக்கப்பட்டது. பின்னர் இப்பணிக்கான மதிப்பீட்டு தொகை மாற்றம் செய்து திருத்திய ஒப்பம் கோரப்பட்டு 21.01.2016 அன்று ஆங்கில நாளிதழ் இந்தியன் எக்ஸ்பிரஸ் மற்றும் தமிழ் நாளிதழ் மக்கள் குரல் ஆகியவற்றில் பிரசுரிக்கப்பட்டது. மின்னணு முறையில் (e-tender) மட்டுமே ஒப்பந்தபுள்ளி சமர்ப்பிப்பதற்கு அனுமதிக்கப்பட்டது.

ஒப்ப நாளான 27.01.2016 அன்று தொழில் நுட்ப ஆவணம், கலந்து கொண்ட ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டது. அந்த தொழில் நுட்ப ஆவணங்கள் மதிப்பீடு செய்யப்பட்டது. தொழில் நுட்ப ஆவணங்களின் அடிப்படையில் தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களின் நிதி ஆவணம் 10.02.2016 அன்று திறக்கப்பட்டது.

அதன்படி, போக்குவரத்து அபிவிருத்தி செய்யும் பணிக்காக தகுதி பெற்ற ஒப்பந்ததாரர்கள் அளித்த விலை விவரப்பட்டியல் பின்வருமாறு:

அட்டவணை – I

வ எண்	பணியின் பெயர்	ஒப்பந்ததாரர் பெயர் திரு / திருவாளர்கள்	அலுவலக விலை	ஒப்பந்ததாரர் அளித்த தொகை (ரூபாய்)	ஒப்பந்ததாரர்கள் அளித்த விலை விகிதம் 2015–16 ஆண்டு அலுவலக விலைப் பட்டியல் படி
1	மண்டலம் – 9 மற்றும் 10ல் உள்ள 18 எண்ணிக்கையிலான பேருந்து தட சாலைகள் போக்குவரத்து அபிவிருத்தி பணி	சைன் டி சைன்	1,13,02,257.10	1,10,63,779.48	(–) 2.11 %
		ஸ்ரீ பாலாஜி அசோசியேட்ஸ்	1,13,02,257.10	1,24,32,482.81	(+) 10.00 %

2	மண்டலம் – 8,10 மற்றும் 13ல் உள்ள 12 எண்ணிக்கையிலான பேருந்து தட சாலைகள் போக்குவரத்து அபிவிருத்தி பணி	ஹரி வே லைன்ஸ் (மாணிக்கம் பாண்டி துரை)	1,23,53,951.80	1,17,36,254.21	(–) 5.00 %
		ஸ்ரீ பாலாஜி அசோசியேட்ஸ்	1,23,53,951.80	1,35,89,346.98	(+) 10.00 %

குறைந்த விலைவிகிதம் அளித்த ஒப்பந்ததாரர்களின் ஒப்பத்தொகையானது 2015–16ஆம் ஆண்டு விலைவிவரப்படியான அலுவலக மதிப்பீடு தொகையை விட குறைவாக உள்ளது. மேலும், விலை குறைப்பு செய்ய, ஒப்பந்ததாரர்களிடம் கேட்டுக்கொண்டதன் பேரில் விலை குறைப்பு செய்ய ஒப்புக்கொண்டார்கள். விலை குறைப்பு செய்த ஒப்பங்களின் விவரம் பின்வருமாறு:

அட்டவணை – II

வ எ ண்	பணியின் பெயர்	ஒப்பந்ததாரர்கள் பெயர் திரு / திருவாளர்கள்	பேச்சு வார்த்தைக்கு பின் ஒப்பந்ததாரர் களுக்கு முடிவு செய்யப்பட்ட தொகை ரூ.	பேச்சுவார்த்தைக்கு பின் ஒப்பந்ததாரர் களுக்கு முடிவு செய்யப்பட்ட விலை விகிதம் 2015–16 அலுவலக விலைப் பட்டியல் படி
1	மண்டலம் – 9 மற்றும் 10ல் உள்ள 18 எண்ணிக்கையிலான பேருந்து தட சாலைகள் போக்குவரத்து அபிவிருத்தி பணி	சைன் டி சைன்	1,10,61,519.02	(–) 2.13 %
2	மண்டலம் – 8,10 மற்றும் 13ல் உள்ள 12 எண்ணிக்கையிலான பேருந்து தட சாலைகள் போக்குவரத்து அபிவிருத்தி பணி	ஹரி வே லைன்ஸ் (மாணிக்கம் பாண்டி துரை)	1,17,35,018.81	(–) 5.01 %

அட்டவணை II–ன் படி ஒப்பந்ததாரர்கள் அளித்த ஒப்பத் தொகையை அரசாணைப் பெறப்பட்ட 2015–16 அலுவலக விலைப்பட்டியலுடன் தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளுடன் ஒப்பிடுகையில் (–)2.13% முதல் (–)5.01% வரை குறைவாக உள்ளது. இது சம்மந்தமாக கீழ்காணும் விவரங்கள் பேருந்து சாலைகள் துறையின் மூலம் ஒப்பங்கள் ஆராயும் குழுமத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

1. இந்த ஒப்பந்தப்புள்ளியானது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்கள் மின்னணு (e-tender) முறையில் கலந்து கொண்ட ஒப்பந்தப்புள்ளி ஆகும். குறைந்த பணிக்காலமான 6 மாதங்கள் மற்றும் சந்தை நிலவரத்தை கருத்தில் கொண்டால் குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர்கள் குறிப்பிட்டுள்ள ஒப்பந்தத் தொகையானது ஏற்றுக்கொள்ளத் தக்க நிலையில் உள்ளது.
2. பணிகள் முன்னேற்றம் கருதி ஒப்பம் திறக்கப்படும் வாரத்தில் வெளியிடப்பட்ட மூலப் பொருட்கள் விலை, தொழிலாளர்களின் ஊதியம் மற்றும் போக்குவரத்து வாகன செலவு ஆகியவற்றிற்கான விலை விவரங்களின் அடிப்படையில் பணிகளுக்கான மதிப்பீடு தொகை மற்றும் துறை விலை விவர அடிப்படையிலான மதிப்பீட்டு தொகை ஆகிய இரண்டினையும் ஒப்பிட்டு, ஏற்படும் வித்தியாச சதவீதத்தில் பணிகள் வழங்கலாம் என 29.10.2007 நாளிட்ட தீர்மான எண்.512/2007ன் படி மன்றம் அனுமதி அளித்துள்ளது.

மேற்குறிப்பிட்ட காரணங்களை கருத்தில் கொண்டு குறைந்த விலைவிகிதம் அளித்த ஒப்பந்ததாரர்களுக்கு பணியை வழங்க 19.02.2016அன்று நடந்த ஒப்பங்கள் ஆராயும் குழுமம் பரிந்துரை வேண்டி சமர்ப்பிக்கப்பட்டது.

அதன்படி, இவ்வொப்பத்தொகையானது 2015–16ஆம் ஆண்டு விலைவிவரப்படியான அலுவலக மதிப்பீட்டு தொகையைவிட குறைவாக இருப்பதால், இப்பணியின் அவசர அவசியத்தை கருத்தில்

கொண்டு இதனை 19.02.2016 அன்று துணை ஆணையர் (பணிகள்) அவர்கள் தலைமையில் நடந்த உயர்மட்ட ஒப்பம் ஆராயும் குழு ஏற்று, ஒப்புதல் அளித்துள்ளது.

அட்டவணை III

வ எ ண்	பணியின் பெயர்	ஒப்பந்ததாரர் கள் பெயர் திரு / திருவாளர்கள்	பேச்சுவார்த்தைக்கு பின் ஒப்பந்ததாரர் களுக்கு முடிவு செய்யப்பட்ட தொகை ரூ.	பேச்சு வார்த்தைக்கு பின் ஒப்பந்ததாரர் களுக்கு முடிவு செய்யப்பட்ட விலை விகிதம் 2015–16 அலுவலக விலைப் பட்டியல் படி
1	மண்டலம் – 9 மற்றும் 10ல் உள்ள 18 எண்ணிக்கையிலான பேருந்து தட சாலைகள் போக்குவரத்து அபிவிருத்தி பணி	சைன் டி சைன்	1,10,61,519.02	(–) 2.13 %
2	மண்டலம் – 8,10 மற்றும் 13ல் உள்ள 12 எண்ணிக்கையிலான பேருந்து தட சாலைகள் போக்குவரத்து அபிவிருத்தி பணி	ஹரி வே லைன்ஸ் (மாணிக்கம் பாண்டி துரை)	1,17,35,018.81	(–) 5.01 %

எனவே, மேற்கண்ட அட்டவணையின்படி முடிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களுக்கு, ஒப்பத்தினை முடிவு செய்யப்பட்ட ஒப்பத்தொகைக்கு பணி ஆணை வழங்க ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 பிரிவு 7(1) மற்றும் 7(2) ன்படி மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

2016–2017ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை கூட்டம் நடைபெறுவதால், இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

பா.து.ந.க.எண்.பி3/ 0238 /2016

ஆணையர் அவர்களின் 25.02.2016 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.275/2016 **பொருள் எண்.129**

பாலங்கள் துறை – மண்டலம்–9 – வார்டு–109ல் உள்ள நுங்கம்பாக்கம் சுரங்கப்பாதையின் கிழக்கு பகுதியில் அணுகு பாலம் அமைக்கும் பணி – வடிவமைப்பு மற்றும் வரைபடங்கள் அண்ணா பல்கலைக்கழகத்திடமிருந்து பெறப்பட்டது – அதன்படி மதிப்பீடு ரூ.1,77,74,000/–க்கு தயாரிக்கப்பட்டுள்ளதற்கு அனுமதி

நுங்கம்பாக்கத்தில் உள்ள சுரங்கப்பாதையின் மேல் லயோலா கல்லூரி அமைந்துள்ள வடக்கு பக்கத்திலிருந்து சென்னை மாநகராட்சி இடுகாடு அமைந்துள்ள தெற்கு பக்கம் செல்வதற்கு அணுகு பாலம் (Service Bridge) அமைப்பதற்கு அண்ணா பல்கலைக்கழகத்திடமிருந்து வடிவமைப்பு மற்றும் வரைபடங்கள் பெறப்பட்டன. அதனடிப்படையில் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது. தற்சமயம் நுங்கம்பாக்கம் சுரங்கப்பாதையின் தெற்கு பக்கத்தில் லயோலா கல்லூரியின் சுற்றுச்சுவரை ஒட்டியுள்ள சாலைப்பகுதியின் அகலம் 3 மீட்டர் மட்டுமே. வரைபடம் மற்றும் வடிவமைப்புபடி அணுகு பாலம் அமைப்பதற்கு தேவைப்படும் சாலையின் அகலம் 5.5 மீட்டர் மற்றும் நீளம் 130 மீட்டர் ஆகும். எனவே, 2.5 மீட்டர் அகலம் மற்றும் 130 மீட்டர் நீளம் கொண்ட நிலத்தினை அதாவது லயோலா கல்லூரிக்கு சொந்தமான 325 ச.மீட்டர் அளவிலான நிலத்தினை வளர்ச்சி உரிமை சான்றிதழ் (Transferable Development Rights) வாயிலாக பெறப்பட்டு இப்பணி மேற்கொள்ளப்படும்.

நுங்கம்பாக்கம் சுரங்கப்பாதையின் வடக்கு பக்கத்தில் சென்னை மாநகராட்சி இடுகாட்டு பகுதியில் ஏற்கனவே உள்ள சுற்றுச்சுவரை இடித்துவிட்டு சுமார் 5.5 மீட்டர் அகலம் மற்றும் 130 மீட்டர் நீளம் அளவுள்ள நிலம் எடுக்கப்பட்டு அணுகு சாலை அமைக்கப்படும்.

எனவே, கீழ் குறிப்பிட்ட பணிகளுக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

01. பணியின் பெயர்	:	மண்டலம்–9 வார்டு–109ல் உள்ள நுங்கம்பாக்கம் சுரங்கப்பாதையின் கிழக்கு பகுதியில் அணுகு பாலம் அமைக்கும் பணி
02. எந்த துறைக்காக இப்பணி செயலாக்கம்	:	பாலங்கள் துறை
03. சம்பந்தப்பட்ட துறையால் அனுமதி	:	பாலங்கள் துறை
04. தொழில்நுட்ப ஒப்புதல் அளித்த அதிகாரி செயல்முறை ஆணை எண். மற்றும் நாள்	:	தலைமை பொறியாளர் (பொது) T.S.No. 385/2015-16, நாள். 24.02.2016
05. மதிப்பீடு எந்த வருடத்தின் அட்டவணை விலைப்பட்டியல் முன்வைத்து தயாரிக்கப்பட்டது	:	2015 – 2016
06. மதிப்பீட்டின் தொகை		
(அ) பணி செலவினம் மட்டும்	:	ரூ. 1,51,92,162.92
(ஆ)மேற்பார்வை செலவினம் 10%	:	ரூ. 15,19,216.29
(இ) சிறுமேற்பார்வை செலவினம் 2.5%	:	ரூ. 3,79,804.07
(ஈ) தரக்கட்டுபாடு	:	ரூ. 1,51,921.63
(உ) தமிழ்நாடு தொழிலாளர்கள் பொது நல நிதி 1 %	:	ரூ. 1,51,921.63
(ஊ) எதிர்பாரா செலவினம் 2.5%	:	ரூ. 3,78,973.46
மொத்தம்	:	ரூ. 1,77,74,000.00
07. ஒரு சதுர மீட்டருக்கு ஆகும் செலவு (அ) ஒரு மீட்டருக்கு செலவு	:	–
08. வரைபடம் வைக்கப்பட்டுள்ளதா ?	:	ஆம்
09. மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளித்த குழுவின்	:	வார்டு குழுவின் தீர்மான எண்.

பெயர் தீர்மான எண். மற்றும் நாள்.		பின்னர் பெறப்படும்.
10. நிதியின் மூலத்தன்மை	:	மூலதன நிதி
(அ) வரவு செலவு ஒதுக்கீடு பாலங்கள் மற்றும் சிறு மேம்பாலங்கள் 2014 – 2015	:	ரூ. 42 கோடி
(ஆ) மதிப்பீட்டிற்கு இதுவரை ஒதுக்கப்பட்டுள்ள தொகை	:	ஆணையரின் நிர்வாக அனுமதி பெறப்பட்ட பின்னர் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்
(இ) மீதம் உள்ள நிதி (அ–ஆ)	:	
(ஈ) இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி	:	ரூ. 1,77,74,000.00

மேற்கண்ட பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள ரூ. 1,77,74,000.00 மதிப்பீட்டிற்கும் சென்னை மாநகராட்சியின் சட்டம் விதி 1919ல் விதிகள் 78 மற்றும் 80(2) அளிக்கப்பட்டுள்ள கூடுதல் அதிகாரங்களின்படியும் மற்றும் மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெறப்பட்ட பின் ஒப்பங்கள் கோரி பணியினை செயல்படுத்தவும் மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

2016–2017ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை கூட்டம் நடைபெறுவதால், இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

பொ.து.ந.க.எண்.ஈ3/31819/2013
ஆணையர் அவர்களின் 25.02.2016 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.276/2016 **பொருள் எண்.130**

பணியமைப்பு

28.06.2013 நாளிட்ட அரசாணையில் பெருநகர சென்னை மாநகராட்சியில் உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (விளம்பரம்) மற்றும் உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (தகவல்) என இரண்டு பணியிடங்கள் புதிதாக தோற்றுவித்து ஆணை வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து, 28.06.2013 மற்றும் 29.08.2013 நாளிட்ட கடிதங்களில் இயக்குநர், செய்தி மக்கள் தொடர்பு மற்றும் அலுவலால் அரசு இணைச் செயலாளர், சென்னை–9 அவர்களின் நடவடிக்கைகளின்படி, பெருநகர சென்னை மாநகராட்சியில் மக்கள் தொடர்பு பிரிவில் திரு.ஒய்.எடிசன் அவர்கள், ரூ.9300–34800 + தர ஊதியம் 4300 என்ற ஊதிய விகிதத்தில் உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (விளம்பரம்) ஆகவும், திரு.ப.நெடுமாறன் அவர்கள் ரூ.9300–34800 + தர ஊதியம் 4500 என்ற ஊதிய விகிதத்தில் உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி) ஆகவும், அயற்பணியின் மூலம் பணியர்த்தப்பட்டு முறையே 01.07.2013 மற்றும் 02.09.2013 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகின்றனர்.

பெருநகர சென்னைமாநகராட்சியில் மேற்கண்ட அரசாணையில் உதவி மக்கள் தொடர்பு அலுவலர்(விளம்பரம்) மற்றும் உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி) ஆகிய இரண்டு பதவிகள் மட்டுமே ஒப்பளிக்கப்பட்ட பதவிகள் (Sanctioned Post) ஆகும். இந்நிலையில், 15.02.2016 மற்றும் 25.02.2016 நாளிட்ட செயல்முறை ஆணைகளில், திரு.ஒய். எடிசன், உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (விளம்பரம்) அவர்களை உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி) என பதவி உயர்வு வழங்கி நீலகிரி மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகத்தில் பணியமர்த்திய ஆணையினை ரத்து செய்து பெருநகர சென்னை மாநகராட்சியில் உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி) ஆக பணியமர்த்தப்பட்டு உத்தரவிடப்பட்டுள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சியின் எல்லை விரிவாக்கம் செய்யப்பட்ட நிலையில், பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள 3 வட்டார அலுவலகங்களில் (வடக்கு, மத்தியம் மற்றும் தெற்கு) உள்ள பகுதிகளில் அரசு நிகழ்ச்சிகள், திட்டப்பணிகள், மாநகராட்சி விழா மற்றும் நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்தல், அழைப்பிதழ் மற்றும் விளம்பர பேனர்கள் ஒப்புதல் தயார் செய்து வழங்குதல், செய்தி வெளியிடுவதற்கு ஒப்புதல் பெறுதல் போன்ற பணிகளை சிறப்பாக செயல்படுவதுவதற்கு உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி) என்ற பதவியில் பெரு நகர சென்னை மாநகராட்சி மக்கள் தொடர்பு பிரிவிற்கு அனுபவம் மிகுந்த அலுவலர் தேவைப்படுவதால் தற்போது உள்ள பதவியான உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (விளம்பரம்) பதவியினை உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி) பதவியாக தரம் உயர்த்தி (Post Upgrade) அரசானை பெறுவது குறித்து அரசுக்கு செயற்குறிப்பு அனுப்ப நியமன குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "இம்மாத நியமனக்குழு கூட்டம் முடிவுற்ற நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு இதனை நியமனக்குழு சுற்றின் மூலம் பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

நி.ம.உ.து.ந.க.எண்.இ9/469/2013
ஆணையர் அவர்களின் 25.02.2016 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.277/2016 **பொருள் எண்.131**

நிலம் மற்றும் உடைமைத்துறை – மண்டலம்–1 (திருவொற்றியூர்) திருவள்ளூர் மாவட்டம், மாதவரம் வட்டம் – சாத்தாங்காடு கிராமம் புல எண்.4/3பி நகரளவை வார்டு –டி, பிளாக் –14 – 16829 ச.மீ நிலம் இஸ்லாமியர்கள் கபர்ஸ்தான் அமைப்பினர் மயானமாக பயன்படுத்தும் பொருட்டு சென்னை மாநகராட்சிக்கு நிலமாற்றம் செய்ய கோரி கேட்பு படிவத்தை திருவள்ளூர் மாவட்ட ஆட்சியருக்கு அனுப்புவதற்கு அனுமதி

மண்டல அலுவலரின் கடித ந.க.எண்.ம.அ.1/ந.க.எண்.டி1/5650/2012, நாள்.17.12.2012 கடிதத்தில் மண்டலம்–1, வார்டு–7, சாத்தாங்காடு கிராமம், பேசின் சாலை, நகரளவு வார்டு–டி, பிளாக்–14, டி.எஸ்.எண்.3ல் மாநகராட்சிக்கு சொந்தமான குப்பை கொட்டும் இடம் அமைந்துள்ளதாகவும், கூடுதலாக குப்பை கொட்டுவதற்கு ஏற்கனவே உள்ள இடத்திற்கு வடக்குபுறம், டி.எஸ்.எண்.4ல் 10 ஏக்கர் (மேய்க்கால் புறம்போக்கு) நிலத்தினை முந்தைய திருவெற்றியூர் நகராட்சிக்கு தமிழக அரசு வருவாய் துறை அரசாணை (நிலை) எண்.220, நாள்.06.07.2009–ன்படி திருவொற்றியூர் நகராட்சிக்கு முன்நுழைவு அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டுள்ளதாகவும், மேற்படி இடத்தின் ஒரு பகுதி சுமார் 3 ஏக்கர் இடத்தில் திருவொற்றியூர் இஸ்லாமியர் கபர்ஸ்தான் அமைப்பினர் சுடுகாடாக பயன்படுத்தி வருவதாகவும், மாநகராட்சிக்கு சொந்தமான 10 ஏக்கரில் 3 ஏக்கர் நிலத்தில் இறந்தவர்களின் சடலங்களை 2010ஆம் ஆண்டு இறுதி முதல் புதைத்து வருவதாகவும், மேற்கண்ட மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தினை முஸ்லீம் சுடுகாடாக அங்கீகரிக்க மாண்புமிகு மேயர் அவர்களுக்கு 02.12.2012 நாளிட்ட கடிதம் மூலம் திருவொற்றியூர் இஸ்லாமிய அமைப்பினர் விண்ணப்பித்ததின்பேரில் அரசு அனுமதி வேண்டி வார்டுகுழு தீர்மானம் (தீர்மான எண்.20 நாள்.10.12.2012) நிறைவேற்றப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி நிலமானது தெற்கு இரயில்வே துறைக்கு சொந்தமானது என தென்னக இரயில்வே தலைமை பொது பொறியாளரின் கடித ந.க.எண்.W.277/M/Way leave/MAS/dt.11.9.2013-ல் தெரிவிக்கப்பட்டுள்ளதால் அதனடிப்படையில் இரயில்வே துறை தெரிவித்துள்ள Railway Land Plan No.TVT/L/8 DULY attested by State Revenue Authorities (Revenue Inspector Madhavaram) on date 3.12.1930)–ன் நகலினை இத்துறைக்கு அனுப்பி வைக்குமாறு தெற்கு இரயில்வே முதன்மை பொது மேலாளருக்கு அனுப்பப்பட்ட இவ்வலுவலக கடிதம் மூலம் நாள். 23.9.2014 மற்றும் 6.11.2014ல் தெற்கு இரயில்வே முதன்மை பொது மேலாளரிடம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

திருவள்ளூர் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் ந.க.எண்.11404/2013,ஆ1, நாள்.02.01.2014 (ம) 12.09.2014 கடிதத்தில் மேற்படி நிலத்தினை இஸ்லாமிய கபர்ஸ்தான் அமைப்பினர் மயானமாக பயன்படுத்திக்கொள்ள சென்னை மாநகராட்சிக்கு நிலமாற்றம் செய்யும்பொருட்டு முதன்மை செயலர் மற்றும் நிலநிர்வாக ஆணையருக்கு கருத்துரு அனுப்ப கூடுதல் விவரங்களை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடிதம் ந.க.எண்.11404/2013/பி1, நாள்.27.03.2015ல் மேற்படி நிலத்தை சென்னை மாநகராட்சிக்கு நிலமாற்றம் செய்ய கேட்பு படிவம் மூலமாக விண்ணப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டது.

திருவொற்றியூர் இஸ்லாமிய கபர்ஸ்தான் ஜமாத் மற்றும் தாவூத்தி போரா ஜமாத்தும் இணைந்து மாண்புமிகு மேயர் அவர்களிடம் அளித்த 16.02.2016 கடிதத்தில் திருவொற்றியூர் இஸ்லாமிய கபர்ஸ்தான் அமைப்பிற்கு 2 ஏக்கர் இடத்தையும், தாவூத்தி போரா ஜமாத் அமைப்பிற்கு 1 ஏக்கர் இடத்தையும் தனித்தனியாக பிரித்து அடையாளமிட்டு இனிமேல் இரு அமைப்பும் தனித்தனியாக இடுகாட்டினை பயன்படுத்திக்கொள்ள ஜமாத் அமைப்புகள் பேசி முடிவெடுத்து அதன் அடிப்படையில் பிரித்து சுற்றுச்சுவர் எழுப்பி உள்ளதாக தெரிவிக்கப்பட்ட கடிதத்தின் மீது மாண்புமிகு மேயர் அவர்களின் குறிப்பில் "**இரு அமைப்புகளின் கோரிக்கையை ஏற்கலாம்**" என தெரிவிக்கப்பட்டது.

எனவே மண்டலம்–1, வார்டு–7, திருவள்ளூர் மாவட்டம், மாதவரம் வட்டம், சாத்தாங்காடு கிராமம் புல எண்.4/3பி, நகர அளவை வார்டு–டி, பிளாக் 14–ல் உள்ள 16829 ச.மீ நிலத்தை

திருவொற்றியூர் இஸ்லாமிய கபர்ஸ்தான் அமைப்பினரும், தாவூத்தி போரா அமைப்பினரும் மயானமாக பயன்படுத்தும் பொருட்டு சென்னை மாநகராட்சிக்கு நிலமாற்றம் செய்ய கேட்பு படிவம் R.S.O.24 திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு அனுப்புவதற்கு வார்டுகுழு பின்னேற்பு அடிப்படையில் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

2016–2017ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை கூட்டம் நடைபெறுவதால், இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

சு.து.ந.க.எண். பி1 /090/2016
ஆணையர் அவர்களின் 25.02.2016 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.278/2016 **பொருள் எண்.132**

பொது சுகாதாரத்துறை – உச்சநீதிமன்ற உத்தரப்படி – தேசிய நகர்புற வாழ்வாதாரத் திட்டம் – வீடற்றோருக்கான 31 காப்பகங்கள் நடைபெற்று வருவது – காப்பகங்கள் அமைக்க 33 தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் 33 இரவுநேர காப்பகங்கள் புதியதாக ஏற்படுத்தல் – முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் ஆணையின் படி கல்வித்துறை மற்றும் சுகாதாரத்துறையில் பயன்பாட்டில் இல்லாத மாநகராட்சி கட்டடங்களை சுகாதாரத்துறைக்கு மாற்றம் செய்து காப்பகங்களாக ஏற்படுத்த அனுமதி

சென்னை மாநகராட்சியில் உச்சநீதிமன்ற ஆணையின்படி ஒரு லட்சம் மக்கள் தொகைக்கு ஒரு காப்பகம் வீதம் 70 காப்பகங்கள் துவங்க உத்தேசிக்கப்பட்டு, சென்னை மாநகராட்சியில் 1 முதல் 15 மண்டலங்களுக்குட்பட்ட பகுதிகளில் 2013ம் ஆண்டில் 31 வீடற்றோருக்கான காப்பகங்கள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. இந்த 31 காப்பகங்களுடன் கூடுதலாக 39 வீடற்றோருக்கான இரவு நேர காப்பகங்கள் துவக்கப்பட வேண்டியுள்ளது.

மேலும் கூடுதலாக காப்பகங்கள் ஏற்படுத்துவதற்கு 33 தொண்டு நிறுவனங்கள் தேர்வு செய்யப்பட்டு மன்றத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது. இதில் வீடற்ற மக்களுக்கு சேவை அளிக்க வேண்டிய முக்கியத்துவத்தினை கருத்தில் கொண்டும், உச்ச நீதிமன்ற ஆணையினை செயல்படுத்த வேண்டியுள்ளது.

சென்னை மாநகராட்சியில் வீடற்றோர்கள் அதிகம் வசிக்கும் இடங்களை தேர்வு செய்து அவ்விடத்தில் காப்பகங்கள் அமைத்திட தனியார் இடங்களுக்குரிய பகுதியில் கட்டிடங்களை வாடகை எடுத்தும் அல்லது அரசு கட்டத்தில் தங்கும் வசதி செய்ய வேண்டியது அவசியமாகிறது. அப்பகுதியில் வாடகைக்கு அளிப்பது அப்பகுதியில் உள்ள அரசு கட்டத்தில் தங்கும் வசதி செய்ய வேண்டியது அவசியமாகிறது.

மாநகர அலுவலர், மண்டலம்–4 அவர்களின் இசைவு கடிதம் ம.அ.4/சு.து./ந.க.எ/377/2016 நாள்12.02.2016, மாநகர அலுவலர், மண்டலம்–6 அவர்களின் இசைவு கடிதம் ம.அ.4/சு.து./ந.க.எ/28/2016 நாள்12.02.2016, மாநகர அலுவலர், மண்டலம்–13 அவர்களின் இசைவு கடிதம் ம.அ.4/சு.து./ந.க.எ/406/2016 நாள்16.02.2016, துணை ஆணையர் (கல்வி) அவர்களின் ஆணை க.து.ந.க.எண்.பி3/01866/2016 நாள் 22.02.2016, மாநகர அலுவலர், மண்டலம்–10 அவர்களின் இசைவு கடிதம் ம.அ.10/சு.து/ந.க.எண்.எச்.1/410/2016 நாள் 24.02.2016ன்படி மண்டல அலுவலகள் கீழ்க்கண்ட பயன்பாட்டில் இல்லாத கட்டடங்களை இரவு நேர காப்பகம் ஏற்படுத்த இசைவு குறிப்பு அளித்துள்ளனர். அதன் விவரம் கீழ்க்கண்ட அட்டவணைப்படி,

வ. எண்	மண்டலம்	வார்டு	பயன்பாட்டில் இல்லா கட்டிடத்தின் துறை	கட்டிடத்தின் முகவரி
1	4	41	சுகாதாரத்துறை	ஜெ.ஜெ.நகர் E குறுக்கு தெரு, கொருக்குப்பேட்டை, சென்னை – 21
2	6	78	சுகாதாரத்துறை	சச்சிதானந்தா 2வது தெரு, கொசப்பேட்டை, சென்னை
3	8	107	கல்வித்துறை	எண்.14, சென்னை தொடக்கப் பள்ளி, பள்ளி சாலையில், சென்னை
4	10	133	சுகாதாரத்துறை	62வது தெரு, நல்லான்குப்பம் மருந்தகம், அசோக்நகர்
5		139	சுகாதாரத்துறை	பெரியார் ராமசாமி தெரு, மேற்கு மாம்பலம், சென்னை
6	13	182	சுகாதாரத் துறை	திருவீதி அம்மன் கோயில் தெரு, அடையார், சென்னை

மேற்குறிப்பிட்ட 6 கட்டடங்களை சுகாதாரத்துறையின் கீழ் காப்பகங்களாக மாற்றம் செய்து பயன்படுத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

எனவே,

1. சென்னை மாநகராட்சியில் சுகாதாரத்துறையின் பயன்பாட்டில் இல்லாத 5 கட்டங்கள் மற்றும் கல்வித்துறையில் பயன்பாட்டில் இல்லாத 1 கட்டடத்தையும் சுகாதாரத்துறைக்கு மாற்றம் செய்து இரவு நேர காப்பகங்களாக அமுல்படுத்த அனுமதியும்,
2. இந்த மாநகராட்சி கட்டடங்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் அந்தந்த மண்டல அலுவலர்கள் மூலம் ஏற்படுத்தி தர அனுமதியும்,
3. இதற்கான செலவினம் மண்டல அளவிலேயே மேற்கொள்ள அனுமதியும்,
4. மேற்கண்ட மாநகராட்சி கட்டங்களை சுகாதாரத்துறைக்கு மாற்றம் செய்து இரவு நேர காப்பகங்களாக அமுல்படுத்த மன்றத்தின் அனுமதி பெறவும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரையிலான இனங்களுக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

2016–2017ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை கூட்டம் நடைபெறுவதால், இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

சு.து.ந.க.எண். பி1 /4365 /2014

ஆணையர் அவர்களின் 26.02.2016 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.279/2016 **பொருள் எண்.133**

பொது சுகாதாரத்துறை – உச்சநீதிமன்ற உத்திரவுபடி வீடற்றோருக்கென காப்பகங்கள் 4 எண்ணிக்கையில் புதிய தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் ஆரம்பிக்க – காப்பக ஆலோசனைக்குழு – பரிந்துரை பெறப்பட்டது – இந்த தொண்டு நிறுவனங்கள் மூலம் இரவு நேரகாப்பங்கள் நடத்த அனுமதி

சென்னை மாநகராட்சியில் உச்சநீதிமன்ற ஆணையின்படி ஒரு லட்சம் மக்கள் தொகைக்கு ஒரு காப்பகம் வீதம் 70 காப்பகங்கள் துவங்க உத்தேசிக்கப்பட்டு, 1 முதல் 15 மண்டலங்களுக்குட்பட்ட பகுதிகளில் 2013ம் ஆண்டில் 31 வீடற்றோருக்கான காப்பகங்கள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. இதில் வீடற்ற மக்களுக்கு சேவை அளிக்க வேண்டிய முக்கியத்துவத்தினை கருத்தில் கொண்டும், உச்ச நீதிமன்ற ஆணையினை செயல்படுத்த வேண்டியுள்ளது.

சென்னை மாநகராட்சியில் மேலும் கூடுதலாக 33 காப்பங்கள் ஏற்படுத்த புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டு செயல்பட தயார் நிலையில் உள்ளது. இந்நிலையில் 70 காப்பகங்களுக்கான இலக்கை அடையவதற்காக 4 புதிய தொண்டு நிறுவனங்களிடமிருந்து 4 விண்ணப்பங்களும், திட்ட முன்கொணர்வு விண்ணப்பங்கள் பெற்றப்பட்டன.

எனவே, புதியதாக தன்னார்வ தொண்டு நிறுவனங்களை தேர்வு செய்ய 30.01.2016 அன்று காப்பக ஆலோசனை குழு (Shelter Advisory Committee) ஆலோசனை கூட்டம் நடத்தப்பட்டது.

எண்	காப்பக ஆலோசனை குழு		பதவியின் பெயர்
1	டாக்டர். N.A.செந்தில்நாதன்	மாநகர நல அலுவலர்(பொ) (City Health Officer(i/c))	தலைவர்
2	டாக்டர். S.மணி	கூடுதல் மாநகர நல அலுவலர் (Addl. City Health Officer)	உறுப்பினர்
3	டாக்டர்.எ.சரஸ்வதி	கூடுதல் மாநகர நல அலுவலர் (Addl. City Health Officer)	உறுப்பினர்
4	செல்வி. சாரா	குழந்தை நலக்குழு உறுப்பினர் (Member of Child welfare committee)	உறுப்பினர்
5	திருமதி. அஸ்பி	குழந்தை நலக்குழு உறுப்பினர் (Member of Child welfare committee)	உறுப்பினர்
6	திரு. அருள் சகாயம்	சமூக பணியாளர் (Social worker)	உறுப்பினர்
7	திருமதி. ஆஷா பரேக் நந்தினி	நகர ஒருங்கிணைப்பாளர் (City Level Coordinator)	உறுப்பினர்

தன்னார்வ தொண்டு நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட விண்ணப்பங்களை கூர்ந்தாய்வு செய்து, பெறப்பட்ட விண்ணப்பங்களில் தொண்டு நிறுவனத்தின் முன்அனுபவம், காப்பக மேலாண்மை திறமை, நன்கொடை மேலாண்மை, கடந்த கால நிதி மேலாண்மை, அரசு திட்டங்களை செயல்படுத்திய முன் அனுபவம் மற்றும் நிலைப்புத் தன்மை (Sustainability) ஆகியவற்றினை கொண்டு காப்பக ஆலோசனை குழு (Shelter Advisory Committee) புதிய 4 தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் தேர்வு செய்ய பரிந்துரை செய்யதது.

காப்பக ஆலோசனை குழுவால் பரிந்துரை செய்யப்பட்ட 4 புதிய தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் விவரம்

Sl. No.	Name of the NGOs and Location	Type of Shelter	Registration No. & year	Remarks
1	**Niyama Foundation,** 445-445 Anna Salai, Guna Complex, 2nd Floor, Teynampet, Chennai – 600 018.	Care for children	155/2015	Recommonded by Shelter Advisory Committee

2	**Trust Organisation for Women Environment and Rural (TOWER)** 5/619, CTO colony, NGO colony, Dindigul – 624 005	Care for Women and Children	94/96	Recommonded by Shelter Advisory Committee
3	**Glorious Gospel Mission Charitable Turst,** Old No.28C, New No.51, Bhagavathy Ammal Street, Kolathur, Chennai – 600 099.	Care for Men	774/98	Recommonded by Shelter Advisory Committee
4	**SEESHA,** No.16, Dr. D.G.S. Dhinakaran Road, Chennai – 600 028.	Care for family	1329/2003	Recommonded by Shelter Advisory Committee

எனவே,

1. சென்னை மாநகராட்சியில 1 முதல் 15 மண்டலங்களிலும் புதியதாக காப்பகங்களை ஆரம்பிக்க, காப்பக ஆலோசனை குழு (Shelter Advisory Committee) மூலம் பரிந்துரை செய்யப்பட்டுள்ள 4 புதிய தன்னார்வ தொண்டு நிறுனங்களுக்கு அனுமதியும்,
2. மொத்தம் 4 காப்பகங்கள் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் நிர்வகிக்க ஓராண்டிற்கு 2016–2017 நிதி ஆண்டில் தோராய செலவினமாக ஒரு காப்பகத்திற்கு ரூ.13,60,000/– வீதம் காப்பகங்களுக்கு (4 X 13,60,000 = 54,40,000) ரூ.54,40,000/– (ரூபாய் ஐம்பத்து நான்கு இலட்சத்து நாற்பதாயிரம் மட்டும்) ஒதுக்கீடு செய்ய அனுமதியும்,
3. இதற்கான செலவினம் சென்னை மாநகராட்சி மூலதன நிதியில், பிரிவு குறியீடு எண். 30–35–01 மற்றும் கணக்கு குறியீடு எண். 230–20–21–00ன் கீழ், நிதி ஆலோசகர் மூலம் நிதி ஒதுக்கீடு செய்யவும்,
4. செலவு செய்யப்பட்ட நிதியை தேசிய நகர்புற வாழ்வாதார திட்டம் (NULM) மற்றும் HUDCO மற்றும் ஏனைய அரசு நிர்வனங்களிடமிருந்து கோரி பெறவும்,
5. பெருநகர சென்னை மாநகராட்சியால் நடத்தப்படும் 9 குழந்தைகள் வீடற்றோர் காப்பகத்திற்கும் நிதி கோரி துணை ஆணையர், அனைவருக்கு கல்வி இயக்கம் (SSA) மற்றும் சமூக பாதுகாப்புத்துறையை கோருவதற்கும்,
6. பெருநகர சென்னை மாநகராட்சியால் நடத்தப்படும் முதியோர் வீடற்றோர் காப்பகத்திற்கு நிதி கோரி சமூக பாதுகாப்பு துறைக்கு கடிதம் அனுப்புவதற்கும்,

மேற்கண்ட 1 முதல் 6 வரையிலான இனங்களுக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

2016–2017ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை கூட்டம் நடைபெறுவதால், இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

பே.சா.து.ந.க.எண்.பி1(E1)/7403/2015

ஆணையர் அவர்களின் 25.02.2016 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.280/2016 **பொருள் எண்.134**

பேருந்து சாலைகள் துறை – மண்டலம் 7, வார்டு எண்.90ல் உள்ள பல்வேறு உட்புற தெருக்களில் பேவர் இயந்திரம் மூலம் தார் சாலை அமைக்கும் பணிக்கு ஒப்பங்கள் கோரப்பட்டது – குறைந்த விலைப்புள்ளி அளித்த திரு.எம்.மேனகா அவர்களுக்கு பணியாணை வழங்க அனுமதி

மண்டலம்–7, வார்டு–90ல் உள்ள திருவல்லீஸ்வரர் நகர் 1) ஔவை தெரு, 2) திருஞான சம்பந்தர் குறுக்கு தெரு, 3) ஜகதாம்பிகை தெரு, 4) மாணிக்கவாசகர் தெரு, 5) இளங்கோ தெரு, 6) வெற்றி வினாயகர் தெரு, 7) வெற்றி வினாயகர் முதல் தெரு, 8) சுந்தரர் தெரு, 9) அப்பர் தெரு மற்றும் 10) திருஞான சம்பந்தர் தெரு ஆகிய சாலைகளை பேவர் இயந்திரம் மூலம் தார்ச்சாலை அமைக்கும் பணிக்கு 2014–15ம் ஆண்டின் அலுவலக விலைப்பட்டியல்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட ரூ. 4,02,94,000/– மதிப்பீட்டிற்கு ஆட்சி முறை ஒப்பளிப்பு மன்றத்தீர்மான எண்.572/2015, நாள்.30.09.2015ல் பெறப்பட்டு, ஒப்பங்கள் பேருந்து சாலைகள் துறையின் மூலம் ஒப்பம் கோருவதற்கு மண்டலம்–7 இருந்து கோப்பு பெறப்பட்டது.

மேற்கண்ட மன்றத்தீர்மானத்தின் அடிப்படையில் பேருந்து சாலைகள் துறை மூலமாக ஒப்பங்கள் கோருவதற்காக இரண்டு உறை முறையில் தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்பங்கள் வரவேற்பதற்கு இறுதி நாள்.18.12.2015 என நிர்ணயம் செய்யப்பட்டு 01.12.2015 அறிவிப்பு வெளியிடப்பட்டு 08.12.2015 நாளிட்ட நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆங்கில நாளிதழ் மற்றும் மாலைமலர் தமிழ் நாளிதழ் மற்றும் சென்னை மாநகராட்சி ஒப்பந்த புள்ளி செய்தி மலர் மற்றும் மாநில ஒப்பந்தபுள்ளி மலரிலும் பிரசுரிக்கப்பட்டது.

ஒப்ப நாளான 18.12.2015 அன்று தொழில்நுட்ப ஆவணம் கலந்து கொண்ட ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் திறக்கப்பட்டது. தொழில்நுட்ப ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டதின் அடிப்படையில் தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்கள் தேர்வு செய்யப்பட்டார்கள். எனவே தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களின் நிதி ஆவணம் 05.01.2016 அன்று திறக்கப்பட்டது.

ஒப்பத்தில் பங்கேற்ற விவரம் கீழ்வருமாறு

வ.எண்	ஒப்பந்ததாரரின் பெயர்	பணியின் அலுவலகத் தொகை	ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகை ரூ	2014–15ம் ஆண்டின் அலுவலக விலைப்படி ஒப்ப சதவீதம்
1	ஆர்.ராமராவ்	34196066.37	36433494.42	(+) 6.54 %
2	திருமதி.எம்.மேனகா	34196066.37	35023150.19	(+) 2.42 %

ஒப்பத்தில் கலந்து கொண்டவர்களின் நிதி ஆவணம் திறக்கப்பட்டு, குறைந்த விலைப்புள்ளி அளித்த திருமதி.எம்.மேனகா அவர்கள் அளித்துள்ள ஒப்பத் தொகை ரூ.35023150.19 ஆகும். இத்தொகையை 2014–15ம் ஆண்டின் அலுவலக விலையுடன் ஒப்பிடுகையில் (+)2.42% அதிகம் மற்றும் 2015–16ம் ஆண்டின் அலுவலக விலையுடன் ஒப்பிடுகையில் (+)12.65% அதிகம் ஆகும். ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகையை சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் (–)0.23% குறைவு ஆகும்.

குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் திருமதி.எம்.மேனகா அவர்களிடம் விலைக்குறைப்பு வேண்டி கடிதம் அளிக்கப்பட்டது. முதற்கட்ட விலைக்குறைப்பு திருமதி. எம்.மேனகா அவர்கள் முதற்கட்ட விலைக்குறைப்பு கடிதத்தில் ஒப்பத்தில் பங்கேற்ற போது குறிப்பிட்ட தொகை ரூ.35023150.19 இருந்து ரூ.34462625.65 தொகைக்கு பணியினை செய்ய விலைக்குறைப்பு செய்து கடிதம் அளித்துள்ளார்கள். மீண்டும் விலைக்குறைப்பு வேண்டி கடிதம் அளிக்கப்பட்டது. திருமதி.எம்.மேனகா அவர்கள் தான் ஒப்பத்தில் குறிப்பிட்டத் தொகை ரூ.35023150.19 இருந்து நேரடியாக ரூ.34142974.72க்கு பணியினை செய்ய விலைக்குறைப்பு கடிதம் அளித்துள்ளார்கள். அதன்படி ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகையை 2014–15ம் ஆண்டின் அலுவலக விலையுடன் ஒப்பிடுகையில் (–)0.16% குறைவு ஆகும். மேலும் 2015–16ம் ஆண்டின் அலுவலக விலையுடன் ஒப்பிடுகையில் (+)9.82% அதிகம் மற்றும் ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகையை 07.01.2016 நாளிட்ட சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் (–)2.74% குறைவு ஆகும்.

இந்த ஒப்பந்த புள்ளியானது தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்கள் கலந்து கொண்ட ஒப்பந்த புள்ளி ஆகும். இந்த அனைத்து விவரங்களும் ஒப்பங்கள் ஆராயும் குழுமத்தின் பரிசீலனைக்காக

19.02.2016 அன்று வைக்கப்பட்டது, எல்லாவற்றையும் தெளிவாக ஆராய்ந்த ஒப்பங்கள் ஆராயும் குழுமம் திருமதி.எம்.மேனகா அவர்கள் அளித்த ஒப்பத் தொகை ரூ.34142974.72யினை ஏற்று பணி வழங்கலாம் என பரிந்துரை செய்துள்ளது.

மேலும், ஆணையர் அவர்களின் 25.02.2016 அன்று மன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள குறிப்பில் 2015–16ம் ஆண்டு அலுவலக விலையுடன் ஒப்பிடுகையில் (+) 8.00%க்குள் விழுக்காட்டில் பணிகள் அளிக்க குறிப்பிட்டுள்ளார். அதன்படி குறைந்த ஒப்பந்ததாரரான திருமதி.எம்.மேனகா அவர்களிடமிருந்து அன்றே நேரடியாக (+) 7.99 சதவீதத்திற்கு பணி செய்ய கடிதம் பெறப்பட்டது.

எனவே,

1) திருமதி.எம்.மேனகா அவர்களுக்கு ரூ.3,35,74,747.72க்கு மதிப்பிற்கு 2014–15ம் ஆண்டின் அலுவலக விலையைவிட (–) 1.82 % குறைவாகும் மற்றும் 2015–16ம் ஆண்டு அலுவலக விலையுடன் ஒப்பிடுகையில் (+) 7.99% அதிகமான விழுக்காட்டில் பணிகள் அளிக்கவும்

2) சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பின்படியும் (C.P.No.456/2015), மேலும் செயல் அலுவலர் அருள்மிகு திருவல்லீஸ்வரர் திருகோவில் பாடி சென்னை–50 அவர்கள் செயல் அலுவலர் அம்பத்தூர் நகராட்சி (அப்போதைய) அவர்களுக்கு 21/12/1985 மற்றும் 4/11/1989 ஆகிய தேதிகளில் சாலைகளை அமைத்துத்தர தடையின்மை சான்றிதழ் வழங்கியுள்ளதையும் மற்றும் உயர் நீதிமன்றத்தின் உத்திரவினை நிறைவேற்றும் பொருட்டும் பணிகளை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டதை தொடர்ந்து திருவல்லீஸ்வரர் நகரில் வசிக்கும் பொது மக்களின் நலன் கருதி அடிப்படை வசதியான சாலைகளை மேம்படுத்துவதற்கான காரணத்தை கருத்தில் கொண்டு உடனடியாக இப்பணியினை செயல்படுத்திட அவசரம் மற்றும் அவசியம் கருதி தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்ப விதிகளின்படி ஒப்பத் தொகை இரண்டு கோடிக்கு மேலான ஒப்பங்கள் திறப்பதற்கான கால அவகாசம் 30 நாட்கள் இருக்க வேண்டும் என்ற விதியை தளர்த்தி மன்றத்தின் பின்னேற்பு அனுமதியை எதிர்நோக்கி குறுகியகால ஒப்பம் கோரியதற்கும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 வரையிலான இனங்களுக்கு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

2016–2017ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை கூட்டம் நடைபெறுவதால், இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

மா.கு.ந(ம)ம.கு.ந.க.எண்.எப்4/0548/2016

ஆணையாளர் அவர்களின் 16.02.2016 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.281/2016 **பொருள் எண்.135**

உள்ளுறை இளைய மற்றும் மூத்த மருத்துவர்களுக்கு சிறப்பு பயிற்சி அளிக்கவும் ஊக்க தொகை வழங்கவும் அனுமதி

பெருநகர சென்னை மாநகராட்சியில் சுமார் 75 லட்சம் மக்களுக்கு பொது சுகாதாரத்துறை மற்றும் மாவட்ட குடும்ப நலத்துறை மூலம் மருத்துவ சேவைகள் சிறப்பான முறையில் வழங்கப்பட்டுவருகின்றது. இத்துறைகளின் கீழ் 140 ஆரம்ப நகர சுகாதார நிலையங்களும், 15 சமுதாய சுகதார நிலையங்களும், மூன்று 24 மணிநேர அவசரக்கால மகப்பேறு மருத்துவ மனைகளும் மற்றும் சிறப்பு தொற்று நோய் மருத்துவ மனையும் செயல்பட்டுவருகிறது. ஒரு நகர சுகாதார நிலையத்தில் நாளொன்றுக்கு 200 முதல் 400 என தோராயமாக 30,000 புறநோயாளிகள் சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

பொது சுகாதாரத்துறை மற்றும் மாவட்ட குடும்ப நலத்துறையின் கீழ் இயங்கும் 140 ஆரம்ப நகர சுகாதார நிலையங்களில் சிறப்பு பிரிவுகளான தொற்றா நோய்கள், ஆயுர்வேதம், தோல், காசநோய், தொழுநோய் பிரிவுகளை உள்ளடக்கிய அனைத்து நோய்களுக்கும் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. மேலும் 15 சமுதாய சுகாதார நிலையங்கள் மற்றும் மூன்று 24 மணிநேர அவசரக்கால மகப்பேறு மருத்துவ மனைகளில் ஒரு வருடத்திற்கு சுமார் 13,000 முதல் 14,000 வரை பிரசவங்கள் நடைபெற்றுவருகிறது. மேலும், 8,000 முதல் 10,000 வரை குடும்ப நல அறுவை சிகிச்சைகள், 1500 மருத்துவ முறை கருக்கலைப்புகள் மற்றும் பிரசவத்திற்கு பின் கருத்தடை வளையம் சுமார் 3,000 நபர்களுக்கு பொருத்தப்படுகிறது.

ஆரம்ப நகர சுகாதார நிலையங்களிலும், சமுதாய சுகதார நிலையங்களிலும் மற்றும் 24 மணிநேர அவசரக்கால மகப்பேறு மருத்துவ மனைகளிலும் மேற்கண்ட மருத்துவ சிகிச்சை சிறப்பான முறையில் நடைபெற்றுவருவதால் உள்ளுறை இளைய மற்றும் மூத்த பயிற்சி மருத்துவர்களுக்கு பொது மருத்துவம், அறுவைசிகிச்சை, குழந்தை நலம், மகப்பேறு மருத்துவம், மயக்க மருந்து மருத்துவம் ஆகிய பிரிவுகளில் பயிற்சி அளிக்க ஏதுவாக உள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி பொது சுகாதாரத்துறை மற்றும் மாவட்ட குடும்ப நலத்துறை உள்ள மருத்துவ கட்டமைப்புகளை கொண்டு 100 உள்ளுறை இளைய பயிற்சி மருத்துவர்களுக்கும் மற்றும் 75 உள்ளுறை மூத்த பயிற்சி மருத்துவர்களுக்கும் பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

பயிற்சியின் குறிக்கோள்:

இந்திய மருத்துவ மன்றத்தில் அங்கத்தினராக (Medical Council in India) பதிவு செய்த உள்ளுறை இளநிலை பயிற்சி மருத்துவர்கள், அறுவைசிகிச்சை மருத்துவர்கள், குழந்தை நல மருத்துவர்கள், மகப்பேறு மருத்துவர்கள், மயக்க மருந்து மருத்துவர்கள் மற்றும் பொது மருத்துவர்கள் ஆகியோர்களுக்கு ஆரம்ப நகர சுகாதார நிலையங்கள், சமுதாய சுகதார நிலையகள் மற்றும் 24 மணிநேர அவசரக்கால மகப்பேறு மருத்துவ மனைகளில் செயல்முறை மற்றும் அனுபவ பயிற்சியும் (Observation and Teaching) மேலும் மாலை நேரங்களில் பரிசோதனை செய்வதற்கு பயிற்சி அளிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

தகுதி:

உள்ளுறை இளைய பயிற்சி மருத்தவர்கள்	உள்ளுறை மூத்த பயிற்சி மருத்துவர்கள்
MBBS மருத்துவ படிப்பு முடித்து மருத்துவ மன்றத்தில் அங்கத்தினராக (Medical Council of India) பதிவு செய்து இருத்தல் வேண்டும்.	MBBS அறுவைசிகிச்சை மருத்துவர்கள் MS(General Surgery), MBBS குழந்தை நலம் மருத்துவர்கள், (DCH/MD Paediatrics) MBBS மகப்பேறு மருத்துவர்கள் (DGO/MS(OG)), MBBS மயக்க மருந்து மருத்துவர்கள் DA/MD (Anaesthesia), மற்றும் MBBS பொது மருத்துவர்கள் MD(General Medicine) Other Specialist Diplomo PG மருத்துவ அங்கத்தினராக (Medical Council in India) பதிவு செய்து இருத்தல் வேண்டும்.

பயிற்சிக்காலம் மற்றும் பயிற்சிக்கான உதவி தொகை (Stipend):

பயிற்சி காலம்: 1 வருடம்.	**பயிற்சி காலம்:** 1 வருடம்

தேவை ஏற்படின் 2 வருடம் வரை நீட்டித்தல்	தேவை ஏற்படின் 2 அல்லது 3 வருடங்கள் நீட்டித்தல்
பயிற்சிக்கான உதவி தொகை: மாதம் ஒன்றுக்கு ரூ.30,000/– பயிற்சி காலம் நீட்டிக்கும் பட்சத்தில் ஆண்டு ஒன்றுக்கு 10% உயர்த்துதல்	**பயிற்சிக்கான உதவி தொகை:** மாதம் ஒன்றுக்கு ரூ.45,000/– பயிற்சி காலம் நீட்டிக்கும் பட்சத்தில் ஆண்டு ஒன்றுக்கு 10% உயர்த்துதல்

பயிற்சியில் சேர்க்கப்பட்டுள்ள சிறப்பு பிரிவுகள்:

மகப்பேறு மருத்துவம்:

- கர்ப்ப கால சேவைகள்
- பேறு கால சேவைகள்
- பிரசவத்திற்கு பின் சேவைகள்
- சுகப்பிரசவம் மற்றும் அறுவை சிகிச்சை மூலம் பிரசவம்
- பிரசவத்திற்கு பின் மற்றும் இடைக்காலத்தில் கருத்தடை வளையம் பொருத்துதல்
- பிரசவத்திற்கு பின் மற்றும் இடைக்காலத்தில் குடும்ப நல அறுவை சிகிச்சைகள்
- லேப்பிராஸ்கோப்பி குடும்ப நல அறுவை சிகிச்சை
- ஆண்களுக்கான குடும்ப நல அறுவை சிகிச்சை
- இதர குடும்பநல சேவைகள்
- மார்பகம் மற்றும் கருப்பை வாய் புற்றுநோய் அறிதல்
- மகப்பேறு ஸ்கேன்
- மார்பக புற்றுநோய்க்கான ஸ்கேன்
- பெண்களுக்கு கருப்பை சம்பந்தமான சிறுசிறு அறுவை சிகிச்சைகள்
- கருப்பை அகற்றும் அறுவை சிகிச்சை
- குழந்தை பேறு இல்லாதவர்களுக்கு சிறப்பு பிரிவு

குழந்தை நலம்:

- பிறந்த குழந்தைகளுக்கான கவனிப்பு
- 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கான கவனிப்பு
- குழந்தைகளுக்கு சிறுசிறு நோய்களுக்கான சிகிச்சை
- தடுப்பூசி வழங்குதல்
- குழந்தை வளர்ச்சியை கண்காணித்தல்

மயக்க மருந்து மருத்துவம்:

- பிரசவம் மற்றும் கருப்பை சம்பந்தமான அறுவை சிகிச்சைகளுக்கு மயக்கம் அளித்தல்
- பிரசவ, மருத்துவ மற்றும் அறுவை சிகிச்சையின் பொழுது ஏற்படும் அவசர எதிர்பாராத அவசர நிலைகளை நிர்வகித்தல்

பொது மருத்துவம்:

- இரத்த அழுத்தம்
- சர்க்கரை நோய்
- தொற்று நோய்
- பிற காரணிகளால் ஏற்படும் நோய்
- காசநோய்
- காரணம் அறியாத காய்ச்சல்
- மனநலம்
- கெட்ட பழக்கங்களிலிருந்து விடுவித்தல் (De addiction)

பொது அறுவைசிகிச்சைகள்:

- சிறு அறுவைசிகிச்சைகள்
- லேப்பிராஸ்கோப்பி அறுவைசிகிச்சைகள்

பொது சுகாதாரம் மற்றும் தாய்சேய் நலம்:

- பொது புற நோயாளி பிரிவு
- தடுப்பூசி போடுதல்

- கர்ப்பகால முன் பதிவு
- மக்களை தேடி சென்றடையும் சுகாதார திட்டம்
- சிறப்பு மருத்துவ முகாம்
- பள்ளி மாணவ மாணவியருக்கான சுகாதார திட்டம்
- தகுதிவாய்ந்த தம்பதியர் தாய்சேய் நல குறிப்பேடுகளை பராமரித்தல்
- பொது சுகாதார சேவைகள்

பயிற்சியின் விவரம்:

உள்ளுறை இளைய மற்றும் மூத்த பயிற்சி மருத்துவர்கள் 140 ஆரம்ப நகர சுகாதார நிலையங்களிலும், 15 சமுதாய சுகாதார நிலையங்களிலும், மூன்று 24 மணிநேர அவசரக்கால மகப்பேறு மருத்துவ மனைகளிலும், மற்றும் புறநோயாளி பிரிவுகளிலும் பயிற்சிக்காக பணியமைக்கப்படுவர். இவர்களுக்கு வார நாட்களில் நாளொன்றுக்கு 8 மணி நேர பணியும், சுழற்சி முறையில் இரவு நேர பணியும் வாரம் ஒரு முறை விடுப்பும் வழங்கப்படும்.

கட்டமைப்பு:

பெருநகர சென்னை மாநகராட்சியில் 140 ஆரம்ப நகர சுகாதார நிலையங்கள், 15 சமுதாய சுகாதார நிலையங்கள் மற்றும் மூன்று 24 மணிநேர அவசரக்கால மகப்பேறு மருத்துவ மனைகளும் உள்ளன. இங்கு தாய்சேய் நல சேவைகள் பிரசவக்கால சேவை, குடும்பநல அறுவை சிகிச்சைகள், லேப்பிராஸ்கோப்பி அறுவைசிகிச்சைகள், கருப்பபை சம்பந்தமான அறுவைசிகிச்சைகள் செய்யப்படுகின்றன. எனவே, மேற்கூறிய இடங்களில் உள்ளுறை இளைய மற்றும் மூத்த பயிற்சி மருத்துவர்களுக்கு பயிற்சி அளிக்க ஏற்றதாக உள்ளது. மேலும், இந்த மருத்துவ மனைகளில் நவீன வசதிகளுடன் Centralized Oxygen supply வழங்கப்படுகிறது. அறுவை சிகிச்சை அரங்குகளில் Nano Technology பயன்படுத்தப்படுகிறது. சமுதாய சுகாதார நிலையங்களிலும் மற்றும் மூன்று 24 மணிநேர அவசரக்கால மகப்பேறு மருத்துவ மனைகளிலும் சிசு சீராக்கும் பிரிவுகள் (New Born Stabilization Unit) இயங்கி வருகின்றது.

மருத்துவ வல்லுனர்கள்:

பெருநகர சென்னை மாநகராட்சியில் 20 வருட அனுபவம் மற்றும் பயிற்சி பெற்ற 40–க்கும் மேற்பட்ட முதன்மை மருத்துவ அலுவலர்கள், 15 மண்டல மருத்துவ அலுவலர்கள், 15 மண்டல சுகாதார அலுவலர்கள், 19 மகப்பேறு மருத்துவர்கள், 8 மயக்க மருந்து மருத்துவர்கள், 4 குழந்தை நல மருத்துவர்கள், 1 ஸ்கேன் நிபுணர், 1 கண் மருத்துவர், 5 காது மற்றும் மூக்கு அறுவைசிகிச்சை நிபுணர், 1 தோல் சிகிச்சை நிபுணர், 1 சர்க்கரை நோய் நிபுணர், 2 இதய நோய் சம்பந்தமான மருத்துவர், 2 மனநோய் மருத்துவர், பொது மருத்துவம் மற்றும் அறுவைசிகிச்சை நிபுணர்கள் உள்ளனர். இவர்கள் இளைய மற்றும் மூத்த மருத்துவர்களுக்கு பயிற்சி அளிக்க ஏற்றவர்களாவர்.

தேர்ச்சி முறை:

உள்ளுறை இளைய மற்றும் மூத்த பயிற்சி மருத்துவர்கள், நாளிதழ் விளம்பரத்தின் மூலம் நேர்முகத் தேர்வு செய்யப்படுவர்.

ஒரு பயிற்சிக்கு இளைய மற்றும் மூத்த மருத்துவர்களின் எண்ணிக்கை:

உள்ளுறை இளைய மற்றும் மூத்த பயிற்சி மருத்துவர்களுக்கு அனைத்து ஆரம்ப நகர சுகாதார நிலையங்கள், சமுதாய சுகாதார நிலையங்கள் மற்றும் 24 மணிநேர அவசரக்கால மகப்பேறு மருத்துவ மனைகளில் மற்றும் தொற்று நோய் மருத்துவமனையில் பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

வ. எண்.	மருத்துவர்களின் விவரம்	மருத்துவர்களின் எண்ணிக்கை
1	உள்ளுறை இளைய பயிற்சி மருத்துவர்	100
2.	உள்ளுறை மூத்த பயிற்சி மருத்துவர் (15 சமுதாய சுகாதார நிலையம் 15 x 5 மருத்துவர்கள்)	75

ஒரு வருடத்திற்க்கான செலவின் விவரம்:

வ. எண்.	விவரம்	ஆண்டு ஒன்றுக்கு தரப்படும் பயிற்சிக்கான உதவி தொகை
1.	உள்ளுறை இளைய பயிற்சி மருத்துவர்	ரூ. 30,000 x 100 x 12 = 3,60,00,000/–

2.	உள்ளுறை மூத்த பயிற்சி மருத்துவர்	ரூ. 45,000 x 75 x 12 = 4,05,00,000/–
	மொத்தம்	**ரூ.7,65,00,000/–**

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட அனைத்து நகர ஆரம்ப சுகாதார நிலையம், 15 சமுதாய சுகாதார நிலையம், மூன்று 24 மணிநேர அவசரக்கால மகப்பேறு மருத்துவ மனைகளில் மற்றும் தொற்று நோய் மருத்துவமனையில் பயிற்சி வழங்க அனுமதியும்,
2. பயிற்சியாளர்களுக்கு மாதம் ஒன்றுக்கு பயிற்சிக்கான உதவி தொகை ரூ.63,75,000/– (ரூபாய் அறுபத்து மூன்று லட்சத்து எழுபத்து ஐந்து ஆயிரம் மட்டும்) (மாதம் ஒன்றுக்கு 100 உள்ளுறை இளைய பயிற்சி மருத்துவர்களுக்கு ரூ.30,000x100=30,00,000/– மற்றும் 75 உள்ளுறை மூத்த பயிற்சி மருத்துவர்களுக்கு ரூ.45,000x75=33,75,000/–) உதவி தொகையாக வழங்குவதற்கும்,
3. உள்ளுறை இளைய மற்றும் மூத்த பயிற்சி மருத்துவர்களுக்கு பயிற்சிக்கான உதவி தொகை வழங்க மாநகராட்சி அல்லது NUHM தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கீட்டு செய்வதற்கும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

மா.கு.ந.(ம).ம.கு.ந.எண்.எப்4/0645/2016
ஆணையர் அவர்களின் 19.02.2016 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.282/2016 **பொருள் எண்.136**

பெருநகர சென்னை மாநகராட்சி – தேசிய நகர்புற சுகாதார திட்டத்தின் கீழ் இணைந்து இயங்கும் பொது சுகாதாரம் மற்றும் மாவட்ட குடும்ப நலத்துறை ஆகியவற்றை நிர்வாக நலன் கருதி – பொது சுகாதாரத் துறையை (Public Health) எனவும் – மாவட்ட குடும்ப நலத்துறையை மருத்துவ சேவைகள் (Medical Services) என்று பெயர் மாற்றம் செய்யவும் – மருத்துவ பதவிகளின் பெயர்களை மாற்றம் செய்ய அனுமதி

சென்னை மாநகராட்சி 174 சதுர கிலோ மீட்டரிலிருந்து 426 சதுர கிலோ மீட்டராக விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. சென்னை மாநகராட்சி விரிவாக்கத்திற்கு முன்பாக 155 வட்டங்களுடன் 10 மண்டலங்களாக செயல்பட்டு வந்தது. சென்னை மாநகராட்சி விரிவாக்கத்திற்கு பின் 200 வட்டங்களுடன் 15 மண்டங்களாக செயல்பட்டு வருகின்றது.

பெருநகர சென்னை மாநகராட்சியின் மக்கள் தொகை ஏறக்குறைய 75 லட்சம் ஆகும். நாள்தோறும் பல்வேறு அலுவல்கள் காரணமாக சென்னை மாநகருக்கு வந்து செல்பவர்களையும் சேர்த்து ஒரு கோடிக்கு மேலாகும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் மக்கள் நல பணி என்பது ஒரு மகத்தான பணியாகும். அதிலும், குறிப்பாக சுகாதார மற்றும் குடும்ப நலத்துறையின் மூலம் மேற்கொள்ளும் அவசியமான ஒன்றாகும். சென்னை நகரில் வாழ்கின்ற மக்கள் தொகையில் சரிபாதி பேர் நடுத்தர வர்கம் மற்றும் ஏழை எளியோர் ஆவார்கள். இவர்களின் சுகாதாரத்தை பேணுவது பெருநகர சென்னை மாநகராட்சியின் இன்றியமையாத கடமையாகும்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் தேசிய நகர்புற திட்டத்தின் (National Urban Health Mission) மூலம் 15 சமுதாய சுகாதார மையங்கள் (Community Health Centre) மற்றும் மூன்று (24X7) 24 மணி நேர மகப்பேறு மருத்துவமனைகள் (Emergency Obstetric Care) மற்றும் 140 நகர ஆரம்ப சுகாதார நிலையங்கள் (Urban Primary Health Centre) செயல்படுகிறது.

மேற்கண்ட 15 சமுதாய சுகாதார நிலையங்கள் மற்றும் மூன்று (24X7) 24 மணி நேர மகப்பேறு மருத்துவமனைகளில் சுகப்பிரசவங்கள், அறுவைச் சிகிச்சை பிரசவங்கள் மற்றும் குடும்ப நல அறுவைச் சிகிச்சைகள் மேற்கொள்ளப்படுகிறது.

மேற்கண்ட 15 சமுதாய சுகாதார நிலையங்கள் மற்றும் மூன்று (24X7) 24 மணி நேர மகப்பேறு மருத்துவமனைகளில் சுகப்பிரசவங்கள் மற்றும் அறுவை சிகிச்சை பிரசவங்கள் என ஆண்டொன்றுக்கு ஏறக்குறைய 13,000 மேற்பட்ட பிரசவங்கள் நடைபெறுகிறது. பிரசவத்திற்கு வரும் தாய்மார்களுக்கு ஸ்கேன் எடுத்தல், பிரசவித்த தாய்மார்களுக்கு முறையான ஊட்டச்சத்து அளித்தல் பிரசவத்திற்கு பின்னர் பிரசவித்த தாய்மார்களை தொடர்ந்து கண்காணித்தல் போன்ற பணிகள் சிறப்பாக செயல்படுத்தப்படுகிறது. அதோடு, கர்ப்பிணித் தாய்மார்களுக்கு குடும்ப நல அறுவை சிகிச்சை குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், அதன் முக்கியத்துவத்தை எடுத்துரைத்து அவர்களுக்கு குடும்ப கட்டுப்பாடு அறுவை சிகிச்சை மேற்கொள்வதன் மூலம் ஆண்டுதோறும் 9,000க்கும் மேற்பட்டோருக்கு குடும்ப நல அறுவை சிகிச்சைகள் மேற்கொள்ளப்படுகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சியின் நிர்வாக நலன் கருதி, சுகாதாரத் துறையின் பெயரை பொது சுகாதாரம் (Public Health) எனவும், மாவட்ட குடும்ப நலத்துறையின் பெயரை மருத்துவ சேவைகள் (Medical Services) என்று பெயர் மாற்றம் செய்யவும் ஆலோசனை வழங்கியுள்ளார்கள்.

அதற்கேற்ப நகர சமுதாய சுகாதார நிலையத்தின் மருத்துவ சேவைகள் (Medical Services) ,

- சிறு உடல் உபாதைகளுக்கு சிகிச்சை அளித்தல்
- தேவைகேற்ப மருத்துவ சேவைகள் அளித்தல்
- சிறிய அளவிலான அறுவை சிகிச்சைகள் மேற்கொள்ளுதல்
- உயர்சிகிச்சை தேவையெனில் அரசு மருத்துவமனைக்கு பரிந்துரை செய்தல்
- கர்ப்பக்கால சேவை அளித்தல்

- 24 மணி நேர மகப்பேறு மருத்துவமனைகள் மூலம் பிரசவங்களை மேற்கொள்கொள்ளுதல் (சுகப்பிரசவம் மற்றும் அறுவை சிகிச்சை பிரசவம்)
- கர்ப்பக்காலத்தில் சிக்கல் உள்ள கர்ப்பிணித்தாய்மார்களை கண்டறிதல் மற்றும் பிரசவத்தின் போதும் சிக்கல்கள் கண்டறிதல்
- கர்ப்பிணித் தாய்மார்களுக்கு குறித்த நேரத்தில் பாதுகாப்பான பிரசவத்திற்காக அரசு மருத்துவமனைக்கு பரிந்துரை செய்தல்
- குழந்தைகளுக்கு தாய்ப்பால் அளிப்பதை ஊக்குவித்தல்
- மாநகராட்சி மருத்துவமனையில் பிறக்கும் அனைத்து சிசுக்களும் மருத்துவ சேவைகள் அளித்தல்.
- உடல் சுகவீனமான சிசுக்களுக்கு சிசு சீராக்கும் பிரிவின் மூலம் சிகிச்சை அளித்தல்
- 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு தடுப்பூசி போடுதல்
- பிரசவித்த தாய்மார்கள் மற்றும் கருத்தடை அறுவை சிகிச்சை செய்த தாய்மார்களுக்கு சத்தான உணவு வழங்குதல்
- பிறந்த அனைத்து குழந்தைகளுக்கும் 16 பொருட்கள் அடங்கிய அம்மா குழந்தை நல பரிசு பெட்டகம் வழங்குதல்
- குழந்தையின் வளர்ச்சியை கண்காணித்தல்
- குழந்தையின் வளர்ச்சியில் உள்ள குறைபாட்டினை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து உயர்சிகிச்சைக்கு பரிந்துரைத்தல்
- நிரந்தர குடும்ப நல சேவைகள் அளித்தல்
- பாதுகாப்பற்ற தம்பதியர்களுக்கு கருத்தடை சாதன முறைகளை விளக்கி குடும்ப நலத்தை பேண செய்தல்
- கருப்பை வாய் மற்றும் மார்புக புற்று நோயை ஆரம்ப நிலையில் கண்டறிதல்
- மகளிருக்கு ஏற்படும் இதர நோய்களுக்குச் சிகிச்சை அளித்தல்
- ஜனனி சுரக்ஷா யோஜனா திட்டத்தின் மூலம் மருத்துவமனைகளில் பிரசவித்த அனைத்து தாய்மார்களுக்கும் ரூ.600/– வழங்குதல்
- பயனற்றுப்போன குடும்ப நல அறுவை சிகிச்சைக்கு இழப்பீட்டுத் தொகை வழங்க நடவடிக்கை எடுத்தல்
- அனைத்து நிலைகளிலும் ஆய்வுக் கூட்டங்கள் நடத்துதல்

ஆகிய பணிகள் சிறப்பாக செயல்படுத்தப்படுகிறது.

140 நகர ஆரம்ப சுகாதார நிலையங்களில் கீழ்கண்ட சேவைகள் அளிக்கப்படுகிறது.

1. சிறு உடல் உபாதைகளுக்கு சிகிச்சை அளித்தல்
2. பிற வியாதிகளுக்கு அரசு மருத்துவமனைக்கு பரிந்துரை செய்தல் (சிகிச்சை அளிக்க முடியாத நிலையில் உள்ள நோயாளிகள்)
3. வளர் இளம் பருவத்தில் உள்ள பெண்களுக்கு இரத்த சோகை நோயை தடுக்க இரும்பு சத்து மாத்திரை வாரந்தோறும் வழங்குதல்
4. கர்ப்பக்கால சேவை அளித்தல்
5. குழந்தைகளுக்கு தாய்ப்பால் அளிப்பதை மேம்படுத்துதல்
6. 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு தடுப்பூசி போடுதல்
7. குழந்தை வளர்ச்சியை கண்காணித்தல்
8. குழந்தையின் வளர்ச்சி குறைபாட்டினை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து உயர்சிகிச்சைக்கு பரிந்துரைத்தல்
9. எவ்வித குடும்ப நல முறையும் அனுசரிக்காத தகுதி வாய்ந்த தம்பதியர்களை நிரந்தர குடும்ப நல அறுவை சிகிச்சை மேற்கொள்ள ஊக்குவித்தல்
10. எவ்வித குடும்ப நல முறையும் அனுசரிக்காத தகுதிவாய்ந்த தம்பதியர்களுக்கு கருத்தடை சாதன முறைகளை விளக்கி குடும்ப நல முறைகளை அனுசரிக்க ஊக்குவித்தல்
11. கருப்பை வாய் மற்றும் மார்புக புற்று நோயை ஆரம்ப நிலையில் கண்டறிதல்
12. மகளிருக்கு ஏற்படும் இதர நோய்களுக்குச் சிகிச்சை அளித்தல்

13. கர்ப்பத்தை பதிவு செய்தல்
14. கர்ப்பக்காலத்தின் போது சிக்கல் உள்ள கர்ப்பிணித்தாய்மார்களை கண்டறிந்து மருத்துவமனையில் பிரசவம் மேற்கொள்ளுதல்
15. சிக்கல் உள்ள கர்ப்பிணித்தாய்மார்கள் மற்றும் பிற கர்ப்பிணித் தாய்மார்களுக்கு 24 மணி நேர மாநகராட்சி மருத்துவமனைகளில் பிரசவம் பார்த்தல்
16. பிரசவகால பின் கவனிப்பு மேற்கொள்ளுதல்
17. ஆய்வகக்கூட பரிசோதனை, (Lab Test)
18. பள்ளிக் குழந்தைகளுக்கான சுகாதார மற்றும் மருத்துவ சேவை – இதன் மூலம் மாநகராட்சி பள்ளிகளில் படிக்கும் அனைத்து குழந்தைகளுக்கும் மருத்துவப் பரிசோதனை செய்தல்.
19. மத்திய மாநில அரசின் மூலம் செயல்படுத்தப்படும் சிறப்பு திட்டங்கள் – 1. போலியோ சொட்டு மருந்து முகாம், 2. தேசிய குடற்புழு நீக்கம் முகாம், 3. உலக மக்கள் தொகை தினம், 4. மகளிர் தினம், 5. வைட்டமின் – ஏ முகாம், 6. மிஷன் இந்திர தனுஷ் முகாம், 7.சிறப்பு தட்டம்மை முகாம், 8. இடம் பெயர்ந்தோர்களுக்கான சிறப்பு தடுப்பூசி முகாம், 9. சிறப்பு தாய் சேய் நல முகாம், 10. டெங்கு விழிப்புணர்வு மற்றும் தீவிர வயிற்றுப்போக்கு கட்டுப்படுத்தும் முகாம்
20. தாய் மற்றும் சிசு இறப்பு பற்றி வாய்வழி ஆய்வறிக்கை
21. போலியோ (AFP) மற்றும் தட்டம்மை நோய்களுக்கான கண்காணிப்பு
22. தடுப்பூசி போட்ட பின் ஏற்படும் பின்விளைவுகளை அறிக்கை செய்தல்
23. அனைத்து நிலைகளிலும் ஆய்வுக் கூட்டங்கள் நடத்துதல்
24. அரசு திட்டங்களை செயல்படுத்துதல் (மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவி திட்டம், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவி திட்டம்)

சுகாதாரம் (Public Health) கீழ்கண்ட பணிகள் சிறப்பாக நடைபெறுகிறது.

1. அம்மா உணவகம்
2. சுற்றுப்புற சுகாதாரம்
3. கொசுக்கள் மற்றும் கொசுக்களால் ஏற்படும் நோய்கள் ஆகியவற்றை கட்டுப்படுத்துதல்
4. எலி காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள்
5. பாதுக்காக்கப்பட்ட குடிநீர் வழங்குவதை உறுதி செய்தல்
6. வீடற்றோருக்கான காப்பகங்கள்
7. பிறப்பு இறப்பு பதிவு மற்றும் சான்றிதழ் வழங்குதல்
8. சென்னை மாவட்ட பார்வை இழப்பு தடுப்பு திட்டம்
9. கால்நடை சுகாதாரம்
10. நவீன இறைச்சிக்கூடங்கள்
11. சென்னை மாநகராட்சி, முனிசிபல் சட்டம், தமிழ்நாடு பொது சுகாதார சட்டம் அமுல்படுத்துதல்
12. கேடும் குற்றமும் பயக்கும் தொழில் நிறுவனங்களை ஆய்வுகள் மற்றும் மேல் நடவடிக்கைகள் எடுத்தல்
13. தொற்று நோய் மருத்துவமனையில் காற்றின் மூலம் பரவும் சின்னம்மை, பெரியம்மை, தட்டம்மை, காசநோய் மற்றும் நீரின் மூலம் பரவும் வயிற்றுப்போக்கு, டைபாய்டு காய்ச்சல், கொசுவின் மூலம் பரவும் மலேரியா, டெங்கு, சிக்கன்குனியா காய்ச்சல், போன்றவைகளுக்கு சிகிச்சை அளித்து சத்தான உணவு அளித்தல். மேலும், புதிதாக தோன்றும் எவ்விதமான தொற்று நோய்களுக்கும் சிகிச்சை அளித்து நோய் தொற்று கட்டுப்படுத்துதல்.
14. தொற்று நோய் மருத்துவமனையில் மருத்துவ ஆய்வுக்கூட பட்டய பயிற்சி, செவிலிய உதவியாளர் பயிற்சி, பல்நோக்கு சுகாதார செவிலியர் பயிற்சி ஆகியவை நடத்தப்படுகிறது.
15. தெரு நாய்கள் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்தல் மற்றும் வெறி நோய் தடுப்பூசி போடுதல்.

மேலும், இவ்விருத் துறைகளும் சேர்ந்து செயல்பட வேண்டிய பணிகள்.

1. சுகாதார கல்வி அளித்தல்
2. பள்ளி மாணவர்களுக்கான சுகாதார திட்டம்
3. சிறப்பு மறுவாழ்வு மையங்கள்
4. சென்னை மாவட்ட பார்வை இழப்பு தடுப்பு திட்டம்
5. திருத்தப்பட்ட தேசிய காசநோய் கட்டுப்பாடுத் திட்டம் (Revised National TB Control Programme (TB)
6. தொற்றுநோய் அல்லாத பிற நோய்கள் (சர்க்கரை வியாதி (Diabetes), உயர் இரத்த அழுத்தம் (Hypertension),
7. இதர காய்ச்சல்களான (மலேரியா, டெங்கு, டைபாய்டு போன்ற காய்ச்சல்களுக்கு

சிகிச்சை அளிக்கப்படுகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் மருத்துவ அலுவலர் பதவிகளில் MBBS படித்தவர்கள் நியமிக்கப்படுகிறார்கள். இவர்களில் பலர் கீழ்கண்ட கூடுதல் கல்வித் தகுதியை பெற்றுள்ளார்கள்.

Ophthalmology, Diabectology, Dermatology, Diploma in Public Health, DCH, DGO, DLO, M.S ENT, DTCD, M.D General Medicine, Diploma in Psychiatric Medicine, Diploma in Anesthesia, M.S. Ortho,

சுகாதாரத்துறையில் தற்போது:

மேற்கண்டவர்களில் MBBS படிப்போடு கூடுதலாக DPH முடித்தவர்கள் மண்டல சுகாதார அலுவலராக (Zonal Health Officer) பதவி உயர்வு வழங்கப்படுகிறது. உதவி சுகாதார அலுவலர்கள் பணி மூப்பு அடிப்படையில் கூடுதல் நகர சுகாதார அலுவலராக (Additional City Health Officer) பதவி உயர்வு பெற்று இறுதியில் பணி மூப்பின் அடிப்படையில் நகர சுகாதார அலுவலராக (City Health Officer) பதவி உயர்வு அளிக்கப்படுகிறது.

குடும்ப நலத்துறையில் தற்போது:

தற்போது MBBS மற்றும் MBBS with DGO, DCH, or DA முடித்தவர்கள் அவ்வபோது, மாவட்ட குடும்ப நலத்துறையின் கீழ் மருத்துவ அலுவலராக பணிநியமனம் செய்யப்பட்டு பணிபுரிகின்றனர். அரசாணை (ப) எண்.583 நாள்.**26.11.2010** படி மருத்துவ அலுவலர்களுக்கு 8 ஆண்டுகள் பணிபுரிந்த பிறகு மருத்துவ அலுவலர் Grade I ஆகவும், மருத்துவ அலுவலர் Grade I பதவியில் 7 ஆண்டுகள் முடித்த பிறகு மூத்த மருத்துவ அலுவலர் (Senior Medical Officer) ஆகவும், மூத்த மருத்துவ அலுவலர் பதவியில் 5 ஆண்டுகள் பணி முடித்த பிறகு தலைமை மருத்துவ அலுவலர் (Chief Medical Officer) ஆக பதவி உயர்வுடன் கூடிய ஊதிய உயர்வு வழங்கப்படுகிறது.

இவர்களில் **2** ஆண்டுக்காலம் பணி முடித்த மருத்துவ அலுவலர்கள் பணிமூப்பு மற்றும் காலிப்பணியிடம் அடிப்படையில் மண்டலத்திற்கு ஒருவர் வீதம் **15** மண்டலங்களுக்கு மண்டல மருத்துவ அலுவலர் பதவி உயர்வு வழங்கப்படுகிறது. இம்மண்டல மருத்துவ அலுவலர்கள் **2** ஆண்டுக்காலம் பணி முடித்த பிறகு பணிமூப்பு மற்றும் காலிப்பணியிடம் அடிப்படையில் மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலராக இரண்டு பணியிடத்திற்கு பதவி உயர்வு வழங்கப்படுகிறது. இம்மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலரர் பதவியில் **2** ஆண்டுக்காலம் பணி முடித்த பிறகு துணை திட்ட ஒருங்கிணைப்பாளராக பதவி உயர்வு வழங்கப்படுகிறது.

PRESENT ORGANOGRAM OF DFWB



மேற்கண்டவாறு மாவட்ட குடும்ப நலத்துறையில் பணிகள் நடைமுறையில் உள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியின் பொது சுகாதாரம் மற்றும் மருத்துவ சேவைகள் சிறப்புடன் செயல்படுத்துவதற்கு மேலே குறிப்பிட்டுள்ளவாறு தற்போதுள்ள பணிகளின் பெயர்களை மாற்றம் செய்து, பொது சுகாதார மற்றும் மருத்துவ சேவைகள் துறையில் MBBS படிப்போடு கூடுதலாக DPH படித்தவர்களுக்கு நேரடி நியமனமாக மண்டல சுகாதார அலுவலராக பொறுப்பேற்றவர்களுக்கு HEALTH AND FAMILY WELFARE (L-2) DEPARTMENT அரசாணை (ப) எண்.12 நாள்.**20.01.2010** ன்படி கீழ்கண்டவாறு பெயர் மாற்றம் மற்றும் ஊதிய உயர்வு அளிக்கப்பட வேண்டும்.

GP.8800 Addl Director Public Health / CHO
2 Yrs of Service (Based on Seniority & Vacancy)

↑

GP.8700 Joint Director Public Health / Addl CHO
2 Yrs of Service (Based on Seniority & Vacancy)

↑

GP.7600 Deputy Director Grade I Public Health
↑ 2 Yrs of Service
Deputy Director Grade II Public Health
↑ 5 Yrs of Service
Senior Health Officer
↑ 6 Yrs of Service
GP.5700 Health Officer

GO.Ms.No.12

தற்போது உள்ள CHO, Addl CHO, ZHO மேற்கூறிய பதவிகள் GO.Ms.No.12 ன்படி பணியமர்த்தி ஊதியம் வழங்கப்படும். பெருநகர சென்னை மாநகராட்சியில் மருத்துவர்கள் பணியில் சேரும் பொழுது அவ்வப்போது எழும் காலியிடங்களுக்கு பணிநியமனம் செய்யப்பட்டு மருத்துவ அலுவலராக பணியில் அமர்வர். இவர்களது மூப்பு நிலையானது காலிபணியிடங்களுக்கு அரசாணைகளின்படி உள்ள இடஒதுக்கீடு சுழற்சி முறையின்படி நிர்ணயிக்கப்படும், அவ்வாறு மருத்துவ அலுவலர்களாக பணிபுரியும் போது சிறப்பு தகுதிகளின் அடிப்படையில் பொது சுகாதாரத் துறையில் மருத்துவர்கள் பணிமர்த்தப்படுவார்கள். எனினும் அவர்களது மூப்பு நிலையானது பணியில் சேர்ந்த பொழுது நிர்ணயிக்கப்பட்டு பதவி உயர்வுக்கான தகுதிகளின் அடிப்படையில் பதவி உயர்வுகளுக்கு பரிசீலிக்கப்படும்.

இனி வரும் காலங்களில் பொது சுகாதாரம் மற்றும் மருத்துவ சேவைகளில் MBBS மற்றும் மருத்துவப் பட்டய (Diploma) படிப்புகள், மற்றும் மருத்துவ பட்ட மேற்படிப்பு (Post Graduate), DPH உட்பட முடித்தவர்கள் மருத்துவ அலுவலர்களாக பணிநியமனம் செய்யப்படுவார்கள்.

அரசாணை (ப) எண்.583 நாள்.**26.11.2010** படி மருத்துவ அலுவலர்களுக்கு 8 ஆண்டுகள் பணிபுரிந்த பிறகு மருத்துவ அலுவலர் Grade I ஆகவும், மருத்துவ அலுவலர் Grade I பதவியில் 7 ஆண்டுகள் முடித்த பிறகு மூத்த மருத்துவ அலுவலர் (Senior Medical Officer) ஆகவும், மூத்த மருத்துவ அலுவலர் பதவியில் 5 ஆண்டுகள் பணி முடித்த பிறகு தலைமை மருத்துவ அலுவலர் (Chief Medical Officer) ஆக பதவி உயர்வுடன் கூடிய ஊதிய உயர்வு வழங்கப்படுகிறது. இவர்களில் DPH படிப்பு அல்லாத மற்ற தலைமை மருத்துவ அலுவலர்கள் (Chief Medical Officer) / மெடிகல் சூப்ரண்டெண்ட் (Medical Superintendent) ஆக பெருநகர சென்னை மருத்துவமனை மற்றும் பெருநகர சென்னை மகப்பேறு மருத்துவமனைகளில் ஒரு மருத்துவமனைக்கு ஒருவர் வீதம் பணி மூப்பு அடிப்படையில் பணியமர்த்தப்படுவார்கள். (இப்பதவி பதவி உயர்வு அல்ல).

தலைமை மருத்துவ அலுவலராக (Chief Medical Officer) உள்ளவர்களில் DPH படிப்பு முடித்தவர்கள் பணிமூப்பு மற்றும் காலிப்பணியிடம் அடிப்படையில் மண்டலத்திற்கு ஒருவர் என 15 மண்டலத்திற்கு துணை இயக்குநர், பொது சுகாதாரமாகவும் (Deputy Director, Public Health) என பதவி உயர்வு வழங்கப்படும். துணை இயக்குநர் பொது சுகாதாரம் பதவியில் **2** ஆண்டுகள் பணி

முடித்த பிறகு பணிமூப்பு மற்றும் காலிப்பணியிடம் அடிப்படையில் வட்டாரத்திற்கு ஒருவர் வீதம் சென்னை வடக்கு, மத்தியம், தெற்கு வட்டராங்களுக்கு 3 இணை இயக்குநர் பொது சுகாதாரம் மற்றும் ஒரு இணை இயக்குநர் பொது சுகாதாரம் (தலைமையிடத்திலும்) ஒரு இணை இயக்குநர் பொது சுகாதாரம் (தொற்றுநோய் மருத்துவமனைக்கும்) பதவி உயர்வு வழங்கப்படும். மேலும், பணிமூப்பு மற்றும் காலிப்பணியிடம் அடிப்படையில் இணை இயக்குநர் பதவியில் 2 ஆண்டுகள் முடித்த பிறகு பணிமூப்பு மற்றும் காலிப்பணியிடம் அடிப்படையில் ஒரு கூடுதல் இயக்குநர் பொது சுகாதாரம் (Additional Director Public Health) பதவி உயர்வு வழங்கப்படும்.

DPH படிப்பு அல்லாத மற்ற தலைமை மருத்துவ அலுவலர்கள் பணிமூப்பு மற்றும் காலிப்பணியிடம் அடிப்படையில் மண்டலத்திற்கு ஒருவர் என 15 மண்டலத்திற்கு துணை இயக்குநர், மருத்துவ சேவைகள் (Deputy Director, Medical Services) பதவி உயர்வு வழங்கப்படும்.

துணை இயக்குநர் மருத்துவ சேவைகள் (Deputy Director Medical Services) பதவியில் 2 ஆண்டுகள் பணி முடித்த பிறகு பணி மூப்பு / காலிப்பணியிடங்கள் அடிப்படையில் இணை இயக்குநர் மருத்துவ சேவைகள் (Joint Director Medical Services) ஆக வட்டாரத்திற்கு ஒருவர் வீதம் சென்னை வடக்கு, மத்தியம், தெற்கு வட்டராங்களுக்கு 3 இணை இயக்குநர் மருத்துவ சேவைகள் பதவி உயர்வு வழங்கப்படும். மேலும் பணி மூப்பு / காலிப்பணியிடங்கள் அடிப்படையில் தலைமை அலுவலகத்தில் (Head Quarters) இணை இயக்குநர் (நிர்வாகம்) (Joint Director - Admin) மற்றும் இணை இயக்குநர் (குடும்ப நலம், தடுப்பூசி மற்றும் பயிற்சி) (Joint Director – Family Welfare, Immunisation and Training) என பதவி உயர்வு வழங்கப்படும்.

இணை இயக்குநர் மருத்துவ சேவைகள் (Joint Director Medical Services) பதவியில் 2 ஆண்டுகள் பணி முடித்த பிறகு பணி மூப்பு / காலிப்பணியிடங்கள் அடிப்படையில் கூடுதல் இயக்குநர், மருத்துவ சேவைகள் (Additional Director Medical Services) என பதவி உயர்வு வழங்கப்படும்.



மேற்கண்டவர்களில் MBBS படிப்போடு கூடுதலாக மருத்துவ பட்டய படிப்பு மற்றும் மருத்துவ பட்ட மேற்படிப்பு படித்திருக்கும் மருத்துவ அலுவலர்களுக்கு பணியில் சேர்ந்த தகுதிகாண் பருவம் முடித்தப்பின்னர் அவர்களுக்கு ஒரு ஊக்க ஊதிய உயர்வு கூடுதலாக அளிக்கலாம். மேலும், பணி

நியமனத்தின் போது MBBS படிப்போடு கூடுதலாக மருத்துவ பட்டய படிப்பு மற்றும் மருத்துவ பட்ட மேற்படிப்பு முடித்தவர்களுக்கு அவர்களுடைய பணி நியமனம் உத்தரவு பட்டியலில் மூத்தவராக கருதப்படுவார்கள்.

MUNICIPAL ADMINISTRATION AND WATER SUPPLY (MC3) DEPARTMENT

G.O. Ms. No. 161 Dated: 28-08-98

Rules – Corporation of Chennai – Adhoc Rules for the posts in the Family Welfare, Maternity and Child Health Department – rules – Confirmed.

பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரம் மற்றும் மருத்துவ சேவைகள் துறையின் நிர்வாக நலன் கருதி மேற்கண்டுள்ள அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள பதவிகளின் நியமனம் முறை மற்றும் கல்வித் தகுதிகளில் எவ்வித மாற்றமும் இல்லாமல் பதவிகளின் பெயர்களை மட்டும் கீழ்கண்டவாறு மாற்றம் செய்யலாம்.

POSTS	METHOD OF APPOINTMENT	QUALIFICATION
(Deputy Project Co-ordinator) **Additional Director Medical Service / City Medical Officer**	(i) Promotion from the holders of the post of District Family Welfare Medical Officer. (ii) Deputation from any department or institution under the control of the State Government.	Must have put in not less than two years of regular service as District Family Welfare Medical Officer. Must have put in not less than two years of apporoved service in a post in a department or institution under the control of the State Government Which is similar in status and responsibilities to the post of Deputy Project Co-ordinator in the Corporation of Chennai.
(District Family Welfare Medical Officer) **Joint Director Medical Service / Addl. City Medical Officer**	(i) Promotion from the holders of the post of Zonal Officer (Family Welfare) (ii) Deputation from any department or institution under the control of the State Government	(a) Must have put in not less than two yers of regular service as Zonal Officer. (Family Welfare) (b) A pass in Account Test for Executive Officers and Medical Code test conducted by the Tamil Nadu Public Service Commission. Must have put in not less than two years of regular service in a post in a department or institution under the control of the State Governmet which is similar in status and responsibilities to the post of District Family Welfare Medical Officer.
(Zonal Officer (Family Welfare)) **Deputy Director (Medical Service) /**	(i) Promotion from the cadre or (a) Medical Officer/Assistant Surgeon or (b) Anaesthetist:	(a) Must have put in not less than five years of service in one or more categories as Medical Officer / Assistant Surgeon or Anaethetist in the Corporation

Deputy City Medical Officer		of Chennai and (b) A pass in Accounts Test for Executive Officers and Medical Code Test conducted by Tamil Nadu Public Service Commission.
	(ii) Direct recruitment.	(a) M.B.B.S. degree preferable with a post graduate degree or diploma in Gynaecology or diploma in Gynaecology or any other equivalent degree or diploma of any, University or Institution recognised by the University Grants Commission. (b) A certificate in Family Planning Administration issued by the All India Institute of Hygienic or any other recognised institution and I Must have practical experience in the field of Family Planning and Maternity and Child Health for a period of not less than five years.
	(iii) Deputation from any department or Institution under the control of the State Government.	Must have put in not less than two years of regular service in a post in a department or Institution under the control of the State Government which is similar in status and responsinilites to the post of Zonal Offier (Family Welfare) in the Corportaion of Chennai.
(Medical Officer / Assistant Surgeon) **Chief Medical Officer / Senior Medical Officer Grade I /** **Senior Medical Officer Grade II /** **Medical Officer Grade I /Medical Officer Grade II**	(i) Time Bound Promotion for Medical Officers followed by Municipal Administration and Water Supply (Na.pa.3) Department G.O.(Ms)No.583, Dt.26.11.2010 (ii) Transfer from any other Municipal Corporation or Municipal Council in the State of Tamil Nadu	M.B.B.S. degree preferabley with a post graduate degree or diploma in Gynaecology or any other equivalent degree or diploma of any University or Institution recognised by the University Grants Commission. M.B.B.S. degree preferably with a post graduate degree or diploma in Gynaecology or any other equivalent degree or diploma of any University or Instittution recognised by the

	(iii) Deputation from any department or institution under the control of State Government.	University Grans Commission. Must have put in not less than two years of regular service in a post in a department or institution under the control of the State Government which is similar in status and responsibilities to the post of Medical Officer / Assistant Surgeon in the Corporation of Chennai.

Municipal Administration and Water Supply (MC3) Department

G.O. Ms. No. 91 Dated: 28-05-1998

Rules – Chennai Corporation Public Health and Medical Service Rules – Draft amendments Published –

Confirmed.

பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரம் மற்றும் மருத்துவ சேவைகள் துறையின் நிர்வாக நலன் கருதி மேற்கண்டுள்ள அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள பதவிகளின் நியமனம் முறை மற்றும் கல்வித் தகுதிகளில் எவ்வித மாற்றமும் இல்லாமல் பதவிகளின் பெயர்களை மட்டும் கீழ்கண்டவாறு மாற்றம் செய்யலாம்.

City Health Officer **Additional Director (Public Health)**	(i) By Promotion from the Category of Additional Health Officer Category I in class I-B Service or (ii) By appointment from the Category of Addl. Director of Public Health in Tamilnadu Public Health Service on Deputation	(i) MBBS Degree with Diploma in Public Health (ii) A pass in Account Test for Executive Officers (iii) Must have served as Additional Health Officers at least for a Period of one year
Additional City Health Officer **Joint Director (Public Health)**	By promotion of the cadre Zonal / Assistant Health Officers and from the holder of the post of Superintendent, Communicable Diseases Hospital in Class-II Service.	(i) MBBS Degree with Diploma in Public Health (ii) A Pass in Account Test for Executive Officers (iii) Must have served as Zonal / Assistant Health Officers or Superintendent, Communicable Diseases Hospital at least for the period of two years
Zonal Health Officers (Assistant Health Officers) **Deputy Director**	(i) By recruitment or (ii) By promotion from the Categories of Medical Officers (Allopathy) or Medical Officer (Tuberculosis Clinic) (iii)By appointment from	(i) MBBS Degree with Diploma in Public Health (ii) A pass in Account Test for Executive Officers MBBS Degree or any Equivalent Degree of any University or institution with Diploma in Public Health

(Public Health)	the category of Health Officer in Tamilnadu Public Health Service or from State service on deputation	
The Director, Communicable Diseases Hospital **The Deputy Director Public Health**	(i) By promotion from the categories of Deputy Director (Allopathy) or Medical Officer (Tuberculosis Clinic) (ii) By appointment of persons from the Tamilnadu Medical Service or Public Health Service or any other state service ices on deputation	(i) MBBS Degree or any Equivalent Degree of any University or Institution with diploma in Public Health (ii) Post Graduate degree or diploma in tropical medicine or any equivalent degree in diploma of any university or institution of 5 years experience in Communicable Diseases Hospital

எனவே,

(அ) பெருநகர சென்னை மாநகராட்சியின் பொது சுகாதாரம் மற்றும் மாவட்ட குடும்ப நலத்துறையின் பெயர்களை பொது சுகாதாரம் (Public Health) மற்றும் மருத்துவ சேவைகள் (Medical Services) என்று பெயர் மாற்றம் செய்வதற்கும்,

(ஆ) தலைமையிடத்து பணியாளர்கள் துறை சார்ந்த பணிகளை மேற்கொள்வதற்கு, தேவையான வகையில் பகிர்ந்து கொள்வதற்கு,

(இ) பொது சுகாதாரம் மற்றும் மருத்துவ சேவை ஆகிய துறைகளில் உள்ள அலுவலர்களின் பதவியின் பெயர்களை மேற்தெரிவித்துள்ளவாறு மாற்றம் செய்வதற்கும்,

(ஈ) பொது சுகாதாரத் துறையில் நேரடியாக நியமனம் ஆன மண்டல நல அலுவலர்களுக்கு GO.Ms.No.12 ன்படி, பதவி உயர்வு மற்றும் ஊதிய நிர்ணயம் வழங்குவதற்கும் மற்றும் மருத்துவ சேவை துறையில் GO.Ms.No.583 ன்படி, பணிபுரியும் மருத்துவ அலுவலர்களுக்கு பதவி உயர்வு மற்றும் ஊதிய நிர்ணயம் வழங்குவதற்கும்,

மேற்கண்ட அ முதல் ஈ வரை உள்ள இனங்களுக்கு ஒப்புதலுக்கும், அரசுக்கு செயல்குறிப்பு அனுப்புவதற்கும் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****